180

44115

180

# உதுமான் - ரலி ::
# :: அலீ - ரலி சரிதை

Duplicate

9 - MAY 1946
MADRAS

SHAHJAHAN BOOK DEPOT
MADRAS

2/46

ஷாஜஹான் புக் டெப்போ
மயிலாப்பூர், - - சென்னை.

Q7:332
N46
111468

44115

குலபாயெ ராஷிதீன்—3, 4.

# உதுமான்-ரலி
# அலீ-ரலி சரிதை

"தாருல் இஸ்லாம்" ஆசிரியரும்
குர்ஆன் மொழிபெயர்ப் பாசிரியருமாகிய

**அல்ஹாஜ் பா. தாவூத்ஷா சாஹிப், பி. ஏ.,**
(கார்ப்பொரேஷன் ஆல்டர்மேன்)

அவர்களால் தையாரிக்கப்பட்டது.

2-MAY 1946
MADRAS

SHAHJAHAN BOOK DEPOT
MADRAS

**ஷாஜஹான் புக் டெப்போ**
**30, சாந்தோம் ஹைரோட்**
**மயிலை, :: :: சென்னை**

இதன் விலை] **1946** [ரூ. 2-0-0

*First Edition—March 1946 (500)*

All Rights Reserved

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111468
EGMORE, MADRAS

---

**Printed at KABEER PRINTING WORKS, Triplicane, Madras**
**and Published by Shahjahan Book Depot.**
**Paper Issue Card No. MS. 218**

# முகவுரை

குலபாயெ ராஷிதீன் என்னும் வரிசையில் இதுவரை "மஹான் முஹம்மத் நபி (ஸல்)" "அபூபக்ர் ஸித்தீக் (ரலி)" "உமரெ பாரூக் (ரலி)" ஆகிய மூன்று நூல்களும் வெளியாய் விட்டன. அப்பால் ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்களைப் பற்றியும் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றியும் ஒரு தனி நூல் வெளியிடப் படுமென்று அதுகாலை யாம் வரைந் திருந்தோம். எனவேதான் இது பொழுது இந்த நூல் உதுமான்-ரலி அலீ-ரலி சரிதை என்னும் நாமத்துடனே வெளியிடப்படுகின்றது. இதில் கர்பலாவின் (ஷஹாதத்) சம்பவம் முடிய வரையப்படு மென்று முன்னே நாம் கூறியிருந்தோம். இப்பொழுது யுத்தகால விளைவாலேற்பட்ட காகிதப்பஞ்சத்தால் கர்ப லாவை எட்டிப்பார்க்க இயலவில்லை; அன்றியும், இமாம் ஹஸன் (ரலி) ஹுஸைன்(ரலி) ஆகியவர்களின் சரிதைகள் தனியே ஒரு நூலாய் வெளியிடப்படுமாதலின், அதில் இஸ்லாமிய குடியாட்சி முறையின் குண விசேஷங்களும் கர்பலாவின் துக்கசம்பவமும் விவரித் தெழுதப்படும்.

அல்லாஹ்வி னருளைக்கொண்டு இதுகாறும் குலபாயெ ராஷிதீன் வரிசை குடியாட்சி முறை முடிவுக்கால மட்டில் ஒருவாறு முடிவுபெற்று விட்டது. இத்துணைச்

சீக்கிரம் இந்நூல் வெளியாவதற்கு நம் முஸ்லிம்களின் பேராதரவே தூண்டுகோலா யிருந்திருக்கிறது. ஆதலின் அன்பர்களுக் கெல்லாம் எங்கள் நன்றி உரித்தாகுக. தொழிலாளர் தொந்தரை மிகுந்திருக்கும் இந்நாளில் ஒரு மாதகாலத்திற்குள்ளே துரிதமாக இந்நூலை அச்சிட்டுத் தந்த கபீர் பிரிண்டிங் வொர்க்ஸ் சொந்தக்காரருக்கும் எங்கள் நன்றி உரியதா யிருக்கின்றது.

மஹான் முஹம்மத் நபி (ஸல்) முதற் கொண்டு இந் நூல் இறுதியாகப் படிப்பவர் இஸ்லாத்தின் தோற்றத்தையும், நபிகள் பெருமான் முதல் அலீ (ரலி) முடியவுள்ள இஸ்லாத்தின் சரித்திரத்தையும் ஒருவாறு உணர்ந்து கொள்வரென்பது எமது திண்ணிய எண்ணமாகும். அன்பர்களின் ஆதரவிருந்தால், அதி சீக்கிரத்திலே "நபிகள் நாயக மான்மியம்" என்னும் விரிவான திருநபி சரிதை வெளிவருதல் கூடும், இன்ஷா அல்லாஹ்!

1—4—46<br>சென்னை.

தங்க ளன்புக்குரிய,

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم

# உதுமான்ரலி

ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் நபிநாயகத்துக்குப் பின்னால், உமர்ரலி அவர்கட்குப் பிறகு வந்த மூன்றாவது கலீபாவா யிருக்கிறார்கள்.

**ஆரம்ப கால வாழ்க்கை**

இப்பெரியார், இஸ்லாத்தைத் தழுவுதற்கு முன்னே அபூ அம்ர் என்னும் குன்யத்தைக் கொண்டு அழைக்கப்பட்டு வந்தார்கள்; பின்னர் அபூ அப்துல்லா என்னும் நாமத்தைக் கொண்டு அழைக்கப்பட லாயினார்கள். இவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்து நபிபெருமானாரின் இருகுமாரிகளை மணமுடித்துக் கொண்டதற் கிப்பால் துன்னூரைன் என்னும் அழகிய கௌரவப் பெய ரொன்றும் வழங்கப் பெற்றார்கள். "துன்னூரைன்" என்னும் நாமத்தின் பொருள், 'இரு ஜோதிகளை யடையப் பெற்றவர்' என்பதாகும்; என்னெனின், உதுமான்ரலி அவர்கள்

நபிகள் திலகத்தின் இருகுமாரிகளை* ஒருவர்பின் னொரு வராக மணமுடித்துக் கொண்டார்கள்.

இப் பெரியாருடைய தந்தையின் நாமம் அப்பான் (Affan) என்பதாகும்; தாயார் பெயர் 'அர்வா' என்பதா யிருந்தது. தமது மூதாதையரின் ஐந்தாவது தலைமுறையிலே உதுமான்ரலி அவர்களது வம்சம் நபிகள் நாயகத்தின் தலைமுறையுடனே சென்று சேர்கிறது. நபிபெருமான்ஸல் பனூ ஹாஷிம் கிளையில் அவதாரம் புரிந்தார்கள்; ஆனால், உதுமான்ரலி பனூ உமையா கிளையில் தோன்றினார்கள். "குலபாயெ ராஷிதீன்" என்றழைக்கப்படும் இஸ்லாத்தின் முதல் நான்கு கலீபாக்களும் சென்றுவிட்ட பின்னர்ச் சற்றேறக் குறைய ஒருநூ ற்றாண்டுகள் வரை இஸ்லாத் தின் செங்கோலைப் பற்றி, முஸ்லிம் ராஜ்யத்தின்மீது ஆட்சி செலுத்தி வந்த வம்சத்தினர் மேற்கூறிய பனூ உமையா கிளையினரே யாவர். நபிகள் திலகத்திற்கு விரோதமாய்க் குறைஷிகளையும், ஏனை வர்க்கத்தினரை யும் அடிக்கடி தூண்டிவிட்டுப் படையெடுத்துத் தலைமை தாங்கிச் சென்று, இறுதியிலே மக்கமா நகர் நபிபெருமான் கைவயம் வந்து சேர்ந்ததன் பின்னே தீனுல் இஸ்லாத்தை மனமாரத் தழுவிக் கொண்ட அபூசுபியான் என்னும் தலைசிறந்தவரும் மேலே சொல்லப்பட்ட பனூ உமையா கிளையில் ஜனித்தவரா

---

*அவ்விருவருள் **ருகையா** வென்னும் மாதுவயிற்றில் அப்துல்லா வென்றோர் ஆண்மக வுதித்தது; எனவேதான் அப்பால் இப்பெரி யாருக்கு அபூ அப்துல்லா என்னும் காரணப் பெயர் வழங்குவ தாயிற்று. அப்பால் அக்குழந்தையும் தனது 6-ஆவது வயதிலே மரணமடைந்து போய்விட்டது.

கவே யிருந்து வந்தார். தீனுல் இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னேயும் பனூ உமையாக்கள் கீர்த்தி வாய்ந்தவர்களாகவே வாழ்ந் திருந்தனர்கள். குறைஷிகளின் தேசியக் கொடி பனூ உமையாக்கள் வயமே அக்காலத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது.

உதுமான்ரலி அவர்கள் நபிகள் பிரானைப் பார்க்கினும் ஆறுவயதே இளைமை யுள்ளவர்களா யிருந்தார்கள். இளம்பிராய முதற்கொண்டே இப்பெரியார் நாணயமும் நல்ல கண்ணியமும் வாய்க்கப் பெற்றவரா யிருந்தார்கள். இவர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியும். வயதுவந்த பின்பு இப் பெரியார் வர்த்தகத்தி லீடுபட்டு, நல்ல இலாபகரமான தொழிலும் செய்து வந்தார்கள். நாணயத்திற்காகவும் நல்லொழுக்கத்திற்காகவும் எல்லாரும் இவர்கள் மாட்டு நல்ல கண்ணியமே காண்பித்து வந்தார்கள். இப்பெரியாருக்கும், அபூபக்ர்ஸித்தீக்ரலி அவர்களுக்கும் நல்ல விதமான நட்புரிமை இருந்துவந்தது.

நபிகளுயகர்ஸல் அவர்கட்கு ஆண்டவனுல் நபிப் பட்டம் அருளப்பட்ட பொழுது உதுமான்ரலி அவர்களுக்குப் பிராயம் 34 ஆகியிருந்தது. ஹஜ்ரத் அபூபக்ர்ரலி அவர்கள் தாம் முதன் முதலாக இவர்கள் பால் இஸ்லாத்தின் தூதைச் சுமந்து சென்றுர்கள். பிறகு ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களும், தல்ஹா பின் உபைதுல்லாரலி அவர்களும் நபி பெருமான் சன்னிதானம் வந்து சேர்ந்தார்கள் ; அது பொழுது நபிகள் திலகம் தீனுல் இஸ்லாத்தின் போதனைகளை விளக்கிக் காண்பித்து, குர்ஆன் ஷரீபிலிருந்து ஒரு திருவாக்

**தீனுல் இஸ்லாத்தைத் தழுவியது**

இயத்தையும் ஓதிக் காண்பித்தார்கள்.* அப்பால் இஸ்லாம் மக்களுக்கு விதித்துள்ள கடமைகளையும், அவர்களை முன்னுக்குக் கொண்டுவர இம்மார்க்கம் கொண்டுள்ள நோக்கங்களையும் நபி பெருமான்ஸல் இவ்விருவருக்கும் எடுத்து விளக்கினார்கள். அக்கணமே இவர்களிருவரும் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டனர். இது நிகழ்ந்தது, நபிகள் நாயகம் அர்க்கம்ரலி அவர்களுடைய விடுதிக்குள் மறைந் துறைந்ததற்கு முன்னமேயாகும்.

குறைஷி குலத்தின் முக்கிய சாகையாகிய பனூ ஹாஷிம் கிளையில் நபிகணாயகர்ஸல் தோன்றினார்கள் ; இக்கிளைக்கு ஜன்மப்பகையா யிருந்து வந்தது, குறைஷி குலத்தின் மற்றொரு சாகையாகிய பனூ உமையா கிளையேயாகும். இத்தகைய பனூ உமையா வம்சத்திலே தான் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் தோன்றினார்கள். குறைஷி குலத்து அப்து மனாபின் புத்திரர்களாகிய அப்துஷ் ஷம்ஸும், ஹாஷிமும் உடன் பிறந்த சகோதரர்களா யிருந்தும், அப்துஷ் ஷம்ஸின் குமாரராகிய உமையா வென்பவர் ஹாஷிம் வம்சத்தினர் மீது அளவிறந்த வைஷம்யம் வகித்து வந்தார்.

---

*அதுபொழுது உதுமான் (ரலி) அவர்கள் தங்களுடைய அனுபவமொன்றை எடுத்துக் காண்பித்தார்கள்: ''நாங்கள் இப்பொழுது தான் ஷாம் (சிரியா) தேசத்திலிருந்து திரும்பிவந்தோம். வரும் வழியில் ஓரிடத்தில் நாங்கள் களைப்பால் சிறிது அயர்ந்திருந்தோம்; அப்பொழுது, 'உறங்குகிறவர்களே! விழித்தெழுங்கள். மக்காவில் அஹ்மத் அவதாரமாய் விட்டார்,' என்றொரு குரல் என் செவியில் கேட்டது; இப்பால் இங்கு வந்து சேர்ந்தவுடனே தங்களுக்கு நபிப் பட்டம் அருளப்பட்டுள்ளதைச் செவிமடுத்தேன்,'' என்று இப் பெரியார் கூறினார்கள்—(தபக்காத் இப்னு ஸஅத். வால். III, பக். 37).

எனவேதான் அக்பா பின் முஐயித் என்பாரும், அபூ சுபியான் என்பாரும் நபி பெருமானாருடைய ஜன்ம விரோதிகளாய்த் திகழ்ந்து வந்தார்கள். ஆனால் உதுமான்ரலி அவர்கள் மட்டும் எந்தவிதமான குடும்பப் பகைமையாலும் பக்ஷபாத முள்ளவராய் மாறிப் போய் விடவில்லை. ஞானம் உதயமாயிற்று; அக்கணமே இப்பெரியார் அதனை இறுகப் பற்றிப் பிடித்துக் கொண்டார்கள். இவருடைய சிறிய தந்தையாகிய ஹ(க்)கம் என்பார், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் தீனுல் இஸ்லாத்தைத் தழுவியது தெரிந்து, இவர்களைக் கயிறுகொண்டு கட்டி, இன்னுர் இஸ்லாத்தைத் துறந்து வெளிப்பட்டாலல்லது அக் கட்டை அவிழ்த்துவிட முடியாதென்று கூறிவிட்டார். ஆனால், தங்கட்கு என்ன நேர்வதா யிருந்தாலும், தீனுல் இஸ்லாத்தை மட்டும் விட்டுவிட முடியாதென்று இப்பெரியார் வலியுறுத்திக் கூறிவிட்டார்கள்.

**ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் செல்லல்**

ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்து அதிக நாள் ஆகுமுன்னே, அபூலஹப் என்னும் நாயகத்தின் எதிரி—நபிபிரானது பெரிய தந்தையாயிருந்தவன்—தன் குமாரன் உத்பா என்பவனை நோக்கி, அவன் தன் மனைவியாகிய, நபிபெருமானாரின் குமாரியாய ருகையா என்னும் மங்கையை விவாகரத்து செய்து விடுமாறு ஆணையிட்டு விட்டான். அவ்விதமே உத்பா தலாக் கொடுத்துவிட்ட பின்னர் நபிகணுதர்ஸல் அக்குமாரி ருகையாவை ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களுக்கு மறு மணம் முடித்து வைத்தார்கள். அப்பால், குறைஷியர் கொடுத்து வந்த இன்னல்களும் இடை

யூறுகளும் எல்லே கடந்து போய் விட்டமையால், நபி கட்டிலகம்ஸல் தங்களுடைய சிஷ்யர்களைத் தாத்காலிகமாக ஹபஷா (அபிஸீனியா)வுக்குச் சென்று அடைக்கலம் தேடிக்கொள்ளுமாறு அனுமதியளித்து விட்டார்கள். அதுபொழுது அவ்வாறு அபிஸீனியாவுக்கு ஹிஜ்ரத் சென்ற முதற் கூட்டத்தில் ஹஜ்ரத் உதுமானும்ரலி இவருடைய பாரியாள் ருகையாவும்ரலி சேர்ந்திருந்தனர். இவ்விருவரும் பல ஆண்டுகள் வரை அந்த ஹபஷா நாட்டிலே தங்கி யிருந்து விட்டு, அப்பால் மக்காவுக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்கள்; அங்கிருந்து அனேக முஸ்லிம்களுடன் சேர்ந்து மீட்டும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்கள்.

மதீனாவுக்குச் சென்ற பின்னரும் உதுமான்ரலி அவர்கள் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக மிகவும் அருமையாய்ப் பாடுபட்டு வந்தார்கள். தீனுல் இஸ்லாத்துக்குப் பணஉதவி புரிந்ததில் ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக்ரலி அவர்கட்கு அடுத்த படியில் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களே வந்து நிற்கின்றார்கள். மதீனாவில் "பிஇர் ரூமா" என்ற நாமத்துடன் ஒரே குடி தண்ணீர்க் கிணறுதான் அதுபோது இருந்து வந்தது; அந்தக் கிணறும், முஸ்லிம்கள் அங்குச் சென்று குடியேறிய காலத்தில் முஸ்லிமல்லாதார் கைவயம் இருந்து வந்தமையால், அவ் வேதிலர் கிரயம் வாங்கிக் கொண்டே முஸ்லிம்களுக்குக் குடி தண்ணீர் கொடுத்து வந்தார்கள். அவ்வாறு முஸ்லிம்கள் துன்பத்துக் குள்ளாக்கப்பட்டு வந்தது கண்டு நபி பெருமான்ஸல் மனம் நொந்து, அக்கிணற்றை எந்த

**இவர் இஸ்லாத்துக்குச் செய்த சேவை**

நல்ல முஸ்லிமேனும் கிரயம் கொடுத்து வாங்கிப் பொது வுடைமையாக ஆக்கிவிட மாட்டாரா வென்னும் விருப்பத்தை வெளிப்படுத்தினுர்கள். அதற்கிணங்க ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் இருபதினுயிரம்திர்ஹம்* கொடுத்து அந்தக் கிணற்றை வாங்கி, எல்லார்க்கும் உபயோகமாகுமாறு உதவி புரிந்தார்கள்;

மதீனுவி லிருந்த மஸ்ஜிதுன்னபீ மிகச் சிறிதாயிருந்து வந்தமையால், தினேதினே அபிவிருத்தியடைந்து வந்த முஸ்லிம்களுக்குப் பற்ருமலிருந்தது கண்டு, நபி பெருமான்ஸல் எவரேனும் இரக்கமுள்ள முஸ்லிம் அண்டையிலிருந்த இடத்தைவாங்கிஇம்மஸ்ஜிதுடன் சேர்த்துக் கொடுத்தால் மிகவும் உபகாரமாயிருக்குமென்று தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தலாயினுர்கள். அப்பொழுதும் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களே அவ்விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார்கள் ; இப் பெரியார் தங்களது பணத்தைக் கொடுத்தே அயலிலிருந்த இடத்தை வாங்கித் தங்கள் செலவைக் கொண்டே அதனை மஸ்ஜிதுடன் சேர்த்துக் கட்டிக் கொடுத்தார்கள். இன்னம், தபூக் படையெடுப்பின் போது முஸ்லிம்கள் அளவிறந்த கஷ்டங்களுக்குள்ளாக வேண்டியவர்களா யிருந்தார்கள் ; அதுபொழுது ரோமராஜ்யப் படைகளை எதிர்த்துத் தாக்கி அதிகமான முஸ்லிம்கள் அப் படையெடுப்பில் சேர்ந்து கொள்ள வேண்டியவர்களாகக் காணப்பட்டார்கள். அவ்வேளையில் உதுமான்ரலி அவர்கள் ரொக்கமாகப்

---

*வேருேர் ஆதாரத்தின் பிரகாரம் இப்பெரியார் அக்கிணற்றுக்காக முப்பத்தையாயிரம் திர்ஹம் கிரயம் கொடுத்தார்களென்று யாம் அறிகிருேம்.

பதினுயிரம் தீனர்கள் கொடுத்ததுமன்றி, ஓராயிரம் ஒட்டகமும் கொடுத்துதவினர்கள். இவ்வாருக இப் பெரியார் அப் படையெடுப்பின் பெரும் பகுதியான செலவை ஏற்றுக்கொண்டார்களென்று அறியக்கிடக் கின்றது.

உதுமான்ரலி யுத்தங்களில் சம்பந்தப் பட்டது

குறைஷிய ரிழைத்த கொடுமைகள் எல்லே கடந்து விட்டமையால், முஸ்லிம்கள் இறுதியிலே மக்காவைத் துறந்து மதீனுவுக்கு ஹிஜ்ரத் சென்று புகலிடம் தேடிக்கொள்ள வேண்டியவ ராயினர்கள். ஆங்குச் சென்றும் அவர் கள் வாளா விட்டுவைக்கப் படவில்லை; என்னெனின், அடிக்கடி குறைஷிக் குப்பார்கள் மதீனுவின் மீது படையெடுத்துச் சென்று அங்கிருந்த முஸ்லிம்களை வேருடன் கல்லியெறியச் சதியாலோசனை புரிந்து வந்தார்கள்; ஹிஜ்ரீ இரண்டா வது ஆண்டில் பத்ரென்னு மிடத்தில் முதல்யுத்தம் நிகழலாயிற்று: அந்த யுத்தகளம் மதீனுவி லிருந்து மூன்று நாட் பிரயாண தூரத்தில் அமைந்து கிடந்த மையாலும், அவ்வமயம் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர் களுடைய மனைவி ருகையா மிகவும் நோய்வாய்ப்பட் டிருந்தமையாலும் இப்பெரியார் அந்த யுத்தத்தில் வந்து கலந்து கொள்ள முடியாதவராய்ப் போய் விட்டார்கள்; தம்முடைய வியாதி யடைந்துள்ள பாரி யாளைப் பராமரிக்கும் பொருட்டு, நபிகளுயகரது பகிரங்க அனுமதியின் மீது இவர்கள் மதீனுவிலேயே தங்கி விட்டார்கள். எனினும், அம்மாது சிரோமணி அக்கொடிய வியாதியை விட்டு மீட்சி பெறவில்லை; பத்ரில் கிடைத்த வெற்றி மதீனு வந்து சேரு முன்பே

ருகையாரலி அல்லாஹ்வின் சன்னிதானம் சென்று சேர்ந்து விட்டார்கள். எனவே, ஹஜ்ரத் உதுமான்ரலி பத்ரு யுத்தத்துக்குச் செல்ல முடியாமற் போனது, வேறு தடுக்க முடியாத காரணத்தினுல்தான் என்று இப்பொழுது யாம் செவ்விதாய்த் தெரிந்து கொள்ளுகிருேம்; ஆதலினுல்தான் பத்ரின் யுத்தகளத்தில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த சம்மானப் பொருள்களெல்லாம் பங்கிடப்பட்ட பொழுது ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கட்கும் ஒரு போர்வீரனுக் குரிய விகிதமே வினியோகிக்கப் பட்டது. ருகையாரலி தேக வியோகமாய் விட்டதன் பின்னே நபிகள் திலகம் தங்கள் மற்ருெரு புத்திரியாகிய உம்மு குல்தூம் என்னும் நங்கையை ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களுக்கு மணமுடித்து வைத்தார்கள். இக்காரணத்தினுலேதான் இப்பெரியார்க்கு, தூன் னூரைன்—இரு ஜோதிகளை அடையப்பெற்றவர்—என்னும் கௌரவப் பட்டமும் அப்பால் வழங்கப்படுவ தாயிற்று.

ஹி. மூன்ருவது ஆண்டில் நிகழ்வுற்ற உஹத் யுத்தத்தில் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். அவ்வமயம் முதலில் குறைஷிகள் தோற்கடிக்கப்பட்டார்கள்; அப்பால் முஸ்லிம் வில்லாளிகள் இழைத்துவிட்ட தவற்ருல் யுத்தத்தின் போக்கு இடையிலே மாறிப்போய் விட்டது. முஸ்லிம்களுக்குப் பின்புறமிருந்த ஒரு மலைக்கணவாயில் தற்காப்பினிமித்தம் நபிபெருமான் வில்லாளிகள் சிலரை நிறுத்தி, யுத்தத்தின் ஜயாபஜயம் எவ்வா ருயினும் அவர்கள்மட்டும் தங்களிடத்தை விட்டுப் புடைபெயர்ந்து செல்லக்கூடா தென்று கடுமையான

கட்டளையிட்டு வைத்தார்கள். ஆனால், வெற்றி முஸ்லிம்கள் பக்கம் வந்தது கண்டு, அந்த வில்லாளிகள் தங்க ளிருப்பிடத்தை விட்டு யுத்தகளத்துள் வந்து பிரவேசித்து விட்டார்கள். குறைஷிகள் இத்தவற் றினை யுணர்ந்து, அக்கணமே அம் மலைக்கணவாயைக் கைப்பற்றிப் பின்புறமாய் வந்து முஸ்லிம்களை முதுகின் புறம் தாக்கினார்கள். வெற்றியடைந்திருந்த முஸ்லிம் கள் எங்கும் சிதறுண்டு கிடந்தமையால், அவர்கள் எதிரிகளைத் துரத்தியடிக்க முடியாதுபோய் இக்கட்டுள் சிக்கிக் கொண்டார்கள்; முஸ்லிம் வீரருள் ஒருசிலர் மற்றவர்களை விட்டுப் பிரிக்கப்பட்டு விட்டபடியால், அன்னார் மதீனாவைநோக்கி ஓடத் தலைப்பட்டனர்; மற்றொரு பகுதி யுத்தகளத்தைவிட்டு ஓட்டம்பிடியாது போயினும், இருந்த இடத்தில் நிலைநிற்க முடியாது போய், அப்பால் ஒருபுறத்தில் ஒதுங்கி நின்றுவிட்டது; இப்படி ஒதுங்கி நின்றவருள் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களும் ஒருவரா யிருந்தார்கள். இதற்காக இப் பெரியாரை ஒரு சிலர் பின்னால் குறைகூறத் துணிந்து விட்டனர். உண்மையை ஊன்றிப் பார்க்குமிடத்து, உதுமான்ரலி அவர்கள்மீது தவறொன்றுமில்லை யென்ப தாகும். இஃதொரு பாபகாரிய மன்றென்றும், மன்னிக் கப் படுதற்குரிய பிழையேயென்றும் குர்ஆன் ஷரீபே (3: 154) தீர்ப்பளித்துள்ளது. ஆகவே, இப்பெரியாரை எவரும் குறைகூறுவது கூடாத செய்கையாகும்; எவரையும் உஹத்யுத்த நிகழ்ச்சியி னிமித்தம் குற்றம் சாட்டுவதற்கு இடமில்லாது அல்லாஹ்வே மன்னித்து விட்டிருக்கிறான். ஆயின், ஏனை யுத்தங்களிலெல்லாம் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் கலந்தே வந்திருக்கிறார்

கள். எனினும், இப்பெரியார், ஹுதைபிய்யா உடன் படிக்கையின் போது அவ்விடத்தில் ஆஜிராயில்லை யென்று யாம் தெரிந்துகொள்கிறோம். என்னெனின், நபிகட் டிலகத்தின் கட்டளையின்மீது இப்பெரியார் குறைஷியர்பால் தூது சென்றார்கள்; அப்படிச் சென்ற இப் பெரியாரை மக்கத்திலே அவ்வெதிரிகள் சிறை செய்து வைத்துக் கொண்டார்கள். ஹஜ்ரத் உது மான்ரலி அவர்களைக் குறைஷிக் குப்பார்கள் கொலை செய்துகூட விட்டார்கள் என்னும் வதந்தியும் அது போது எங்கும் பரந்துகிடந்த தென்னலாம். எனவே தான் நபிபெருமான்ஸல் தங்கள் சிஷ்யர்கள்மாட்டிருந்து வேறொரு புதிய உறுதி மொழியும் அதுபொழுது வாங்கவேண்டிய தாயிற்று. என்னெனின், தூது சென்றவரைக் கொல்வதென்பது யுத்தத்தை அறை கூவி அழைப்பதே யாகுமன்றோ? அவ்வாறு அது காலை நபிகள் நாயகம் புதிதாய் வாங்கிய உறுதிமொழி சரித்திரத்தில் **பைஅத்துர் ரிள்வான்** என்றழைக்கப்படும். அவ் வுறுதிமொழியின்படி எல்லா முஸ்லிம்களும், எதிரிகளின் தாக்குதல் எத்துணைக் கொடிதா யிருப்பி னும், தத் தமக்குரிய ஸ்தானத்தைவிட்டு அணுத்துணை யும் அப்பா லிப்பால் புடை பெயராமல், இறுதி முஸ்லிம் மரணமாகும் பரியந்தம் விடாது துணிவுடன் யுத்தம் புரிதல் வேண்டும் என்று பிரதிக்கினை செய்து கொடுத்தார்கள். அவ்வாறு அனைவரும் உறுதிசெய்து கொடுத்து முடித்த பின்பு, நபி பெருமானாரும் ஹஜ்ரத் உதுமான்ரலி சார்பாய்த் தங்கள் ஒரு கரத்தின்மீது மற்றொரு கரத்தினை வைத்துப் பிரதிக்கினை செய்து கொண்டார்கள். இதனால், நபிபெருமான்ஸல் இப்

பெரியார்மீது எத்துணை யதிகமான பிரியம் வைத்திருந் தார்களென்பது தெற்றெனப் புலப்படுகின்ற தன்றோ? நபிகள் நாயகமும் அவர்களுடைய சிஷ்யர்களும் அவ் வாறு பிரதிக்கினை செய்து உறுதிமொழி கூறியுள்ளார் களென்ற செய்தியைச் செவிமடுத்தவுடனே மக்காவி லுள்ள குறைஷிகள் விலவிலத்துப்போய், உதுமான்ரலி அவர்களை விடுதலை செய்துவிட்டு, அக்கணமே உடன் படிக்கையும் செய்துகொள்ள முன்வந்தார்கள்.

தபூக் படையெடுப்பிற் கென்று கிளப்பப்பட்ட சேனை **ஜைஷுல் உஸ்ரா*** என்றழைக்கப்படும்; அதற் கென்று ஆயிரம் ஒட்டகமும் அதிகமான ரொக்கமும் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களாலே அளிக்கப்பட்டன வென்பதை நீங்கள் முன்னமே அறிந்துள்ளீர்கள்.

**முன் கிலாபத்தில் இவர் வகித்த அந்தஸ்து**

ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள், தங்களுக்கு முன் னிருந்த அபூபக்ர் ஸித்தீக்ரலி உமறெ பாரூக்ரலி ஆகிய இரு பெரு மகான்களின் கிலாபத்தின் போதும் ராஜ்ய வியவகாரங்களில் ஒரு முக்கியமான அந்தஸ்தையே வகித்திருந்தார்கள். ஆகவே, **மஜ்லிஸுல் ஷூராவில்** இப் பெரியார் ஒரு முதற்றர அங்கத்தினரா யிருந்து வந்தமையால், எல்லா முக்கியமான காரியங்

*“ஜைஷுல் உஸ்ரா” என்பதன் பொருள் ‘கஷ்டத்துக் குரிய சைன்யம்’ என்பதாகும். தபூக்குக்குச் சென்ற சேனை ஏன் அப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டதெனின், முதன் முதலாய் அப் படையெடுப்பு மகா உக்கிரமான வேனிற்காலத்தில் கிளப்பப் பட்டது. இரண்டாவதாக அக்காலம் பேரீந்தின் அறுவடைக் காலமா யிருந்துவந்தது; பேரீந்து பழுத்துக் குலையிறக்குந் தறுவா யில் அரபிகள் தங்கள் சொந்த ஊரை விட்டு அயலூர் செல்ல மன மிசையார்கள்.

களிலும் இவரது ஆலோசனை கேட்கப்பட்டே வந்தது. ஹஜ்ரத் அபூபக்ர்ரலி அவர்கள் மரணத் தறுவாயில் இருந்தபோது, அப்பெரியார் தமக்குப் பின்னே கலீபாவாய் வரக்கூடியவரைக் குறித்து அவரது நியமன விஷயத்தில் ஆழ்ந்த சிந்தனையுள் மூழ்கி யிருந்தார்கள்; அதுகாலை அவர்கள் முதன் முதலாக அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் அவர்களையும் உதுமான்ரலி அவர்களையுமே கலந்து ஆலோசனை புரிந்தார்கள்; அவ்விருவரின் அபிப்பிராயங்களையும் முதன் முதலாய்த் தெரிந்துகொண்டதன் பின்னரே அந்த முதல் கலீபா ஏனையோரைக் கலந் தாலோசிக்கத் துணிந்தார்கள். ஆதே விதமான நம்பிக்கைக்கும் அந்தரங்க ஆலோசனைக்கும் உரிய அவ்வுயரிய அந்தஸ்தையே உமர்ரலி அவர்களது கிலாபத்தின் போதும் உதுமான்ரலி அவர்கள் வகித்துவந்தார்கள்.

ஹஜ்ரத் உமர்ரலி அவர்கள் மரணப் படுக்கையில் கிடந்தபோது, அந்தச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற முறையில் மகா சிலாக்கியமான ஓர் ஏற்பாட்டைச் செய்தே, தங்களுக்குப் பின்னால் நியமனம் பெற வேண்டியகலீபாவின் விஷயத்தைமுடிவு செய்து வைத்தார்கள். முதலிரண்டு கலீபாக்களும் நியமிக்கப்பட்ட காலங்களில் அத்துணை அதிகமான சிக்கல்கள் தோன்றிவிடவில்லை. நபிகள் திலகம்ஸல் நிர்யாணமடைந்தபோது, அவர்களுடைய தோழர்களுள் ளெல்லாம் ஹஜ்ரத் அபூபக்ர்ரலி போன்ற ஓர் ஒப்புயர்வற்ற உத்தமர் இருந்துகொண்டிருந்தார்; அப்பெரியாரின் இணையற்ற மதபக்திக்காகவும் சாமர்த்தியத்துக்காகவும் மற்றெல்

**கல்பாவாக நியமனம் பெறல்**

லாருடைய நாட்டமும் இயற்கையாகவே அப்பெரியார் மீதேதான் நாயகத்திற்கு அடுத்துள்ளவ ரென்று வீழ்ந்துகொண் டிருந்தது. அவ்வாறே அபூபக்ர்ரலி அவர்கள் மரணப்படுக்கையில் இருந்தபோதும் அவருக் கடுத்த கலீபா யாரென்னும் பிரச்சினை முஸ்லிம்களின் கண் முன்னே வந்துதித்த தென்னலாம்; அப்பொழு தும் ஹஜ்ரத் உமர்ரலி அவர்களைப்போன்ற ஒரு பெரி யார் மற்றெல்லாரைப் பார்க்கினும் ஓங்கி உயர்ந்து நின்றமையால், அன்னார்மேல் அந்தப் பெரும் பதவிக் குரிய நியமனம் வீழ்ந்தது. ஆனால், அவ்விருவரும் தேக வியோகமாய்ப் போய்விட்ட பின்னர் நபிகள் நாயகத் தின் ஸ்தானத்தில் கலீபாவாய் நியமனம் பெற்று அமரக்கூடியவர் பலராய்க் காணப்பட்டார்கள். ஆதியில் ஹஜ்ரத் அபூபக்ர்ரலி அவர்களைப் போலவும், அப்பால் ஹஜ்ரத் உமர்ரலி அவர்களைப்போலவும் ஏனையோரைப் பார்க்கினும் உன்னத ஸ்தானத்தில் உயர்ந்து நிற்கக் கூடியவர் இப்பால் தனிமனிதராய் ஒருவரும் காணப்படாமல், கலீபாவின் அந்தஸ்திற்கு அருகதை யுள்ளவராய் அனேகர் இருந்துவந்தார்கள். அவர்க ளெல்லாரும் ஒரே அந்தஸ்துள்ளவர்களாய் அமைந்து கிடந்தமையால், அவர்க ளுள்ளிருந்து ஒருவரை மட்டுமே கலீபாவாய்த் தேர்ந்தெடுப்பதென் பது சிறிது சிரம சாத்தியமாய்க் காணப்பட்டது. அந்த ஸ்தானத்திற்குப் பலர் அருகதை யுள்ளவரா யிருந்தனர்; ஆகவே, அவர்களுள் ஒருவரைவிட் டொருவரை நியமனம் செய்வதென்பது சிரமசாத்திய மான செய்கையாகவே காணப்படுவதென்பது சகஜந் தானே!

உமர்ரலி அவர்கள் உயிருடன் இருந்துவந்த போது, அபூ உபைதா பின் ஜர்ராஹ் தங்களுக்குப் பின்னே உயிருடன் இருக்கக்கூடுமாயின் மூன்ருவது கலீபாவாய் நியமனம்பெற அப்பெரியாரே முதலரு கதை வாய்க்கப்பெற்றவ ரென்று கூறிக்கொண்டிருந் தார்கள். ஆனுல், அந்த அபூ உபைதா என்பார் ஹஜ்ரத் உமர்ரலி அவர்களுக்கு முன்பே காலகதி யடைந்து போய்விட்டார். அவருக்குப் பின் அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் என்பார் இரண்டாவது கலீபா வால் மிகவும் நன்கு மதிக்கப் பெற்றிருந்தார். ஹஜ்ரத் உமர்ரலி அவர்கள் படுகாய முண்டபோது, இவரையே தங்கள் ஸ்தானத்தில் நின்று இமாமாகத் தொழில் புரியுமாறு நியமனம்செய்து வைத்தார்கள். ஆனுல் அந்த அப்துர் ரஹ்மான்ரலி அத்துணைப் பெரிய ராஜ் யாதிகாரப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள இணங்கிய வராய்க் காணப்படவில்லை. ஆதலினுல் அந்த இரண் டாவது கலீபாவானவர் தமக்குப்பின் கலீபாவாய்த் தேர்ந்தெடுக்கப் பெறுதற்கென்று அறுவரடங்கிய ஒரு கோஷ்டியை நியமித்துச் செல்லவேண்டிய ஆவசியகம் ஏற்பட்டுவிட்டது. அவர்களுள் ஹஜ்ரத் உதுமான்ரலி ஒருவ ராவார்; இவர்களுக்கு அப்பொழுது வயது எழுபது; நல்ல மரியாதைக்குரிய பெரியார்; இஸ்லாத் தின் முன்னேற்றத்துக்காக அதிகமான ஐசுவரிய தியாகம் புரிந்தவர்; அன்றியும், நபிகள் திலகத்தின் இருகுமாரிகளை ஒருவர் பின் ஒருவராய் மணமுடித்துக் கொண்ட பெரியார். இரண்டவதாய் அலீரலி அவர்கள் இருந்தார்கள்; இப்பெரியார், நபிபெருமானுடைய மருகராகவும் பெரியதந்தையின் புதல்வராகவும்

இருந்துவந்தார்கள். இவர்களுடைய புஜபல பராக்கிரமத்தைக் கண்டு திகில்கொள்ளாத எதிரி எவருமே அக்காலத்தில் இருந்ததில்லை ; இவர்களுடைய கல்வி ஞானமும் மதபக்தியும் எல்லாருள்ளத்தையும் அது காலைக் கவர்ந்து நின்றன வென்னலாம். மூன்ருவதாய் ஸஅத் பின் அபீவக்காஸ் என்னும் பாரசீகத்தை வென்ற வீரர் நியமிக்கப்பெற்ருர் ; இவர் கூபாவின் ராஜப் பிரதிநிதி ஸ்தானத்திலிருந்து திருப்பி யழைக்கப்பட் டிருந்தபோதினும், அஃதொரு சாமான்னிய காரியத்திற்காகவே நிகழ்ந்ததாதலின், அஃதொரு தடையாய்க் கருதப்படவில்லை. இப்பெரியார் ராஜ்யபரிபாலன முறையில் பிரத்தியேகப் பண் பெற்றவரா யிருந்து வந்தார். அப்பால் தல்ஹாவும் ஜுபைரும் நியமிக்கப் பெற்ருர்கள் ; இஸ்லாத்தின் சேவையிலும், நாயகத்தைத் தற்காக்கும் விஷயத்திலும் இவர்கள் புரிந்து வந்த மேன்மையான காரியங்களினிமித்தம் இவ்விருவரும் மற்றெல்லா முஸ்லிம்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்கள் ; அதுவேயுமன்றி, " ஆசீர்வதிக்கப் பெற்ற பதின்மர் "—(அஷர முபஷ்ஷரா) என்னும் கோஷ்டியிலும் சேர்ந்திருக்கக்கூடிய கௌரவம் பெற்றிருந்தார்கள். இவ்வைவருடன் அப்துர் ரஹ்மான் பின் அவ்பும் சேர்க்கப்பட் டிருந்தார்.

மேற் கூறிய அறுவரையும் உமர் ரலி அவர்கள் நியமனம் செய்து, அவர்க ளுள்ளிருந்தே ஒருவரை கலீபாவாய்த் தேர்ந்தெடுத்துக்கொள்ளுமாறு கட்டளையிட்டு வைத்தார்கள். இவர்களைப்பார்க்கினும் சிறந்தவர்களைப் பொறுக்கியெடுப்பதோ, இதனைப் பார்க்கினும் மேலான ஏற்பாட்டைச் செய்துவைப்பதோ அத்

அதற்குமேல் ஒருபடி சென்று, அதுகாலை ஹஜ்ஜு செய்வான் வேண்டி இஸ்லாமிய நாடுகளின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் விஜயஞ் செய்திருந்த முஸ்லிம் பெரியார்களை யெல்லாம் கண்டும் பரியாலோசனை புரிந்தார்கள். அப்பொழுதும் பெரும் பான்மையான பொதுஜன அபிப்பிராயம் உதுமான்ரலி அவர்கள் சார்பாகவே இருந்து வந்தது. எனவே, நான்காவது நாள் அதிகாலையில் அப்துர்ரஹ்மான்ரலி அவர்கள் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களை ஏகமாய்த் தேர்ந்தெடுக்கப் பட்ட கலீபா வென்று பிரகடனப் படுத்தினார்கள்; உடனே ஒவ்வொருவரும் முன் சென்று இப்பெரியார் பால் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்தனர். அன்றைத்தினம் ஹிஜ்ரீ 24-ஆம் ஆண்டு முஹர்ரம் மாதம் முதல் தேதியா யிருந்தது. அந்த ராஜவிசுவாசப் பிரமாணம் முடிவடைந்தபின் தல்ஹாரலி வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் அன்னவர்பால் நடந்த விருத்தாந்த முழுவதையும் எடுத்துக்கூறித் தாங்கள் கலீபாவாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டதில் தல்ஹாரலி அவர்களுக்கு ஆக்ஷேப மிருக்குமாயின், உடனே தாங்கள் விலகிக் கொள்ளச் சித்தமாயிருப்பதாய்த் தெரிவித்தார்கள். ஆனால், தல்ஹாரலி இப்பெரியார் விஷயத்தில் தமக்கு ஆக்ஷேபம் ஒன்றுமில்லை யென்றுகூறி, உடனே ராஜ விசுவாசப் பிரமாணமும் செய்து கொடுத்துவிட்டார்.

இரண்டாவது கலீபாவின் இறுதிக் காலம்வரை பாரசீகநாட்டில் சாந்தமும் சமாதானமுமே குடிகொண்டிருந்தன; ஆனால், அப்பால் ஆறுமாதகாலம் கழியு முன்பே, சமாதான உடன்படிக்கைகளை யெல்லாம்

மீறி அத்தேசமுழுதும் இஸ்லாமிய ஆட்சிக்கு விரோத மாய்க் கிளர்ச்சிசெய்து கிளம்பிவிட்ட தென்னலாம்.

**பாரசீகதேசத்தில் கிளர்ச்சியும் இஸ்லாமிய ராஜ்யத்தில் விஸ்தீரணமும்**

பாரசீகத்தின் மாஜீ மன்னனாகிய யஜ்த் கிர்த் நாட்டைவிட்டு ஓட்டம் பிடித் திருந்தாலும், இன்னமும் உயிருடனே தான் இருந்துவந்தான்; அவன்தான் அத்தகைய கிளர்ச்சிக்கெல்லாம் மூல காரணமாய் இருந்துகொண்டிருந்தான். அவனுடைய இரகசியப்பிரதிநிதிகள் அந்நாடு முழுதும் அலேந்துதிரிந்து, அந்தரங்கத்தில் அவ்வரசனுக்கு வேண்டிய அபிமான முழுதையும் சேகரித்துக்கொண்டு வந்தார்கள்; ஆகவே, அத்தேசமக்களும் தங்கள் மாஜீ மன்னன்மீது அபிமானம் பெரிதும் பாராட்டத் துவக்கிக் கொண்டார்கள். ஆனால், உதுமான்ரலி அவர்கள் அவ் வியக்கத்தைப் பலமாக எதிர்த்துத் தகைக்கத் துணிந்துநின்றார்கள். என்னெனின், குழப் பம் நிகழ்ந்த இடங்களுக்கெல்லாம் சைன்யங்கள் உடனுக்குடன் அனுப்பப்பட்டு, அங்கங்கேயும் சமா தானம் நிறுவப்பெற்று, உடன்படிக்கை நிபந்தனேகள் புதிதாக வற்புறுத்தப்பெற்றன. கலகத்துக்கு ஆஸ் பதமா யிருந்துவந்த பாரசீக எல்லேப்புறத்திற்கே முஸ்லிம் சைன்யம் அதிகம் அனுப்பப்பட்டது. ஆதலினால் இந்த மூன்ருவது கலீபாவின் காலத்தில் அந்தப் பாரசீக நாடு இரண்டாம் முறையாய்ப் பிடி பட்டதன்பயனாய் இஸ்லாமியராஜ்யத்தின் விஸ்தீரணம் இன்னம் அதிகமாய்ப் பெருகிற்று. ஒருபுறத்தில் இஸ் லாத்தின் பதாகை பல்கிலும் துர்க்கிஸ்தானிலும் பறந்துகொண் டிருக்க, மற்ருெருபுறத்தில் ஹிராத்,

காபூல், கஜ்னி ஆகியநாடுகளின் மன்னர்கள் கலீபாவுக்குக் கப்பங்கட்ட இணங்கி விட்டார்கள். நீஷாப்பூர், தூஸ், மர்வ் ஆகிய இடங்களை உள்ளிட்ட குராஸான் பகுதியின் பெரும்பாகம் ஹி. 30—ஆம் ஆண்டிலே முஸ்லிம்கள் கைவயம் வந்து சேர்ந்து விட்டது. அடுத்தஆண்டில்—அஃதாவது, உதுமான்ரலி பட்டத்திற்கு வந்து 8-ஆவது ஆண்டில்—யஜ்த்கிர்த் என்பான் அன்னியநாட்டில் இருந்தபடியே இறந்து போய் விட்டான். ஹி. 32-இல் ஆஜர்பாய்ஜான் பள்ளத்தாக்கில் துருக்கியரின் சேனைகளுடன் முஸ்லிம் சைன்யம் எதிர்த்து நிற்க வேண்டியதாயிற்று. என்னெனின், அதுகாலை அத்துருக்கியர்கள் கலாம் பல விளைத்து வந்தார்கள்; அவர்களை அடக்கி வைக்கவே அந்த அரபிப்படை அவ்வாறு துணிவு கொண்டு எழுந்தது. முதலில் முஸ்லிம்கள் தோல்வியுண்டார்கள்; ஆனால், மதீனாவிலிருந்து உதவிப்படைகள் வந்து சேர்ந்தவுடன் கிலாபத் ராஜ்யத்தின் மானமும் மரியாதையும் மிகவாய்க் காப்பாற்றப்பட்டு விட்டன. ஆகவே, உதுமான்ரலி அவர்கள் ஆட்சியின் போது, உமர்ரலி அவர்கள் காலத்தில் வெற்றி கொள்ளப்பட்டிருந்த நாடுகளி லெல்லாம் சமாதானம் நிறுவப் பெற்றதுடன், கிழக்குத் திசையிலும் வடக்குத் திசையிலும் முஸ்லிம் ராஜ்யத்தின் எல்லைகள் நெடுந் தூரம் விஸ்தீரணமாய்விட்டன.

அவ்வாறு புதிதாய்க் கைப்பற்றப்பட்ட நாடுகளி லெல்லாம் இரண்டாவது கலீபாவின் காலத்தில் செய்துவந்தது போன்ற சீர்திருத்தங்களையே அம் முஸ்லிம்கள் செய்யத் துவக்கினார்கள். அங்கங்கேயுள்ள

மூலாதாரப் பொருள்க ளனைத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் மேற் கொள்ளப்பட்டு வந்தன. நீர்ப்பாசனக் கால்களும், பகிரங்க ரஸ்தாக்களும் அங்கங்கே அபிவிருத்தி செய்யப்பட்டன. பழவர்க்கங்களைத் தரக்கூடிய பல் வகை விருக்ஷங்களும் அவ்வத் தேசங்களில் அதிகம் நடப்பட்டன. அங்கங்கே ஒழுங்கான சேவகர்கள் நியமிக்கப்பட்டு, வியாபாரப் போக்குவரத்துக் குரிய சௌகரியங்க ளனைத்தும் நன்கு அமைத்துக் கொடுக் கப் பட்டன.

சிரியா நாட்டிலும் தொந்தரைகள் பல நிகழ்வுறத் தலைப்பட்டன. உமர்ரலி அவர்கள் முஆவியாரலி அவர் களைத் திமஷ்க் ராஜப் பிரதிநிதியாய் நியமித்து வைத் திருந்தார்கள்; காலக்கிரமத்தில் அந்த சிரியா நாடு (ஷாம் தேசம்) முழுமையுமே முஆவியாவின் கைவயம் வந்து சிக்கிவிட்டது. உரோமாபுரியின் கைஸர் சிலகாலம் வரை மௌன முற்றவரே போல் ஒன்றும் செய்யத் துணியாது வாளா வீற்றிருந்தார். ஆனால், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் கலீபாவா யமர்ந்த இரண்டாவது ஆண்டில் உரோமப் படைகள் கணக்கில்லாது சின்ன ஆசியாவின் கரைமார்க்கமாய் வந்து சிரியா நாட் டுள்ளே குவியலாயின. அதுபொழுது முஆவியாவிடம் இருந்து வந்த ஷாம்தேயப் படையைக்கொண்டு அந்த உரோமப் பிரளயத்தைத் தடைசெய்து நிறுத்திவிட இயலாது போய்விட்டது. ஆதலால், மதீனாவிலிருந்து கலீபாவால் புதுச்சைன்யங்கள் அனுப்பப்பட்டு, அப்

**உரோமர்கள் சிரியாவைத் தாக்கியதால் கிலாபத் ராஜ்யம் விரிவடைந்தது**

அத்துணைச் சமீபத்திலே இருப்பதாய் அந்த ராஜப் பிரதிநிதி கூறினர். எனினும், அந்த இரண்டாவது கலீபா கடற் சண்டைபோடத் துணியக் கூடா தென்றே வலியுறுத்தி வந்தார். இப்பால் உரோமர்கள் அடிக்கடி ஷாம் தேச எல்லைகளைத் தாக்கத் துணிவு கொண்டுவிட்டமையால், இந்த முக்கிய கேந்திரஸ்தான மாகிய ஸைப்ரஸ் தீவைக் கைப்பற்றிவிட வேண்டிய அவசியங்குறித்து மீட்டும் முஆவியா வற்புறுத்தத் துணிந்து நின்ருர். அதன் பிறகு கலீபாவால் அனுமதி யளிக்கப்பட்டது; அக்கணமே ஸைப்ரஸ் அரபிகள் கைவய மாய்விட்டது. அப்பால் அத்தீவிலுள்ள குடி மக்கள் உரோமர்களுக்குக் கொடுத்து வந்த கப்பம் போன்ற தொகை யொன்றையே அரபிகளுக்கும் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டார்கள். பின்னல் சில ஆண்டுகள் கழிந்து, இந்த ஸைப்ரஸ் தீவு வாசிகள் முஸ்லிம்களுக்கு விரோதமாய் உரோமப் படைகளுக்கு உதவி புரிவாராயினர்கள்; ஆகவே, முஆவியா மீட்டும் இத்தீவின் மீது படையெடுத்துச் சென்று இரண்டாம் முறையாய்க் கைப்பற்றவேண்டிய தாயிற்று. அப்பால் இந்த ஸைப்ரஸ் அரபிகள் வயம் வந்து, முஸ்லிம் ராஜ்யத்தின் ஒரு பகுதியாய் அமைந்துவிட்டது. இது நிகழ்ந்தது ஹி. 33-இ லாகும்.

உமர்ரலி அவர்கள் தேகவியோகமாய்ப் போனது, நாலுதிக்குக்களிலும் வசித்து வந்த எதிரிகளெல்லாரும் எழுந்துவந்து இஸ்லாத்தின் இராஜ்யத்தை இல்லா தொழித்துவிடலா மென்று துணிவுகொள்ளத் தூண்டி விட்ட ஒருவிதச் சயிக்கினையேபோல் காணப்பட்ட தென்னலாம். எவ்வாறெனின், பாரசீகத்தில் குழப்பக்

கிளர்ச்சி யுண்டாயிற்று ; உரோமர்கள் ஷாம்தேசத்தை (சிரியாவை) மீட்பித்துக்கொள்ளத் துணிந்தெழுந்தனர்கள். அப்பால் எகிப்து தேசமும் இஸ்லாத்துக்கு விரோதமாய்க் கிளம்பி, ஏனைத்தேசங்களை யொத்த தோல்வியையே பெற்றுக்கொண்டு விட்டது. ஹி. 25-இல் (கி. பி. 646) உரோமர்கள் அலெக்ஜாண்டிரியா (இஸ்கந்தரிய்யா)த் துறைமுகத்தி லிறங்கி, அந்நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனால், அது பொழுது எகிப்தில் கவர்னரா யிருந்துவந்த அம்ர் பின் ஆஸ் என்பார் அந்த ரோமர்களைத் துரத்தி அந்நகரத்தை மீட்டுங் கைவயப்படுத்திக் கொண்டார். அப்பால் அத்தேசத்தில் சமாதானம் நிலவுவதாயிற்று ; ஆனாலும், எகிப்துக்கு மேற்குப் பகுதியில் உரோமர்கள் இன்னம் தொல்லைகளையே அதிகம் பெருக்கிக்கொண் டிருந்தார்கள். அவற்றினை யெல்லாம் அடக்கி யொடுக்குமுன்பே எகிப்தின் ராஜப்பிரதிநிதி ஸ்தானத்தில் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அத்தேசத்தில் கவர்னரா யிருந்துவந்த அம்ரென்பாருக்கும் அப்துல்லா பின் ஸஅத் என்பாருக்கும் சிற்சில ராஜ்ய பரிபாலன விஷயங்களில் அபிப்பிராய பேதம் தோன்ற லாயிற்று. இந்த அப்துல்லாவானவர் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களுடைய பால்குடி முறையால் வளர்ந்த அபிமான சகோதரராயும் சாமர்த்தியம் மிக்குள்ள ராஜ்ய பரிபாலன கர்த்தாவாயும் இருந்து வந்தார். எனவே, இவரை உதுமான்ரலி அவர்கள் மேல்எகிப்தில் உத்தியோகத்திலமர்த்தி யிருந்தார்கள். அப்பால் அம்ருக்கும் அப்துல்

உரோமர் எகிப்தின் மீது படையெடுத்தலும், முஸ்லிம்கள் ஆபிரிக்காவில் ஆட்சி விஸ்தீரணம் பெறுதலும்

லாவுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த தக்ராார்கள் கலீபாவின் முன்னே கொண்டு வரப்பட்டன; அந்த வியவகாரத்தில் கலீபாவானவர் கவர்னருக்கு விரோதமாய்த் தீர்ப்புக் கூறிவிட்டார்கள். ஆகவே, அம்ரு பின் ஆஸ் மதீனுவுக்குத் திருப்பி அழைக்கப்பட்டார். அப்பால் அந்த ராஜப்பிரதிநிதி ஸ்தானம் அப்துல்லா பின் ஸஅதுக்கே அளிக்கப்பட்டு விட்டது.

உமர்ரலி அவர்களது ஆட்சியின் காலத்தில் திரிப்போலி, பர்க்கா ஆகிய விடங்கள்வரை பரந்து கிடந்த பூபாகமுழுவதும் முஸ்லிம் ராஜ்யாதிகாரத்தின் கீழே வந்து ஒடுங்கிக்கிடந்தது. ஆயினும், உரோமப்படைகள் மட்டும் தத்தமக்குரிய ஸ்தானத்தில் ஒட்டிக்கொண்டேயிருந்தன; அவர்களை அடியுடன் விரட்டியடிக்க அவ்விடத்தில் முடிவான யுத்தமொன்றும் அதுவரை நிகழ்த்தப்படாமலே யிருந்துவந்தது. ஆதலின், இந்த மூன்ருவது கலீபாவானவர் அப்துல்லா பின் ஸஅதுக்கு அனுமதி யளித்து, அம் மேற்குப் பகுதிக்குச் சென்று ஆங்குள்ள ரோமர்களை யெல்லாம் அப் பிரதேசத்தை விட்டு அப்புறம் துரத்திவிடக் கட்டளை யிட்டார்கள். என்னெனின், வட ஆபிரிக்காவின் மேல்பாகத்தில் அந்த ரோமர்கள் தங்கியிருக்கும் காலம்வரை எகிப்தில் இஸ்லாத்தின்நிலை பத்திரமா யிருப்பது சாலாதென்று கருதப்பட்டு வந்தது. அதுசமயம் அங்குள்ள ரோம சைன்யாதி பதியாகிய கிரிகரி யென்பான் தன் கைவயம் 12,000 வீரர்களை வைத்துக்கொண் டிருந்தான்; ஆனுல், அப்துல்லாவிடம் மிகக் குறைவான படைகளே இருந்துவந்தன. கலீபாவின் கட்டளைப்படி ஆபிரிக்காவின் மேல்பாகத்திலுள்ள ரோமப்படைகளை அப்புறப்

படுத்துவதா யிருந்தால், அதற்கு வேண்டிய துணைப் படையை அன்னார் மதீனாவிலிருந்தே அனுப்பவேண் டும். அவ்வாறு அப்பொழுது அனுப்பப்பட்ட முஸ்லிம் சைன்னியத்தில் அப்துல்லா பின் அப்பாஸுரலி, அப்துல்லா பின் உமருரலி சேர்ந்திருந்தார்கள். அது பொழுது ரோமர்கள் தங்களாலானமட்டும் வீரத் துடன் எதிர்த்து நின்றார்கள். ஆகவே, ஜயாபஜயம் சீக்கிரம் காணப்படவில்லை; ஒருசமயம் முஸ்லிம்கள் வெற்றி பெறுவதேபோலும், மற்றொரு சமயம் ரோமர் கள் வெற்றி பெறுவதே போலும் விஷயம் காணப்பட்டு வந்தது. இறுதியாய் அந்த உரோமத்தலைவன் கிரிகரி யென்பான் அப்துல்லா பின் ஜுபைர்ரலி அவர்களது கரத்தினால் சேதிக்கப்பட்டு உயிர் துறந்து போயினான். சேனாதிபதி சேதிக்கப்பட்டவுடனே உரோமப்படைகள் நிலைகுலைந்து எங்கும் சிதறியோடின. இவ்வாறு அவர் கள் சின்னாபின்னப்பட் டோடியது ஹி. 26-இ லாகும். பிறகு ஐந்தாண்டுகள் கழிந்து ஹி. 31-இல் ரோமராஜ் யம் மீட்டும் ஒருமுறை இஸ்லாத்தின்மீது போர் தொடுக்கத் துணிந்து முனைந் தெழுந்தது: எகிப்தின் மீது படையெடுக்க 500 கப்பல்கள் அந்த உரோமர்க ளால் சித்தம் செய்யப்பட்டன; ஆனால், முஸ்லிம்கள் கக்ஷியில் அத்தகைய பெருங் கப்பற்படை யொன்றும் இல்லா திருந்தும், அப்துல்லா அந்த எதிரிகளை வெல் வான்வேண்டி ஒருசில மரக்கலங்களைத் தையார்செய்து கொண்டு விட்டார். இரு கப்பற்படைகளும் சமுத் திரத்தில் சந்தித்தன; கலத்துடன் கலம் மோதுண் டன; அப்பால் இரு கக்ஷி வீரர்களும் கைகலந்தே போர் புரிந்தார்கள்; இறுதியில் அந்த உரோமர்கள்

தோல்வியடைந்து போயினர்கள். அவ்வாறு அதுகாலே எகிப்தில் முதற்றரமான வெற்றிபெற்றும், அங்கு ராஜப் பிரதிநிதியா யிருந்துவந்த அப்துல்லா பின் ஸஅத் மட்டும் முஸ்லிம்கள்பால் கெட்ட பெயரே வாங்கிக்கொண்டு வந்தார்.

**மதீனுவில் கல்வி யபிவிருத்தி**

இஸ்லாமிய ராஜ்யத்தின் எல்லேகளி லெல்லாம் மேற்கூறியவாறு அபிவிருத்தியும் அதிக விஸ்தீரணமும் ஆய்க்கொண்டு வருங்கால், மதீனுவின் கண்ணுள்ள மஸ்ஜிதுன் னபீயில் அலீரலி அவர்களும் அப்துல்லா பின் அப்பாஸ்ரலி அவர்களும் இலக்கணம், இலக்கியம், நியாயவாத சாஸ்திரம், தேசசரித்திரம், இஸ்லாமிய சட்டகலா ஞானம், தத்துவ சாஸ்திரம் ஆகிய பல கலேகளேயும் பொது மக்களுக்குப் போதித்து வந்தார் கள். அதுசமயம் அங்கே விதைக்கப்பட்ட விதைதான் பிற்காலத்தில் பகுதாத் என்னும் பட்டணத்தில் அதிக விமரிசையுடன் தழைத்தோங்கத் தலேப்பட்டுவிட்டது.

மீக்கூறிய விவரணங்களிலிருந்து, கிலாபத்ராஜ்யத்தின் பலங்குன்றி விட்டதென்று ஒருசிலர் உரைப்பதே போன்று ஓதுவதற் கொன்றும் போதிய காரணம் இல்லேயென்றே யாம் இவண் மிகச்செவ்விதாய் அறிந்து

**உதுமான்ரலி கிலாபத் ராஜ்யத்தின் மீது அதிருப்திக்குக் காரணங்கள்**

கொள்ளுகிறேம். இஸ்லாமிய அரசிய லியந்திரம் தனது வேகத்தில் சற்றும் குறைவில்லாமலே செம்மையாகவும் சிக்கலில்லாமலும் ஓடிக்கொண் டிருந்தது. இஸ்லாமியராஜ்யத்தில் எங்கெங்கெல்லாம் கிளர்ச்சிகளும் குழப்பங்களும் முளேக்கத் தலேப்பட்டனவோ, அங்கங்கெல்லாம்

அவை அழுத்தமாய்த் தகைக்கப்பட்டு ஒழிக்கப்பட்டே வந்தன. எல்லைப்புறங்களெல்லாம் விஸ்தீரணமாக்கப் பட்டு, அங்கங்கே கோட்டைகளும் நிர்மாணிக்கப் பட்டு விட்டன; புதுப்புது நாடுகளும் இஸ்லாமிய ராஜ்யத் துள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன. அந்த அரப் முஸ்லிம்களுக்கு அதற்கு முன்னால் கடற்போர் செய்யத் தெரியாம லிருந்துவந்தது; ஆனால், இதுபொழுது அத் தகைய கடற்போரிலும் இறங்கி, முதலிலே ரோமப் படை போன்ற ஒரு பலமிக்க பெரிய கப்பற்படையை அவர்கள் தோற்கடித்து வெற்றிக்கொடி நாட்டினார் கள். ஆகவே, இந்த மூன்றாவது கலீபாவின் காலத்தில் அந்த முஸ்லிம் ராஜ்யம் பலஹீன முற்றிருந்த தென் றேனும், கலீபா அவர்களும் தங்கள் ராஜ்ய பரிபாலன முறையில் வழவழப்பா யிருந்தார்க ளென்றேனும் எண்ணுவதற்குச் சிறிதும் இடமில்லை யென்றே கூறி முடிக்கலாம். ஆனாலும், மத்திய கிலாபத் ராஜ்யத் திற்கு விரோதமான முறையிலே விஷயங்கள் பல புரியப்பட்டுவந்தன வென்பதுமட்டும் மறுக்கொணாத உண்மையேயாகும். மேற்போக்கில் எல்லாம் இனிமை யாகவே காணப்பட்டுவந்தன; ஆனால், அந்தரங்கத்தில் நிகழ்த்தப்பட்டுவந்த சதியாலோசனைகள் ஒருசமயம் வெடித்து வெளிக்கிளம்பி, இஸ்லாமிய ராஜ்யத்தையே ஆணிவேருடன் ஆட்டி அசைத்துவிட்டன வெனல் வேண்டும்.

புதிதாய்க் கைப்பற்றப்பட்ட நாடுகளில் எண் ணிறந்த யூதர்களும் கிறிஸ்தவர்களும், மஜூஸிகளும் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டார்கள்; அவர்களுள் சிலர், இஸ்லாத்தின் மேன்மையைக் கண்டு தீனுலிஸ்

லாத்தில் வந்து புகுந்தவர்க ளென்று சொல்லப்படக் கூடாதவரா யிருந்தனர்; ஆனல், இத்தகையினர் இஸ்லாத்தின் பண்டை விரோதிகளா யிருந்து வந்த மையின், இப்பால் இம்மார்க்கத்தைத் தழுவிக்கொண் டால் இதற்குள்ளிருந்து கொண்டே இதனை ஒழித்து விடலா மென்னும் தீய எண்ணம் குடிகொண்டவர்க ளாகவே இஸ்லாத்தில் வந்து சேர்ந்து கொண்டு விட்டார்கள். இஸ்லாத்தில் எல்லாரும் சகோதர சமத்துவத்துடன் கூடியவர்களென்னும் இணையில்லா ஜனநாயகத் தத்துவம், இத்தகைய சூழ்ச்சிக்காரர் கையில் ஒரு சரியான ஆயுதமாகவே வந்து சிக்கிக் கொண்டு விட்டதெனல் வேண்டும். இவர்கட்கு இஸ்லாத்தின் ஏக சகோதரத்துவங் குறித்த கவலை யொன்று மில்லை; ஆனல், இந்தச் சகோதரத்துவத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, இஸ்லாத்துக்கே பேரா பத்தை விளைக்கத் துணிந்து விட்டார்கள். நபிகட்டில கத்தால் நிலைபெறுத்தப்பட்ட விசுவ சகோதரத்துவத் தில், மனிதனுக்கு மனிதன் இவ்வுலக வியவகாரங்களில் எத்துணை மேன்மை தாழ்மைகள் காணப்படினும், ஒரு சிறிதும் உயர்வு தாழ்வென்பது இல்லாமலே யிருந்து வந்ததென்பதை அந்த அதமர்கள் நன்கறிந்தே யிருந் தார்கள். மனச்சாக்ஷி சுதந்தரத்திற்கும், அதனை அவ ரவரும் வெளியிட்டுச் சொல்லக்கூடிய வாக்குச் சுதந் தரத்திற்கும் இஸ்லாத்தில் அதிகமான இடமுண்டு. எனவே, பொது மக்கள் சர்வதாராளமாய் உள்ளே நுழைந்து கவர்னரவர்களிடம் தங்கள் குறைமுறை களைக் கூறிக்கொள்ள இடங்கொடுப்பான் வேண்டி, அவர்கள் தங்கள் விடுதி வாயிலில் காவற்காரர்களை

நிறுத்தி வைக்கக் கூடாதென்றே கட்டளையிடப் பெற்றிருந்தார்கள்; குடிமக்கள் எவ்விதத் தடங்கலு மின்றி இஸ்லாத்தின் மகோன்னத அதிகாரியையும் பேட்டிகண்டு பேசக்கூடிய முறையிலே அந்த கவர்னர் கள் மெய்காப்பாளரையும் தமக்கருகில் வைத்துக் கொள்வது வழக்கமில்லா திருந்தது. மாகாண கவர்னர்கள் அத்துணை ஸௌலப்பியத்துடன் நடந்து கொண்டது மட்டும் ஆச்சரியமில்லை; ஆனால், அந்த அதிகாரிக ளனைவரும் குடிமக்களின் தாக்ஷிண்யத்தின் மீதே அதிகம் சார்ந்துநிற்க வேண்டியவர்களாயு மிருந் தார்கள். எவ்வாறெனின், ஒரு மாகாணாதிபதி மீது குறைகூற வேண்டு மென்று ஒருவன் விரும்பினால்— அஃதொரு பொய்யான குறையே யாயினும்—அவன் நேரே மதீனாவிற்குச் சென்று கலீபாவிடமே பர்யாத் செய்து கொள்ளலாம். என்னெனின், தலைநகரிலுள்ள கலீபாவின் விடுதியும் எவ்வித வாயில் கப்போனும் இல்லாமலேதான் வருவார் போவாருக் கெல்லாம் சதா வழிவிட்டுக்கொண் டிருந்தது. ஒரு பெரிய மாகாணாதி பதி ஒரு சிறு தவறே யிழைத்திடினும், அக்கணமே பொது மக்கள் ஓடோடியும் வந்து கலீபா அவர்களிடம் முறையிட்டு, தங்களுக்குப் பிடித்த வேறோர் அதி காரியை அழைத்துக்கொண்டு போய், பழைய கவர் னரை வீட்டுக் கனுப்பிவிட்டுப் புதிய கவர்னரை உத்தியோகத்தில் அமர்த்திக்கொள்வார்கள்.

அக்கால இஸ்லாத்தின் குடியாட்சி முறையில்— அஃதொரு வின்னியாசமான ஜனநாயகமே யாகும்— கலீபாவுக்கும் ஒரு சர்வ சாதாரண மனிதனுக்கும் எத்தகைய வித்தியாசமும் இல்லாமலே யிருந்துவந்தது.

கலீபாவானவர் குடிமக்களுக்கு அரசரா யில்லாது, அன்னாரின் ஊழியராகவே வாழ்ந்து வந்தார்; ஆகவே, அப்பெரியார் மீதும் குணதோஷங்கூற எவரும் தயங்குவது வழக்கமில்லை. இந்த நாகரிகம் மிக்குள்ள இருபதாவது நூற்றாண்டிலும் அரசனைக் குறித்து எவனேனும் எள்ளத்துணைக் குறைகூறத் துணிந்துவிட்டால், அக்கணமே அவனது சிரம் துணிக்கப்பட்டுப் போய் விடுமென்பது ஒருதலை. ஆயின், இஸ்லாத்தில் அப்படி யில்லை. அக்கால கலீபாவானவர் நான்கு பெரிய ராஜ்யங்களுக்குரிய ஏக சக்ராதிபதியாய் விளங்கி வந்தும், அன்னார் ஒரு சாதாரணக் குடி மகனை போலத்தான் பாவிக்கப்பட்டு வந்தார். எனவே, எந்த ஒரு சாமான்ய மனிதனும் அன்னார் மீது எத்தகைய குற்ற மும் சுமத்தற் குரிய சுதந்தரம் வாய்க்கப் பெற்றவனா யிருந்தான். இத்தகைய எல்லையற்ற சுதந்தரம் தன் னளவிலே சர்வ சிலாக்கிய முள்ளதேயாகும்; ஆனால், விஷமிகள் கரத்தில் இந்தச் சுதந்தரம் இஸ்லாமிய ராஜ்யத்தின் ஆணி வேரைக் கல்லி யெறியக்கூடிய ஒருமா கொடிய ஆயுதமாகவே வந்து விளைந்துவிட்டது. ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாமிய ராஜ்யத்தின் கூட்டாளியென்றே கருதப்பட்டு வந்தமையால், அவன் தனக்களிக்கப் பட்டுள்ள சுதந்தரத்தை எந்த வழியி லும்—அது நல்லதேயாயினும் தீயதேயாயினும்— உபயோகிக்க முன் வரலாம். ஆகவே, இஸ்லாத்தின் பகைவர்கள், 'இஸ்லாம்' என்னும் போர்வையுள் புகுந்துகொண்டு, முஸ்லிம்களுக்குரிய எல்லா உரிமை களையும் அனுபவித்து வந்தார்கள்; அந்த உரிமைக

ளனைத்தையும் தாங்கள் எந்தச் சமூகத்தின் அங்கத்தின ரெனப் பசப்பி வந்தார்களோ, அந்தச் சமூகத்திற்குக் குழி தோண்டவே அவர்கள் உபயோகிக்கத் துணிந்து விட்டார்கள். என்னெனின், இஸ்லாத்திற்கு வெளியில் நின்று இம்மார்க்கத்திற்கு இடையூறென்றும் செய்ய முடியாதென்பது அன்னாருக்கு நன்கு தெரியும். மனச்சாக்ஷி சுதந்தரமென்பது மதீனாவின் கண் எத்தகைய தீங்கும் இழைத்துவிட இயலாது; அந்நகரில் அது காலை வசித்து வந்த மக்களெல்லாம், நபிபெருமானாரின் பாதத் தடியில் குந்தி, அவர்கள்பா லிருந்து நேர்முகமாய் இஸ்லாத்தின் ஏக சகோதரத்துவ மகிமையை அறிந்துகொண்டவர்க ளாகவோ, அல்லது அத்தகையினரின் சந்ததியார்க ளாகவோ இருந்து வந்தார்கள். ஆதலினால், அவர்களெல்லாரும் தங்கள் குரு மகானின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே ஒழுகி வந்தார்கள். ஆனால், பஸரா, கூபா, புஸ்தாத் போன்ற புதிய குடியேற்ற நாடுகளில் வாழ்ந்து வந்தவர்கள் எல்லா விதமான மனிதர்களாகவும் காணப்பட்டார்கள். எனவே தான் இப்படிப்பட்ட இடங்களில் விஷமவித்துக்கள் எரு வில்லாமலே முளைத்து வெளிவர எல்லா ஏதுக்களையும் பெற்றுக்கொண்டு விட்டன; இத்தகைய இடங்களில் விதைக்கப்பட்ட விஷம வித்துக்களே பின்னால் கொடிபடர்ந்து ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களது கிலாபத் ராஜ்யத்தில் பலவித இன்னல்களை விளைத்து, இறுதியிலே இப்பெரியாரின் கொலைக்குங் கூடக் காரணபூதமாய் வந்து மூண்டுவிட்டன.

ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள்மீது சுமத்தப் பட்ட குற்றச் சாட்டுக்களில் முக்கியமானது, இப்பெரி

யார் உத்தியோகப் பதவிகளை வின்னியோகம் செய்த விஷயத்தில் பக்ஷபாதம் பாராட்டினர் என்பதுதா னுகும். ஆனல், அவ்வாறு குற்றஞ்சாட்டிய எதிரிகளும், இந்த கலீபாவின் முதலாறு ஆண்டுகளில் அப்படிப்பட்ட பக்ஷபாதமொன்றும் நடைபெற்று விடவில்லை யென்றே ஒத்துக் கொள்ளுகிறுர்கள். அரபிகளுள் ஒரு சாராராகிய குறைஷிகள், ஹஜ்ரத் உமர்ரலி அவர்களைப்பார்க்கினும் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களே சாலச் சிறந்தவர்களென்று அபிப்பிராயம் கூறியுள்ளார்கள். ஆனல், இவர்களது ஆட்சியின் பிற்பகுதியிலேதான் குற்றச் சாட்டுக்களை ஒருசில எதிரிகள் கொண்டுவந்து காண்பிக்கத் துவக்கினுர்கள் ; மாகாணுதிபதிகளை நியமனம் செய்த விஷயத்திலே கலீபாவானவர் தம்முடைய பந்துமித்திரர்களைப் பார்த்துப் பொறுக்கியே அவ் வுத்தியோகங்களில் அமர்த்தினரென்று குறைகூறப் பட்டது ; அன்றியும், அவ்வாறு நியமிக்கப்பட்ட கவர்னர்கள் விஷயமாய்ப் பொதுமக்கள் கலீபாவிடம் வந்து குறை முறைகளைச் சொல்லிக்கொண்டாலும் இன்னுர் செவிதாழ்த்திக் கேட்பதில்லை யென்றும் குற்றம் சுமத்தப்பட்டது. ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கட்கு விரோதமாய்க் கிளம்பிக் கலகஞ்செய்து கலீபாவைக் கொன்றெழித்தவர் கூறிய குற்றச்சாட்டு இதுவேயாகும்.

**கவர்னர்கள் நியமனமும் வேலையினின்று நீக்கப்படலும்**

இந்தக் குற்றச்சாட்டு மெய்தான வென்று ஆராய்ச்சி செய்வான் வேண்டி நாம் சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டிப்பார்க்க முற்படல் வேண்டும். எதிரிகள்

கூறிய குற்றச்சாட்டில் பஸரா, கூபா, எகிப்து ஆகிய மூன்று தேச மாகாணதிபதிகள் சம்பந்தமாயுள்ள விஷயங்கள் காணப்படுகின்றன. ஷாம் தேச மாகாணதிபதியாய் விளங்கிவந்த முஆவியாவும் இந்த மூன்ருவது கலீபா வுக்கு நெருங்கிய பந்துவாகவே யிருந்துவந்தார்; ஆனால், அவரை ஷாம்தேச மாகாணதிபதியாய் ஆக்கி வைத்தவர் இரண்டாவது கலீபாவாய் விளங்கிவந்த ஹஜ்ரத் உமர்ரலி அவர்களே யாவர். இப்பால் இந்த மூன்ருவது கலீபாவின் காலத்தில் அவர் தமக்குரிய ஸ்தானத்திலே திமஷ்க் நகரில் கவர்னராய்த் தொடர்ந்து வேலைபார்த்து வந்தார். அப்பால் கூபா வின் கவர்னர் விஷயத்தை எடுத்துப் பார்ப்போம்: பாரசீக நாட்டைப் பிடித்துக்கொடுத்த ஸஅத்ரலி அவர் கள், உமர்ரலி அவர்களது கிலாபத்தின்போது அம் மாகாணத்தின் கவர்னராய் நியமனம் பெற்ருர்களென் பதும், அப்பால் ஒரு சிறு தவற்றினிமித்தம் அப் பெரி யார் கலீபாவால் மதீனவிற்குத் திருப்பி யழைக்கப் பட்டார்க ளென்பதும் நுங்களுக்கு ஞாபக மிருக்க லாம். அதன் பிறகு அந்த ஸ்தானத்திற்கு முகைராரலி அனுப்பப் பட்டார்கள். ஆனல், உமர்ரலி அவர்கள் தங்கள் மரணப் படுக்கையி லிருந்தபோது, மீட்டும் ஸஅத்ரலி அவர்களைக் கூபாவின் கவர்னராய் நியமிக்க வேண்டு மென்னும் விருப்பத்தை வெளிப்படுத்தி ஞர்கள். அவ்வாறே, ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் கலீபாவாய் நியமனம் பெற்றவுடன் முகைராரலி அவர் களைத் திருப்பியழைத்துக்கொண்டு, அந்தக் கூபாவின் கவர்னர் ஸ்தானத்தில் ஸஅத்ரலி அவர்களை நியமித்து

இஃது உண்மைதானு

வைத்தார்கள். அப்பால் அந்த மாகாணுதிபதி ஸஅதுக்கும், கூபாவின் பொக்கிஷாதிபதியாய் விளங்கி வந்த இப்னு மஸ்ஊத்ரலி அவர்களுக்கும் தக்ரார் ஏற்பட்டுவிட்டது. ஸஅத்ரலி பொது கஜானுவிலிருந்து கடன் சிறிது பெற்றிருந்தார்; பிறகு சிறிது காலம் கழிந்து அந்தப் பொக்கிஷாதிபதி மாகாணுதிபதியிடம் ஞாபகமூட்டி அந்தக்கடன் தொகையைத் திருப்பிக்கொடுக்குமாறு கேட்டார்; அதன் பயனுய் அவ்விருவருக்கிடையில் வாக்குவாதம் உண்டாயிற்று; அப்பால் அவ்விஷயம் அவர்களுக்குள் ஒரு பகிரங்கச் சண்டையாய் வந்து மூண்டு கொண்டது. உயர்தர ஸர்க்கார் உத்தியோகஸ்தர் இருவருக்கிடையில் உண்டாய அந்தப் பகிரங்கப்போர், பொது மக்கள் வரை எட்டி, அன்னுருள்ளும் பலவித விகற்பங்களேயும் அபிப்பிராய பேதங்களேயும் கிளப்பிவிடாது போய்விட வில்லே; ஆகவே, அந்தக் கூபாவாசிகளுள் ஒருசிலர் ஒரு கக்ஷியிலும், மற்றுஞ்சிலர் வேறு கக்ஷியிலும் சேர்ந்துகொண்டுவிட்டார்கள்.

அத்தகைய போர் முறையை எத்தனே நாளேக்குத்தான் பொதுஜனக் குழப்பமில்லாது அனுமதித்துக்கொண்டிருத்தல் சாலும்? எனவே தான் மீட்டும் ஸஅத்ரலி தமது கவர்னர் பதவியினின்று மதீனுவுக்குத் திருப்பி யழைத்துக்கொண்டு விடப்பட்டார்; அப்பால் அவரது ஸ்தானத்தில் வலீத்பின் அக்பா என்பவர் நியமிக்கப்பெற்ருர். இந்த வலீதென்பார் கலீபாவுடன் மாதாவின் வழியிலே நெருங்கிய உறவினரா யிருந்துவந்தார். எனினும், இதில் பக்ஷ

**கவர்னர் தவறிழைத்தாலும் தண்டனேயே**

பாதத்திற் கொன்றும் இடமில்லை யென்னலாம். என்னெனின், இவ்வுத்தியோக நியமனம் ஹி. 25-இல் நிகழ்வுற்றிருக்கிறது; அஃதாவது, ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களது ஆட்சியின் தொடக்கத்திலே இது நடை பெற்றிருக்கிறது. இதற்கு முன்பே கூறப்பட்ட வண்ணம், இப்பெரியார் பட்டத்துக்கு வந்து முதலாறு வருடங்களுக்குள்ளேயே இந்நியமன விஷயம் நேரிட்டிருக்கிறது; அப்பொழுதெல்லாம் இந்த கலீபாவின் மீது பழிசுமத்துவதற்கு ஒன்றும் இடமில்லை யென்றே எல்லாக் குணதோஷ வாதிகளும் ஏகோபித்துக் கூறியிருக்கின்றார்கள். எனவே, எதிரிகளது அபிப்பிராயத்தைக் கொண்டே வலீதின் நியமன விஷயத்தில் கலீபா அவர்களை மன்னித்து விட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. வலீத் விஷயத்தில் உதுமான்ரலி அவர்கள் சற்றும் உறவின் முறையை மேற்கொள்ளவில்லை யென்பது மற்றொரு முக்கிய காரியத்தாலும் வெளியாகின்றது: எவ்வாறெனின், வலீதென்பார் மதுபானம் செய்யும் பழக்கமுடையவ ரென்னும் அந்தரங்கம் வெளியானவுடன் அவர் அக்கணமே சிறிதும் தாக்ஷிண்யமில்லாது வேலையினின்று நீக்கப்பட்டதுடன் போகாது, பகிரங்க ஸ்தலத்தில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டு, இஸ்லாமிய சட்டப் பிரகாரம் கொடுபட வேண்டியிருந்த கசையடிகளும் கொடுக்கப்பெற்றார். ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் பாந்தவ்ய பாசத்தால் உத்தியோக காரியங்களில் பக்ஷபாதத்துடனே நடந்துகொள்ள வில்லையென்பதற்கு இதனைப் பார்க்கினும் வேறென்ன உதாஹரணம் வேண்டப்படுதல் கூடும்? ஒரு மாகாணாதிபதியைப் பகிரங்க

ஸ்தலத்தில் நிறுத்திக் கசையடி கொடுப்ப தென்பது வெறுஞ் சாமான்யமான காரியமன்றே! உதுமான்ரலி அவர்கள் உறவின் முறையால் தாக்ஷிண்யம் பாராட்டு கிறவர்களென்பது மெய்யேயாயின், இப்பெரியார் வலீதைப் பகிரங்கஸ்தலத்தில் நிறுத்தி அவமானப் படுத்தாத முறையிலே ஒருவாறு தடைசெய்து காப்பாற்றியிருக்கலாமே. ஹி. 30-இல் வலீதுக்குப்பின்னுல் ஸயீத்பின் ஆஸ் என்பார் அம் மாகாணுதிபதியின் பதவியில் அமர்த்தப்பட்டார்; இவர் அனுபவமில்லாத ஒரு சிறுவர்; கலீபா அவர்கட்கு உறவினராகவும் இருந்து வந்தார். இவரது ஆட்சியின்போது கூபாவிலிருந்த துஷ்டர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து இந்த மாகாணுதிபதியின்மீது அதிகமான ஆதிக்கம் பெற்றுவிட்டார்கள்; ஆதலினுல் ஹி. 34-இல் இவர் திருப்பியழைக்கப்பட்டு, இன்னுர் ஸ்தானத்திலே அபூ மூஸா அஷ்அரீ என்பார் நியமிக்கப்பட்டார். இப் பெரியார் உதுமான்ரலி அவர்கட்கு எவ்விதத்தாலும் உறவின் முறையாளராய் இருந்ததில்லை. எனவே, இதனுல், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் தங்கள் பந்துமித்திரர்கட்கே உத்தியோகம் கொடுத்து வந்தார்கள் என்று கூறப்பட்ட குற்றச்சாட்டுக்குச் சற்றும் இடமில்லாது போய்விட்ட தென்னலாம்.

இப்பொழுது நாம் பஸராவின் விஷயத்தை ஆராய்ந்து பார்ப்போம். ஹஜ்ரத் உமர்ரலி அவர்கள் தங்கள் ஆட்சியின்போது அபூ மூஸா அஷ்அரீ என்பாரை அவ்விடத்திற்கு மாகாணுதிபதியாய் நியமனம் செய்திருந்தார்கள்., ஹி. 29-இல் பஸராவிலுள்ள பொது

**பஸராவின் விஷயம்**

மக்கள், அந்த மாகாணாதிபதி குறைஷியர் பக்கம் அதிக மான பக்ஷபாதம் காட்டுகிறவரா யிருக்கிறாரென்று குற்றஞ் சுமத்தினார்கள். எனவே, உதுமான்ரலி அவர்கள் அந்த அபூ மூஸாவை அவ் வுத்தியோகத்தி னின்று நீக்கிவிட்டு, அவரது ஸ்தானத்தில் பஸராவின் மக்களுக்குப் பிடித்த வேறொருவரை நியமித் தனுப் பினார்கள். ஆனால், இந்தப் புதிய மாகாணாதிபதி தமக்குரிய பொறுப்பு வாய்ந்த அந்தப் பெரிய உத்தி யோகத்தைச் செவ்விதாய் நிர்வகிக்கக் கூடிய திறமை யற்றவரா யிருந்தார். ஆதலின், அவர் அவ்வேலையி னின்று அப்புறப்படுத்தப்பட்டு, அப்துல்லா பின் ஆமி ரென்பார் அங்கு மாகாணாதிபதியாய் அனுப்பப்பட் டார். இந்த அப்துல்லாவானவர் கலீபாவுக்கு உறவின் முறையில் தோன்றியவராயிருந்தது வாஸ்தமேயாகும்; ஆனால் இவர் பாரசீகநாட்டை இரண்டாமுறையாய்க் கைப்பற்றியதிலும், அதிக விஸ்தீரணமுள்ள பூபா கத்தை இஸ்லாமிய ராஜ்யத்துடன் கொண்டு வந்து சேர்த்ததிலும் அளவிறந்த சாமர்த்தியத்துடனும் தேசாபிமானத்துடனுமே ஒழுகியிருக்கின்றார். ஆகவே இன்னாரைப் பஸராவின் கவர்னராய்த் தேர்ந்தெடுத் ததில் இந்த கலீபா அவர்கள் இவருடைய சிறந்த குணாதிசயங்களைக் கொண்டே அவ்வாறு பொறுக்கி யெடுத்திருப்பதாக அறிந்து கொள்ளுகிறோம்; இதில் பந்துத்துவத்தின் பாரபக்ஷமென்று குறைகூறுதற்குச் சற்றும் இடமே யில்லை. அப்பால் நிகழ்வுற்ற காரியங் களிலிருந்தும் இந்த அப்துல்லாவின் நியமனம் நிஷ்பக்ஷ பாதமுள்ள நியாயமான நியமனமென்று நாம் தெரிந்து கொள்ளுகிறோம். எகிப்தின் மாகாணாதிபதியாய்

இருந்துவந்த அம்ர் பின் ஆஸ் என்பாரை நீக்கி, அவரது ஸ்தானத்தில் அப்துல்லா பின் ஸஅதை நியமனம் செய்தபோதும் அந்நாட்டினர் இவ்வாறுதான் குறைகூறத் துணிந்தனர். அந்த அப்துல்லாவும் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களுடைய அபிமான சகோதரரா யிருந்துவந்தார்; ஆனுல், அன்னுர் அளவற்ற உரோமப்படைகள் முன்னே இஸ்லாத்திற்கு வெற்றிவாங்கி யளித்ததினின்றும், அப் பெரியார் முஸ்லிம் ராஜ்யத்திற்காக ஒரு பலம்பொருந்திய கப்பற் படையை உற்பத்தி செய்து வைத்ததினின்றும் அவரது மேதாவித்தனமும் தீரமும் நன்கு புலனுகின்றன வல்லவா? ஆகவே, அத்தகைய குணுதிசயங்களைக் கொண்டே யல்லது, உறவின்முறையால் உதுமான்ரலி அவர்கள் அப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் அப்துல்லா பின் ஸஅதை எகிப்திற்கு மாகாணுதிபதியாய் நியமித்தனுப்ப வில்லை யென்பது பிரத்தியக்ஷமாய் விளங்கக் கிடக்கின்றது. உண்மை இவ்வாறிருந்தும், கிளர்ச்சிக்காரர்கள் மதீனுவிற்கு வந்து, அப்துல்லாவை அந்த ஸ்தானத்தினின்று விலக்கிவிட வேண்டுமென்று விரும்பிக் கேட்டக்கால், கலீபா அவர்கள் அக்கணமே அதற்கிணங்கி, அப்துல்லாவைத் திருப்பி யழைத்துக் கொண்டு அந்த ஸ்தானத்தில் எகிப்துநாட்டார் விரும்பிய முஹம்மத் பின் அபூபக்ர் என்பாரை ஏற்படுத்தி விட்டார்கள்.

மேற்கூறிய விருத்தாந்தங்களிலிருந்து உதுமான்ரலி அவர்கள் மகாணுதிபதிகளை நியமனம்செய்த விஷயத்தில் அவர்களுக்கு உறவின் முறையிலுள்ளார் சிலரையும் பொறுக்கி யெடுத்திருப்பதாக நாம் அறிகிரும்.

ஆனால், இதனை வைத்துக்கொண்டு பொதுப்படை யாகவே இந்த கலீபாவானவர் தம்முடைய பந்துமித் திரர்பால் பக்ஷபாதத்துடனே நடந்து வந்தாரென்று குற்றஞ்சாட்டத் துணி வது ஒரு கூடாத காரியமே யாகும். என்னெனின், பந்துத்துவ மென்பது மிகவும் விரிவான கிளைகளை யெல்லாம் உறவின்முறையுள்ளே கொண்டுவந்து சேர்க்கக்கூடிய ஒரு விரிந்த சொல்லா யிருந்துவருகிறது. ஒருவரை மற்றொருவருடன் தொந்தம் செய்து காட்டவேண்டு மென்றால், நெடுந்தூரம் சென்றேனும் அவ்விருவருக் கிடையிலே ஒருவித உறவின் முறையை உண்டு பண்ணிவிடலாம். ஆனால், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களால் பொறுக்கியெடுக்கப்பட்ட உறவினரை யெல்லாம் எப்படி இழுத்திழுத்துப் பார்த்த போதி னும், கலீபாவுடன் நெருங்கிய சம்பந்தமுள்ள பந் துக்களென்று கூறுவது சிறிதும் சாலாது. அதுவேயு மன்றி, மற்றொரு முக்கியமான ஆதாரமும் நமக் கில்லாது போகவில்லை. என்னெனின், இப்பெரியார் தம்முடைய பந்துக்களை மாகாணாதிபதிகளாய் அனுப் பியது போலவே, அன்னார்மீது குற்றங்குறை கூறப் பட்டக்கால், சர்வசாதாரணமாய் அவ்வுத்தியோகத்தி னின்று நீக்கிக்கொண்டு மிருந்தார்கள். பக்ஷபாத முடைய ஒருவர் அவ்வாறுசெய்ய இணங்கார்; அத் தகையினர் எவ்வாற்றானும் தம்முடைய பந்துமித் திரரை உத்தியோகங்களில் நிலை நிறுத்தி வைத்துக் கொண்டே குடிமக்கள் கூறும் குற்றச்சாட்டுக் கெல்லாம் செவிதாழ்த்தாது மௌனஞ்சாதித்து நிற்பர்.

மாகாணாதிபதி களைப் பொறுக்கி யெடுத்ததில் கலீபாவின் நிஷ்பக்ஷபாதம்

பொதுமக்களால் குற்றஞ்சாட்டப்பட்ட மாகாணாதிபதிகள் அவ்வப்போது திருப்பி யழைக்கப்பட்டதோடு நின்று விடாது, ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் அத்தகைய ஒரு கவர்னரை மதுபானம் செய்தாரென்னும் குற்றத்திற்காகப் பகிரங்கஸ்தலத்தில் விட்டுக் கசையடியும் சட்டப்படி கொடுக்கச் சொன்னார்கள். அன்றியும், பாரசீக நாட்டுக் குழப்பத்திலும், ஆபிரிக்கா கண்டக் கிளர்ச்சியிலும் அதிகம் ஈடுபட்டுழைத்து நல்லவிதக் கீர்த்தியும் பிரதாபமும் பெற்றமைக்காகவே ஒருசிலர் அங்கங்கே கவர்னர்களாய் அனுப்பப் பட்டார்களல்லது, உதுமான்ரலி அவர்களுக்கு உறவின் முறையாள ரென்னும் பாந்தவ்யத்தால் அவர்கள் அவ்வாறு உயர்தர உத்தியோகத்தில் அமர்த்தப்பட வில்லை. ஆகவே, இந்த கலீபாவின் இறுதி ஆறுண்டிலேதான் அவ்வாறு பக்ஷபாதம் காண்பிக்கப் பட்டதென்றும், முதலாறு ஆண்டுகளில் அவ்வாறொன்றும் நிகழ்வுறவில்லையென்றும் கூறுவதற்குச் சரித்திரபூர்வமான ஆதாரம் எதுவுமில்லை.

வலீத் என்பார் ஹி. 25-இல், அஃதாவது, இந்த மூன்றாவது கலீபாவின் இரண்டாவது ஆண்டிலே கூபாவின் கவர்னராய் நியமிக்கப்பெற்றார். அல்துல்லா பின் ஸஅத் ஹி. 26-இல், அஃதாவது, இவரது மூன்றாவது ஆண்டிலே எகிப்தின் கவர்னராய் நியமனம் பெற்றார். ஆதலால், அவ்விரு நியமனங்களும் ஏற்படுத்தப்பட்ட ஆரம்பகாலத்தில் இந்த கலீபாவானர் பக்ஷபாதத்துடன் நடந்துகொண் டிருத்தல் சாலாது; என்னெனின், எல்லாக் குணதோஷ ஆராய்ச்சிக்காரரும்

**துர்ப்பிரசாரம் செய்வதா**

இவரது ஆட்சிக்குரிய முதலாறு வருடங்களிலே எத்தகைய பக்ஷபாதமும் எவர்மாட்டும் காண்பிக்கப்படவில்லை யென்று ஏகோபித்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, கூபாவுக்கும் எகிப்துக்கும் மாகாணாதிபதிகளை நியமனம் செய்த விஷயத்தில் இந்த கலீபாவானவர் பக்ஷபாதம் காண்பிக்கத் துணிந்தனரென்று கூறுவதில் ஒன்றும் நியாயம் இருப்பதாய்ப் புலப்படவில்லை; ஆனால், இந்த மூன்றாவது கலீபாவின் ஆட்சிக்கு விரோதமாய்க் கலகம் செய்யத் தலைப்பட்டவர்கள், பின்னாலேற்பட்ட தங்கள் மூர்த்தன்யத்தை வைத்துக்கொண்டு அவ்வுத்தியோக நியமனங்களைப் பக்ஷபாத முள்ளவையென்று ஒரு வெறுஞ்சாக்காகவே பொதுமக்கள்முன்னே பரத்தத் துணிந்துவிட்டார்கள். இந்தக் குற்றச்சாட்டானது அஸ்திபாரமற்ற வெறுங் கூச்சலே என்பது இப்பால் நன்கு விளங்கக்கிடக்கின்றது; ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் எப்பொழுதுமே எந்த உத்தியோக விஷயத்திலும் தங்கள் பந்து மித்திர ரென்னும் பக்ஷபாதத்துடனே நடந்து கொண்டது கிடையாது; எனினும், வெறும் க்ஷாத்திரத்தைக் கொண்டே விரோதிகள் சிலர் கிளம்பி, இந்த கலீபாவின்மீது பக்ஷபாதமென்னும் குற்றச்சாட்டைச் சுமத்தி, துர்ப்பிரசாரம் செய்யத் துவக்கிவிட்டார்கள். ஆதலால், நாமும் பின்வருமாறேதான் நினைக்கத் துணிகின்றோம்:

உதுமான்ரலி அவர்கள் இரண்டாவது கலீபாவின் கொள்கையைப் பின்பற்றி, தங்கள் உறவின்முறையாளரை மாகாணாதிபதிகளாய் நியமித்திராமல் சக்தியும் சாமர்த்தியமு முள்ள வேறு மனிதர்களை அவ்வாறு

நியமித்திருந்தால், மிக நன்ரு யிருந்திருக்கும்; மிகநன் றென்று நாம் ஏன் கூறுகிறேமெனின், அவ்வாறு செய் திருந்தால் விஷமிகள் சிலர் கிளம்பிப் பொதுமக்கள்கண்ணில் மண்ணை வாரிப் போட்டு, கலீபாவுக்கு விரோதமாய்க் கிளர்ச்சி செய்தற்குரிய ஒரு முக்கிய காரணத்தை அஃது அடியுடன் அழித்தொழித் திருக்கும். ஆனாலும், அந்த ஆதிகால முஸ்லிம் பெரியார்களுக்கு ஏற்பட்டிருந்த சங்கடங்களும், ஆபத்துக்களும், அவர்கள் இஸ்லாத்தின் கப்பலை உய்த்துச் சென்றதில் அடைந்துகொண்ட கஷ்ட நஷ்டங்களும் இப்படிப் பட்டவை யென்று தெரிந்துகொள்ளாமல் நாம் இந்த இருபதாவது நூற்ருண்டில் அன்னூர்மீது தீர்ப்புக் கூறுவ தென்பது ஒரு விரும்பத்தக்க காரியமாயில்லை. இற்றை நாளில் சற்றேறக்குறையப் பதின்மூன்று நூற்ருண்டுகள் கழிந்த பின்பு நாம் இவ்வாறெல்லாம் அம் முன்னோர்களின் செய்கையைக் குறித்து ஆராய்ச்சி செய்யத் துணிகின்றேம். ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் தங்கள் சாகையாகிய பனூ உமையாக்களிடம் பக்ஷபாதம் பாராட்டினூர்களென்று ஒருசிலர் உரைக்கத் துணிகின்ருர்கள். ஆனல், இவர்களுக்குப் பின்வந்த ஹஜ்ரத்அலீரலி அவர்களும் அதே விதமான கொள்கையைத்தான் பின்பற்றத் துவக்கிக் கொண்டார்கள்; அஃதாவது, அந்த நான்காவது கலீபா தங்கள் இனத்தவர்களாகிய பனூ ஹாஷிம் வர்க்கத்தினருக்கே அரசாங்கத்தின் பெரும் பெரும் உத்யோகங்களை யெல்லாம் வழங்கிவந்தார்கள். ஒருகால் அந்தக் காலத்தில் இருந்துவந்த நிலைமைக் குகந்தாற்

**பக்ஷபாதம் இருந்திருக்க முடியாது**

போல் அப்படித்தான் செய்யவேண்டி யிருந்தது போலும்; அவரவர் பொறுக்கிக்கொண்ட பெரியார்கள் அவ்வப்போது கிடைக்கக்கூடிய சிறந்தவர்களா யிருந்திருக்கலாம். எவ்வாருயினும், ஒரு விஷயம் மட்டும் நிச்சயமாய்ப் புலப்படாது போகவில்லை: மீக்கூறிய விவரணங்களிலிருந்து அத்தகைய முடிபைத் தவிர்த்து வேருருவித முடிபுக்கும் எவரும் வரமுடியாதவரா யிருக்கின்ருர். ஹஜ்ரத் உதுமானும்ரலி ஹஜ்ரத் அலீயும்ரலி அவ்வாறு தத்தமக்குரிய பந்துமித்திரர்களை உத்தியோகத்தில் அமர்த்திய விஷயத்தில் தீய எண்ணமேனும் பந்துமித்திர ரென்னும் பக்ஷபாதமேனும் இருந்திருப்பது முடியாது.

ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களைக் கொலை புரிவதற்கும் இஸ்லாமிய ராஜ்ஜியத்தின் பலத்தை நிலைகுலையச் செய்வதற்கும் காரணபூதமாய்த் தோன்றிய

உதுமானுக்கு-ரலி விரோதமாய் இப்னு ஸபா எழுப்பிய கிளர்ச்சி

கிளர்ச்சியைக் கிளப்பிவிட்டவன் இப்னு ஸபா வென்னும் ஓர் எமன்தேய யூதனை யிருந்துவந்தான்; இவன் ஒரு யூதனுக்கும் ஒரு நீகிரோவப் பெண்ணுக்கும் பிறந்துள்ள சங்கரஜாதி மனிதனுயிருந்தான்; இக் காரணத்தினுல் இவனை எல்லோரும் இப்னு ஸவ்தா, அஃதாவது, கரிய காரிகையின் குமாரன் என்றழைத்துவந்தனர். உதுமான்ரலி அவர்களது ஆட்சியின் எட்டாவது ஆண்டிலே இவன் பஸராவுக்குச் சென்று, அப்துல்லா பின் ஆமிர் கவர்னரா யிருந்தபோது ஆங்கு இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டான். இவன் பிறகுநடந்துகொண்ட நடவடிக்கைகளிலிருந்து தன துள்ளத்தின்கண்ணே ஒளித்துவைத்திருந்த தீய

எண்ணங்களை மறைத்துக் கொள்ளுதற்காகவே இஸ்லாத்தின் போர்வையை எடுத்துப் போர்த்துக் கொண்டானென்று நாம் நன்கு தெரிந்துகொள்ளுகிறோம். முதன் முதலில் இவன் கலீபாவினால் நியமனம் செய்யப்பட்ட கவர்னர்களுக்கு விரோதமாய்க் கிளர்ச்சி செய்வதையே தனது முக்கிய பிரசாரமாய் வைத்துக்கொண்டான். இவனது இந்தச் சூழ்ச்சியை அறிந்த பஸராவின் கவர்னர் இப்னு ஸபாவை அம் மாகாணத்தைவிட்டு நாடுகடத்தி விட்டார். அப்பால் இவன் பஸராவைத் துறந்து வெளியேறி இஸ்லாமிய ராஜ்ஜியத்தின் முக்கிய ஸ்தலங்களாகிய கூபா, சிரியா, எகிப்து ஆகிய மாகாணங்களி லெல்லாம் சுற்றித் திரிந்துவந்தான். ஓரோ ரிடத்திலிருந்தும் இவன் துரத்தி யடிக்கப்பட்ட போதினும், தான் போகுமிடங்களிலெல்லாம் தனது விஷத்தைமட்டும் ஒரு சிலர் பால் புகுத்தாமல் புறப்படுவதில்லை. எனவே, பஸராவிலும் கூபாவிலும் ஒருசிலர் இவனது வலைக்குள்ளே வீழ்ந்து, கவர்னருக்கு விரோதமாய்க் கிளர்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். சிரியா நாட்டில் இவனது விஷமத்தனம் சிறிதும் பலப்பிராப்தி யடையாது போய்விட்டது; என்னெனின், முஆவியாவின் முன்யோசனையால் அந்நாட்டில் இப்னு ஸபாவால் எதுவும் செய்து கொள்ள முடியவில்லை. ஆனால், இவன் எகிப்துக்குச் சென்றதன் பின்பு தனக்குரிய முழுவேஷத்தையும் வெளிப்படுத்தத் துணிந்துவிட்டான். எப்படியெனின், இந்த மூன்றாவது கலீபா பட்டத்திற்கு வந்ததே நியாய விரோதமென்னும் கிளர்ச்சியொன்றைக் கிளப்பிவிட்டான். அலீரலி அவர்கள் நபிகள் நாயகத்தின் நியாய

மான வாரிஸாயிருந்ததனுல் அவர்களே நியாயமான கலீபாவா யிருக்கவேண்டு மென்று இவன் போலிப் பிரசாரம் புரிந்துவந்தான். இத்தகைய ராஜத்துரோக மான பிரசாரத்தை இவன் தனக்குரிய எகிப்து நாட்டி லிருந்து தன்னுடைய ஆட்கள்மூலம் ஏனை மாகாணங் களுக்கும், முக்கியமாய் பஸராவுக்கும் கூபாவுக்கும் அனுப்பிக்கொண் டிருந்தான். தனது தீய நோக்கத் திற்கு மதசம்பந்தமான நிறத்தைக் கொடுத்துவிட்ட மையால், இப்பாதகன் அங்கங்கே சிற்சில ஏமாளி களைப் பெற்றுக்கொண்டும் விட்டான்.

உதுமான்ரலி அவர்கட்கு விரோதமாய் இப்னு ஸபாவாலும் அவனுடைய ஆட்களாலும் கிளப்பப் பட்ட கிளர்ச்சியின் முக்கிய அம்சம் இதுவாகத்தான் இருந்துவந்தது. அலீரலி அவர்கட்குக் கிடைக்கவேண்டியிருந்த கிலாபத் பத வியை இந்த மூன்ருவது கலிபாவானவர் சட்டவிரோதமாய் அபகரித்துக் கொண்டுவிட்டா ரென்றே அவர்கள் புரளிபண்ணிக் கொண்டிருந்தார் கள். இதனுடன்கூட அந்த இப்னு ஸபா வேறுபல காரணங்களையும் சேர்த்துக் கொள்ளக்கூடிய அத் துணைத் தந்திரசாலியாகவே யிருந்துவந்தான்: ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் மீது பழிசுமத்துவதற்கு எத் தகைய சிறு துரும்பும் அவனுல் பெரும் பிரயோஜனப் படத் தக்கதாகவே உபயோகிக்கப்பட்ட தென்னலாம்; உடனே அவன் அதற்குக் கண் காதுகளெல்லாம் வைத்து, ஒரு பெரிய உருவமாக்கி, கபடு சூதற்ற சாதா ரண மக்கள்முன்னே ஒரு மாபெரும் விஷயமாய் மிகை படுத்தி விஷமப் பிரசாரம் புரிந்து காண்பிப்பான்.

**கிளர்ச்சி வலுக்கின்றது**

அப்பால் அனேக ஏமாளிகள் அவனது பொறியுள் வந்து சிக்கிக்கொள்வர்.

நாம் இதற்குமுன்னம் விளக்கியிருப்பதே போன்று உமர்ரலி அவர்கள் ஆட்சியின்காலத்தில் எல்லைப்புறங்களில், முக்கியமாய் மெஸபொட்டேமியாவில்—இங்கே

**நவ்முஸ்லிம்களின் போக்கு**

தான் பஸரா, கூபா என்னும் இருபெரு நகரங்களும் செழித்தோங்கத் தலைப்பட்டன — எண்ணிறந்த மக்கள் இஸ்லாத்தைத் தழுவிக்கொள்ள முற்பட்டு வந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தின் ஞானத்தைப் பற்றியேனும் இதன் ஆத்மதத்துவ விசேஷங்குறித்தேனும் நபிபெருமானாரின் சிஷ்யர்களுக்குத் தெரிந்திருந்ததில் ஒருசிறு கூறையேனும் அறிந்துகொண்டனரில்லை; ஆனாலும், முஸ்லிம்களுக்கு அப்பெருமானால் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளில் பழைய முஸ்லிம்களென்றும் புதிய முஸ்லிம்களென்றும் ஒன்றும் வேறுபாடு செய்வதற்கு இடமில்லாதிருந்துவந்தது. ஒருவன் முஸ்லிம்களுக்குரிய அடையாளங்களை மேற்போட்டுக் கொண்டு விடுவானாயின், அப்பால் அவனுக்கு இஸ்லாமிய உரிமைகளனைத்தும் சுயமே வந்து சேர்ந்து விடுகின்றன. எனவே, சமத்துவமென்பதும், சுதந்தரமென்பதும் இஸ்லாத்தினால் எல்லாருக்கும் அளிக்கப்படும் இருபெரும் பாக்கியங்களென்றே கூறியமைதல் வேண்டும். ஆதிகால முஸ்லிம்களிடை இத்தகைய உரிமைகள் இஸ்லாத்தின் ஆழ்ந்த படிப்பினையால் விளைந்த கடமை கண்ணியம் என்னும் இருவித உயரிய குணங்களுடன் மிசிரமாய்க் காணப்பட்டன; எனவே, அவ்விரு உரிமைகளையும் அனுபவிப்பதில் அவர்கள் எல்லையைமீறி ஒரு

சிறிதும் அப்பாலிப்பால் வழுவி விடுவதில்லை. ஆனால், பின்னால் இஸ்லாத்தைத் தழுவியிருந்த மக்கள் தங்கள் உரிமைகளை அனுபவிக்கத் துணிவுறுங்கால், கடமை கண்ணியம் என்னும் இருபெருங் குணங்களையும் காற்றில் பறக்கவிட்டே வந்தார்கள். ஆதலினால்தான் இந்த நவ்முஸ்லிம்கள் தங்களுக்குக் கிடைத்த புதிய உரிமைகளைத் தவறான வழியிலே உபயோகிக்கத் துணிந்து விட்டார்கள். அப்பால் எல்லாவிதமாய கற்பனைக் குற்றச்சாட்டுக்களும் கலீபாவின்மீதும் அவருடைய கவர்னர்களின்மீதும் சுமத்தப்பட்டு, எவ்வித தட்டுத்தடங்கலு மின்றி எங்கும் பிரகடனப் படுத்தப்பட்டுவந்தன. பொதுமக்கள் சாதாரணமாய்த் தங்கள் செவியில் படுவதையெல்லாம் மெய்யென்றே நம்பிவிடுவது வழக்கம்; அவர்கள் தங்கள் செவியில் விழும் விஷயங்களின் மெய் பொய்யைச் சீர்தூக்கிப் பார்த்து, உண்மையைத் துருவிப் பார்க்கச் சக்தியற்றவராய் விஷமப் பிரசாரம் செய்பவர் வலையுள்ளே மிக எளிதில்வந்து வீழ்ந்து விடுகிறார்கள்.

இப்னு ஸபா கிளப்பிய கிளர்ச்சியின் முக்கிய அம்சம், இதற்குமுன் எழுதிக் காண்பித்ததேபோல், மத சம்பந்தத்தையும் பெற்றுக்கொண்டு விட்டது.

**பதவிகளும் அவ்வலையில் சிக்குகின்றனர்**

அதனுடன்கூட இன்னம் பலப்பல சில்லறைக் காரணங்களும் இடைவிடாது சேர்த்துக் கொள்ளப்பட்டே வந்தன. பதவிக ளென்னும் காட்டரபிகளை ஏமாற்றும்பொருட்டு, அரசாங்கத்தின் எல்லா உயர்தர உத்தியோகங்களும் குறைஷியருக்கே கொடுக்கப்பட்டு வந்தன வென்று அவர்கள் செவியில் ஓதப்பட்டுவந்

தது. தியாகம், யுத்தகளத்தில் கஷ்ட நஷ்டங்களை மேற்கொள்ளல், அவசிய காலங்களில் உதிரம்சிந்தல் போன்ற காரியங்களுக்குமட்டும் அந்த பதவீகள் முன்னணியில் கொண்டுவந்து நிறுத்தப்படுகிறார்களென்று அந்தக் கிளர்ச்சிக்காரர்கள் அந்தக் காட்டரபிகளைத் தூண்டி விட்டார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று பற்பல தேசங்களையும் ஜயித்து இஸ்லாமிய ராஜ்ஜியத்துடன் இணைத்து வைப்பதுமட்டுமே அவர்கள் கடமையென்றும், ஆனால், அவ்வத் தேசத்தில் உத்தியோகம் பெறவேண்டிய வேளை வருங்கால் அப்பொழுது அந்த பதவீகள் அடியுடன் ஒதுக்கப்பட்டு அத்தனை உத்தியோகங்களும் குறைஷிமக்களுக்கே அளிக்கப்பட்டு விடுகின்றன வென்றும் துர்ப்பிரசாரம் செய்யப்பட்டு வந்தது. அந்தக் காட்டரபிகளைக் கிளப்பிவிடுதற்கு இஃதொரு நல்ல சாதனமாகவே காணப்பட்டது. என்னெனின், இஸ்லாமிய ராஜ்ஜியத்தில் உயர்தரஉத்தியோகங்க ளெல்லாம் குறைஷிய ராலேயே நிரப்பப்பட்டு வந்தன. அத்தகைய உத்தியோகங்களுக்கு அன்னாரே அருகதை வாய்ந்தவராகவும் அதுகாலைக் காணப்பட்டார்கள். குறைஷிமக்களே அந்த இஸ்லாமிய ஜனநாயகத்தின் மூளையா யிருந்துவந்தார்கள்; யுத்தகளங்களில் பதவீகளின் புஜபலபராக்ரமம் எத்துணைமட்டும் சிறப்புடைத்தா யிருப்பினும், வெற்றிகொண்ட நாடுகளை அடக்கியாளுதற்குக் குறைஷியரின் மூளையே அதிகம் வேண்டப்பட்டது; இவ்விஷயத்தில் பதவீகள் குறைஷியருடன் சரிநிகர் சமானராய் முன்வந்து நிற்பது முடியாத காரியமேயாகும். குறைஷிகளிடம் மூளையுண்டு; பதவீகளிடம் புஜபலம் உண்டு;

இரண்டும் ஒன்று சேர்ந்தே இஸ்லாமிய ராஜ்ஜியத்தை நிலை நிறுத்தும். ஆனால், அந்த பதவீகளிடம், அவர்கள் குறைஷியரால் ஏமாற்றப்படுகிறார்க ளென்னும் ஒரே விஷயந்தான் எடுத்தோதப்பட்டது. ஆயின், ஆழ்ந்த பகுத்தறிவு அதிகம் படைத்திராத அந்தக் காட்டரபிகள் அதனை அப்படியே நம்பத் தலைப்பட்டு விட்டார்கள்; தங்க ளினத்திற்குத் தவறிழைக்கப் பட்டதாகவே அவர்கள் எண்ணினார்கள். எனவே, எதிரிகளின் சூழ்வினை பலித்தது; அப்பால் எல்லா பதவீகளும் கிலாபத் ராஜ்ஜியத்தின்மீது வெறுப்புக் கொள்ள முனைந்துவிட்டார்கள்.

**அபூதர் நாடு கடத்தப்படல்**

நபிகள் திலகத்தின் தோழர்களுள் அபூதர் என்னும் துறவிக்குணம் படைத்த ஒருவர் இருந்துவந்தார்; அவர் ஒரு சன்னியாசி போன்றே உயிர்வாழ்ந்து வந்தார். அவர் தீனுல் இஸ்லாத்தில் ஆதி காலத்திலே சேர்ந்துகொண் டிருந்தார். திரவிய மென்பதெல்லாம் இஸ்லாத்துக்கு மாறானதென்று தீவிரமாய்த் திட்டுவது அவருக்குள்ள சுபாவமாகும். அவர் ஒருமுறை திமஷ்குக்குச் சென்றார்; ஆங்குள்ள முஸ்லிம்கள் பலர் செல்வர்களாயிருப்பதைப் பார்த்தவுடனே அவருக்கு அந்த வெறி அதிகரித்துவிட்டது; அக்கணமே அன்னவர் அதற்கு விரோதமாய்த் துர்ப்பிரசாரம் செய்யத் துவக்கிக்கொண்டார்: பூலோக திரவியமெல்லாம் சேமித்து வைக்க லாயிக்கற்றதென்றும், அவையனைத்தும் தான தர்மங்களிலேயே செலவிடப்பட் டொழிக்கப்படுதற்கே உரியதென்றும் உபதேசித்துவந்தார். போகப் போக அன்னார் எல்லை கடந்துசென்று, இவ்வுலக

வாழ்க்கையின் எல்லா ஐசுவரியக் குவியலும் நரகத்துக் குரிய விறகு கட்டையே யாகுமென்று பிணைத்தத் துவக்கிக்கொண்டார். அவர் குர்ஆன் ஷரீபிலிருந்து மேற்கோளும் காட்டாதிருக்க வில்லை: "பொன்னையும் வெள்ளியையும் குவித்து வைத்துக்கொண்டு அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாதவர்கட்கு வேதனை மிக்க தண்டனை யுண்டென்று அறிவித்துவிடுவீராக" —(9 : 34).

அபூதர் அவ்வாறு தாறுமாறாய் உபதேசம் புரிந்து வந்தமையால், முஸ்லிம்சமுதாயத்தில் ஒருவிதப் பரபரப் புண்டாயிற்று; சமாதானத்திற்கும் பங்கமுண்டாய் விடக்கூடுமென்று அஞ்சப்பட லாயிற்று. ஆதலால், ஷாம்தேச கவர்னர் முஆவியா அவரைப் பிடித்து மதீனாவுக்கு அனுப்பிவைத்தார். அபூதர் மேற்கூறிய ஆயத்திற்கு வியாக்கியானம் செய்தது இஸ்லாத்தின் அஸ்திபாரத்துக்கே விரோதமா யிருக்கிறதென்றும், அவரவரும் முயன்று பொருள் தேடுவதை இஸ்லாம் தடுக்கவில்லை யென்றும், ஜ(க்)காத் தென்னும் ஏழைவரியைத் தவிர்த்து எல்லாச் சொத்தையும் கொடுத்துவிடுமாறு தனவந்தரை வற்புறுத்துவது நியாயமல்ல வென்றும் கலீபா அவர்கள் அன்னாருக்கு எத்துணை மட்டும் விளக்கிக் காண்பித்தும், அபூதர் செவி மடுக்கவில்லை.

ஆனால், அவர் அப்பாலும் தாம்பிடித்த முயலுக்கு மூன்று காலென்றே துர்ப்பிரசாரம் புரிந்துகொண்டு திரிந்தமையால், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள், மதீனாவில் கலகமுண்டாகா திருக்கும்பொருட்டு அன்னாரை ரப்லா என்னுமிடத்திற்கு அனுப்பி வைத்தார்கள்; அபூதர் ஆங்குச் சென்று இரண்டாண்டு கழிந்து

இறந்துபோய் விட்டார். இதையும் ஒரு காரணமாய்க் கொண்டு எதிரிகள் இந்த மூன்ருவது கலீபாவுக்கு விரோதமாய்க் கிளர்ச்சிசெய்யத் துணிந்துவிட்டார்கள். பொதுமக்களிடைக் கலக மனப்பான்மையை உண்டு பண்ணு திருக்கும்பொருட்டு நாட்டு நலத்திற்காகவே அபூதர் வெளியூர் அனுப்பப்பட்டிருந்தும், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் ஒரு நல்ல சாதுவான சன்னியாச ஸஹபியை அநியாயமாய் நாடுகடத்தி விட்டார்களென்று கிளர்ச்சிக்காரர்கள் கயிறு திரித்துவந்தார்கள்.

இஸ்லாம் இதற்கு முன்பே நாலு திக்குக்களிலும் நன்கு பரவிவிட்டது. வெவ்வேறு தேசத்து வெவ்வேறு ஜாதிமக்கள் எண்ணிறந்தபேர் இம் மார்க்கத்தைத் தழுவிக்கொண் டிருந்தனர்.

**ஆதாரமற்ற குர்ஆன்களின் தோற்றம்**

அரபுநாட்டுக் குள்ளேயே தங்கள் பாஷையில் பற்பல உச்சரிப்புக்களையுடைய பலபிரிவுகள் இருந்துவந்தன. இவற்றின் காரணமாகவெல்லாம் குர்ஆன் ஓதுவதிலும் பற்பல உச்சரிப்புள்ள பாடபேதங்கள் அங்கங்கே காணப்பட்டு வந்தன; அஃதாவது, ஒரு சொல் ஓரிடத்தில் ஒருவிதமாய் உச்சரிக்கப்படும்; அதே சொல் வேருேரிடத்தில் வேருெரு விதமாய் உச்சரிக்கப்படும். அக்கால அரபிகள்பால் நல்ல கல்வியில்லாமையால், நபிகள் பெருமானே சிற்சிலவித உச்சரிப்புப் பேதங்களுக்கு அனுமதி யளித்திருந்தார்கள். ஆனால், அன்னிய பாஷைகள் பேசும் அயல் நாட்டினருக்கு அத்தகைய அனுமதிக்கு அவசியமில்லா திருந்தது; என்னெனின், அரபியல்லாதவர் அந்த அரபுபாஷையில் குர்ஆன் ஷரீபை ஓதத் தொடங்குங்கால், அன்னர்

சரியான உச்சரிப்பையே ஆதிமுதல் கற்றுக்கொண்டு விடலாம்; அவர்கட்குத் தவறான உச்சரிப்புக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டுமென்பது நியாயமாய்ப் புலப் படவில்லை. எல்லா முஸ்லிம்களும் ஒரேவிதப் பாடத்தை ஓதத் தலைப்படுவதுதான் சாலச்சிறந்த முறையாய்க் காணப்பட்டது. நபிகள் நாயகத்தின் காலத்தில் அளிக்கப்பட்ட அனுமதியும் தற்கால சாந்தி யாகவே அளிக்கப்பட்டிருந்தது; அதுவும் வரிவடிவில் அன்று; ஒலிவடிவில் மட்டுமே சில உச்சரிப்புப் பேதங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன. எல்லா இடங் களிலுமுள்ள எல்லாக் குர்ஆன்களும் ஒரே மாதிரியில் வரையப்பட வேண்டுமென்பதை எல்லாரும் ஏற்றுக் கொள்வர். ஆனால், இப்பால் மக்கள் வரிவடிவிலும் அத்தகைய உச்சரிப்புப் பேதங்களைக் கொண்டுவந்து நுழைக்கத் துவக்கிவிட்டனர். இது சிறிதும் கூடாத செய்கையாகும். நபிகள்திலகம் வரிவடிவில் எவ்வித வேறுபாடத்துக்கும் அனுமதியளிக்காதிருக்க, பிறகு வந்தவர்கள் தத்தம் உச்சரிப்புக்குத் தக்கவாறு வரிவடி விலும் மாற்றங்களைப் புகுத்தத் துணிந்தனர். எனவே, வெவ்வேறுவிதமாய் வரையப்பட்ட குர்ஆன் பிரதிகள் அங்கங்கே அதிகம் பரவத் தலைப்பட்டன. ஆதலினால் தான் ஹஜ்ரத் உமர்ரலி அவர்கள் காலத்தில் நிறுவப் பெற்ற பல மத்ரஸாக்களில் பற்பலவிதமாய குர்ஆன் பாடபேதங்கள் அதிகம் காணப்பட்டுவந்தன.

வேறொரு மூன்றாவது ஆவசியகமும் நேரிடாது போய்விடவில்லை; அக்கால முஸ்லிம் ராஜ்ஜியத்தின் நெடுந்தூர எல்லைப் பிரதேசங்களில் எழுதி யோதப் பட்டுவந்த குர்ஆன் பிரதிகட்கெல்லாம் மூலப்பிரதியா

யிருக்கக்கூடிய சரியான, பிழையறப் பரிசோதிக்கப் பட்ட குர்ஆன் ஷரீப் பிரதிகள் போதியமட்டும் இல் லாமலிருந்தன. எனவே, இஸ்லாமிய உலகுமுழுவதும் உபயோகமாய் வரு தற்குச் சரியான மூலப்பிரதிகள் அதிகம் வேண்டப்பட்டன வென்பது கண்கூடு. ஆனால், அதுபொழுது பிழையறப் பரி சோதிக்கப்பட்ட சரியான மூலப்பிரதி ஒன்றேதான்— ஹஜ்ரத் அபூபக்ர்ரலி அவர்கள் காலத்தில் நெறியாய்த் தொகுக்கப்பட்டது, இருந்துவந்தது ; அது ஹப்ஸாரலி அவர்கள் கைவயம் இருந்துவந்தது. எனவே, இந்த மூன்றுவது கலீப்ாவானவர், நபிபெருமான் தோழர் களுள் முதன்மையானவர்களை யெல்லாம் ஒன்று சேர்த்து, ஒருமுகமான தீர்மான மொன்றைச் செய்தார் கள் ; அஃதாவது, ஹப்ஸா பிராட்டியிடம் இருந்து வந்த பிரதியிலிருந்து வேறுபல சரியான பிரதிகள் வரையப்படுதல் வேண்டும் ; அவற்றுள் ஒவ்வொன்று ஒவ்வொரு மாகாணத் தலைநகரிலும் ஆதாரமாய் வைக்கப்படுவது அவசியம். அதினின்றே அங்காங்கும் வேறுபிரதிகள் பெயர்த் தெழுதப்பெறுதல் வேண்டும். இதற்காக ஒரு பொறுப்புவாய்ந்த தனிக் கோஷ்டி ஏற்படுத்தப்பட்டு, அதன் மேற்பார்வையிலே பல சரியான பிரதிகள் பெயர்த்தெழுதப்பட்டன. அவற்றி னின்று ஒவ்வொன்று ஒவ்வொரு முக்கியப் பட்டணத் திலும் ஆதாரகிரந்தமாய் வைக்கப்பட்டது. அப் பொழுது, அங்கங்கே அவரவரும் தத்தம் சொந்த முயற்சியால் எழுதிவைத்திருந்த பிரத்தியேகப் பிரதிக ளனைத்தும் எரிக்கப்பட்டுப் போய்விட வேண்டு

ஆதாரமற்ற குர்ஆன் பிரதிகள் கொளுத்தப் பட்டன

மென்னும் அரசாங்க அறிக்கையொன்றும் விடுக்கப் பட்டது. அவற்றிற்கெல்லாம் காரணம் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களே யல்ல; என்னெனின், அக் காரியமுழுதும், மேலே சொல்லப்பட்ட வண்ணம், ஒரு தனிக் கோஷ்டியினரால் கவனிக்கப்பட்டு வந்தது. அன்னூர் செய்ததெல்லாம், நபிகள் நாயகமவர்களே கோரிய காரியமென்பது வெள்ளிடை விலங்கலாகும். அப் பெருமானூர் விருப்பத்தையே இந்தக் கோஷ்டி யினர் நிறைவேற்றி வைத்துள்ளனர். நபிகட் டிலகம்ஸல் அரபு பாஷையின் சிற்சில பாகத்திலுள்ள மக்களின் உச்சரிப்புப் பேதத்துக் கேற்றவாறு வாய்மொழி யுச்சரிப்பில்மட்டும் அவரவரும் அர்த்த பேத மில்லாத முறையிலே வேறுபாடமாய்ச் சில சொற்களை உச்சரித்துக்கொள்ள அனுமதியளித்திருந் தார்கள். ஆனூல், வரிவடிவில் வரையத் துணியுங்கால் ஒரே மாதிரியாகத்தான் குர்ஆன் ஆயாத்கள் வரையப்பட வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்கள். எனவே, நபிபெருமான் கோரியிருந்தபடி ஒரேவித லிபியில் குர்ஆன் ஷரீபை வரைந்துவைத்தது இஸ்லாத் துக்குச் செய்த ஒரு மிகச்சிறந்த சேவை யாகும். ஆதலினூல்தான் அபூபக்ர் ஸித்தீக்ரலி அவர்களது ஆட்சியின்போது தொகுக்கப்பட்டு, ஹப்ஸாபிராட்டி அவர்களிடம் பத்திரமா யிருந்துவந்த அந்தச் சரியான மூலப் பிரதியிலிருந்து பல புதுப்பிரதிகள் பெயர்த் தெழுதி, முக்கிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டன; அவ்வளவுடன் அந்தக் காரியம் நிறுத்தப்பட் டிருக்குமாயின், அஃது அரைகுறையான செய்கை யாகவே போய் முடிவடைந் திருக்கும். சரியான

பிரதிகள் வெளிவந்த பின்பு தவறான பிரதிகளனைத்தும் அழிக்கப்பட வேண்டுவது ஓர் அத்தியாவசியமல்லவா? சரியான பிரதிகளுக்கு மத்தியிலே தவறான பிரதிகளும் உலவிவர இடங்கொடுக்கப்பட்டால், அப்பால் மீட்டும் குழப்பத்திற்கு இடங்கொடுத்ததாகவே அக்காரியம் கருதப்படும். ஆதலின், தவறான பிரதிகளெல்லாம் அழிக்கப்பட வேண்டுவது அவசியத்தினும் மகா அவசியமேயாகும். ஆகவேதான் அந்த ஆதாரமற்ற பிரதிகளனைத்தும் அழித்தெரிக்கப்பட்டதும் இஸ்லாத்திற்குச் செய்யப்பட்ட ஒரு தலைசிறந்த ஊழியமாய்க் கருதப்பட்டு வருகிறது.

இத்துணைச் சிறந்த நல்ல ஊழியமும், எதிரிகள் கையில் கலீபாவைத் தாக்கி வீண் கிளர்ச்சி செய்ய ஒரு தக்க ஆயுதமாகக் கொள்ளப்பட்டது. உதுமான்ரலி அவர்கள் குர்ஆன் ஷரீபின் பிரதிகளை எரித்து ஒரு பெரிய அபசாரத்தை இஸ்லாத்துக்கு இழைத்துவிட்டார்களென்று அக் கிளர்ச்சிக்காரர் கூக்குரலிட்டனர். இத்தகைய நேர்மையற்ற வதந்திகளை நெடுந்தூரத்தி லுள்ள மக்கள் செவி யேற்றதும் துணுக்குற்று விட்டனர். அவர்கள் முழு விவரத்தையும் அறியார்கள். குர்ஆன் ஷரீபின் பிரதிகளைக் கொளுத்தியது பெரும்பாதக மென்பதே அன்னார் நம்பிக்கை. ஆயின், பிழையான பிரதிகளைக் கொளுத்தியது மதக் கடமையா யிருக்கட்டும், அல்லது மதத் துரோகமா யிருக்கட்டும். அஃது எவ்வாறிருப்பினும், அதற்கு ஜவாப்தாரி ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் மட்டும் அல்லரே; அக் காரியத்துக்கென்று ஏற்படுத்

ஹஜ்ரத் உதுமான்ரலி ஜவாப்தாரியல்ல

தப்பட்டிருந்த அந்தக் கோஷ்டியாரே உத்தரவாதிக ளல்லது, அதற்கு உதுமான்ரலி அவர்களே குற்றவாளியா யிருப்பது முடியாது. ஆனால், இத் தகைய நியாய அநியாயத்தைப்பற்றிய கவலை அந்தக் கிளர்ச்சிக்காரர்களுக்கு அவசியமில்லை; ஆனால், அவர் களுக்கு வேண்டுவதெல்லாம், ஏதாவதொன்று இந்த மூன்றாவது கலீபாவின்மீது பழி சுமத்துவதற்கு அகப்பட வேண்டும்; இஃதொன்றே அவர்களுக்குப் போதும்.

ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களை யொழிக்கக் கிளப்பப்பட்ட கிளர்ச்சிக்கு முக்கிய தலைமைஸ்தானம் எகிப்து (மிஸ்ர்) தேசமாகவே யிருந்துவந்தது; அதன் பயனாய் முஸ்லிம் ராஜ்ஜியத்துக்கே சிதைவுண்டாகுமென்பது அவர்கட்குத் தெரியாது போய்விட வில்லை. அங்

**விஷமம் துவக்கப்பட்டது**

கிருந்துதான் இப்னு ஸபா தனது விஷமப்பிரசாரத்தை எங்கும் பரத்திவந்தான். பஸரா, கூபா போன்ற இடங் களிலெல்லாம் இவனுக்குச் சிஷ்யர்கள் முளைத்துக் கொண் டிருந்தார்கள். ஆனால், இப்னு ஸபாவுக்கு மதீனாவில்மட்டும் இருவரைத் தவிர்த்து வேறெவரும் சிஷ்யராய் அகப்படவில்லை; அன்னார், முஹம்மத் பின் அபூபக்ர், முஹம்மத் பின் அபூஹுதைபா என்பவ ராவர். இவ்விருவரும், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர் களது ஆட்சிமுறையில் அதிருப்தி கொண்டிருந்த இளவல்களா யிருந்துவந்தனர். இவர்கள் எகிப்தி லிருந்தக்கால், கலீபாவின் அபிமானசோதரர் அப்துல்லா பின் ஸஅத் கவர்னரா யிருந்தபோது அன்னாருடனே சண்டையிட்டுக்கொண்டனர். ஆகவே,

இப்னு ஸபா எகிப்துக்குச் சென்று தன்கிளர்ச்சியை ஆரம்பித்தபொழுது, இவ்விரு யுவர்களும் அவனது வலையுள்ளே சிக்கிவிட்டனர். இதற்குக் காரணம் சொந்தக் குரோதமே யாகும்.

சிரியாவுக்கு நாடுகடத்தப் பட்ட பதின்மர்

கூபாவில் இக்கிளர்ச்சி இன்னம் வேகமாய்ப் பரவிவந்தது. கலகக்காரத் தலைவர்கள் பகிரங்கமாய், கலீபாவையும் அன்னாரின் உத்தியோகஸ்தர்களையும் தூஷிக்கத் தலைப்பட்டனர்கள். ஒரு முறை கூபாவின் கவர்னர் தமக்குரிய விருந்தொன்றை நடத்திவந்தார். அப்பொழுது அங்கு நடைபெற்ற சம்பாஷணத்தில் கலந்துகொண்ட யுவனொருவன், கவர்னருக்கு அதிசீக்கிரம் சிலநிலங்கள் கிடைக்கவேண்டுமென்று தான் விரும்புவதாய்க் கூறினான்; அதன் கருத்து, அப்பால் தனக்கும் சில உதவிகள் கிடைக்குமென்றும், அப்பொழுது தன்னுடைய நண்பர்களுக்குத் தன்னால் சகாயம் செய்ய முடியுமென்றும் அவன் கருதியிருந்ததுதா னாகும். அதுபொழுது அவ்விருந்துக்கு வந்திருந்த இப்னு ஸபாவின் சிஷ்யர்கள் அதுதான் தருணமென்று கலகம் செய்யத் துவக்கிக் கொண்டனர்கள். "எங்கள் நிலங்களை மற்றவர்கள் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்று நீ கூறுகிறையா, என்ன?" என்று கூச்சலிட்டு, அவ் வாலிபனையும் அவனுடைய தந்தையையும் நையப் புடைத்து நொருக்கிவிட்டார்கள். மாகாணாதிபதியின் கண்முன்னேயே அவ்வாறு கலகம்செய்தது, அவரது அதிகாரத்தை உதாசினத்துடன் உதறித் தள்ளியதற்கே ஒப்பாகுமன்றோ? அப்பால் அவ்விஷயம் கலீபாவுக்கு அறிவிக்கப்பட்டது;

இவர் அந்தக் கலகத்தில் சம்பந்தப்பட்டவர்களை யெல்லாம் ஷாம்தேசத்திற்கு நாடுகடத்தக் கட்டளை யிட்டார். ஆங்குச் சென்றால் அவர்களையெல்லாம் முஆவியா தமக்குரிய சாமர்த்தியத்தாலும் சாதுரியத் தாலும் சீர்திருத்தி, அவர்களுடைய புரட்சி மனப் பான்மையை யகற்றிவைத்திடுதல் கூடுமென்று கலீபா அவர்கள் எதிர்பார்த்தார்கள். அவ்வாறு சிரியாவுக்கு நாடுகடத்தப்பட்டவர்கள் பதின்மரா யிருந்தனர்; அவர்களுள் உஷ்தர் என்னும் நாமமுடையவனும் ஒருவ னிருந்தான்.

**பகிரங்கப் புரட்சிக்கலகம்**

சிரியாநாட்டில் முஆவியா எத்துணைமட்டும் பிரயத்தனப்பட்டுப் பார்த்தும், அந்தக் கலகக்காரர்கள் ஒருசிறிதும் திருந்தவில்லை. அப்பால் அவர் கலகக் காரர்களை யெல்லாம் நெடுந்தூரத்தி லுள்ள ஒரு பத்திரமான இடத்திற் கனுப்பிப் பாதுகாவல் புரிந்துவருமாறு வேறு சிலரையும் அவர்கட்கென்று ஏற்பாடு செய்து வைத்தார். அதற்குள்ளே கூபாவின் கவர்னராயிருந்த ஸயீதென்பார் கலீபாவுடன்கலந் தாலோசனைபுரியு மாறு மதீனாவுக்கு வந்துசேர்ந்தார்; அப்பொழுது, அதுதான் தருணமெனக் கொண்டு கூபாவிலிருந்த கிளர்ச்சிக்காரர் முன்னம் நாடுகடத்தப்பட் டிருந்த அந்தப் பதின்மருக்கும் ஆள்விடுத்து அன்னாரையும் சேர்த்துக்கொண்டு பெருங்கலகம் செய்யத் தலைப் பட்டனர். பிற்பாடு ஸயீத் மதீனாவிலிருந்து ஒருவேலைக் காரனுடன் திரும்பிவந்தபொழுது, அந்தக் கலகக்காரர் அவர்களைக் கூபாவுள் நுழையவிடாது தடுத்து, ஸயீதின் வேலைக்காரனைக் கொன்றொழித்து விட்டார்

கள். உடனே ஸயீதும் மதீனாவிற்குத் திரும்பிவிட்டார். இஃதொரு பகிரங்கப் புரட்சிக்கலகம். கடுமையான ஏற்பாடுகளைக்கொண்டு அக் கலகக்காரர்களைத் தண்டித்திருத்தல் வேண்டும். ஆனால், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் பரமசாதுவா யிருந்துவந்தமையால், அந்தக் கலகக்காரர்களை மிக்கநல்ல முறையிலே தண்டிப்பதை விடுத்து, அபூமூஸா அஷ்அரீயைக் கூபாவுக்கு மாகாணாதிபதியாய் நியமித்து, அவர்களை ஒருவாறு சமாதானம் செய்துவைக்கப் பார்த்தார்கள். ஆதலின், இந்த அபூமூஸா கூபாவுக்கு வந்தவுடனே ஜனங்களைக் கூப்பிட்டுத் தங்களுடைய ராஜவிசுவாசப் பிரமாணத்தைப் புதுப்பித்துத் தருமாறு கேட்டார்கள். ஆனாலும், அத்தகைய வெளிப்படையான சமாதர்னத்தின்கீழே அவ் வெதிரிகளெல்லாரும் முணுமுணுத்த வண்ணம் மௌனம்சாதித்துச்சமயம்பார்த்துக் காத்துக் கொண் டிருந்தார்கள்.

நாளுக்கு நாள் இராஜத்துரோகிகளின் செல்வாக்குப் பெருகியவண்ணமே யிருந்துவந்தது. எதிரிகள் செய்துவந்த காரியங்களுள்ளெல்லாம் முதன்மையானது, மாகாணாதிபதிகளைக் குறித்துக் குற்றஞ்சாட்டிக் கிளர்ச்சி செய்வதாகவே யிருந்துவந்தது. இதுதான் பாமரமக்களைத் தூண்டிவிட்டுப் பரபரப் படையுமாறு செய்தற்குரிய ஓர் இலகுவான மார்க்கமாய்க் கண்டுபிடிக்கப்பட்டது. மதீனாவிலும் ஒரு சிலர் அந்த மாயவலையுள் சிக்குண்டு கலீபாவின் மீது குறைகூறத் துணிந்துவிட்டனர். அடிமேலடியடித்தால் அம்மியும் நகருமென்பதற்கேற்ப ஒவ்வொரு

குறைமுறைகளைக் குறித்த விசாரணை

நாளும் பஸரா, கூபா, எகிப்து ஆகிய பிரதேசங்களி லிருந்து எண்ணிறந்த பர்யாத்கள் மதீனாவுக்குள் வந்து குவிந்தவண்ண மிருந்தன ;—எல்லாம் சதியாலோசனைக் கூட்டத்தாரின் பொய்யான போர்ஜரி பர்யாத்க ளென் பதில் சிறிதும் சந்தேகமில்லை. இரவுபகலாய் இவ் வாறு வந்து குவிந்த பர்யாத்களைக் கண்டு, ஒருசிலர் ‘இல்லாதது பிறவாது, அள்ளாதது குறையாது’ என்றவாறு, அவற்றிலெல்லாம் ஏதேனும் உண்மை யிருக்கத்தான் வேண்டுமென்றே ஐயுறத் துணிந்துவிட் டனர் ; ஒருசில நபிபெருமான் தோழர்கள் சுயமே அத்தகைய புகார்களின் மெய்பொய் இன்னதென்பதை அறிந்துகொள்ள வழிவகை யற்றவராய், மகாணாதி பதிகள் குற்றங்குறை யிழைக்காது அப்படிப்பட்ட பர்யாத்கள் அனந்தம் வந்து குவியக் காரணமிரா தென்றே தம்முள் தீர்மானம் செய்யத் துணிந்து விட்டனர். ஆகவே, அவர்கள் கலீபாவிடம் சென்று அந்தப் புகார்களை யெல்லாம் விசாரித்து நியாயம் வழங்குமாறு வேண்டிக் கொண்டார்கள் ; ஆனால், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள், தங்கள்பால் வந்துள்ள யாதாஸ்துகளிலிருந்து எந்த மாகாணாதிபதியும் எத் தகைய குற்றமும் இழைத்துள்ளதாய் முடிவுகட்ட எத்தகைய நியாயமும் இல்லையென்று பதில் கூறி னார்கள். அப்பால் ஆலோசனைக் கூட்டமொன்று கூட்டப்பட்டு, பஸரா கூபா திமஷ்க் எகிப்து ஆகிய இடங்களுக்கு நம்பிக்கைக்குரிய ஒருசில பெரியார்கள் அனுப்பப்பட வேண்டுமென்றும், அன்னார் சென்று உள்ளூரில் தீரவிசாரித்து உண்மையைக் கண்டறிந்து யாதாஸ்து எழுதிவர வேண்டுமென்றும் தீர்மானம்

செய்யப்பட்டது. அப்துல்லா பின் உமர், உஸாமா பின் ஜைத், முஹம்மத் பின் முஸ்லிம், அம்மார் பின் யாஸிர் ஆகிய நால்வரும் இக் காரியத்திற்கென்று பொறுக்கி யெடுக்கப்பட்டார்கள். இவர்களுள் எகிப்து தேசத்துக்குச் சென்ற அம்மார், இப்னு ஸபாவின் நயவஞ்சகர்களாகிய அயோக்கிய சிஷ்யர்களால் வஞ்சித்து ஏமாற்றப்பெற்று, அன்னார் வலைக்குள் சிக்குண்டு, தமது யாதாஸ்தைச் சமர்ப்பிக்க மதீனாவுக்குத் திரும்பியே வரவில்லை.. ஒருகால் எகிப்தின் கவர்னர் பொது மக்களின் நல்லபிப்பிராயத்திற்குப் பாத்திரராயில்லாதிருந்திருக்கலாம்; அம்மாரும் தமது ஏமாளித்தனத்தால் இப்னு ஸபா சிஷ்யர்கள் வஞ்சநெஞ்சத்துடன் திறந்து வைத்திருந்த பொறியுள் சென்று வீழ்ந்துவிட்டார்; அவர்கள் கூறியவனைத்தையும் அம்மார்வேதவாக்காக ஏற்றுக்கொண்டுவிட்டார். ஏனை மாகாணங்களுக்குச் சென்ற மற்ற மூன்று பெரியார்களும் மனோதைரியமும் மனச்சாக்ஷி சுதந்தரமும் வாய்க்கப்பெற்ற கண்ணிய புருஷர்களாய் விளங்கிவந்தமையால், அந்த அந்த ஸ்தலத்தில் தீர விசாரித்து, உண்மையைக் கண்டறிந்து ஒருவர்மீதும் ஒன்றும் குற்றமில்லை யென்றே யாதாஸ்து வரைந்து விடுத்தார்கள்.

அதுவேயுமன்றி, இந்த கலீபாவானவர் மற்றொரு விதத்திலும் பொதுஜன மனப்பான்மையைச் சமனம் செய்துவைக்கப் பிரயத்தனப்பட்டார்கள்: அடுத்து வரும் ஹஜ்ஜின் காலத்தில் எல்லா மாகாணாதிபதிகளும் மதீனாவுக்கு விஜயம் செய்யுமாறு அழைக்கப்பட்டுள்ளார்க ளென்றும், அதுபொழுது குறைகூற விரும்பு

மாகாணாதிபதிகள் மஹாநாடு

வோர் தமக்குள்ள குறைமுறைகளை நேரில் வந்து கலீபாவிடம் பர்யாத் செய்துகொள்ளலா மென்றும் முஸ்லிம் உலக முழுவதும் செய்தி யறிவிக்கப்பட்டது. பொது மக்களுக்கு எந்த அதிகாரி மீதும் ஏற்பட்டுள்ள குறைகளைப் பகிரங்கமாய் விசாரணை புரிந்து பரிகாரம் அளிப்பதற்கு இதனினும் வேறென்ன உபாயம் அன்னவரால் செய்யப்படுதல் சாலும்? யோக்கியப்பொறுப்புள்ள மூன்று கண்ணியபுருஷர்கள் தீரவிசாரித்து யாதாஸ்து அனுப்பியுள்ளனர்; அது போதாதென்று கலீபா அவர்களே மாகாணுதிபதிகளை நேரில் வைத்து விசாரணைபுரியச் சம்மதிப்பதாகவும் எங்கும் செய்தி பரத்தினர்கள். அவ்வாறே அடுத்துவந்த ஹஜ்ஜின் போது எல்லா மாகாணுதிபதியும் மதீனுவந்து சேர்ந்தார்கள். ஆயின், ஒருவரும் கலீபா முன்வந்து எவரைக் குறித்தும் பர்யாத் செய்துகொள்ள வில்லை. இதிலிருந்து வெளியாகும் உண்மை யாது? முன்னம் மூன்று பெரியார்கள் விசாரணைபுரிந்து விஷயத்தை விளக்கிவிட் டிருப்பதேபோல், மாகாணுதிபதிகள்மீது யாதொரு குற்றமும் இல்லை யென்பது விகசிதமாய் விட்டது. இன்றேல் எவரேனும் எவர்மீதேனும் குறைகூறுவான் வேண்டி, கலீபாவின்முன்பினில் வந்திருக்கமாட்டாரா? அப்பால் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் எல்லா மாகாணுதிபதிகளையும் மற்றுமுள்ள பல பெரியார்களையும் ஒன்றுகூட்டி, தங்களுக்கு விரோதமாய்த் திரைமறைவில் செய்யப்பட்டுவரும் பொய்ப்பிரசாரத்தை அடக்கியொடுக்குவதற்குத் தக்கதோர் உபாயம் கண்டுபிடிக்கப்பட வேண்டுமென்று கூறினர்கள். அப்பொழுது அங்குக் குழுமியிருந்தவர்க

ளெல்லாம், பொய்ப்பிரசார கோஷ்டியின் தலைவர்களை வரவழைத்து, அவர்களுக்குரிய கொடிய தண்டனையை யளித்து, ஏனையோர்க்கும் நல்ல படிப்பினையை யளித்திடுதல் வேண்டுமென ஒருமுகமாய் அபிப்பிராயம் கூறினர். ஆனால், அதனைச் செய்ய ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் ஒருப்படவில்லை ; என்னெனின், எந்த முஸ்லிமின் இரத்தத்தைச் சிந்தவும், முஸ்லிம் சமுதாயத்தில் எத்தகைய கிளர்ச்சிக்கு இடங்கொடுக்கவும் இப்பெரியார் சிறிதும் மனத்துணிவு கொள்ள மாட்டார். ஆதலால், அதுபொழுது கூடிய ஆலோசனைக் கூட்டத்தால் அந்தக் கிளர்ச்சியை யடக்க ஒன்றும் தீர்மானமான ஏற்பாடு எடுத்துக்கொள்ளப் படவில்லை. ஆனால், முஆவியா மதீனாவை விட்டுப் புறப்பட்டபொழுது, ஏதோ விபரீதமான சூழ்ச்சிகளெல்லாம் கலீபாவுக்கு விரோதமாய் நடைபெற்று வருவதாய்த் தாம் கேள்விப்படுவதாகவும், ஆதலின், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களுக்குத் தம்மால் திமஷ்கிலிருந்து அனுப்பி வைக்கப்படும் அங்கப்பாதுகாவலரை அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமென்றும், இன்றேல் தம்முடன்கூடித் தமது தலைநகராய திமஷ்குக்கு வந்துவிடுவது சர்வ சிலாக்கிய மென்றும் விண்ணப்பித்துக் கொண்டார். எனினும், கலீபாவானவர் ஏதொன்றையும் ஏற்றுக்கொள்ள வில்லை; நபிகள் திலகத்தின் திருமேனி புதையுண்டுள்ள மதீனாவைத் துறந்து தாம் எவ்வாறு திமஷ்குக்கு வருவது சாலுமென்று கூறிவிட்டார்கள். மேலும் தமது சரீரப் பாதுகாப்பி னிமித்தமாய் அங்கக் காவலரை அமைத்துக்கொள்வான் வேண்டி அனாவசியமாக அரசாங்கப் பொக்கிஷத்துக்

குப் பணச் செலவை யுண்டுபண்ணத் துணியவுமில்லை. எல்லாம் அல்லாஹ்வின்மீது பாரமெனப் போட்டு விட்டு, ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் நிஸ்சிந்தையாய் நிஷ்களங்கரா யிருந்துவந்தார்கள்.

ஹஜ்ஜின் காலத்தில் எல்லா மாகாணுதிபதிகளும் மதீனுவுக்கு விஜயம் செய்வார்க ளென்றும், ஆகவே, அன்னூர்மீது குறைகூற விரும்புவோர் அனைவரும் அத் தலைநகருக்கு வந்து தங்கள்பால் பர்யாத் செய்துகொள்ளலா மென்றும் இந்த மூன்ருவது கலீபா செய்தி விடுத் திருந்தமையால், சதியாலோசனைக் காரர் களும் தமக்குள்ளே ஒருவித ஏற்பாடு செய்துகொள்வா ராயினுர்கள்: ஒரு குறிப்பிட்ட காலத்தில், அஃதாவது,

**ராஜத்துரோகிகள் மதீனுவில் கூடுதல்-ஹி. 35, ஷவ்வால்மீ (கி. பி. 656, மார்ச்சுமீ)**

மேற்கூறிய ஆணையின்படி மாகாணுதிபதிகளெல்லாம் தத்தம் மாகாணத்தைவிட்டு மதீனுவுக்குப் புறப்பட்டு விட்டவுடனே, அவர்கள் ஊரிலில்லாதபோது ஏராள மான மக்கள் ஏககாலத்திலே பஸரா, கூபா, எகிப்து ஆகிய நாடுகளிலிருந்து புறப்பட்டு, ஒரே சமயத்தில் மதீனு வந்து சேரவேண்டும்; அவர்களுடைய பெருந் திரளைக்கண்டு கலீபாவானவர் தம்முடைய மாகாணுதி பதிகளை வேலையிலிருந்து நீக்கிவிடல் வேண்டும்; இன்றேல் கலீபாவே பட்டத்தைவிட்டு இறங்கிவிடல் வேண்டும். இவ் விரண்டிலொன்று நடைபெற வில்லை யாயின், அப்பால் அவ்வெதிரிகள் வாளாயுதப் பிரயோ கத்தில் இழிதல் வேண்டும். இதுதான் அவர்கள் செய்துகொண்ட ஏற்பாடு. அவ்வாறே அந்த மாகா ணுதிபதிகளெல்லாம் தத்தம் தலைநகரைவிட்டு மதீ

னுவை நோக்கிப் பிரயாணமாயவுடன், சதியாலோ சனைக்காரர்கள் அவர்க ளில்லாத அமயம்பார்த்துக் கூட்டங்கூட்டமாய்ப் புறப்பட்டுத் தங்கள் அந்தரங்க எண்ணத்திற்கேற்க மதீனுவை முன்னேக்கிக் கிளம்பி விடப் பார்த்தார்கள். ஆனல், இவர்கள் இவ்வாறு ஏற்பாடு செய்துகொண்டிருக்கும் பொழுதே, அந்த மாகாணுதிபதிக ளனைவரும் கலீபாவுடன் கலந்தாலோசனை புரிந்துவிட்டுத் தத்தம் மாகாணங்களுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். இவ்வண்ணமாய் அம்மக்களின் எண்ணம் அவ்வாண்டில் பலப்பிராப்தி யடையாது போய்விட்டது; ஏமாற்றமும் அதிகமாயிற்று. கோபமும் மேலும் மூண்டெழுந்தது.

எனவே, அடுத்த ஆண்டில் அவர்கள் சகலவித முன்னேற்பாடுகளையும் உரியகாலத்திலேயே செய்து முடித்துக் கொண்டார்கள். ஹஜ்ஜுக்குச் செல்வதாய்ப் பாசாங்குசெய்து, அன்னர் தங்களுக்கு வேண்டிய சொந்தக் கார்வான்களைச் சித்தஞ்செய்து கொண்டார்கள்; அப்பால் அந்தக் கலகக்காரர்கள் ஏக காலத்தில் பஸரா, கூபா, எகிப்து என்னும் பகுதிகளை விட்டுப் புறப்பட்டார்கள். மதீனு வந்து சேர்ந்தவுடன் அவரவரும் தத்தமக்குரிய வெவ்வேறிடங்களில் பாடிவீடிறங்கிக் கூடாரமடித்துக் கொண்டார்கள். இவர்கள் மதீனுவுக்குள்ளே வந்திருப்பதையும், இன்னருடைய எண்ணங்கள் தீயநோக்குடையனவா யிருப்பதையும் கேள்வியுற்ற கலீபா அவர்கள், தாங்கள் நடாத்திய மேடைப்பிரசங்க மொன்றில், இவர்கட்கெல்லாம் எச்சரிக்கை யொன்றைச் செய்து வைத்தார்கள்:

**ஹஜ்ஜுக்குப் போவதாகப் பாசாங்கு**

"அவர்கள் என்னைக் கொலை செய்துவிடச் சதியாலோசனை செய்கிறார்கள். ஆனால், அன்னார் ஒன்றைமட்டும் மறந்துவிட வேண்டாம்: அவர்கள் என்மீது கை வைக்கத் துணிவார்களாயின், அதனால் முஸ்லிம்கள் மத்தியிலே பெரியதொரு குழப்ப முண்டாய்விடும்; அப்பால் இந்த எதிரிகளே ஏனையவர்களுடன் கூடி வருந்தவேண்டி வரும்." இவ்வாறு ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் எச்சரிக்கை செய்தவுடனே மதீனா வாசிகள் கலீபாவை எவ்வாற்றானும் தற்காத்தே தீரவேண்டுமென்று முடிவுசெய்து கொண்டார்கள். இதுகண்டு எதிரிகளெல்லாம் ஏமாற்றமடைந்தே போயினார்கள்; தங்களைப் போலே மதீனாவாசிகளும் இந்த கலீபாவின் ஆட்சியில் வெறுப்புற் றிருந்தன ரென்றும், ஆதலினால் அவர்க ளெல்லாரும் அப்பொழுதே தங்களுடன் சேர்ந்துகொள்வார்க ளென்றும் எதிர்பார்த்திருந்த கலகக்காரர்கள் ஏமாற்றமுற்று வேறென்ன செய்வர்? இவ்வாறு மதீனாவாசிகளனைவரும் ஏகோபித்து எதிர்க்கத் தலைப்பட்டதைக் கண்ட கலகக்காரத் தலைவர்கள் வேறொரு யுக்தியை மேற்கொள்ளத் துணிந்துவிட்டனர்; இவர்கள் எவ்வாறாயினும் மதீனாவிற்குள் நுழைந்துவிட வேண்டும்; அப்பால் அந் நகரவாசிகளால் ஒன்றுஞ்செய்ய இயலாது. பிறகு அந்தப் பட்டணமும் கலீபாவும் தங்கள் கைவயம் சிக்கிக்கொள்வரெனத் தீர்மானித்துக் கொண்டனர். இதுதான் அன்னார் செய்துகொண்ட பரியாலோசனை யாகும். இதனை எவ்வாறு நிறைவேற்றுவ தென்பது அடுத்தபடியில் எழுந்த பிரச்சினை யாகும். இதற்காக இந்த சதியாலோசனைக் காரர்கள்

நபிகள் திலகத்தின் பிராட்டிமார்களிடம் தூதுசென்று, தங்களது விருப்பம் கலீபாவிடம் தங்களுக்குள்ள குறைமுறைகளை யெல்லாம் தெரிவித்து, மாகாணுதிபதிகளைத் திருப்பியழைத்துக் கொள்ளுமாறு அன்னுரை வேண்டிக்கொள்ள வேண்டுவதேதாகுகும் என்று தெரிவித்துக் கொண்டார்கள். ஆனாலும், இவர்களது உள்ளக்கிடக்கையை உள்ளவா றுணர்ந்து கொண்ட நபிபத்தினியர் இன்னுருக்குச் சிறிதும் செவி தாழ்த்த மறுத்துவிட்டார்கள்.

இந்த ருத்திராக்ஷப் பூனைகள் கூறும் குறைகள் சாமான்யமானவை யல்லவென்பதும், முஸ்லிம் ராஜ்ஜியத்தின் ஆணிவேரையே அசைத்துவிடக் கூடியவையென்பதும் தெருவழியே ஓடும் ஒவ்வொரு மனிதனுக்கும் நன்குதெரியும். இவர்கள் கூறுவது சாதாரணக் குறைமுறைகளா யிருப்பின், ஏன் மூன்றுதிக்கிலுள்ள மூன்று தேசங்களிலிருந்து திரள்திரளான மக்கள் ஏககாலத்தில் வந்து மதீனுவில் குழுமவேண்டும்? அதுதான் இரகசியம்; எல்லாரும் ஒருமனப்பட்டவராய்ச் சதியாலோசனை யொன்றைச் செய்துகொண்டு, ஏககாலத்தில் தங்க ளேற்பாட்டிற் கிணங்க மதீனுவந்து சேர்ந்திருக்கிருர்கள்; வேண்டு மென்றே செய்யப்பட்ட முன்னேற்பாடே யாகும் இது.

நபிபெருமான் பிராட்டிமாரிடம் ஒன்றும் பலிக்காது போய்விட்டமையால், அந்தக் கலகக்காரர்கள் வேருெரு பக்கல் திரும்பிச் சென்ருர்கள்: அவர்கள் ஹஜ்ரத் அலீரலி அவர்கள்பால் ஓடினுர்கள்; அன்னுர் தங்களுக்குப் பக்கபலமா யிருப்பார்களென்று எதிர்பார்த்

**புரட்சிக் கூத்தின் முதலங்கம்**

திருந்தனர். ஆயின், அவர்கள் அவ்விடத்திலும் பெரிய தோர் ஏமாற்றத்தையே பெற்றுக் கொண்டார்கள். நபி கள் நாயகத்திற்குப் பின்னே கலீபாவாய் வரத்தக்க வாரிஸ் கிரம யோக்கியதை வாய்க்கப்பெற்றவர் அலீரலி அவர்களே யென்றுதான் இப்னு ஸபா பிரசாரம் செய்து வந்தான். அவனும் அவனைச் சார்ந்தவர்களும், தங்களைப்போலவே அலீரலி அவர்களையும் தவருக மதித்து, அன்னூர்பால் தங்களுக்கு வேண்டிய எல்லா உதவியும் கிடைக்குமென்று நாடினூர்கள். ஆனல், ஹஜ்ரத் அலீரலி அன்னூரின் வலைக்குள்ளே வீழ்ந்து விடாது, இஸ்லாத்தின் குடியாட்சி முறையில் மிகவும் ஆழிய நம்பிக்கை வைத்தவர்களாய், தங்களுக்கு வாரிஸ் கிரம முறைப்படி கிலாபத்பதவி கிடைக்கவேண்டுமா? வேண்டாமா? என்ப தொன்றையும் பொருட்படுத் தாது, இந்த மூன்ருவது கலீபாவைக் காப்பாற்றுவதே தங்கள் கடமையெனக் கொண்டுநின்ருர்கள். அவர்க ளிடத்தும் தாங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்காமற் போய்விடவே, அக் கலகக்காரர்கள் தங்களுக்குத் தெரிந்த வேறிரண்டு மனிதர்கள்பால் திரும்பினூர்கள். கலீபாவின் ஸ்தானத்திற்கு அலீரலி அவர்களே வாரி ஸென்று கூறியதேபோல், அந்தக் கிளர்ச்சிக்காரர் வேறிரண்டு அபேக்ஷகர்களையும் தங்கள் கைவயம் வைத்திருந்தார்கள்; பஸராவாசிகள் தல்ஹாவையும், கூபாவாசிகள் ஜுபைரையும் ஆதரித்துவந்தார்கள். எனவே, அலீரலி தங்களுக்கு உதவிபுரிய மறுத்துவிட்ட படியால், அவர்கள்—பஸரா வாசிகளும் கூபாவாசி களும்—முறையே தத்தமக்குரிய அபேக்ஷகரிடம் திரும்பினூர்கள். அங்கும் அவர்களுக்கு எதிர்பார்த்த

உதவி கிடைக்காது, உதாசினமும் உதையுமே கிடைத்தன. நபிகள்திலகத்தின்ஸல் பாதத்தடியிலே குந்தி பயிற்சி பெற்ற உத்தம பக்தர்களாய அவ்விரு பெரியார்களும் கலகக்காரர் சூழ்ச்சியுள் சிக்க மறுத்து விட்டார்கள். இவ்வாறு எல்லாத் திசையிலும் ஏமாற்றமுற்ற கலகக்காரர் வேறொரு யுக்தி செய்யத் தலைப்பட்டனர்: தாங்கள் செய்தனவெல்லாம் தவறென்று மன்னிப்புக் கோருபவரேபோல் நடித்து, எகிப்தின் மாகாணாதிபதியைமட்டும் திருப்பியழைத்துக்கொண்டு, அவரது ஸ்தானத்தில் முஹம்மத் பின் அபூபக்ரை நியமித்தனுப்பினால் அதுவே போதுமென்று கலீபாவிடம் தெரிவித்துக் கொண்டார்கள். இதுகேட்டு நம் கலீபா அவர்கள் தங்களுக்குரிய இயற்கை நற்குணத்தால் அந்தக் கிளர்ச்சிக்காரர்களை விசாரணைக்குக் கொணர்ந்து தண்டிப்பதை விட்டு, அன்னாரின் வேண்டுகோளுக் கிணங்கி, முஹம்மத் பின் அபூபக்ரை எகிப்தின் மாகாணாதிபதியாய் நியமித்து, அந் நியமனப்பத்திரத்தை அன்னவர் கைவயமே கொடுத்துவிட்டார்கள். அதனை வாங்கிக் கொண்டு மனத்திருப்தி யடைந்தவர்களேபோல் அம் மூன்று மாகாண மனிதர்களும் மதீனாவை விட்டு வெளிக்கிளம்பி விட்டார்கள். இதுதான் அவர்கள் நடித்த நாடகத்தின் முதலங்க மாகும்.

அன்னார் மதீனாவைவிட்டுவெளிப்பட்டது கண்டு, அந்நகரவாசிகள் ஒருவாறு உள்ளத்திருப்தி யடைந்து நின்றனர். கிளர்ச்சிக்காரர்கள் போய்விட்டார்கள்; அவ்வளவுடனே ஆபத்தும் நீங்கிவிட்டதென்று எண்ணத் தலைப்பட்டனர். நகர முழுதும் பழையபடியே

தனக்குரிய வேலைகளில் ஈடுபட்டுவிட்டது. ஆனால், அந்நிலைமை பலநாள் வரை நீடித்து நிற்கவில்லை; என்னெனின், சில தினங்களுக்குள்ளே மேற்கூறிய மூன்று தொகுதியினரும் ஏக காலத்தில் திரும்பிவந்து, மதீனுவைக் கைவயப்படுத்திக் கொண்டனர். அனைவரும் ஆச்சரிய மடைந்துவிட்டனர். காரணம் இன்னதெனக் கண்டுபிடிப்பான்வேண்டி அலீரலி அவர்களும் மற்றுஞ் சிலரும் ஒன்றுகூடி, அக் கலகக்காரரிடம் அண்மினுர்கள். அப்பொழுது அவர்கள், எகிப்தின் மாகாணுதிபதிக்கு வரையப்பட்டு, கலீபாவின் முத்திரையும் வைக்கப்பட்டிருந்த ஒரு கடிதத்தை யெடுத்துக் காண்பித்தார்கள்; அதில், இந்தக் கலககோஷ்டியார் எகிப்துக்கு வந்து சேர்ந்தவுடனே இவர்க ளெல்லாரும் கொல்லப்பட்டு விடுதல் வேண்டும்; அல்லது வேறு விதத்தில் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்று வரையப்பட்டிருந்தது; மேலும் அந்த மாகாணுதிபதி உத்தியோகத்தைவிட்டு நீக்கப்பட்டிருப்பதாய் அனுப்பப்பட்ட உத்தரவும் ரத்து செய்யப்பட்டு விட்டதாய் அதில் பொறிக்கப்பட்டிருந்தது. தாங்கள் எகிப்துக்குச் சென்றுகொண் டிருந்த மார்க்கத்தில் கலீபாவின் சொந்த வேலையாள் எடுத்துச் சென்றபொழுது இக் கடிதத்தைத் தாங்கள் கைவரப் பெற்றதாய்க் கூறினர். அக்கணமே அலீரலி அவர்கள் எல்லாச் சூதையும் ஊகித் துணர்ந்துகொண்டு விட்டார்கள். எனவே, அவர்கள் அந்தக் கிளர்ச்சிக்காரரிடம் வினுவொன்றை விடுத்தார்கள்: வேலையாள் அந்தக் கடிதத்தை எகிப்துக்கு எடுத்துச் சென்றபோது அந்த எகிப்து தேச

**மீட்டும் கலகக்காரர் மதீனுத் திரும்புதல்**

வாசிகள் அதனைப் பற்றிக்கொண்டு மதீனா திரும்பியது மெய்யேயாயின், பஸரா வாசிகளும், கூபா வாசிகளும் ஏன், எவ்வாறு முன்னவருடன் சேர்ந்து ஏக காலத்தில் மதீனாவுக்கு வந்து சேர்ந்தார்கள் என்று வினா விடுத்தார்கள். மதீனாவை விட்டு எகிப்துக்குச் செல்லும் மார்க்கம், பஸராவுக்குச் செல்லும் வழி, கூபாவுக்குச் செல்லும் ரஸ்தா ஆகிய மூன்றும் மூன்று திசைகள் வழியே செல்லுகின்றன. ஆகவே, எகிப்தியர் கடிதத்துடன் திரும்பியது சரியென்று வைத்துக் கொள்வோமாயின், மற்றிரு மாகாண வாசிகளும் எவ்வாறு அதேசமயத்தில் மதீனாவுக்குத் திரும்பியிருத்தல் சாலும்? எகிப்தியர் கடிதத்தைக் கைப்பற்றியதாய்க் கூறியவிடம் மதீனாவிலிருந்து நெடுந்தூரத்திலிருக்கிறது. அது சமயம் மற்றிரு மாகாண வாசிகளும் அவ்வளவு தூரமே மதீனாவை விட்டுத் தத்தம் ரஸ்தாவில் சென்றிருத்தல் வேண்டும்; எனவே, எகிப்தியர் தங்கள் கைவயம் அக்கடிதம் கிடைத்து மதீனாவுக்குத் திரும்பியக்கால், மற்றிரு மாகாண வாசிகட்கும் செய்தி யனுப்பி அவர்களையும் அதே சமயத்தில் மதீனா வந்து சேருமாறு எப்படிச் செய்திருப்பது முடியும்? இதிலேதான் எல்லா இரகசியங்களும் பொதிந்து கிடக்கின்றன.

அந்தக் கலககோஷ்டியார் செய்த சூழ்ச்சி இதுவாகும்: அவர்கள் முதன்முறை வந்தபொழுது, மதீனா நகருள் தாங்கள் நுழையத் துணிந்தால் அவ்வூர் வாசிகளெல்லாம் ஒருமிக்கத் திரண்டு வந்து தங்களை எதிர்த்துத் துரத்துவரெனத் தெரிந்துகொண்டு, அவ்வாறு செய்ய

**கலகக்காரரின் சூழ்ச்சி**

இசையாது வாளா திரும்பி விட்டனர்; மதீனு வாசிகளை ஏமாற்றி அஜாக்கிரதையுள் ஆழ்த்தும் பொருட்டே, அவர்கள் எகிப்தின் கவர்னர் மாற்றப் பட்டதொன்றே போதுமெனத் திருப்தியடைந்து விட்டவரேபோல் நடித்துக் கிளம்பிவிட்டனர். பின்னர் வேருெரு காரணங்கொண்டு திடுமென மதீனு வந்து அந்நகரைக் கைப்பற்றிக் கொள்ளலாமென்னும் தீய வெண்ணத்துடனே அந் நகரவாசிகளை அஜாக்கிரதையுள் ஆழ்த்திவைக்க நாடியே அவர்கள் அவ்வாறு பாசாங்குசெய்து சென்ருர்கள். அந்த வேருெரு காரணந்தான் மேற்கூறப்பட்ட போர்ஜரி லிகிதமாய்க் கொண்டுவரப்பட்டது. அந்தக் கடிதம் உண்மையிலே எகிப்து செல்லும் மார்க்கத்தில் வழிமறித்துப் பறிக்கப்பட்டிருந்தால், அந்த எகிப்து வாசிகள் மட்டுமேயே மதீனுவுக்குத் திரும்பியிருத்தல் வேண்டும். ஆனல், அவ்வாறின்றிக் கூபா வாசிகளும், பஸரா வாசிகளும் அதேகாலத்தில் மதீனுவந்து சேர்ந்ததிலிருந்தே அந்தத் திருமுகக் கதை ஒரு முன்னேற்பாடாய்ச் செய்யப்பட்டிருந்த கட்டுக்கதை யென்று மிகச் செவ்விதாய் நாம் அறிந்து கொள்ளுகிருேம். அந்த மூன்று மாகாண வாசிகளும் வெவ்வேறு திசையைநோக்கிப் புறப்பட்டு விட்டார்கள். ஆகவே, எகிப்தியர் பஸரா வாசிகளுக்கும் கூபா வாசிகளுக்கும் செய்தியறிவிக்க விரும்பியிருந்தால், அன்னுர் மதீனுவின் வழியாகத்தான் அவ்வாறு அனுப்பியிருக்க வேண்டும்; வேறு மார்க்கமில்லை. ஆனல், எகிப்து வாசிகள் மதீனுவந்து சேருமுன்பே மற்றிரு நாட்டினரும் தத்தம் சொந்த இல்லம் சென்று சேர்ந்திருப்பார்கள். எனவே, முன்னரே

கலகக் கோஷ்டியார் அப்பபடிப்பட்ட வேலைக்காரன் எவனையும் ஆங்குக் கொண்டுவந்து நிறுத்தத் துணிந்தனரில்லை. ஆயின், வேறொருவிதமாகவும் ஒருசிலர் விவாதிக்கத் தலைபடுகின்றனர்: ஒருகால் கலீபாவுக்குத் தெரியாமலே இன்னாரின்காரியாதிகாரியும் முதன்மந்திரியுமாயிருந்த மர்வான் இப்னு ஹகம் என்பாரே அக்கடிதத்தை வரைந்து, அதில் கலீபாவின் முத்திரையையும் போட்டிருக்கலாமென்று அவ்விவாதம் கூறப்படுகின்றது. இதனை ருஜூ செய்தற்கும் அந்த வேலைக்காரன் வெளிவந்துதானே சாக்ஷியம் கூறியிருக்க வேண்டும்? அவன் கலீபாவின் முன்வந்து சாக்ஷியம் கூறியிருந்தால், எல்லா உண்மையும் பட்டப்பகல்போலே திட்டமாய் வெளிவந்திருக்கும். ஆனால், அப்படியொருவனும் சாக்ஷியம்கூற வெளிவரக் காணோம். அந்த நிருபத்தைச் சுமந்துசென்றவனென்று கூறப்படும் அபிஸீனிய (ஹபஷீ) வேலைக்காரன் ஒருவனும் சாக்ஷியங்கூறக் கொண்டுவந்து விசாரணைக்கு ஆஜிர் செய்யப்படாமையால், அந்தக் கடிதம் மெய்யென்பதும், அதில் போடப்பட்டிருந்த முத்திரை உண்மையான முத்திரையென்பதும், கலீபாவின் சொந்த வேலைக்காரனிடத்திருந்தே அக்கடிதம் இடைவழியில் பறிக்கப்பட்டதென்பதும் முழுப் பொய்யான புரட்டுக்களாகவே காணப்படாநின்றன. அந்த நிருபசம்பந்தமாய் எமக்குக் கிடைத்திருக்கும் ஏனைச் சாக்ஷியங்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து துருவிப் பார்க்குமளவில், அக்கலகக்காரர்கள் கூறியவனைத்தும் நம்பிக்கைக் குரியனவாய்க் காணப்படவில்லை யென்னும் தீர்க்கமான முடிபிற்கு வரவே நாம் கட்டுப்பட்டுள்ளோம். எல்லாம் வெறும்

போர்ஜரியே; எல்லாம் வெறும் பொய்யே. அந்த மூன்று மாகாண வாசிகளும் திடும்பிரவேசமாய்த் திரும்பிவந்து மதீனுவைக் கைப்பற்றிக் கொள்ளுதற் கென்று தமக்குள்ளே செய்துகொண்ட ஒரு பெரும் சூழ்ச்சியாகும் அது. ஹஜ்ரத் அலீரலி அவர்கள் அன்னுரை யெதிர்த்து, அந்தக் கடிதம் கிடைத்தது எகிப்துக்குச் செல்லும் இடைவழியிலென்ருல், எவ்வாறு அந்த எகிப்து வாசிகளுடனே பஸராவாசிகளும் கூபா வாசிகளும் சமகாலத்தில் வந்து மதீனுவை எட்டியிருக்க முடியுமென்ற குறுக்குக் கேள்வியைக் கேட்டதற்கு அவர்கள் வேறுசமாதானம் கூறமுடியாதுபோய், "கலீபாவின் முத்திரை இக்கடிதத்தில் காணப்படுகிறது; இஃதொன்றே எங்களுக்குப் போதும்," என்று மட்டுமே கூறிவிட்டார்கள். உடனே அலீரலி அவர்கள் அந்தக் கலகக்காரத் தலைவர்களை இந்த கலீபாவின் சன்னிதானத்துக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள்.

இந்த மரியாதைக்குரிய வயதுமுதிர்ந்த கலீபாவின் திருமுன்பினில் அந்தக் கலக கோஷ்டியினர் சிறிதும் மரியாதையில்லாது தாறுமாருய் நடந்துகொண்டார்கள். அந்தக் கடித விஷயம் தங்களால் வரைந்தனுப்பப்பட வில்லையென்றும், தங்களுக்கு அது விஷயமாய் ஒன்றுமே தெரியாதென்றும் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் சத்தியம்செய்து சொன்னுர்கள். ஆனுல், கலகக்காரர் அதிலுள்ள அரசாங்க முத்திரையைக் காண்பித்தார்கள்; ஆனுல், அவ்விஷயம் தங்களுக்குத் தெரியாதென்றும், அந்த முத்திரை வேறெவராலும் செய்யப்பட்டிருக்கலாமென்றும் கூறினுர்கள். இதற்கு

கலீபாவிடம் மரியாதையின்றி நடப்பது

வேறு சாக்ஷியம் இல்லாதிருந்தாலும், ஹஜ்ரத் உது மான்ரலி போன்ற சத்தியசந்தர் சத்தியஞ்செய்தே மறுத்து விட்டபின்னர் இப்பெரியார்மீது சந்தேகங் கொள்வது தர்மமாகாது; ஆகவே, இன்னுருக்கு அக் கடித விஷயமேனும் முத்திரைவிஷயமேனும் தெரியா தென்று தான் தீர்ப்புக்கூறுதல் வேண்டும். ஆனல், அக் கலக கோஷ்டியார் அவ்வாறு செய்யாது கலீபாவிடம் மரியாதையின்றி, முரட்டுத்தனமாய் நடக்கத் துணிந்து விட்டர். "இக்கடிதம் நும்மால் எழுதப்பட்டிருக்கட் டும்; அல்லது வெறெவரேனும் இதனை எழுதியிருக்கட் டும். எவ்வாறிருப்பினும் நீர் கலீபாவாயிருக்க அரு கதை பெற்றில்லை; ஆதலால், நீர் இப்பதவியைவிட்டு நீங்கிக்கொள்ள வேண்டும்," என்று அவர்கள் மிரட்டி ஞர்கள். இதற்கு இம்மூன்ருவது கலீபாவானவர், "யான் என் கலீபாப்பதவியை விட்டு நீங்கமாட்டேன். ஆண்டவனல் எனக்களிக்கப்பட்ட இப்பட்டத்தை யான் எவ்வாறு துறக்கமுடியும்? யான் இழைத்த குற் றம் இன்னதென்று கூறுங்கள்; அதை யான் திருத்திக் கொள்வேன்," என்று அழுத்தமாய்க்கூறி மறுத்துவிட் டார்கள். அப்பால் அவர்கள், "நீர் திருத்திக்கொள்ள இனி அவகாச மில்லை. இப்பொழுது நீர் செய்யக் கூடிய காரியம் இரண்டேதா முண்டு: நீர் மரியாதை யுடன் பட்டத்தைத் துறந்துவிடுதல் வேண்டும்; இன் றேல் இவ்வாளாயுதத்தைக் கொண்டு உம்மைத் துறக்க வாவது இறக்கவாவது செய்வோம்," என்று பய முறுத்திஞர்கள். இவ்வாறு அவர்கள் பயமுறுத் தாட்டியதுகண்டு, இந்த வயது முதிர்ந்த கலீபா அவர் கள் தங்களுக்குரிய வழக்கமான சாந்தத்துடனே மரி

யாதையாய், "இறப்பதென்பது குறித்து எனக்குச் சிறிதும் அச்சமில்லை; அதுதான் இவ்வுலகில் மிகவும் இலேசா யிருந்துவருகிறது. யுத்தம் புரிவதென்றாலோ, எனக்கதில் விருப்பமிருக்குமாயின், இன்றே என்சார் பில் சண்டையிட ஆயிரக்கணக்கான வீரர்கள் முனைந் தெழுந்து விடுவார்கள். ஆனால், ஒரு முஸ்லிமின் ஒரு சொட்டிரத்தத்தைப் போக்குதற்கு யான் காரண பூதனாயிருக்க என்மனம் சற்றும் இடந்தரவில்லை," என்று பதின்மொழி கூறினார்கள். நான்கு பெரிய ராஜ்யங்களின் ஏகசக்ராதிபதியாய் விளங்கிவந்த, வயது தளர்ந்து மெய்காப்பாளரு மில்லாது தனித்துநின்ற கலீபாவின் சன்னிதானத்திலே அந்தக் கலகக்காரர் சிறிதும் மரியாதையில்லாது முரட்டுத்தனமாய் நடந்து கொண்ட முதற்காட்சி இவ்வாறு அன்று முடிவுற்றது. அப்பால் அவர்கள் எழுந்து தங்கள் நேத்திரங்களில் ஒருவிதப் பயங்கரப் பார்வையுடனே வெளியில் சென்றுவிட்டார்கள்.

மதீனாநகர்முழுவதும் அக்கலகக்காரர் கைவயம் சிக்கிக்கிடந்தது; ஆனாலும், கலீபாவும் நபிபெருமானுடைய ஏனைத்தோழர்களும் மஸ்ஜிதுக்குச் சென்று ஆண்டவனைத் தொழுதுவர அனுமதி யளிக்கப்பட்டே வந்தார்கள். அப்பொழு தொருமுறை கலீபாவானவர் மஸ்ஜிதில் எழுந்து நின்று சில வசனங்களைப் பேச முற்பட்டார்கள்; இதற்கந்த எதிரிகள் இடங்கொடாது தடுத்து நிறுத்திவிட்டார்கள். அவர்கள் கலீபாவின் மூஞ்சியில் மண்ணைவாரி யிறைத்தார்கள்; அதனைத் தடுக்க முன்

**கலீபா மரியாதைக் குறைவுடன் நடாத்தப்பட்டு, தமது இல்லத்துள்ளே சிறைப் படுத்தப்படுதல்**

வந்தவர்களை அப்பால் இடித்துத்தள்ளி விட்டார்கள். கலீபா தமது வாய்திறந்து பொதுமக்களுக்கு ஒரு வார்த்தையும் சொல்லக்கூடா தென்பதே அக்கலகக் காரரின் பிடிவாதமாயிருந்தது. என்னெனின், அந்த "போர்ஜரி கடிதத்"தின் விவரத்தை கலீபா அவர்கள் பொதுமக்களுக்கு விளக்கிக் காண்பித்து, தங்களுக்கு விரோதமாய்ச் செய்யப்பட்டுள்ள சூழ்ச்சியையும் வெளிப்படுத்தி விடுவார்களாயின், அப்பால் தங்களை ஆதரித்துநின்ற ஏமாளிகளுள்பலர் தங்களைக் கைவிட்டு விடுவரென்று அந்தக் கலககோஷ்டியின் தலைவர் அஞ்சினர். அப்பால் வெள்ளிக்கிழமையும், ஜுமுஆத் தொழுகையும் வந்து கிட்டின. அன்று கலீபா அவர்கள் மிம்பர்மீது ஏறிநின்று, ஜுமுஆகுத்பாப் பிரசங்கத்தைச் செய்யத் துவக்கினார்கள்; அப்பொழுது இப் பெரியார், நபிகள் திலகத்தின் தீர்க்கதரிசனம் ஒன்றை எடுத்துக்கூறி, அவர்களது சாபம் சதியாலோசனைக் காரர்மீது இறங்குமென்றும், ஆதலின் அன்னார் கழிவிரக்கந் தெரிவித்துப் பாபமன்னிப்புந் தேடிக்கொள்வது சாலச் சிறந்ததாகுமென்றும் நல்லுபதேசம் புரிந்தார்கள். கலீபா அவர்கள் கூறிய நபிபெருமானது தீர்க்கதரிசனம் யாதெனின், மதீனாவுக்கு வெளியில், சிலவிடங்களைச் சுட்டிக்காட்டி, அவ்விடங்களில் கூடாரமடித் திறங்குகிறவர்கள்மீது அல்லாஹ்வின் முனிவுண்டாகும் என்பதுதா னாகும். அந்தக் கலகக் காரர்களெல்லாம் முன்னொருமுறை மதீனாவைக் கைப்பற்றப் பிரயத்தனப்பட்டு விருதாவாய்த் திரும்பினார்களல்லவா? அப்பொழுது அவர்கள் மேற்கூறிய இடங்களிலேயே பாடிவீடு அடித்திருந்தார்கள். எனவே,

கலீபாவானவர் மீக்கூறிய தீர்க்கதரிசன வசனங்களைச் சொன்னவுடனே கலககோஷ்டியினர் மஸ்ஜிதிலேயே தங்களது கலகத்தைத் துவக்கிக்கொண்டனர். ஜைத் பின் தாபித், முஹம்மத் பின் முஸ்லிம் போன்ற பெயர் போன ஸஹாபாக்கள் எழுந்துநின்று கலீபா அவர்கள் கூறிய மேற்கோள் உண்மையிலே நபிகளுயகரின் திரு வாக்குத்தா னென்றுகூறி, ஆதரிக்க முன்வந்தார்கள். அப்பொழுது கலககோஷ்டியின் தலைவர்கள் அவர்களைப் பிடித்தழுத்திக் குந்தவைத்து விட்டார்கள்.

அப்பால் கலீபாவின்மீதும், மற்றுமுள்ள ஸஹாபாக்கள்மீதும், மதீனுவாசிகள்மீதும் கல்லையும் கட்டியையும் வாரியிறைக்கத் தலைப்பட்டனர் அந்தச் சதியாலோசனைக்காரர். அவர்களுள் ஒருவன் கலீபாவின்கரத்திலிருந்த அஸாவை (இமாமின் தண்டத்தை)ப் பிடுங்கி ஒடித்தெறிந்துவிட்டான். பின்னர்க் கல்மேல் கல்லாய் அன்னூர் கலீபாவின்மீது விடாது வருஷிக்கத் தொடங்கிவிட்டனர். அவற்ருல் விளைந்த வருத்தம் தாளாது வயது முதிர்ந்திருந்த கலீபாவானவர் சோர்ந்து கீழே சாய்ந்துவிட்டார்கள்; ஸ்மரணையும் அற்றுப்போய் விட்டது. உடனே இப்பெரியார் இல்லத்துக்குச் சுமந்துசெல்லப்பட்டார்; அங்கிருந்து அப்பால் இவர் மஸ்ஜிதுக்குவர அனுமதியளிக்கப்படாது, விடுதியினுள்ளேயே வைத்து முற்றுகையிடப்பட்டு விட்டார்கள். எதிரிகள் இவ்வாறு செய்துவிட்ட காரியத்தைக்கண்டு மதீனுமுழுதும் பரபரப்பு ஏற்பட்டு விட்டது; கலீபாவின்மாட்டு அபிமானமும் அதிகம் ஏற்பட்டுவிட்டது. இன்னூர் விடுதிக்குள்ளே எதிரிகள்

**கலகக்காரர்களின் கொடுமைகள்**

எவரும் மீறி நுழைந்துவிடாது தலைவாயிலில் சிலகாவற்காரர் நிறுத்திவைக்கப்பட்டனர். அலீரலி தல்ஹாரலி ஜுபைர்ரலி ஆகியோர் தங்கள் குமாரர்களை ஆயுதபாணிகளாய்ச் செய்து அங்கே நிறுத்திவைத்தனர்; அந்த யுவர்கள் தங்கள் உதிரத்தைச் சிந்தியேனும் கலீபாவைத் தற்காக்க வேண்டுமென்று ஆணையிடப் பெற்றிருந்தனர்கள். இவ்வாறு மதீனாவாசிகள் வலியவந்து கலீபாவின் இல்லத்தைப் பாதுகாப்பதைக் கண்டு முற்றுகையிட்டிருந்தவர்கள் ஒருசிறிது தயங்கினார்கள்; அன்னார் தங்கள் உத்வேகத்தில் சிறிது தளர்ச்சியுற்று, உடனே இரத்தப்பழியில் இறங்காது அப்பால் ஒதுங்கி நின்றனர். ஆனால், தங்கள் முற்றுகையைமட்டும் ஒருசிறிதும் தளர்த்திவிட்டனரில்லை; ஆதலினால், குடிப்பதற்கு ஒருசொட்டுத் தண்ணீரும் உள்ளே போக விடாது மிகக்கடுமையாய்த் தடுத்துவிட்டனர். அந்தக் கலககோஷ்டியார் அவ்வாறு செய்வது பாபமென்றும், ஒரு சாதாரண முஸ்லிமையும் அவ்வாறு நடத்துவது கூடாதென்றும் ஹஜ்ரத் அலீரலி அவர்கள் வலியுறுத்திக் கூறினார்கள். எத்துணை மட்டும் எடுத்துச் சொல்லியும், அவ் வெதிரிகள் சற்றும் ஏற்கவில்லை. இறுதியிலே நபி பெருமான் பாரியாள் உம்மு ஹபீபா என்னும் பிராட்டியார் தாமே ஒரு கோவேறு கழுதைமீதேறி, கலீபாவின் விடுதிக்குள்ளே தண்ணீர் கொண்டுசெல்லப் பிரயத்தனப்பட்டனர்; அது சிறிதும் பலிக்கவில்லை. கலககோஷ்டியார் அம் மாதுசிரோமணிக்குச் சிறிதும் மரியாதை காட்டாது, அன்னாரைப் புடைத்தும் துன்புறுத்தினர். சிரமத்துடன் தரையில் வீழாது அவர் தப்பிப்பிழைத்தது தம்பிரான் புண்ணியமாய்விட்டது.

மதீனாவின்கண் அலீரலி தல்ஹாரலி ஜுபைர்ரலி போன்ற பிரமுகர்கள் இருந்துவந்தும், ஏன் மதீனா வாசிகள் எதிரிகளைத் துரத்தியடிக்காது வாளா இருந்து வந்தன ரென்னும் வினாவொன்று இவண் எழுகின்றது. அவர்களெல்லாம் சும்மா இருந்துகொண்டு, ஏன் எதிரிகட்கு அவர்க ளிஷ்டம்போல் நடக்க இடங்கொடுத்து வந்தார்கள்? கலீபா வீட்டைச்சுற்றிப் போடப்பட்டிருந்த முற்றுகையை விடுவித்து, கலீபாவைக் காப்பாற்ற அவர்கள் ஏன் முன்வரவில்லை? அன்னார் தங்கள் உயிரைக்கொடுத்தேனும் கலீபாவின் உயிரைக் காப்பாற்றியிருக்க வேண்டாமா? இவ்விஷயம் அனேக சரித்திராசிரியர்களையும் ஒரு சிறிது ஐயத்துள்ளே ஆழ்த்தி வைக்காது போய்விடவில்லை; என்னெனின், அவர்கள் மேற்கூறிய வினாக்களுக்குத் தக்கவிடை கிடைக்காது தவறான முடிபிற்கே வந்திருக்கின்றனர். ஹஜ்ரத் அலீ, தல்ஹா, ஜுபைர் ஆகிய மூவரும் கலக கோஷ்டியினருக்கு உடந்தையா யிருக்கவில்லை; அன்னாருக்கு உதவியும் புரிந்தனரில்லை. ஆனால், அம் மூவரும் உள்ளுக்குள்ளே பெருமகிழ்வுடனேயே இம்மூன்றுவது கலீபாவுக்கு நேரிட்டுவிட்ட இக்கட்டைப் பார்த்துக் கொண்டு வாளா இருந்தார்கள் என்னும் விபரீத முடிபிற்கே அந்தச் சரித்திராசிரியர்கள் வந்திருக்கிறார்கள். அஃதாவது, அவர்களுக்கும் கலீபாவின்மீது அதிருப்தியே ஏற்பட்டிருந்தது; ஆதலினால்தான் அவர்கள் தங்களுடைய சிறு சுண்டுவிரலையும் கிளப்பாது, கலீபாவுக்கு உயிர்க்கிறுதி வந்துற்றபோதும், அன்னாரின்

மதீனா முஸ்லிம்கள் சகோதர முஸ்லிம்களின் உதிரத்தைச்சிந்த ஒருப்படவில்லை

ஆபத்துக்கு உதவி புரியாமல் வாளா ஒதுங்கி நின்று விட்டார்கள் ; எல்லாம் சுயமே நடைபெறட்டுமென்று தூரத்தில்நின்று வேடிக்கைபார்த்தார்கள். இவ்வாறு கூறத் துணிவது அறியாமையென்றே கொள்ளப்படும். என்னெனின், அது பொழுது மதீனநகர் முழுவதும் எதிரிகள் கைவயமே சிக்கிக்கிடந்தது. ஆகவே, உள்ளூர்வாசிகள் ஒன்றும் செய்துகொள்ள முடியாது போய் விட்டமையால், கலககோஷ்டியினரே தம் மனம் போன போக்கிலே அம் முற்றுகையை நடாத்தி வந்தனர்.

**கலீபாவுக்குக் காவலர்கள்**

ஆனல், இன்னமொரு விதத்தில் அம்மதீனவாசிகள் தங்கள்காரியத்தைச் சாதித்திருக்கலா மென்று குணதோஷவாதிகள் கூறக்கூடும்: அவர்களால் கலீபாவைக் காப்பாற்றிவிட முடியாது போயினும், எதிரிகளுடன் சண்டை செய்து கண்ணிய முறையிலே உயிர் துறந்து வீரசுவர்க்கம் புக்கிருத்தல் வேண்டும். அம்மூவரும் அதுபொழுது செய்யவேண்டிய கடமையும் கண்ணியமும் அதுவாகத்தான் இருந்ததெனல்வேண்டும். எனினும், இவ்விடத்தில் மற்ெருரு விஷயத்தை நாம் மறந்துவிடுவது கூடாது: மதீனவாசிகள் தங்களுயிரைக் கொடுத்து நம் கலீபாவைக் காப்பாற்றத் துணிந்து நின்றது மெய்யே யாகும். இதனல்தான் கலீபாவின் வீட்டுவாயிலிலும் தற்காப்புப் படையொன்று நிறுத்தப்பட்டிருந்தது ; அப்படையில் அலீரலி தல்ஹாரலி ஜுபைர்ரலி ஆகிய மூவரின் குமாரர்களும் சேர்க்கப் பட்டிருந்தனர். அப் படையினரெல்லாம் கலீபாவினிமித்தம் தங்களுயிரை விடச் சித்தமாகவே காத்துக்

கொண் டிருந்தனர். ஆனால், இஸ்லாத்தின் சட்டப் பிரகாரம் அன்னார் முதலில் தங்கள் வாளை உருவுவது கூடாது; தற்காப்பி னிமித்தமே அவர்கள் தங்கள் உடைவாளை உருவலாம். ஆனால், எதிரிகள் இன்னம் தங்கள் கட்கத்தை உறையைவிட்டு உருவ வில்லை. எனவே, தற்காப்புப்படையினர் என்செய்தல் சாலும்? அதுவேயுமன்றி, கலீபா அவர்களும் முஸ்லிம்களின் உதிரத்தைச் சிந்த ஒருப்பாட்டார்க ளில்லை. இன்னார் தமது உத்தியோக முறையில் மதீனாவாசிகளுக்கு உத்தரவிட்டு, எதிரிகள்மீது எவரும் வாளையோச்சக் கூடாதென்று தடையுத்தரவு பிறப்பித்துவிட்டார்கள். அவ்வேளை மிகவும் நெருக்கடியான நேரமாகவே காணப்பட்டு வந்தது; ஆனாலும், கலீபாவின் கட்டளையை எவரும் உல்லங்கனம்செய்வது கூடாது. பொதுமக்கள் கலீபாவின் ஆணையை மீறுவதென்பது முடியாது; என்னெனின், எந்த முஸ்லிமும் எதிரி களுக்கு விரோதமாய் வலிய வாளையுருவக் கூடாதென் பது அன்னாரின் கடுமையான கட்டளையா யிருந்து வந்தது. அப்பால் மதீனாவாசிகள் என்செய்யக்கூடும்? கலீபாவின் கட்டளை ஒருபக்கலிருக்க, மற்றொரு பக்கல் குர்ஆன்ஷரீபின் கட்டளை இன்னதென்பதும் அன் னாருக்கு நன்கு தெரியும்: அஃதாவது, இஸ்லாத்தின் பரம விரோதிகள்மீதும் முஸ்லிம்கள் முதலில் வலிய வாளையுருவக்கூடா தென்பது அந்த வேதக்கட்டளை யாகும். விஷயம் அவ்வாறிருக்க, சகோதர முஸ்லிம் கள்மீதே அம்மதீனாவாசிகள் எவ்வாறு முதலில் தங்கள் வாளை வலிய உருவத்துணிவர்? அதுதான் சாலாது.

எதிரிகள் முதலில் வாளையுருவினால், தற்காப்பி

னிமித்தம் மதீனுமுஸ்லிம்கள் தங்கள் வாளை எதிர்த்து உருவுவார்கள்; அதைத்தான் அன்னுர் உண்மையிலே எதிர்பார்த்து நின்றனர். அப்பொழுது கலீபாவைத் தற்காக்க அவர்கள் தங்களுயிரைத் தியாகம் பண்ணி யிருப்பர். மதீனுவாசிகள், எதிரிகள் முதலில் வாளை யோச்சட்டுமென்று காத்திருந்தனர்; ஆனல், அந்தக் கலககோஷ்டியாரும், குர்ஆன் ஷரீபிலுள்ள மீக்கூறிய கட்டளையை உல்லங்கனம்செய்ய முடியாமலே சிறிது பொழுது சும்மா இருந்து பார்த்தனர். எனினும், அவர்களுள் ஒரு சிலர் எத்தகைய வேதக்கட்டளையை யும் மீறிநடக்கத் துணிந்துநிற்பர்; அன்றியும், அக் கலககோஷ்டியின் பெரும்பான்மையான மக்களும், அவர்களுடைய தலைவர்களும் சாமர்த்தியம் வாய்ந்த துர்ப்பிரசாரகரின் வலையிற்பட்டவரா யிருந்துவந்தமை யால், அவர்களும், அத் துர்ப்பிரசாரகர்களும் குர்ஆன் ஷரீபின் மீக்கூறிய கட்டளையை அதிகதூரம் மதித் திருக்காமலும் போயிருக்கலாம். ஆனலும், அவர் களெல்லாம் சிறிதுகாலம்வரை தங்கள் மனச்சாக்ஷி யைச் சுட்ட அந்த வேதவாக்கியத்திற்கு அஞ்சி நடப்ப வரேபோல் காணப்பட்டனர். எனவே, அவ்வெதிரிகள் வெளிவேஷத்திற் காகவேனும் அவ் வேதக்கட்டளைக்கு மரியாதை செய்பவரேபோல் அபிநயம்செய்ய வேண் டியவரா யிருந்தனர்கள். ஆதலினல்தான், அவர்களும் முதன்முதலாய் வாளையுருவச் சிறிது தயங்கிக் கொண் டிருந்தார்கள். எனவே, இருகக்ஷியாரும் ஒருவரை யொருவர் எதிர்பார்த்தவண்ணம் காத்திருந்தனர். முதலில் இரத்தப்பெருக்கை ஓட்டத்துணிந்தவ ரென் னும் அபவாதத்தையும் அகிலசாபத்தையும் வாங்கிக்

கொள்ள ஒருவரும் துணியவில்லை. ஆதலினாலேயே, அந்தக் கலககோஷ்டியினர் வாளையுருவாது, பலவந்தம் செய்தும் பயமுறுத்தியுமே கலீபாவைப் பட்டத்தைத் துறந்துவிடச் செய்யப்பார்த்தனர். மதீனாவாசிகளும், குர்ஆன்ஷரீபின் கட்டளைக் கிணங்கியும், கலீபாவின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்தும் வாளா இருந்துவந்தனர். மேலும் அவ்வெதிரிகள் வேதக் கட்டளையின் எல்லையைக்கடந்து கலீபாவின் உதிரத்தைச் சிந்தத் துணிந்துவிடுவார்களென்று எண்ண அம் மதீனாவாசிகள் சிறிதும் துணிவுகொள்ள வில்லை.

கலீபாவின் விடுதியைச்சுற்றி எதிரிகள் முற்றுகை போட்ட விஷயம் அவ்வா றிருந்துவருங்கால், மக்காவுக்கு முஸ்லிம்கள் ஹஜ்ஜு செய்யப் புறப்படுங்காலம் சமீபித்து வந்தது. மிகக்கடுமையான முற்றுகைக்குள் ளாக்கப்பட்டிருந்தும், கலீபாமட்டும் அஃதொன்றையும் கவனியாது தமது கடமையை மறக்காமலே

**வருடாந்த ஹஜ்ஜு யாத்திரை**

தான் காரியாதிகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். தங்கள் இல்லத்தினுச்சியில் நின்றபடியே இப்பெரியார் ஜனங்களுக்கு வேண்டிய கட்டளைகளை விடுத்துவந்தார்கள்; ஹஜ்ஜுக்குச் செல்லவேண்டிய மக்களுக்கெல்லாம் இப்னு அப்பாஸ்ரலி அவர்களைத் தலைவராக்கி, அவர்களை மக்காவுக்குத் துரிதமாய்ப் புறப்பட்டுச் செல்லுமாறு ஏற்பாடுசெய்து வைத்தார்கள். ஆனால், இப்னு அப்பாஸ் கலீபாவின் விடுதியைக் காப்பாற்றிவந்த தற்காப்பு வீரருள் ஒருவரா யிருந்துவந்தமையால், அவர் மதீனாவைவிட்டு மக்காவுக்குச் செல்ல இணங்கினா ரில்லை. எனினும், கலீபாவின்

கட்டளையை உல்லங்கனம் செய்யக்கூடா தென்னும் கடமையும் தலைக்குமேலே தொங்கிக்கொண் டிருந்தது. ஆதலின், அன்னூர் புறப்பட வேண்டியவ ராயினர்; அவ்வண்ணமே ஆயிஷா பிராட்டியார்ரலி—நபிபெருமான் இளைய மனைவி—முதலிய பலரும் ஹஜ்ஜுக்குப் புறப்பட்டார்கள். ஆயிஷாரலி தங்களுக்குத் துணையாய் வரும்பொருட்டுத் தம்முடைய சகோதரர் முஹம்மத் பின் அபூபக்ரை அழைத்தார்கள். ஆனால், அவர் மதீனவில் கலககோஷ்டித் தலைவர்களுள் ஒருவரா யிருந்து வந்தபடியால், அன்னூர் தம் சகோதரியுடன் யாத்திரை புறப்பட ஒருப்படவில்லை. அவ்வாறெல்லாம் மதீனவாசிகள் கவலையில்லாது மக்காவுக்கு ஹஜ்ஜுசெய்யப் புறப்பட்டதிலிருந்து, அந் நகரமக்கள், கலீபாவுக்கு உயிர்க்கிறுதி விளைக்கும் பான்மையில் உதிரஞ்சிந்த எதிரிகள் துணிந்துவிட மாட்டார்கள் என்றே எண்ணியிருந்தார்க ளென்பது திண்ணமாய்ப் புலப்படுகின்றதன்றே? அவ்வெதிரிகளெல்லாம் கலீபாவைப் பட்டத்தைத் துறந்துவிடுமாறு நிர்ப்பந்தம் செய்துவந்தார்கள். இதன் முழு விருத்தாந்தத்தையும் மதீனவிலிருந்து மக்காவுக்குச் சென்ற ஹஜ்ஜாஜிகள்வாயிலாய் கலீபாவானவர் அம்மக்கா வாசிகளுக்கும் ஏனை முஸ்லிம்களுக்கும் அறிவித்துவைத்தனர். தமது மனமாரத் தாமொன்றும் குற்றமிழைக்க வில்லையென்றும், எதிரிகள் வேண்டுமென்றே இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிப் பழிதூற்றிவருகிறூர்களென்றும், தமது கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டாமென்று பொது மக்களைத் தூண்டிவருகிறூர்க ளென்றும் செய்தி சொல்லி யனுப்பினர். இப்பெரியார், மாகாணதிபதி

களுக்கும் நிருபம் விடுத்து, எதிரிகளின்இம்சை எல்லை கடந்துவிட்ட தென்றும், அதனைத் தடுக்க ஏதேனும் தக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்றும் தெரிவித்து வைத்தார்கள். இதன்நோக்கம் யாதெனின், மாகாணங்களிலிருந்து துணைப்படைகள் வந்துசேரக் கூடுமாயின், அப்பால் அவற்றினைக்கண்டு கலககோஷ்டியினர் அச்சங்கொள்ளக் கூடுமன்றோ? ஆகவே, இரத்தஞ் சிந்தவேண்டிய ஆவசியகம் இல்லாது போய்விடக் கூடும் என்பதுதானாகும்.

ஆனால், கலககோஷ்டியார் காலஹரணம் செய்ய மனமில்லாமலே துடிதுடித்துக் கொண்டிருந்தனர். இன்னம் சிலதினம் கழிந்துவிட்டால், தங்களெண்ணம் சிதறுண்டு போமென்பது அன்னாருக்குத் தெரியாது போகவில்லை. என்னெனின், மக்காவில் ஹஜ்ஜுக்கென்று குழுமியுள்ள பெருந்திரளான மக்களுக்கு இம் முற்றுகைவிஷயம் எட்டிவிட்டால், அப்பால் அக்குழாத்தினர் மதீனாவுக்குத் திரண்டோடி வந்துவிடக்கூடுமன்றோ? அதுதான் அவ்வெதிரிகளுக்கெல்லாம் பேராபத்தாய் முடியும். மாகாணாதிபதிகளிடமிருந்து உதவிப்படைகளும் சீக்கிரம் மதீனாவுள் வந்து குவிந்துவிடும். எனவே, எதிரிகள் இனித் தாமதிப்பது விபரீதமாகவே போய் முடிவது திண்ணம். எனவே இதுதான் தக்க தருணம்; மதீனாவாசிகளும் அனேகமாய் மக்காவுக்கு ஹஜ்ஜுசெய்யப் போய்விட்டார்கள். எனவே, இதுதான் தங்கள் எண்ணத்தை முடித்துக் கொள்ள உரிய சந்தர்ப்பமாகும்; இறுதிக் காரியத்தை

**ஹி. 35, துல்ஹஜ் பிறை 18-இல் (கி. பி. 656, ஜூன், 17-இல்) கலீபா படுகொலை புரியப்படுதல்**

முடிக்க இனியொரு வினடியும் காலந் தாழ்த்துவது கூடாது. இப்பொழுதே துல்ஹஜ் மாதம் 18-ஆந் தேதி ஆய்விட்டது. இன்னம் சிலதினங்களில் எண்ணிறந்த ஹஜ்ஜாஜிகள் மதீனவுக்குள் வந்து குவிந்து விடுவர் என்பது திண்ணம். ஆதலால், அந்தக் கலக கோஷ்டியார் அக்கணமே கலீபாவின் விடுதிக்குள் புக்கு இப்பெரியாரை வேலை தீர்த்து விடுவதெனத் துணிவுகொண்டு விட்டனர். ஆனால், அவ்வீட்டு வாயிலில் காவல்புரிந்துவந்த மதீனவாசிகள் தங்கள் கடமையில் ஒருசிறிதும் வழுவாமலே யிருந்து வந்தனர். எனினும், அவர்களது எண்ணிக்கை மிகக்குறைவா யிருந்ததுடன், அவ்வீட்டுத் தலைவாயிலும் மிகமிகக் குறுகலா யிருந்துவந்தது. எனவே, எதிரிகளுக்கும், அவ் வாயில்காப்போருக்கும் இடையில் அடிதடிகளும், இடித்துத் தள்ளல்களும் சிறிது நிகழ்வுற்றவுடனே வாயில்காப்போர் அதிக சாமர்த்தியத்துடனே அவ் வில்லத்துள் நுழைந்து, தெருக் கதவைத் தாழக்கோலிட்டுப் பந்தோபஸ்த் செய்துகொண்டனர். எதிரிகள் சும்மா இராமல் அக் கதவைத் தாக்கி உடைக்கப் பார்த்தார்கள்; ஆனால், அந்தக் கதவு அழுத்தமா யிருந்துவந்தமையால், ஒருசிறிதும் அசையவில்லை. அப்பால் அவ்வெதிரிகள் வேறுயோசனையுள் இறங்கலாயினர்கள்: அந்த வாயில்காப்போர் கலீபா வீட்டு இடைகழியில் ('ரேழி'யில்) அவ்வாறு நின்றுகொண்டிருக்கும்பொழுதே அவர்கட்குத் தெரியாமலும் சந்தடி செய்யாமலும் அவ்விடுதிக்குள் சிலரை யனுப்பி, இரகசியமாயே கலிபாவை வேலைதீர்த்து விடுவதென்று தீர்மானம் செய்துவிட்டார்கள். எனவே, எதிரிகளில் ஒரு

சிலர் பக்கத்துவீட்டுள் நுழைந்து மேலேறி, அங்கிருந்து கலீபா வீட்டுக்குள்ளே பின்கட்டில் இறங்கிஞர்கள். அப்பொழுது கலீபா அவர்கள் தங் குடும்பத்தாருடனே குந்திக் குர்ஆன்ஷரீபை ஓதிக்கொண்டிருந்தார்கள். வயதுமுதிர்ந்து நரைத்துப் பழுத்துப்போயிருந்த தாடியுடைய இப்பெரியார் தம்மைச் சூழ்ந்துநின்ற தம்முடைய குடும்பத்தினருடன் தமக்கெதிரில் குர்ஆன்ஷரீபைத் திறந்துவைத்து ஓதிக்கொண்டிருந்தனர்; சாந்தியும் சமாதானமும் நிரம்பியிருந்த அந்த நேரத்தின் அமைதியானது அங்குவந்து தோன்றிய எதிரிகளேயும் சிறிது பின்னிடையுமாறு செய்துவிட்டது; அத்தகைய கல்நெஞ்சரும் அது சமயம் பிரமித்துப்போனதில் ஆச்சரியம் ஒன்றுமில்லே.

எத்தகைய குற்றமும் இழைத்திராத ஒரு நிரபராதப் பெரியாரைக் குடும்பத்தினருடன் குர்ஆன்ஷரீபை ஓதிக்கொண் டிருக்குங்கால் கொன்று வீழ்த்த எவனுக்குத்தான் மனந்துணியும்? ஆனுலும், கொலேபாதகர்களின் மனச்சாட்சி எத்துணேநேரம் அவ்வாறு பிரதிபலித்துக் காணப்படுதல் கூடும்? அப்பா லுடனே முஹம்மத் பின் அபூபக்ரென்பார் ஓடிவந்து கலீபாவின் நெடிய தாடியைப் பற்றினர். அப்பொழுது இம் மரியாதைக்குரிய பெரிய கலீபாவானவர் அவ்வாலிபரை நோக்கி, "எனது சோதரர் மைந்த! உன்தந்தை இப்பொழுது உயிருடனிருந்தால், அவருக்குத் தெரியும் இந்த நரைத்த தாடிக்கு எப்படிப்பட்ட மரியாதை காட்டவேண்டு மென்பது!" என்று கூறியது கேட்டு, அபூபக்ர்ரலி அவர்களுடைய குமாரர் ஒதுங்கிப் போய் விட்டார். பின்னர்க் கல்மனமுள்ள வேறு சிலர் ஓடி

வந்து தங்கள் வாளாயுதத்தால் கலீபாவைத் தாக்கினார்கள். அப்பொழுது அவர்களை விலக்கி, கலீபாவைக் காப்பாற்ற அவருடைய மனைவியர் குறுக்கிட்டுத் தடுத்தார். அதன்பயனாய் அன்னாரின் கைவிரல்களும் சேதிக்கப்பட்டுப் போய்விட்டன. அதுசமயம் அவ் வீட்டிலிருந்த வேலைக்காரர்கள் வந்து தடுத்துப் பார்த்தார்கள்; அவர்களுள்ளும் ஒருவன் கொல்லப்பட்டுப் போய்விட்டான்; மற்றவர்கள் எதிரிகளால் மிகைக்கப்பட்டுப் போய்விட்டார்கள். இறுதியாய், கலீபாவும் உதிரப்பெருக்குடனே உயிர்நீத்துக் கீழே சாய்ந்தார். அப்பொழுது இந்த மூன்றாவது கலீபாவுக்குப் பிராயம் 82. கலீபாவானவர் உயிர் துறந்து சாய்ந்த போது அவ்வீட்டு இடைகழியில் எவ்விதச் சமுசயமுமில்லாது காவல்காத்து நின்ற யுவர்கள் சந்தடிகேட்டு உள்ளே ஓடினார்கள்; ஆனால், அதற்கு முன்பே எல்லாக் காரியமும் முடிவடைந்து விட்டன. அப்பால் அந்தக் கலககோஷ்டியார் கலீபாவின் விடுதியைவிட்டுப் பொக்கசச் சாலைக்கு ஓடினார்கள்; ஆனால், அங்கொன்றும் அகப்படவில்லை. என்னெனின், திரவியசாலைக்கு வரும் எல்லா ஐசுவரியமும் அவ்வப்பொழுதே பொது ஜன நன்மைக்காய்ச் செலவழிக்கப்பட் டிருந்தது. அப்பாலேதான் மதீனாவிலிருந்த மக்களுக்கு விஷயம் விளக்கமாயிற்று. ஆனால், அவர்களால் ஒன்றும் செய்துகொள்ள முடியவில்லை; என்னெனின், அந்நகர் முழுவதும் அதுபோது எதிரிகள்வயம் சிக்கிக்கிடந்தது. எனவேதான் பிறகு மூன்றாவது நாள் அதிக சிரமத்துடனே கலீபாவின் மையித் (பிரேதம்) அடக்கம் செய்யப்பட வேண்டியதாயிற்று.

உதுமான்ரலி இஸ்லாத்தின் ஒற்றுமைக்காகத் தமதுயிரைத் தியாகம் பண்ணினர்

மேற்கூறியவா றெல்லாம் கலகக்காரர் கிளம்பிக் கிளர்ச்சியை வளர்த்து, இறுதியாய் மதீனவரை வந்து அந்நகரையுங் கைப்பற்றி, கலீபாவையும் சற்றும் இரக்க மில்லாது கொலை செய்யத் துணிந்து விட்டமைக் கெல்லாம் காரணம், இந்த மூன்ருவது கலீபாஅவர்களின் சொந்தப் பலஹீனந்தான் என்று ஒருசாரார் கூறிவருகின்றனர். ஆனல், இப்பெரியாரது ஆட்சியையும் ஆண்மையையும் ஆழ்ந்து பார்ப்பவர் அவ்வாறு குற்றஞ்சுமத்தத் துணியார். இம்மஹான் சுத்த சாதுவாகவே உயிர்வாழ்ந்துவந்தார்; அதனினும் சாந்தமாகவே உயிர்நீத்து உயர்ந்திருக்கின்ருர். மானிட இனத்துக்கே யுரிய குறைபாடுகளை விட்டு எவரும் நீங்கியிருப்பது வழக்கமில்லை; அம்முறையில் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களும் ஒரு மானிடப்பிறவியாகவே யிருந்துவந்தார்க ளென்பது மறக்கற்பால தன்று. நம்மெல்லாரிடத்தும் காணப்படுவதே போலத்தான் இம்மஹானிடத்தும் சிற்சில குற்றங் குறைகள் ஏற்பட்டிருத்தல் கூடும்; இக் காரணங்கொண்டு, இன்னுர் மீக் கூறப்பட்ட விஷயத்தில் பலஹீனம் அல்லது கோழைமனம் என்பதை வெளிக்காட்டினு ரென்பது சற்றும் பொருத்தமற்ற தாகவே காணப்படாநின்றது; இஸ்லாத்திற்காக அதிகம் பாடுபட்டு இறுதியில் கொலை பாதகர்களின் உருவிய வாளின் முன்னே சற்றும் மனத்துளக்கமின்றிப் பரம சாத்விகத்தனத்துடன் அஹிம்ஸாதர்ம முறையிலே உயிர்துறந்த ஒரு மஹானைத் தைரியமற்றவர், பயங்கொள்ளி, கோழை

என்றெல்லாம் குற்றஞ்சாட்டுவது ஒரு சிறிதும் நியாய மாகமாட்டாது. வயது முதிர்ந்திருந்தும், உதுமான்ரலி அவர்கள் தங்கள் கிலாபத் ஆட்சியின்போ தெல்லாம், ஏன்! இறுதிவேளையிலுங்கூட யுவர்களுக்குரிய சுறு சுறுப்பையும் தைரியத்தையுமே காட்டி வந்திருக் கிறார்கள்.

இப்பெரியார் பட்டத்துக்கு வந்தவுடனே, இஸ்லா மியராஜ்ஜியத்தின் எல்லா மாகாணங்களிலும் கலகங் களும் கிளர்ச்சிகளும் தலைகிளப்பத் துவக்கிவிட்டன.

**கலீபா உதுமான்ரலி ஒருவீரர், கோழையல்லர்**

பாரசீகத்தில் குழப்பமும் கிளர்ச்சியும்; சிரியாவின்மீதும் எகிப்தின்மீதும் கரை வழியாயும் கடல்வழியாயும் படை யெடுப்புக்கள். அப்படிப்பட்ட சங் கடமான வேளைகளில் இப்பெரியார் எப்படி நடந்துகொண்டா ரென்று எண்ணுகின்றீர் கள்? அத்தகைய ஆபத்துக்குரிய நேரங்களில் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் எத்தகைய பயங் கொள்ளித் தனத்தையேனும் கோழைத் தனத்தை யேனும் ஒருசிறிதும் காண்பிக்க வில்லை. சரித்திர ஏடுகளே இதற்குச் சாக்ஷியங் கூறக்கூடும்: பாரசீகத் தின் குழப்பங்களும் கிளர்ச்சிகளும் அடியுடன் அடக்கி யொடுக்கப்பட்டதுடன், இஸ்லாத்தின் பதாகை அம் மாகாணத்தின் எல்லைகளனைத்தையுங் கடந்து, கஜ்னீ வரை சுமந்து செல்லப்பட்டு விட்டது. இதன் பயனாய் இஸ்லாத்தின் விஸ்தீரணம் எங்கும் பரந்தோங்கத் துவக்கிவிட்ட தென்னலாம். சிரியா நாட்டில் உரோ மர்கள் துரத்தியடிக்கப்பட்டு, அன்னாரது எல்லைக் குள்ளும் அரபிகள் சென்று, அவர்களை நன்கு முறி

யடித்து விட்டார்கள். அதன்விளைவாய் இஸ்லாத்தின் கொடி கருங்கடற்கரைமீதும் பறக்கத் தலைப்பட்டது. அதற்கு முன்வரை உரோமர்கள் கடல்களுக்கெல்லாம் தாங்களே எஜமானர்களென இறுமாந்திருந்தனர். அவ்வாறிருந்தும், அதற்கு முன்வரை கடற்போர் எப்படியிருக்குமென்று ஒருசிறிதும் அறியாதிருந்த அந்த அரபிகள் அவ்வுரோமரை அப்படிப்பட்ட கடற்போரிலும் வென்று வாகைமாலை சூடினர். ஆபிரிக்கா கண்டத்திலும் அந்த உரோமர்களின் படைகள் முஸ்லிம்களால் நன்கு முறியடிக்கப்பட்டுப் போயின.

அவையனைத்தும் ஒரு பயங்கொள்ளியின் செயல்களென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?, கஷ்டநஷ்டங்களைக் கண்டு நெஞ்சந் துணுக்குறுகின்ற கோழையின் காரியங்களா அன்னவை? இஸ்லாத்தின் மரக்கலம் குழப்பமென்னும் பாறையில் மோதுண்டு சிதறிப் போகாதவாறு இப் பெரியார் மிக்க துணிவுடனும் அதிக நிதானத்துடனும் இக்கலத்தினைப் பத்திரமாய் அக்கரைகொண்டு சேர்த்திருப்பதைக் கொண்டே இவர் ஒரு பெரிய தலைவரென்பதை நாம் செவ்விதாய் உணர்ந்து கொள்ளுகிறோம். இந்த கலீபாவின் ஆட்சியின்போது இஸ்லாத்தின் வெற்றிக்கொடி நெடுநெடுந் தூரம்வரை தூக்கிச் செல்லப்பட்டது; அதுவேயுமன்றி, இவர் காலத்திலேதான் அக்கொடி முதன்முதலாய்க் கடல்மீது பறக்கத் துவக்கிற்று. எனவே, இவ்வாறெல்லாம் இஸ்லாத்தின் பெருமையை வளர்த்து, இதன்கீர்த்தி எங்கும் தழைத்தோங்குமாறு பெரிதும் பாடுபட்டுவந்த ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்

**கடல்மீது முதன் முதலாகக் கொடி பறக்கச்செய்த கலீபா இவரே**

கள், இஸ்லாத்தின் ஒற்றுமை கெடக்கூடா தென்றும், முஸ்லிம்களின் உதிரம் சிந்தப்படக் கூடாதென்றும், மிகவும் சாத்விகமான முறையிலே அஹிம்ஸா தர்மத்தை அதிகம் மேற்கொண்டு, தங்களது ஆவியைத் தியாகம் செய்துகொண்டு மரணமாய்ப் போய் விட்டதைக் கோழைத்தன மென்றும் தைரியமற்ற பயங்கொள்ளித்தன மென்றும் கூறுவது ஒரு பெரிய அநீதியே யாகுமென்பது திண்ணம். இவர் இரத்த சாக்ஷி மரணத்தால் இஸ்லாத்தின் நன்மைக் கென்று உயிர் துறந்தார்—ஷஹீதானார்கள்.

**உயிர்க்கிறுதி வந்தாலும் முஸ்லிமின் உதிரம் சிந்தப்படாது**

கலககோஷ்டியார் முன்னே அஹிம்ஸா தர்ம முறையில் சாத்விகத்தை மேற்கொண்டது பயங்கொள்ளித்தன மாகமாட்டாது; ஆனால், அதுதான் ஆத்ம சக்தியென்று இதுகாலை அழைக்கப் பட்டு வருகிறது. இலக்ஷக்கணக்கான உரோமர்களை—யுத்தப்பயிற்சியில் மிகப் பக்குவமடைந் திருந்தவர்களை—ப் புற முதுகிட் டோடுமாறு துரத்தித் துரத்தி யடித்த இந்த மூன்றாவது கலீபா ஒருசில கலகக்காரர் முன்னே பயங்கொள்ளியாய் விட்டன ரென்பது உண்மைக்கு முரணாகும். மனம்வைத் திருந்தால், அவர்களையெல்லாம் இப்பெரியார் ஊதி யெறிந்திருப்பார். அவ்வாறு செய்ய இயலாமலில்லை; ஆனால், முஸ்லிமின் ஒருதுளியுதிரமும் சிந்தப்படக் கூடாதென்பதே இப் பெரியாரது வைராக்கியம். என்னெனின், முஸ்லிம்களுக்குள் கலகமேற்பட்டு விட்டால், அப்பால் இஸ்லாத்தின் இணையில்லா ஒற்றுமை சிதறுண்டுபோமென்று இன்னார் பல்காலும்

கூறிக்கொண்டே யிருந்தார். கலககோஷ்டியினர் தமதில்லத்தை முற்றுகைபோட்டுச் சூழ்ந்துகொண்டு வாளாயுதங்களை யுருவி நின்றகாலத்தும், இம்மஹான் இஸ்லாத்துள்ளே கலகம் விளையக்கூடா தென்னும் கருத்துடனேயே மதீனுவாசிகள் எதிர்த்து வாளையுருவ வேண்டாமென்று மிகக் கடுமையான கட்டளையைப் பிறப்பித்துவிட்டார்கள். உண்மையை ஊன்றிப் பார்ப்பவர், இஸ்லாத்தின் இணையில்லா ஒற்றுமையி னிமித்த மாயே இம்மஹான் ஏனை யுயிர்களைப் பலிகொடுப்பதைப் பார்க்கினும் தமதின்னுயிரையே பலியாக்கிக் கொண்டா ரென்னும் தத்துவத்தை நன்குணர்ந்து கொள்வர். பிற்காலத்தில் தோன்றும் முஸ்லிம்கள் இஸ்லாத்தின் ஒற்றுமையை எத்துணைப் பிரியத்துடன் பாதுகாத்து வரவேண்டு மென்னும் சத்தியத்தை உணர்ந்துகொள்வான் வேண்டியே இந்த கலீபா வானவர் அவ்வாறு தாமே தியாகமாய்ப் போய் விட்டார். அஃதாவது, இப் பெரியாரது உயிர்த் தியாகத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளக் கிடக்கும் உண்மை யாதெனின், ஒருவர்க்கு உயிர்க்கிறுதி வருவதாயி ருப்பினும், அன்னூர் மற்றொரு சகோதர முஸ்லிமுக்குத் தீங்கிழைக்காமலும், மனத்தாலும் அத்தகைய தீங்கை நினைக்காமலும் இருந்துவருதல் வேண்டுமென்பதுதா னுகும்.

நபிபிரானைஸல் அடுத்துவந்த முதல் நான்கு கலீபாக்களும்—குலபாயெ ராஷிதீன்கள்—நம்பெருமானரின் வாழ்க்கையைத்தான் பிரதிபலித்துக் காண்பித்தனரென்று கூறியமைதல் வேண்டும். என்னெனின், இந்நால்வருள் ஒவ்வொரு மஹானும் நபிகட்டிலகத்தின்

ஒவ்வொருவித நற்குணத்தை நன்கு பிரதிபலித்துக் காண்பிக்கக் கூடியவராயிருந்து வந்துளர். ஹஜ்ரத் அபூபக்ரவர்கள்ரலி நபிபெருமானது துளங்காத தெய்வ நம்பிக்கையையும், எத்துணைக் கொடிய சோதனையின் காலத்திலும் அன்னூர் கைப்பற்றியிருந்த சற்றும் சலனமுருத கடைப்பிடியையும் பிரதிபலித்துக் காட்டுதற்குரிய ஒருதா ஹரணமாய் விளங்கிவந்தார்கள். இஸ்லாத்தின் எதிரிகளை இனியில்லா வண்ணம் தகைந்து வெற்றிக்கொடி நாட்டுதற்குரிய நாயகத்தின் நற்குணம் திரண்டுருண்டு ஓர் உருவெடுத்தாற் போன்றே ஹஜ்ரத் உமர்ரலி அவர்கள் இலங்கிவந் தார்கள். நபிகள் நாயகத்திற்கு முஸ்லிம்சமூக ஒற்றுமை யின்மீது இருந்துவந்த கரிசனத்தையே ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் தங்கள் உதிரத்தைச் சிந்தி உயிரையுங் கொடுத்துக் காப்பாற்றி யிருக்கிறுர்கள். இந்த மூன்ருவது கலீபா அவர்கள், தங்கள்பா லிருந்து வந்த எளிய வாழ்க்கையிலும் மதபக்தியிலும் தங்க ளுக்கு முன்னுல் அரசு செலுத்திவந்த முதலிரு கண்ணிய கலீபாக்களின் செவ்விய ரஸ்தாவையே பின்பற்றி யொழுகி யுள்ளார்கள். இப் பெரியார், தங்கள் காலத்தில் அரசாங்கப் பொக்கசத்துள் வந்து குவிந்துகொண் டிருந்த ஏராள்மான நிதிக் குவியல் களையெல்லாம் கடைக் கண்ணுலும் திரும்பிப்பார்ப்பது வழக்கமில்லை; கிலாபத்கஜானுவில்–பைத்துல்மாலில்– வந்துகுவிந்த எல்லா ஐசுவரியமும் பொதுஜன நன்மைக்காகவே இறுதிப் பைவரை செலவழிக்கப்

நாயகத்தின் நற்குணங்கள் நான்கு கலீபாக்க ளிடத்தும் பிரதிபலித்தல்

பட்டுவிட்டது. இவ்வுதார குணத்திலும் இம்மஹான், தங்கள் ஞானுசிரியரையே—நபிகணுயகரையே—அடி யொற்றி நடந்தார்களென்று கூறுவது மிகையாகாது.

நபிபெருமான்ஸல் காலத்தில் இம்மஹான் கொடுத் துதவிய திரவிய சகாயத்தைக்கொண்டே இப்பெரியார் ஒருபெரிய தனவந்த வர்த்தகராயும் தாராளகுணம் குடிகொண்ட முஸ்லிமாயும் இருந் திருக்க வேண்டுமென்று நாம் செவ் வனே தெரிந்துகொள்கிறோம். நபிநாய கத்தின் காலத்தில் அம்முஸ்லிம்கள் மகா தரித்திரத்துள்ளேயே சிக்கி யுழன்றுகொண் டிருந்தார்கள்; அது காலே ஹஜ்ரத் உதுமான்ரலி பதினுயிரக் கணக்கான தீனர்களே இஸ்லாத்தின் பிரசாரத்திற் கென்று செலவுசெய்து வந்துளார். இதிலிருந்து இப் பெரியார் ஓரிலக்ஷாதிபதி யென்பதை நாம் ஐயமற அறிந்துகொள்ளக் கடவோம். பிற்பாடு அம் முஸ்லிம் கட்கு நல்லகாலம் தோன்றி, அவர்கள் மிதமிஞ்சிய செல்வர்களாய பின்னர் இம்மஹானது ஐசுவரியமும் அதற்கேற்றவாறு அதிகமான பெருக்கமடைந் திருக்கு மென்பதில் சந்தேகமில்லே. ஆனல், நபிபெருமான் தோழர்கள்மாட்டு ஐசுவரிய மென்பது அணுத் துணேயும் சலனபுத்தியை யளித்துவிடவில்லே. எனவே, ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள், இஷாஅத்தெ இஸ் லாத்திற்கென்று இலக்ஷக்கணக்காய்ச் சம்மானஞ் செய்துவந்ததே போலத்தான் தங்கள் பந்துமித்திரர் கட்கும் அளவிறந்த செல்வத்தை அள்ளிக்கொடுத்தே வந்தார்கள். உதாஹரணமாக இம்மஹான் தம்முடைய

பொது கஜானுவிலிருந்து உதுமான்ரலி ஒருபைஸாவும் எடுத்துக் கொள்ளவில்லே

குமாரி யொருவருக்கு விவாகத்தின்போது ஓரிலக்ஷம் திர்ஹம் ஸ்திரீதனமாய்க் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தொகை முழுதும் இப்பெரியாரின் சொந்தத் திரவியத்திலிருந்தே கொடுக்கப்பட்ட தென்பதை எவரும் மறந்துவிடுவது கூடாது; இன்னுர் இவ்வாறு ஸ்திரீதனம் கொடுத்ததில் தவறொன்றுமில்லை யென்பதையும் எவரும் மறந்துவிடவேண்டாம். இஸ்லாத்தின் நன்மைக்கென்று இலக்ஷக்கணக்காய்ச் செலவு செய்யக் கூடியவர் தம்முடைய சொந்தக்குமாரிக்கு ஓரிலக்ஷம் திர்ஹம் ஸ்திரீதனங் கொடுத்ததில் தவறொன்று மில்லை. ஆனல், இம்மஹான் தங்கள் பந்துமித்திரர்கட் கெல்லாம் வெகுமதி யளிப்பான் வேண்டி அரசாங்கப் பொக்கிஷச் சாலையிலிருந்தே ஐசுவரியங்களை அபகரித்துக்கொண்டா ரென்று எதிரிகள் கூறும் குற்றச்சாட்டுக்கு எட்டுணையும் ஆதாரமில்லை. இந்த மூன்ருவது கலீபாவானவர் பொதுகஜாணுவிலிருந்து ஒருபைசாவேனும்சம்பளமோ உம்பளமோ பெற்றதில்லை யென்பதற்குச் சரித்திரச் சான்று இன்றும் இருந்தேவருகிறது. கஜாணுவிலிருந்து துட்டெடுப்பதை விடுத்து, இம்மஹான் பொதுநன்மைக்காகத் தங்கள் சொந்தச் சொத்திலிருந்தே வேண்டியமட்டும் செலவுசெய்து வந்தார்கள். கலீபாவின் சொந்தச் செலவுக்கென்று ஒருதொகை பொது கஜாணுவிலிருந்து எடுத்துக்கொள்ள அனுமதி யளிக்கப்பட்டிருந்தது. ஆனல், அந்தத் தொகையையுங்கூட இந்தகலீபா எடுத்துக்கொண்டது கிடையாது. ஒருமுறை இம்மஹான் பொதுஜனங்களைக் கூட்டி, தாங்கள் அரசாங்க நிதிநிலயத்திலிருந்து ஏதேனும்

திரவிய மெடுத்திருப்பின், அதனை அவ்வாறு குற்றஞ் சாட்டுவோர் பகிரங்கத்தில் வந்து ருஜூப்படுத்தட்டு மென்று அறைகூவி யழைத்தார்கள். இதன் கீழ்க் காணப்படுவதே, "தபரீ"யில் சொல்லப்படுவதேபோல, இப் பெரியாரால் அன்று செய்யப்பட்ட சொற்பொழி வின் ஏகதேசமாகும் :

உதுமான்ரலி அவர்களின் பிரசங்கம்

"இந்த அரசாங்கத்தின் பொறுப்பு என்பால் ஒப்புவிக்கப் பட்டபோது, இவ் வரப்நாடு முழுவதிலும் நானே அதிகமான ஒட்டகங்களும் ஆடுகளும் வைத்துக் கொண்டிருந்த மிகப்பெரிய முதலாளியா யிருந்தேன். ஆனால், இன்றோ, என்பால், ஹஜ்ஜுக்குச்செல்ல உதவும் இரண்டு ஒட்டகங்களைத் தவிர்த்து வேறோர் ஒட்டகமேனும் ஆடேனும் இல்லை. இதுமெய்தானே?- (அப்பொழுது அம் மக்களெல்லாம் அது மெய்யே யென்று சாக்ஷியம் கூறினர்.) இப்னு அபீ ஸர்ஹ் என்பாருக்கு யான் யுத்தத்தில் கிடைத்த பொருள்க ளனைத்தையும் இனமாய்க் கொடுத்துவிட்டேனென்று என்மீது ஒரு குற்றச்சாட்டுச் சுமத்தப்படுகிறது; ஆயின், அவருக்கு யான்கொடுத்தது அந்த யுத்தப் பொருள்களி லிருந்து ஐந்திலொரு பங்கிலிருந்து ஐந்தி லொரு பங்கே யாகும்; அந்தத் தொகை ஓரிலக்ஷத் துக்கு வந்தது. (திரிப்போலி பிடிக்கப்பட்டால், அதில் தளபதியாயிருந்த இப்னு அபீ ஸர்ஹுக்கு, அங்கே கிடைக்கும் யுத்தப்பொருள்களிலிருந்து இருபத்தைந்தி லிருந்து ஒரு பகுதியை இனமளிப்பதாய் இப்பெரியார் வாக்களித்திருந்த வண்ணம் அத்தொகை அவருக்குக் கொடுக்கப்பட்டது.) இந்தக் கணக்குப்படியேதான்

Q7:332
X146



ஹஜ்ரத் ஆபூபக்ரும் ஹஜ்ரத் உமரும் பங்கிட்டுக் கொடுத்துள்ளார்கள். ஆனால், நான் இப்னு அபீ ஸர்ஹுக்கு அத்தொகையைக் கொடுத்தபோது பொது மக்கள் ஆக்ஷேபங் கிளப்பினர்; ஆதலின், அதனை நான் அக்கணமே வாபஸ் பெற்றுவிட்டேன்......இன்னம், யான் என் உறவினர்மாட்டுப் பக்ஷம்பாராட்டுகிறே னென்றும், அவர்களுக்கெல்லாம் திரவியசகாயம் செய்கிறேனென்றும் மற்றொரு குற்றச்சாட்டு என்மீது கொணர்ந்து சுமத்தப்படுகிறது. யான் என் சுற்றத்தார் பால் அபிமானம் பாராட்டுகிறே னென்பதனால், அன்னியர் உரிமைகளை யான் அபகரித்து விடுவதாய் எண்ணிவிடாதீர்கள். உறவினருக்குரிய உரிமைகளையே யான் அன்னாருக் களிப்பேன்; அன்னியர் உரிமை அதனால் பறிக்கப்படுவ தில்லை. என் சுற்றத்தாருக் கெல்லாம் யான் திரவியசகாயம் செய்கிறேனென்று சொல்லப்படுகிறது. இது மெய்தான்; ஆனால், அரசாங் கப் பொக்கிஷத்தி லிருந்தல்ல; என் சொந்த ஆஸ்தியி லிருந்தே அவ்வாறு யான் செய்துவருகிறேன். பொது கஜானாவின் பணம் எனக்கேனும் என் பந்துமித்திர ருக்கேனும் விலக்கப்பட்ட (ஹராமான) நிதியாகும். நபிகள்திலகத்தின் ஸல் காலத்திலும், அபூபக்ர் ரலி காலத் திலும், உமர் ரலி காலத்திலும் என் சொந்தச் சொத்தி லிருந்தே இஸ்லாத்தின் தேவைக்காகத் தாராளமாய் யான் பொருளுதவி செய்துவந்திருக்கிறேன். அவ்வா றெல்லாம் யான் செய்தது, பொருளின்தேவை அதிக மாய் உணரப்படும் என் கௌமார திசையிலாகும். யான் இப்பொழுது என் குடும்பத்தினர் ஜீவித்து உயிர் துறக்கும், அந்த வயதெல்லையை யடைந்துவிட்டேன்;

TAMIL NADU ARCHIVES LIBRARY
111468

எனக்கினி மரணம் அண்மிவிட்டதென்றே எண்ணுகிறேன். எனக்கிருந்த ஆஸ்திமுழுதையும் என் குடும்பத்தினர்கட்கே கொடுத்துவிட்டேன்; இங்நிலையில், உண்மை விஷயமுணராத ஒருசில மக்கள் என்னைக் குறித்து என்னென்னவோ பிதற்றித் திரிகின்றனர். ஆண்டவன்மீது ஆணையாக, யான் எந்த ஒரு நகரத்தின் மீதும் அதன் சக்திக்கு மேற்பட வரி விதித்ததில்லை; ஆகவே, இத்தகைய குற்றமொன்றையும் எவரும் என்மீது சுமத்துவது முடியாது. மனிதர்களிடத்திலிருந்து வசூலிக்கப்பட்ட ஒவ்வொருபையும் அவர்களது நன்மைக்கென்றே செலவுசெய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய வரியிலிருந்து ஐந்திலொரு பகுதியே எனக்குரியது; ஆனால், அதை யான் எடுத்துக்கொண்டதில்லை. என் வீத முழுதும், என்னையன்றி வேறு தகுதி வாய்ந்தவர்கட்கே பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது; அதுவும் என்னால் பங்கிடப்பட்டது கிடையாது; ஏனை முஸ்லிம்களே எனது விகிதத்தைப் பங்கீடு செய்து வந்தனர். எனவே, கிலாபத்ராஜ்ய பொக்கசத்தினின்று ஒருபைசாவும் துர்வின்யோகம் செய்யப்பட்டதில்லையென்பதை நீங்களெல்லீரும் செவ்விதாய்த் தெரிந்து கொள்ளக் கடவீர்கள். பொதுகஜானாவிலிருந்து யான் ஒரு தம்படியும் எடுத்ததில்லை. எனவே, எனது சொந்த ஜீவனமும் எனக்குரிய சொந்தச் சம்பாத்தியத்திலிருந்தே நடைபெற்று வருகின்றது."

ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் மேற்கூறிய ஒவ்வொரு வசனத்தையும் மஸ்ஜிதில் குழுமியிருந்த பெருந்திரளான மக்கள் முன்னிலையில் பகிரங்கமாகவே சொல்லிக் காண்பித்தார்கள்; அப்பொழுது அங்கிருந்த

அவர்களனைவரும் இப்பெரியார் கூறியதை யெல்லாம் மெய்யென்றே ஒத்துக்கொண்டார்கள்; ஒருவரும் ஒரு சிறிதும் ஆக்ஷேபிக்க வில்லை. இதி

**நபிகள் திலகத்தின் சரியான பிரதிநிதி**

லிருந்து நாம் என்ன தெரிந்துகொள்கிறோம்? பொது கஜானாவிலிருந்து கலீபாவின் சொந்தச் செலவிற்காக ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொள்ள இன்னாருக்கு உரிமையிருந்தும், ஒரு பையையேனும் இம்மகான் எடுத்துக்கொள்ள வில்லையென்பது தானாகும். இவருக்குரிய பாகமுழுவதும் பொதுஜன நன்மைக்கே செலவு செய்யப்பட்டுவந்தது; அதுவும் பொதுமக்களாலேயே மேற்பார்வை யிடப்பட்டுவந்தது. இப்பெரியாரது சொத்துமுழுவதும்—இலக்ஷக்கணக்கானது — இன்னாரின் இறுதிக்காலத்தில் பொதுநன்மைக்காகவே செலவு செய்யப்பட் டிருக்கிறது. இஃதொன்றே, இப்பெரியாரை நபிகட்டிலகத்தின் சரியான பிரதிநிதியென்று செய்யக்கூடியதாய் அமைந்திருக்கிறது.

ஹஜ்ரத் உமர்ரலி அவர்களது ஆட்சி இஸ்லாமிய ராஜ்யத்தின் விஸ்தீரணமடைந்த காட்சியை யளித்துக் கொண் டிருக்கிறது; பெரும்பெரும் மஹாராஜ்யங்களெல்லாம் திடும்திடுமென்று ஒன்றன்

**உதுமான்ரலி அவர்களது ஆட்சி**

பின் ஒன்றாய் முறிந்து முஸ்லிம்கள்வயம் வந்து சிக்கிவிட்டன; அவற்றின் பெருமைகளையும் வீழ்ச்சியின் துரிதங்களையும் கவனிக்கப் புகுமிடத்து, அப்பால் கிடைத்த வெற்றிக ளனைத்தும் அத்துணைப் பெரியனவாய்க் காணப்படாது மிகமிகச் சிறுத்தே பொலிவிழந்து போய் விடுகின்றன. எனினும், உதுமான்ரலி அவர்

களது ஆட்சியும் இஸ்லாத்தின் பலத்திற்குப் பெரிதும் துணைபுரிந்திருக்கிற தென்றே கூறியமைதல் வேண்டும்; இவரது காலத்தில் இஸ்லாமிய ராஜ்யத்தில் எத்தகைய பலஹீனமும் ஏற்பட்டுவிட வில்லை. ஆனல், அதற்கு மாருய் இஸ்லாத்தின் பலம் முன்னினும் அதிகமாயே இவர் காலத்தில் ஸ்திரப்பட்டு விட்டது. அராஜகக் கிளர்ச்சியையும், உள்நாட்டுக் குழப்பத்தையும் அடக்கி யொடுக்குவதென்பது, ராஜ்யவிஸ்தீரணத்தைப் பரத்து வதைப் பார்க்கினும் முக்கியத்தில் குறைவுபட்ட தென்று கருதிவிடற்க. உதுமான்ரலி அவர்கள் பட்ட மேற்று ஆறுமாதகாலம் ஆகுமுன்பே பாரசீகநாடு கலகஞ்செய்யத் தலைப்பட்டு விட்டது. அக்கலகத்தை இந்த மூன்ருவது கலீபா தைரியத்துடனே துணிந்து நின்று அடக்கியொடுக்கினுர்கள். அவ்வாறு அந்தப் பாரசீகநாட்டுக் கலகம் அடியுடன் அடக்கப்பட்ட தோடு போகாது, அதன்பயனுய் அப்பகுதியிலுள்ள முஸ்லிம் ராஜ்யத்தின் முக்கிய கேந்திரஸ்தானங்களாய் விளங்கிவருவான் வேண்டித் தற்காப்பினிமித்தம் ஆப் கானிஸ்தானம், துருக்கிஸ்தானம், குராஸான் போன்ற பூபாகங்களும் இஸ்லாமிய ராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

பாரசீகதேசத்துக் கிளர்ச்சி ஒடுங்கியதும் ஒடுங் காததுமா யிருக்கும்பொழுதே, உரோமர்கள் ஷாம் தேசத்தின் (சிரியா)மீது படையெடுத்து வரலாயினுர் கள். எனினும், இஸ்லாமியர்படை அதிதீரத்துடனேயே ஆங்கும்சென்று வெற்றிக்கொடி நாட்டிவிட்டது: உரோமப்படைகள் துரத்தியடிக்கப் பட்டதுடன்

**முதன்முதலாகக் கடற்போர்**

போகாது, அர்மீனியா, ஆஜர்பாய்ஜான், பின் சின்ன ஆசியாபோன்ற பிரதேசங்களும் கிலாபத் ராஜ்யங்களுடன் இணைத்துக்கொள்ளப் பட்டன. ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களது ஆட்சியின் போதுதான் முஸ்லிம்கள் முதன்முதலாய்க் கடற்போரில் இறங்கினுர்கள் ; எனவே, அந்த அரபிக்கப்பற்படை ஸைப்ரஸ் என்னும் தீவைக் கைப்பற்றிக் கொண்டது. உரோமக் கைஸரின் சைன்யம் எகிப்தின்மீது படையெடுத்துச் சென்று, அலெக்ஜாந்திரியாத் துறைமுகத்தைப் பிடித்துக் கொண்டது. ஆனுல், உதுமான்ரலி அவர்களது படை ஆங்குச்சென்று அலெக்ஜாந்திரியாவை மீட்டும் கைவரப் பெற்றுக்கொண்டு, மேலும் மேற்குத்திக்கை நோக்கிச் சென்று, அந்த உரோமப்படை யென்னும் நாமதேயமே அப்பகுதியில் இல்லாமல் துவம்சம்செய்தொழித்துவிட்டது. ஆகவே, அந்த மேற்குத்திக்கிலும் கிலாபத் ராஜ்யம் விஸ்தீரணமடைந்து, ஆங்கெங்கும் அரண்களும் பல நிருமிக்கப்பட்டன. இவற்றினையெல்லாங் கொண்டு ஆராய்ந்து பார்க்குமிடத்து, ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் ஆட்சியின்போது இஸ்லாமிய ராஜ்ஜியத்தின் பெருமை தனக்குரிய உச்சஸ்தானத்தை எட்டியிருந்ததென்று செப்புதற்கு நமது நாத் துணிவுகொள்ளாது தயங்கிநிற்க மாட்டாது. இறுதியிலே இந்த மூன்ருவது கலீபா அகாரணமாய்க் கொல்லப்பட்டு, இஸ்லாத்தின் தலைநகராம் மதீனுவும் கலகக்காரர் கைவசம் சிக்கியிருந்தும், எந்த மாகாணத்திலும் எவரும் இஸ்லாத்திற்கு விரோதமாய்க் கிளர்ச்சி செய்து கலகஞ்செய்யத் துணிவுகொண் டெழவில்லை. என்னெனின், இப்பெரியார் காலத்தில் இஸ்லாத்தின்

பெருமை—கௌரவம்—அத்துணைப்பெரிய உச்சத்தை யடைந்து நின்றது.

முதலிரண்டு கலீபாக்களின் ஆட்சியின்போதும் அமலில் இருந்துவந்த ஜனநாயக முறையே இந்த மூன்றுவது கலீபாவின் காலத்தும் அனுஷ்டிக்கப்பட்டு வந்தது. இஸ்லாத்தின் குடியாட்சி முறையில் இதுவரை எவ்வாறு அந்த ராஜ்யபரிபாலனம் செவ்விதாய் நடை பெற்று வந்ததோ, அவ்வாறேதான் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் ஆட்சிக்காலத்திலும் செவ்வை யாய் நடைபெற்று வந்தது. கலீபாவின் உரிமை களும், குடிமக்களின் சகல உரிமைகளும் முன் போன்றே பாதுகாக்கப்பட்டு வந்தன; கலீபா வுக்கு அரசாங்கப் பொக்கசத்தின்மீது இருந்த அதிகாரமும் முன் போலவேதான் காணப்பட்டது.

ராஜ்ஜிய பரிபாலனம்

மஜ்லிஸெ ஷூரா என்னப்பட்ட "மந்திராலோசனைச் சபை"யும் முன்போலவே அதிகாரம் செலுத்திக் கொண் டிருந்தது; இஸ்லாமிய ஜனநாயக ஆட்சிக் குரிய சகல காரியங்களும் அந்தச் சபையினராலேயே பைஸல் செய்யப்பட்டுவந்தன. ஓரொரு வெள்ளியன் றும் ஜுமுஆத்தொழுகைக்கு முன்பே கலீபா அவர் கள், வெளி மாகாணங்களில் நடைபெற்றுவரும் விஷயங்களைக் குறித்து மஸ்ஜிதுக்கு விஜயம்செய்யும் அயல்நாட்டு மக்களைக்கொண்டு மிகச்செவ்விதாய் அறிந்துகொள்வார்கள். எந்த மாகாணாதிபதியைக் குறித்தும், அல்லது வேறெந்த உத்தியோகஸ்தரைக் குறித்தும் எந்தப் பொதுமகனும் கலீபாவிடம் சர்வ தாராளமாய் அண்மித் தனது பர்யாதைத் தெரிவித்துக்

கொள்ளலாம். அவ்வாறு கொண்டுவரப்படும் ஒவ்வொரு குறைமுறையும் அவ்வப்பொழுதே விசாரணை செய்யப்பட்டு, உடனுக்குடன் தக்க பரிகாரம் அளிக்கப்படும். இப் பெரியார் ஆட்சியின்போது எல்லா அரசாங்க இலாகாக்களும் முன்கிலாபத்துக் காலத்தில் நடைபெற்று வந்தனவே போலத்தான் நடைபெறலாயின. இந்த மூன்ருவது கலீபாவின் ஆட்சியில் "ரெவினியூ இலாகா" மிகவும் அதிகமான வருமானத்தை யளித்துக்கொண் டிருந்த்து. எகிப்திலிருந்து வந்த திறைப்பொருள்மட்டும் இருபதிலிருந்து நாற்பதி லக்ஷமாய்ப் பெருகிவிட்டது. வரும்படி அதிகமாக அதிகமாகப் பொதுப்பொக்கசத்திலிருந்து அளிக்கப்பட்டுவந்த உபகாரச்சம்பளமும் அவரவருக்கும் உயர்த்தப்பட்டே வந்தது. அனேகம் புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. சாலைகள், பாலங்கள், மஸ்ஜித்கள், விருந்தினர் தங்கும் விடுதிகள் ஆதியவெல்லாம் முக்கிய பட்டணங்களில் நிருமிக்கப்பட்டுவந்தன. வெளிமாகாணங்களி லிருந்து மதீனுவுக்கு வந்துசேரும் ரஸ்தாக்களிலெல்லாம் பிரயாணிகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் நிரம்பச் செய்துவைக்கப்பட்டன. எங்குப் பார்த்தாலும் ராணுவ ஸ்தலங்களும் கார்வான் ஸராய்களும், தண்ணீர்த் தொட்டிகளும் அதிகம் உண்டுபண்ணி வைக்கப்பட்டன. மதீனுவை வெள்ளத்தினின்று தடுப்பதற்கு வேண்டிய பெரிய அணையொன்று கட்டுவிக்கப்பட்டது. நபிகள் திலகத்தின் மஸ்ஜித் விஸ்தீரணம் செய்யப்பட்டுக் கருங்கல்லால் அழகியதாய்ப் புதுப்பிக்கப்பட்டது. குதிரைகளையும் ஒட்டகங்களையும் அபிவிருத்தி செய்யக்கூடிய சாலைகள்

அனேகம் அங்கங்கே திறந்துவைக்கப்பட்டன ; அங்கங்கே தண்ணீர் வசதிகளும் அதிகமாய் உண்டுபண்ணி வைக்கப்பட்டன.

ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களது காலத்தில் இஸ்லாத்தின் நன்மைக்காய்ச் செய்யப்பட்ட காரியங்களுள் ஒருகுறிப்பிட்ட ஊழியமே உச்சஸ்தானத்தை வகித்துக்கொண் டிருக்கிறது: முதல் கலீபாவின் காலத்திலே ஒழுங்குசெய்து கோவையாய் வைக்கப்பட்டிருந்த அந்த ஒரே **சரியான** குர்ஆன் ஷரீபிலிருந்து பலபிரதிகள் எடுக்கப்பட்டு, கிலாபத் ராஜ்ஜியத்தின் முக்கிய பட்டணங்களுக்கெல்லாம் அனுப்பி வைக்கப்பட்டன. இதைச் செய்ததனுல் உதுமான்ரலி அவர்கள் முஸ்லிம் உலகிற்கு ஆற்றியிருக்கும் பேருபகாரத்தின் பெருமை இத்துணைத்தா னென்று எவராலும் உறையிட்டுரைப்பது சாலாது. இற்றை நாளில் இஸ்லாத்தின் உலகமுழுதும்—கிழக்கிலாகட்டும் மேற்கிலாகட்டும்—குர்ஆன்ஷரீபின் ஒரே மாதிரியான பிரதியே இஸ்லாத்தின் எல்லாப் பிரிவினரின் கரங்களிலும் இருந்து வருவதன் பெருமையனைத்தும் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களையே சார்ந்ததா யிருக்கிறது. அவர்கள் காலத்தில் எது சரியான பாடமென்று அங்கங்கே குர்ஆன்ஷரீபின் வெவ்வேறு பிரதிகளைக் குறித்து அபிப்பிராய பேதம் தோன்றத் தலைப்பட்டுவிட்டமையால், ஹஜ்ரத் உமர்ரலி அவர்களது ஆலோசனையின்மீது ஹஜ்ரத் அபூபக்ர்ரலி அவர்களது ஆட்சியின் காலத்திலே தையார்செய்து செவ்விதாய் வைக்கப்பட்டிருந்த அந்தச் **சரியான** மூலப்பிரதியை இந்த மூன்ருவது

குர்ஆன்ஷரீபு ஒழுங்கு படுத்தப் படல்

கலீபா தங்கள் தர்பாருக்கு வரவழைத்தார்கள். அந்த மூலப்பிரதி, உமர்ரலி அவர்களுடைய குமாரியும் நபிபெருமானுடைய மனேவியுமா யிருந்த ஹப்ஸாரலி அவர்கள் கைவயமே இருந்துவந்தது. உதுமான்ரலி அவர்கள் அதனை வரவழைத்து, அதினின்றும் பல சரியான பிரதிகளேப் பிழை யில்லாது பெயர்த்தெழுதச் சொன்னார்கள்; அவற்றினின்று ஒவ்வொன்று, இஸ் லாத்தின் ஒவ்வொரு முக்கிய நகரத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. ஆகவே, அதற்கப்பால் ஆங்காங்கு முள்ள குர்ஆன்பிரதிகள் அந்த அரசாங்கப் பிரதியைக் கொண்டு பாடபேத மில்லாது சரிபார்த்துக்கொண்டு வர உதவியும் செய்யப்பட்டது. இவ் விஷயத்தில் உதுமான்ரலி அவர்கள் காண்பித்த தீர்க்கதிருஷ்டி இத்துணேப் பெரிதென்று எவராலும் முடிவு கட்டிவிட முடியாது. அச்சியந்திரவேலை கண்டுபிடிக்கப்படாத அந்தப் புராதன காலத்தில் அதனேப் பார்க்கினும் வேறுவிதமான முறையிலே குர்ஆன்ஷரீபின் பாடத்தை வேறு பாடபேதமில்லாது ஒழுங்குசெய்து செம்மைப் படுத்தி வைத்திருப்பது முடியாது. எனவே தான் எதிர்மதவாதிகளும், முஹம்மத் நபிஸல் அவர்களது திருநாவால் ஓதப்பட்டுவந்த அதே குர்ஆன்ஷரீபின் பாடமே இன்றளவும் எவ்வித வேறு பாட பேதமு மில்லாது திருத்தமோ இடைச்சொருகலோ இல்லாது இருந்துவருகிறதென்று ஏற்றுக்கொண் டிருக்கிருர்கள். ஆனல், உதுமான்ரலி அவர்கள் காலத்திலேதான் குர்ஆன்ஷரீபின் அத்தியாயங்களும் ஆயாத்களும் ஒரு சேர அடுக்கித் திரட்டி அமைக்கப்பட்டன வென்று அன்னிய மதத்தினர் ஒருசிலரால் அபிப்பிராயம்

கொள்ளப்பட்டிருப்பது சிறிதும் மெய்யாக மாட்டாது. ஆயின், இஸ்லாமிய உலகு முழுதும் இன்றளவும் ஒரே மாதிரியான சரியான குர்ஆன் பிரதிதான் இருந்துவர வேண்டுமென்பதற்கு அடிப்படை கோலி வைத்தவர் இந்த மூன்ருவது கலீபாவேயென்று கூறுவதுதான் உண்மையான கூற்ருகும்.

பால்ய முதற்கொண்டே ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் நற்குண நல்லொழுக்க முடையவரா யிருந்து வந்தார்கள்; அவற்றுடன்கூட இஸ்லாத்தின் ஜோதியும் சேர்ந்து அதிகமான பிரகாசத்தையே அளித்துக்கொண் டிருந்தது. இப்பெரியார் கிலாபத் பதவியை ஏற்றுக்கொண்ட போது இவர்களுக்குப் பிராயம் 70 ஆகி யிருந்தது; இவர்களது தோற்றம் சற்று உயரமா யிருக்கும்; தேக வர்ணம் சிறிது மாநிறமா யிருக்கும்; தங்களுடைய பழுத்த தாடிக்கு மருதோன்றிச் சாயம் ஏற்றியிருப்பார்கள். மத விஷயத்தில் மகா பக்திவிசுவாச முள்ளவர்கள். குர்ஆன் ஓதுவதிலும், தொழுது கொள்வதிலும், நோன்பு நோற்பதிலும், தானதர்மம் செய்வதிலும் அதிகம் ஈடுபட்டவர்கள். பக்திமார்க்கத்தில் அதிகம் ஆழ்ந்துள்ள சுத்தசாதுவான ஸூபியா யிருப்பார்கள். ஏழைகள்பால் அளவிறந்த இரக்கத்தைக் காட்டித் தயாளத்துவத்தையும் மிகுத்து வைப்பார்கள். ஒழுக்கத்திலும் நாணயத்திலும் உதுமான்ரலி ஒரு மலையைப்போல் சற்றும் துளங்கா திருப்பார்கள். இவர்களது ஆட்சியின்காலத்தில் முஸ்லிம்களெல்லாரும் இவ்வுலக ஐசுவரியத்தில் மிகவும் தழைத்தோங்கி வந்தார்கள்; ஆனல், உதுமான்ரலி நாணயம்,

இப்பெரியாரின் குணமும் நடக்கையும்

உதுமான்ரலி கண்ணியம், உதுமான்ரலி திண்ணிய ஒழுக்கம், உதுமான்ரலி மதபக்தி ஆதியவெல்லாம் ஒரு மயிரிணக்கங்கூட அப்பக்கம் இப்பக்கம் சிறிதும் சரியாது நேர்கோட்டின்மீதே செவ்விதாய் நின்று கொண்டிருந்தன. இப்பெரியார் இலட்சக்கணக்காய்ச் சம்பாதித்து, இலட்சக்கணக்காய் ஆண்டவன் பாதையில் செலவுசெய்தபோது இருந்ததே போலத்தான், இவ்வுலகத்திற்கெல்லாம் மிகமிகப் பெரிய கஜாணுவாய் விளங்கிய கிலாபத்ராஜ்யத்தின் பொக்கிஷாதிபதியாய் (திரவிய சாலாதிபதியாய்) உயர்ந்து நின்ற காலத்தும் உலக ஐசுவரியத்தில் ஒரு சிறிதும் பெற்றுக்கொள்ளாது தாமரையிலை நீர்போல் தனித்து நின்றூர்கள்.

இப்பெரியார், நபிகள் திலகத்தின் நற்குணங்களையே சாலவும் அடியொற்றி நடந்துவந்தார்கள். அடக்கமென்பது இம்மகானின்பால் அதிகம் காணப்பட்டு வந்தது. ஆதலினுல், ஏனைத் தோழர்கள்பால் வேடிக்கையாய்ப் பேசக்கூடிய நபிகள்நாயகம்ஸல் இப்பெரியார் மாட்டு அவ்வாறு ஹாஸ்யத்துடன் நடந்து கொள்வதில்லை. உதாஹரணமாய், நபிபெருமான்ஸல் ஒருமுறை ஓரிடத்தில் அமர்ந்திருத்தபொழுது அவர்களுடைய முழங்கால் திறந்திருந்தது; அப்பொழுது ஹஜ்ரத் அபூபக்ரும்ரலி ஹஜ்ரத் உமரும்ரலி அவ்விடத்தில் உடன் குந்தியிருந்தும், நபிகணுயகர் அதனைப் பொருட்படுத்த வில்லை. ஆனுல், அதுபொழுது ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் அண்மிவருவதாய்ச் சமாசாரம் எட்டிற்று; அக்கணமே நம்பெருமான்ஸல் தங்கள் முழந்தாளை மூடிக்கொண்டார்கள். இத்துணைப் பெரிய மரியாதையை ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள்பால்

நபிகள்நாயகமே காண்பித்துவந்தார்கள். இப்பெரியார் மதீனுவிலுள்ள மஸ்ஜிதுன் னபீயைச் சுற்றியிருந்த நிலங்க ளனைத்தையும் அதிகமான கிரயங்கொடுத்து வாங்கி, நபிகள் நாயகத்தின் மனைவிமாருக்கு வேண்டிய இல்லங்களை நிருமித்துக் கொடுத்தார்கள்.

இந்த மூன்ருவது கலீபா தங்கள் ஆட்சிக்காலத்தில் தினத்தொழுகை ஐந்தையும் தாங்களே இமாமாய் முன்னின்று நடாத்தி வருவார்கள்; வயது 80-க்கு மேலாகியும், இப்பெரியார் நள்ளிரவுக்குமேல் எழுந்து தொழுதுகொள்ளும் தஹஜ்ஜுத் என்னும் தொழுகையையும் விடாமலே கடைப்பிடித் தொழுகினுர்கள். அத்தகைய தொழுகைக்காக நள்ளிரவில் எழுந்திருக்கும் போது இப் பெரியார் ஒருபோதும் எந்த வேலைக்காரனுக்கும் எத்தகைய தொந்தரையும்கொடுப்பது வழக்கமில்லை. அரசாங்கப் பொதுகஜாணுவில் அளவற்ற திரவியம் வந்துகுவிந்தும், இம்மகான் மிகச்சாதாரண உடையையும், சர்வ சாதாரண உண்டியையுமே மேற்கொண்டு வாழ்ந்தார்கள். இவர்களுடைய சொந்தச் சொத்தும் அதிகமாயிருந்தும், இப் பெரியாரின் பாரியாளும் உயர்தரமான உடைகளையுடுத்த இந்த கலீபா சம்மதிப்பதில்லை. இவர்களது தாராளச் சிந்தையைக்குறித்து நாம் முன்னமே வரைந்திருக்கிருேம்; அவ்வாறு சம்மானம் செய்வதில், வேண்டியவரென்றும், வேண்டாதவரென்றும் வித்தியாசம் பாராட்டுவது இன்னவர்பாலில்லை. முஸ்லிம் சகோதரர்கள்பால் வைத்திருந்த ஆழமான அபிமானத்தின் காரணத்தினுலேயே அவர்களுடைய உதிரத்தைச் சொரிவதைப் பார்க்கினும் தங்கள் உதிரத்தையே சொரியக்கொடுத்து உயிர்த்

தியாகமும் செய்வது நல்லதென்று இம்மகான் வைராக்கியம் செய்துகொண் டிருந்தனர். இப் பெரியார் தங்கள்பாலுள்ள வாளாயுத்தத்தை உருவாததோடு, ஏனை முஸ்லிம்களும் தங்கள்பொருட்டு அவ்வாறு வாளையுருவக் கூடாதென்று தடைசெய்து நிறுத்தி விட்டார்கள்.

மூன்ருவது கலீபாவின் சரிதை முற்றுப்பெற்றது.

---


## குலபாயெ ராஷிதின் வரிசையில்

1. **மஹான் முஹம்மத் நபி** (ஸல்)
நபிகள் நாயகத்தின் விளக்கமான சரித்திரச் சுருக்கம்; ஆதார பூர்வமானது. ரூ. 0 12 0

2. **அபூபக்ர் ஸித்தீக்** (ரலி)
முதல் கலீபாவின் சரியான உண்மைச் சரித்திரம். (அச்சில்) ரூ. 2 0 0

3. **உமரே பாரூக்**(ரலி)
இரண்டாவது கலீபாவின் சரியான உண்மைச் சரித்திரம் (அச்சில்) ரூ. 2 0 0

தபாற் செலவு வேறு.

**ஷாஜஹான் புக் டிப்போ**

**30**, சாந்தோம் ஹைரோட், மயிலாப்பூர், சென்னை.


---

427—8

# அலீரலி சரிதை

நபிபெருமானூர்ஸல் அவர்கட்குப் பின்னே நான்காவது கலிபாவாய் விளங்கிய மகான் அலீரலி அவர்களாவார்கள்; இவர்களது குன்யத் "அபுல் ஹஸன்" என்பதாகும். இப் பெரியாரின் தந்தையர் அபூத்தாலிப் என்னும் நாமமுடைய, நபிகள் திலகத்தின் பெரியதந்தையராவர். பாட்டனூராகிய அப்துல் முத்தலிப் தேகவியோக மாய்விட்டபின்னர் நபிபெருமானவர்கள் அப் பெரிய தந்தையராலேயே பல்லாண்டுகள்வரை பாதுகாக்கப்பட்டு வந்தார்கள். அலீரலி அவர்களுடைய தாயார் பேர் பாத்திமா என்பதாகும். குறைஷிகுலத்தின் மிகச்சிறந்த கோத்திரமாகிய பனூஹாஷிம் என்னும் சாகையிலே இப் பெரியார் ஜனனமாயினூர்கள். நபிகட்டிலகமும்ஸல் இந்தக் கௌரவமிக்க கோத்திரத்திலேதான் திருவவதாரம் புரிந்தார்கள். அல்லாஹ்வின் பரிசுத்த ஆலயமாகிய கஃபாவைப் பாதுகாக்கும் பொறுப்பு இந்தச் சிரேஷ்டமிக்க கோத்திரத்தாரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது; இக் காரணத்தினூலேயே பனூஹாஷிம் கிளையார் அந்த அரப்நாடு முழுவதுமே இணையில்லாச் செல்வாக்கனைத்தும் பெற்று விளங்கினூர்கள்.

**ஆரம்ப கால வாழ்க்கை**

அலீரலி அவர்கள் 'ஆமுல் பீல்' என்றழைக்கப் படும் யானையாண்டின் முப்பதாவதாண்டிலே, அஃதாவது, நபிகள்நாதருக்கு அந்த நபிப்பட்டம் அருளப் பெறுதற்குப் பத்துவருடங்களுக்கு முன்னே ஜனன மாயினுர்கள். அபூத்தாலிபின் குடும்பம் ஒரு பெருங் குடும்பம்; அதனுடனே சேர்த்துத்தான் அப்பெரியார் நபிபெருமானையும் உடன் வளர்த்துவந்தார். ஆனுல், பின்னுல் அப்பெரிய குடும்பம் நொடித்துப்போய் விட்டமையான், நபிகள்நாயகமே அலீரலி அவர்களைத் தங்கள் பால் வைத்து வளர்த்துவர லாயினுர்கள். ஆகவே அலீரலி அவர்கள் நபிபிரானுடைய பெரியதந்தையின் புத்திரரா யிருந்ததுடன், அப்பெருமானுரின் இல்லத்திலே யிருந்து வளர்ந்த பெருமையையும் பெற்றுக் கொண்டார்கள்.

நபிபெருமான்ஸல் அவர்கட்கு நபிப்பட்டம் அருளப் பட்டக்கால், அலீரலி அவர்களுக்கு வயது பத்துத்தான் ஆகியிருந்தது; சிறுபிராய முதற் கொண்டே இவர் நபிகள்நாயகத்தின் இல்லத்தி லிருந்தே வளர்ந்து வந்தமையான், இன்னுருக்கு நபிகணுயகரின் குணுதிசயங்களெல்லாம் மிகநன்ருய் அறியக்கிடந்தன வென்னலாம்; எனவேதான் இப்பெரியார் முதன்முதலாய் இஸ்லாத்தைத் தழுவிய ஒருசில முக்கியஸ்தர்களுள்ளே ஒருவராய் விளங்கிவருகின்ருர்கள். அலீரலி அவர்களே தீனுல் இஸ்லாத்தைத் தழுவிய முதல்முஸ்லி மென்று ஒருசிலர் கூறுவதுண்டு. ஆனுல், முதன்முதலாய் இஸ்லாத்தைத் தழுவிய பெருமை பீபீ கதீஜாபிராட்டியா ரவர்கட்கே

இஸ்லாத்தைத் தழுவலும் இதற்குழைக்கத் துணிவு கொள்ளலும்

உரியதென்பது சரித்திரச் சான்ருகும். அப் பெருமாட்டியாருக்குப் பின்பே ஹஜ்ரத் அபூபக்ர், ஜைத் பின் ஹாரித், அலீரலி வருகின்ருர்கள்; இம்மூவருள் எவர் முதல்வர், எவர் இரண்டாமவர், எவர் மூன்ருமவர் என்று நிச்சயித்துக்கூறுவது முடியாமற் போயினும், கதீஜாரலி அவர்கட்குப் பின்னே இஸ்லாத்தைத் தழுவியவர் ஹஜ்ரத் அபூபக்ர்ரலி என்று தான் கொள்ள வேண்டியதா யிருக்கிறது. அலீரலி அவர்கள் தீனுல் இஸ்லாத்தைத் தழுவியபொழுது ஒரு சிறுவரா யிருந்தும், இதன் பிரசாரத்திலே இனியில்லா ஊக்கமும் உற்சாகமும் காட்டிவந்ததாய் நாம் அறிகிருேம்.

ஆதியில் ஒருமுறை நபிபெருமான்ஸல் தங்குலப் பந்துக்களை ஒரு விருந்துக்கு அழைத்தார்கள்; அவ் விருந்தின்போது இஸ்லாத்தின் விஷயத்தை அவர்களுக்கு அறிவிக்கவேண்டு மென்பதே நபிகட்டிலகத்தின் ஆர்வமா யிருந்துவந்தது. ஆகவே, அவ்விருந்து முடிந்ததன் பின்பு நபிபிரான்ஸல் எழுந்து நின்று, "உங்களுள் எவரே என்னை நபியென்று ஏற்றுக் கொண்டு, அதனுல் என்னுடைய நண்பரும் சகோதரரும் ஆகப் போகின்ருர்?" என்று அங்கு வந்திருந்தவர்களை வினவினுர்கள். அதுகேட்டு, அனைவரும் மௌனமாகவே இருந்தார்கள்; ஆனுல், அதுசமயம் வாலிப அலீரலி அவர்களே எழுந்து நின்று, நபிபெருமானுருடன் முழுதும் ஒத்துழைப்பதாய் உறுதி செய்து கொடுத்தார்கள். நபிகள்நாயகம் மூன்றுமுறை மேற்கூறிய வினுவினை விடுத்தார்கள்; அம்மூன்று முறையும் அலீரலி அவர்கள் மேற்கூறிய விடையினையே அளித்தார்கள். அப்பொழுது இப்பெரியார் பத்து வயதையே

யடைந்துள்ள ஒரு சிறியரா யிருந்து வந்தார். ஆனால், பிற்காலத்தில் இவர் ஒரு பெரிய மகானாகவும் தீனுல் இஸ்லாத்தின் ஒரு பெரிய தூணாகவும் உயர்ந்து விளங்குவார்க ளென்று எவரே முற்கூட்டி யுரைத்திருத்தல் கூடும்?

மதீனுவுக்கு ஹிஜ்ரத் செல்லல்

மக்காவிலே நபிகள்பிரானும் மற்றுமுள்ள முஸ்லிம்களும் இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் பட்டுவந்த கஷ்டநஷ்டங்களுக் கெல்லாம் அலீரலி அவர்களும் ஆளாகியே வந்தார்கள்; ஆனால், அப்பொழுதெல்லாம் இவர்கள் ஓரிளம் பிராயத்தினரா யிருந்து வந்தமையின், அவ் வாரம்பகால சம்பவங்குறித்துச் சரித்திராசிரியர்கள் இவரது அத்தியாயத்தில் விவரமான செய்தி யொன்றனையும் வரைந்து வைத்தனரில்லை. நபிப்பட்டம் வந்து பன்னிரண் டாண்டுகள் முடிந்தபின்னர் மக்கத்து மறமாக்கள் செய்யத் துணிந்துவிட்ட அடாத அக்கிரமச் செயல்களெல்லாம் எல்லைகடந்து முகடு முட்டிவிட்ட படியால், முஸ்லிம்கள் சிறுசிறு தொகுதியினராய்ச் சேர்ந்து, மக்கமாநகரைத் துறந்து மதீனுவை (யதுரிபை) நோக்கி ஹிஜ்ரத் சென்றுகொண் டிருந்தார்கள். அந்த ஹிஜ்ரத்தின்போது ஹஜ்ரத் அலீரலி அவர்கள் செய்தகாரியம் மிகவும் பொறுப்புவாய்ந்த—உயிருக்கே ஆபத்தை விளைக்கத்தக்க—மகா துணிகரமுள்ள செய்கையா யிருந்துவந்தது: மற்றெல்லா முஸ்லிம்களும் மதீனுவுக்குப் புறப்பட்டுச் சென்றதன் பின்னர் நபிபெருமானுர்ஸல் ஹஜ்ரத் ஆபூபக்ரைத் தங்களுடனே மக்காவிலிருக்குமாறு நிறுத்திக்கொண் டார்க ளென்பதை நீங்க ளறிவீர்கள்; அவ்வண்ணமே

ஹஜ்ரத் அலீரலி அவர்களையும் நபிகட்டிலகம் தங்க ளுடன்கூடத் தங்கியிருக்குமாறு கட்டளையிட்டுவிட் டார்கள். நபிபெருமான் மக்காவை விட்டுப் புறப் பட்டுச் சென்றதன் பின்னால் அலீரலி அவர்கள் அந்த நகரிலே தங்கி, நபிகள்நாயகத்தின்பால் அதற்குமுன்பு அம் மக்காவாசிகளால் அமானத்தாய் வைக்கப்பட் டிருந்த அடைக்கலப் பொருள்க ளனைத்தையும் அவ ரவர்பால் திருப்பிக் கொடுத்துவிட்டபிறகே மதீனு வுக்குப் புறப்படவேண்டு மென்று ஆஞ்ஞாபிக்கப் பெற்றார்கள். இங்கோர் ஆச்சரியகரமான விஷயத்தை நாம் நன்கு கவனிக்கக் கடமைப்பட் டிருக்கிறோம்: மக்காவாசிகள் ஒருபக்கல் நபிபெருமானாரையும் ஏனை முஸ்லிம்களையும் எல்லை கடந்து இம்சித்துவந்தார்கள்; மற்றொருபக்கல் அவர்கள் தங்களுடைய உடைமைகளை யெல்லாம் "அல் அமீ"னுய அப் பெருமானார் வயமே பத்திரத்துக்காக ஒப்படைத்து வைத்திருந்தார்கள். அந்தக் குறைஷியர் அம் மஹானுபாவரின் நாணயத் தின்பால் அத்துணைப் பெரிய நம்பிக்கை வைத்திருந் தார்க ளென்று நாம் நன்கு தெரிந்து கொள்ளுகிறோம்.

ஹிஜ்ரத்தின் காலத்தில் ஹஜ்ரத் அலீரலி அவர் கட்கு வயது இருபத்துமூன்றே ஆகியிருந்தது; அன் றிரவில், எதிரிகளெல்லாம் நபிகள்நாயகத்தின் விடுதி யைச் சூழ்ந்து முற்றுகையிட்டு, அப்பெருமானார் விடிந்து வெளியில் வருங்கால் மேலேவீழ்ந்து குத்திக் கொலைசெய்து விடுவதென ஆவலுடனே காத்துக்கிடந் தனர். ஆனால், நபிபெருமான்ஸல் அப்பொழுது தங்கள் படுக்கையிலே ஹஜ்ரத் அலீரலியை உறங்கவைத்து விட்டு, அந்த எதிரிகள் கண்ணிற்படாமல், அல்லாஹ்

வினருளால் அவர்கள் மத்தியிலே புகுந்து, அந்நள்ளிரவில் வெளிப்புறப்பட்டு விட்டார்கள். அப்பால் அலீரலி அவர்களே விடியுமட்டும் அப்படுக்கையில் படுத்துக் கண்படை கொண்டிருந்தார்கள்; பின்னர்ப் பொழுது புலர்ந்து இப்பெரியார் துயிலுணர்ந்தெழுந்த பொழுது எதிரிகளனைவரும், இவர்கள் முஹம்மதாகஸல் இல்லாது போய் அலீரலியா யிருப்பதுகண்டு பெரிதும் வியப்புற்றுவிட்டார்கள். எனவே, இவர்கள்மீது அவர்கட்கு வர்மமொன்றும் இல்லாமையாலும், இவர்கட்கு இன்னல் விளைப்பதால் தங்கள் காரியமொன்றும் பலப்பிராப்தி யடையப்போவ தில்லையென் றறிந்தமையாலும் இப்பெரியாரை அவர்கள் வாளா விட்டுவிட்டனர்கள். அந்தக் குறைஷிகுல மறமாக்கள் நபிபெருமானைக் கொன்று, தீனுல் இஸ்லாத்தை வேர்கல்லியெறியப் பார்த்தார்கள்; அது பலிக்காது போய் விடவே, அன்னுர் அலீயைரலி ஒன்றுந் துன்புறுத்த வில்லை. ஆகலான், இப்பெரியார் அம்மக்காவிலே தங்கி, அமானத்துக் குடையவரிடம் அவரவர் அடைக்கலப் பொருளை அவரவர்பால் ஒப்படைத்து விட்டு, அப்பாலுடனே மதீனு நோக்கிப் புறப்பட்டு விட்டார்கள். ஆங்குச் சென்று அலீரலி அவர்கள் நபிபெருமானுர் விடுதியிலே தங்கினுர்கள். பின்னர் ஒவ்வொரு முஹாஜிரும் (மக்காவிலிருந்து ஹிஜ்ரத் சென்றவர்) ஒவ்வோர் அன்ஸாருடன் (மதீனுவில் உதவிபுரிய முன்வந்தவருடன்) சகோதரமுறையிலே தோழர்களாய்ப் பிணைக்கப்பட்ட பொழுது, ஹஜ்ரத் அலீரலியவர்கள் நபிகள் நாயகத்துடனே மேற்கூறிய தோழமைமுறையில் சகோதரராய்ச் சேர்க்கப்பட்டார்

கள். வேருேர் ஆதாரத்தின் பிரகாரம் அலீரலி அவர்கள் ஸஹ்ல் பின் ஹுனைபென்னும் அன்ஸாருடன் சகோதர முறையில் பிணைக்கப்பட்டார்கள் என்று நாம் அறிந்துகொள்ளுகிருேம்.

ஹிஜ்ரத்சென்று முதலாவது, அல்லது இரண்டாவது ஆண்டில், நபிபெருமாஞர்ஸல் தங்கள் இளைய, பிரிய குமாரியான பாத்திமத்துஜ் ஜொஹ்ராரலி அவர்களை அலீரலி அவர்கட்குத் திருமணம் முடித்து வைத்தார்கள். அவ்வைபவத்தின்போது அலீரலி அவர்களுக்குப் பிராயம் 24 அல்லது 25 ஆகி யிருந்தது. பாத்திமாரலி அவர்களது பிராயம் 19 அல்லது 20 ஆகத்தான் இருந்துவந்தது. ஹஜ்ரத் அலீரலி ஓர் எளிய வாழ்க்கையே நடாத்தி வந்தார்கள். மணமகளுக்கு 'மஹர்' கொடுப்பதற்கும் வேறு விவாகச்சம்மானங்கள் செய்வதற்கும் அலீரலி அவர்கள் தங்கள்பா லிருந்த ஒட்டகம், கேடகம், மற்றுஞ்சில பண்டங்கள் ஆகியவற்றை விற்று 480 திர்ஹம்* கொணர்ந்தார்கள். அந்தத் திருமணத்தின் பயனுய், ஹஸன், ஹுஸைன், முஹ்ஸின் என்னும் நாமமுடைய மூன்று குமாரர்களும், ஜைனப் உம்முகுல்தூம் என்னும் பெயர்பூண்ட இருகுமாரிகளும் ஜனிக்கலாயினுர்கள். அவ் வைவருள் முஹ்ஸின் இளம்பிராயத்திலே இறந்துபோயினுர். நபிகள்நாயகத்தின் மற்றக் குமாரிகள் வயிற்றிற் பிறந்த குழந்தைகள் எவரும் நபிபெருமானுக்குப் பிறகு ஜீவித்திருக்கவில்லை. ஆகவே, ஹஸன்ரலி ஹுஸைன்ரலி ஆகிய

**பாத்திமாவுடன் (ரலி) திருமணம்**

---

* ஒரு திர்ஹம் கால்ரூபாய் மதிப்புள்ள நாணயம்.

இவ்விரு பேரர்கள் வம்சத்தில் தோன்றிய சந்ததியார்களே ஸையித் (எஜமானர்) என்னும் கௌரவப் பட்டத்திற்கு உரியவராகின்றனர்.

அலீரலி அவர்களும், பாத்திமாவும்ரலி நகமும் சதையும் போலவும், உயிரும் உடலும் போலவும், மணியும் ஒளியும் போலவும், ஒன்றித்து வாழ்ந்து வந்தார்கள். ஆனாலும், ஒரு சமயம் அவர்களிருவரும் ஏதோ ஒரு சிறு விஷயங்குறித்துப் பிணங்கிக்கொண் டிருந்தார்கள்; ஆகையினால், அலீரலி அவர்கள் கோபத்துடன் வீட்டைவிட்டு வெளியிற்சென்று மஸ்ஜிதின் தரையிலே படுத்துக் கொண்டார்கள்; அதுபொழுது நபிகள்திலகம்ஸல் தங்குமாரியின் இல்லம் சென்றார்கள். அங்கு அலீரலிஅவர்கள் இல்லாமையைக் கண்டு, நபிபெருமான் இவர்களைப்பற்றி விசாரித்தார்கள்; அப்பொழுது பாத்திமாரலி நடந்த விருத்தாந்தத்தை விளக்கிக் கூறினார்கள்; உடனே நபிகள்நாயகம் மஸ்ஜித் சென்று, அங்கே அலீரலி தரையில் வெறும் புழுதியில் படுத்துக்கிடந்ததைப் பார்த்து, "ஏ அபூ துராப்!—(புழுதியில் புரண்டு கிடப்பவரே!) எழுந்திரும்," என்றுகூறி, எழுப்பினார்கள். அன்று முதற்கொண்டு அலீரலி அவர்கட்கு "அபூ துராப்" என்னும் பட்டப்பெயரொன்று வழங்கத் துவங்கிவிட்டது. பின்னால் பாத்திமத்துஜ்ஜொஹ்ராரலி தமது 29-ஆவது பிராயத்திலே ஆயுள்வியோகம் அடைந்துபோய்விட்டார்கள். அப்பால் அலீரலி வேறு மனைவியரை மணந்துகொண்டு, அன்னார்வழியே மற்றும் பல குழந்தைகளையும் பெற்றார்கள்.

"அபூ துராப்" பட்டம் வந்த வரலாறு

இப் பெரியார் இஸ்லாத்தைத் தழுவியபொழுது பத்துவயதே யடைந்திருந்த பச்சிளம் பாலயராய் இருந்து வந்தமையான், ஹஜ்ரத் அபூபக்ர், உமர், உதுமான் போலே ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தின் பிரசாரத்திற்காக அலீரலி என்ன செய்துவந்தார்க ளென்று அறிந்துகொள்ளக் கூடவில்லை. அதுவேயு மின்றி, இப்பெரியார் மேற்கூறியவர்களைப் போலச் செல்வந்த ராகவும் இருந்ததில்லை ; எனவே, அம்மூன்று பெரியார் களைப் போல இவர்களால் இஷாஅத்தே இஸ்லாத்திற் கென்று தனசகாயமும் செய்ய முடியவில்லை. ஆனால், அல்லாஹுத் தஆலா, இவர்கட்கு இணையில்லாத் தேக பலமும், அதற்கேற்ற மனோதைரியமும் கொடுத்தருளி யிருந்தான் ; எனவே, இவ்விரண்டையும் இஸ்லாத்திற் காகத் தத்தம் செய்தற்கு இப்பெரியார் எப்பொழுதுமே பின்வாங்கியதில்லை. தங்கள் தேகபலத்தைக்கொண்டும் மனோதிடத்தைக் கொண்டும் இவர்கள் செய்து காட்டிய அற்புதங்கள் அனந்தம்.

**அலீயின் ரலி தீரம்**

பத்ர் யுத்தத்தின் போதும் ஏனைய யுத்தங்களின் போதும் ஹஜ்ரத் அலீரலி அவர்களே இஸ்லாத்தின் துவஜத்தைத் தாங்கிச் சென்றார்கள். அந்த முதல் யுத்தமாய பத்ர்யுத்தம் நிகழ்த்தப்பட்ட இடத்திலே மூன்று குறைஷிகுல வாலி பர்கள் முன்வந்து, அக்கால அரபிகட் குரிய வழக்கத்திற் கேற்ப முஸ்லிம் படையிலிருந்து மூன்று வீரர்களைக் கைகலந்த தொந்தச் சண்டைக்கு அறைகூவி யழைத்தனர் ; அதுகேட்டு நபிகட்டிலகம்ஸல் அலீரலி ஹம்ஜாரலி உபைதாரலி

**யுத்தங்களில் அலீரலிகாட்டிய தீரம்**

ஆகிய மூவரையும் பொறுக்கிவிட்டார்கள். அந்தத் தொந்தச் சண்டையில் இந்த மூன்று முஸ்லிம் வீரர்களும் அந்த மூன்று குறைஷியரையும் தகைந்துவிட்டார்கள். அப்பால் பொதுச்சண்டை ஆரம்பமாயிற்று; அதிலும் அலீரலி தமக்குரிய சாமர்த்திய முழுதையும் காண்பித்தார்கள். பிறகு ஹி. 3-ஆவது ஆண்டில் நடைபெற்ற உஹுத் யுத்தத்தின்போது இஸ்லாத்தின் கொடியைத் தாங்கிநின்ற முஸ்அப் பின் உமைர் இறந்துபட்டபொழுது, அலீரலி அவர்கள் சட்டென அந்தப் பதாகையைப் பற்றி முன்னேறிச் சென்று எதிரிகளின் (குறைஷியரின்) துவஜந் தாங்கிநின்ற மனிதனை ஒரே வீச்சில் எமலோகம் அனுப்பிவிட்டார்கள்.

அலீரலி அவர்கள் அவ்வாறாக வெல்லாம் காட்டி வந்த, எதற்குமஞ்சாத தீரச்செயல்களைக் கண்ணுற்ற அந்த ஆதிகால முஸ்லிம்கள், லா ப(த்)தா இல்லா அலீ—

**அகம்பாவ வீரனை ஒழித்த விதம்**

"அலீரலியைத் தவிர்த்து(ச் சிறந்த) வாலிப னில்லை" என்று கூறத் தலைப்பட்டுவிட்டார்கள்; இவ்வாக்கியம் ஒரு முஸ்லிம் வீரரால் உஹுத்யுத்தத்தில் முதன் முதலாக உபயோகிக்கப் பட்டதென்று அறியக்கிடக்கின்றது. ஹி. 5-ஆவது ஆண்டில் ஹஜ்ரத் அலீரலி அவர்கள், அம்ர்பின் அப்துவுத் என்னும், அக்கால அரப்நாட்டில் மிக்க பெயர்பெற்று விளங்கிய ஒரு சிறந்த போர் வீரனைத் தொந்தச் சண்டையில் சந்தித்தார்கள். அவ்வீரன் தனது தீரத்தின்மீதும் வீரத்தின்மீதும் அளவிலா அகம்பாவம் கொண்டிருந்தமையான், அலீரலி அவர்களுடனே அந்த மல் யுத்தத்தில் சந்தித்த

பொழுது, இவ்வாறு இறுமாப்புடன் கூறலுற்ருன்: "நீ ஒரு சாதாரண மனிதன்; ஆதலால், உன்னை நான் கொல்ல விழையவில்லை." ஆனால், அலீரலி அவனை நோக்கி, "ஆயின், நான் உன்னைக் கொல்ல விழைகின்றேன்," என்று எதிர்த்துக் கூறினார்கள். அப்பால் நிகழ்ந்த அந்த மல் யுத்தத்தில் அலீரலி அவர்கள், அம்ர் பின் அப்துவுத் என்பானைக் கொன்று வீழ்த்தி விட்டார்கள். பனூ குறைலாக்கள் முஸ்லிம்களால் முற்றுகையிடப்பட்டபொழுதும் இஸ்லாத்தின் துவஜத்தை அலீரலி அவர்களே சுமந்து சென்ருர்கள். ஹி. 6-ஆவது ஆண்டில், கைபரிலிருந்து யூதர்களுக்கு உதவிபுரிவான் வேண்டி அங்குவந்து குழுமிய பனூஸஅத் கூட்டத்தினரை அலீரலி நன்கு முறியடித்துத் துரத்தினார்கள். ஹுதைபிய்யா உடன்படிக்கை வரையப்பட்ட பொழுது, அலீரலி அவர்களே அதற்குரிய "நெட்டெழுத்துக் கார"ராய் விளங்கினார்கள். அந்த உடன்படிக்கையில், "ரஸூலுல்லாஹ்"—ஆண்டவனுடைய தூதர்—என்னும் அடைமொழி "முஹம்மது"க்குப் பின்னால் சேர்க்கப்படக் கூடாதென்று குறைஷியர் வீண்வாது புரிந்தனர். அப்பொழுது நபிகட்டிலகம் தங்களது திருநாமத்துக்குப் பின்னே "அப்துல்லாஹ்வின் குமாரர்" என்று மட்டுமே வரைய இசைந்தார்கள். ஆனால், அலீரலி அவர்கள் அதற்கு முன்பே "ரஸூலுல்லாஹ்" என்னும் சொற்றொடரை எழுதிவிட்டமையான், அதனை அழிக்க மறுத்து விட்டார்கள்; அப்பால் நபிகள் நாதரே தங் கரங்கொண்டு அந்த அடைமொழியை அதிலிருந்து அடித்து விட்டார்கள்.

அலீரலி அவர்கள் செய்துகாண்பித்த எல்லா வகைத் தீரச்செயல்களுள்ளும் தலைசிறந்து விளங்குவது, கைபரிலிருந்த காமூஸ் என்னும் பெயர்போன கோட்டையைக் கைப்பற்றியதேயாகும். யூதர்கள் இந்தக் கோட்டையை மிக்க வன்மையுடனே பத்திரப்படுத்தி வைத்திருந்தார்கள்; அதனை முற்றுகையிட்ட பொழுது, முதலில் நபிபெருமான்ஸல் முஸ்லிம்களின் துவஜத்தை ஹஜ்ரத் அபூபக்ரிடம்ரலி ஒப்படைத் திருந்தார்கள்; அன்று யூதர்களும் முஸ்லிம்களும் கடும் போர் புரிந்தும், அக்கோட்டை முஸ்லிம்கள் கைவயம் வந்து சிக்கவில்லை. அப்பால் நபிகள் திலகம் அந்தப் பதாகையை வாங்கி ஹஜ்ரத் உமர்ரலி அவர்களிடம் ஒப்படைத்தார்கள்; அப்பொழுது முன்னையைப் பார்க்கினும் மிகக் கடுமையான போர் நிகழ்த்தப்பட்டும், அந்தக் கோட்டை ஒரு சிறிதும் அசையவில்லை. அது கண்டு நபிபெருமானார், "நாளைத்தினம் இந்தக்கொடி, இக்கோட்டையைக் கைப்பற்றக்கூடியவரும் ஆண்டவனையும் அவனுடைய தூதரையும் அதிகம் விசுவசிக்கக் கூடியவருமாய—அவரையே ஆண்டவனும் அவனுடைய தூதரும் நேசிக்கின்றனர்—ஒருவரது கரத்திலே ஒப்படைக்கப்படும்," என்று கூறினார்கள். அவ்வாறே மறுநாட்காலையில் நபிபிரான்ஸல் வந்து, அலீரலியைத் தேடினார்கள். அதுபொழுது அலீரலி அவர்கட்குக் கண்ணில் ஏதோ உபத்திரவமென்று அறிவிக்கப்பெற்றார்கள். உடனே நம்பெருமானார்ஸல் அன்னாரை அழைப்பித்து, அவர்களுடைய நேத்திரங்களில் தங்கள் எச்சிலைச் சிறிது எடுத்துத்தடவிப் பிரார்த்தனை

காமூஸ்கோட்டை பிடிபட்ட வரலாறு

யும் புரிந்தார்கள். அக்கணமே அலீரலி அவர்களது கண்ணோய் நீங்கிற்று. அப்பொழுது நபிகள்நாயகம் இஸ்லாத்தின் துவஜத்தை அன்னாரது கரத்திலே கொடுத்தார்கள்; அப்பால் அந்த யூதர்களது கோட்டையும் முஸ்லிம்கள் கைவயமாயிற்று.

மக்கமாநகர் முஸ்லிம்கள் கைவய மாயபொழுது, நபிபெருமானார்ஸல் பதினாயிரம் முஸ்லிம்களுடனே அந்நகரத்துள்ளே பிரவேசித்தார்கள். அது பொழுது இஸ்லாத்தின் பதாகை ஸஅத் பின் உப்பாதா என்பாரது கரத்தில் கொடுக்கப்பட் டிருந்தது; அன்னார் தமக் கதுசமயம் இருந்துவந்த உற்சாக மிகுதியால், "இன்று மக்காவுக்கு இரத்தக்களரியாகும் ஒரு தினமாயிருக்கிறது!" என்று உரக்கக் கூச்சலிட்ட வண்ணம் சென்றார்; இது, நபிகள்நாயகத்தின் விருப்பத்துக்கு நேர்முரணா யிருந்துவந்தமையான், அம் மஹானுபாவர் உதிரஞ் சிந்தலை ஒரு சிறிதும் விரும்பாது, அந்தப் பதாகையை வாங்கி அலீரலி அவர்களது கரத்திலே கொடுத்தார்கள். ஹுனைனில் நிகழ்ந்த யுத்தத்தின் போது, முஸ்லிம் சைன்யத்தின் முக்கியப்பகுதி, எதிரிகளின் கொடிய பாணவர்ஷத்தைச் சகிக்கமுடியாது, பின்னிடையத் தொடங்கிவிட்டது. ஆனால், அது பொழுது அலீரலி அளவற்ற துணிச்சலுடனே அந்த யுத்தகளத்தைவிட்டு அப்பாலிப்பால் அகன்று செல்லாது, அங்கேயே தங்கிநின்று அரும்போர் புரிந்தார்கள். ஆயின், தபூக் படையெடுப்பின்போது மட்டுமே அலீரலி அவர்கள் அதில் கலந்துகொள்ள முடியாது பின் தங்கி விட்டார்கள்; நபிபெருமானது கட்டளைக்கிணங்கியே அலீரலி அதுபொழுது அவ்வாறு மதீ

னுவில் தங்கிவிட்டார்கள். அவ்வண்ணம் பின்தங்கு வதில் அலீரலிக்கு விருப்பமில்லா திருந்தும், நபிபெரு மானரே, "எனக்குப் பின்னுல் நபியெவரும் வரமாட் டார் என்பதைத் தவிர்த்து, மற்றெல்லா விஷயத்திலும் மூஸாவுக்கு ஹாரூன் இருந்துவந்ததே போலத்தான் நீர் எனக்கு இருக்கின்றீர்," என்று வற்புறுத்திக் கூறித் தடுத்து நிறுத்தி விட்டார்கள்.

தபூக்கிலிருந்து திரும்பி வந்தவுடன் நபிகள்திலகம் மக்காவுக்கு ஹஜ்ஜாஜிகளின் கூட்ட மொன்றை ஹஜ்ரத் அபூபக்ரின் தலைமையின் கீழே அனுப்பிவைத் தார்கள். அதுசமயம் அப்பெருமானுக்கு ஆண்டவன்பாலிருந்துஅறிவிப்பொன்று —வஹீ—வந்துசேர்ந்தது: மக்கத்து மற மாக்களாகிய குறைஷியரும் ஏனை அரபி களும் முஸ்லிம்களுடன் செய்துகொண்டிருந்த பரி சுத்த உடன்படிக்கையின் நிபந்தனைகளைமீறி, அம் முஸ்லிம்களை யெல்லாம் துன்புறுத்தத் துணிந்து விட்டமையான், அன்னருடன் இனி நட்புரிமை வைத்துக்கொள்வது அத்துணை உசிதமா யிரா தென்று அந்த 'வஹீ' அறிவித்தது; அதுதான் **அல் பராஅத்**, அல்லது "அத் தௌபா" என்னும் அத்தியாயமாகும். எனவே, இவ்விஷயத்தை அம் மக்காவின்கண் அதுபொழுது குழுமும் எல்லாத் திக்கு அரபிகள்பாலும் அறிவித்துவிட வேண்டுவது அத்தியாவசியமாய்க் காணப்பட்டது. இதனைச்செய்யத் தக்க பெரியார் அலீரலி அவர்களாகவே காணப்பட் டனர்; எனவே, இவர்கள் அந்த ஹஜ்ஜின்காலத்தில், தங்கள்பால் ஒப்படைக்கப்பட் டிருந்த கடமையை

இஸ்லாத்தின் தூதும் போதனையும்

நன்கு நிறைவேற்றி, அரபிகளுடன் அம்முஸ்லிம்கள் செய்துகொண்டிருந்த பழைய உடன்படிக்கை ரத்தாய் விட்டதென்று பகிரங்கமாய்க் கூறினார்கள். ஹி. 10-ஆவதாண்டில் அலீரலி அவர்கள் எமன் வாசிகட்கு இஸ்லாத்தின் நற்போதனையைக் கொண்டுசெல்லுமாறு அனுப்பிவைக்கப் பட்டார்கள். இப்பெரியார் அந்த மாகாணத்துக்குப் புறப்படுமுன்னே நபிபெருமான்ஸல் ஒரு முக்கியமான விஷயத்தை இவர்பால் அறிவுறுத்தி வைத்தார்கள்; அஃதாவது, எதிரிகள் வலியச்சண்டைக்கு வந்தாலல்லது, அலீரலி அவர்கள் எவர் மாட்டும் சுயமே எவ்விதச் சண்டையையும் கிளப்புவது கூடாது. இதனால் அறியக்கிடக்கும் உண்மை யாதெனின், "அல் பராஅத்" என்னும் அத்தியாயம் அருளப்பட்ட பின்னரும், தங்களுடன் முதன்முதலாய் எதிர்த்து வலியச்சண்டைக்குக் கிளம்பும் மனிதர்களுடன் மட்டுமே தற்காப்பினிமித்தம் முஸ்லிம்கள் சண்டைசெய்ய வாளையுருவலா மென்னும் குர்ஆன் ஷரீபிலுள்ள மூலக்கொள்கையினையே நபிகணாயகர்ஸல் இன்னமும் கடைப்பிடித் தொழுகினார்கள் என்பதுதானாகும். ஆகவே, அந்தத் தூதில் அலீரலி அவர்கள் அபரிமிதமான வெற்றியையே பெற்றுவந்தார்கள். இப்பெரியாரது பிரசாரத்தால் ஒரேநாளில் ஹம்தான் என்னும் வர்க்கத்தினர் தீனுல் இஸ்லாத்தைத் தழுவிக்கொள்ளத் துணிந்துவிட்டனர். உடனே அலீரலி அவர்கள் அந்தச் சந்தோஷ சமாசாரத்தை நபிபெருமானுக்கு அறிவித்து வைத்தார்கள்; அதுகேட்டு, நபி கட்டிலகம்ஸல் அக்கணமே அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்து முகத்தான் ஸுஜூதுச்செய்து, சென்னி தரை

யிற்படியச் சிரம் வணங்கினார்கள் ; அப்பால் சிறுகச் சிறுக அந்த எமன் பகுதியிலுள்ள அனைவரும் இஸ்லாத்தில் வந்து சேர்ந்துகொண்டார்கள்.

நபிகள்நாயகம்ஸல் தங்களுடைய இறுதிஹஜ்ஜை நிறைவேற்றிக் கொள்ளப் புறப்படுமுன்பே ஹஜ்ரத் அலீரலி அவர்கள் எமனிலிருந்து திரும்பிவந்து அந்த ஹஜ்ஜாஜிகளுடன் கலந்து கொண்டார்கள். அந்த இறுதி ஹஜ்ஜிலிருந்து திரும்பிவந்து அநேக தினங்களாகா முன்னே நபிபெருமான்ஸல் வியாதியுற்று விட்டார்கள். அவ் வியாதியின்போதெல்லாம் அலீரலி அவர்கள் தங்கள் மாதுலராய குருநாதருக்கு வேண்டிய சிசுருஷைகளனைத்தையும் சாலச் செய்து வந்தார்கள். அதுபொழுதொருநாள் அப்பாஸ்ரலி அலீரலி அவர்களை நோக்கி, "நபி பிரானுக்குப் பிறகு அப் பட்டத்துக்கு வர உமக்கே உரிமையுண்டென்று ஒரு மரணசாஸனம் செய்துவைக்குமாறு நீர் அப்பெருமானார்பால் விண்ணப்பித்துக் கொள்ளும்," என்று கூறித் தூண்டினார்கள் ; ஆனால், இப்பெரியார் அதற்குச் செவிசாய்க்க வில்லை. அப்பால் நபிபெருமான்ஸல் ஆயுள்வியோகம் ஆய்ப்போய் விட்ட பின்பு, அந்த நிர்யாணத்தின் பயனாய் அந்தப் பால்ய முஸ்லிம் குடியரசுக்கு ஆபத்தொன்றும் வாராதவாறு அவ்வரசாங்கக் காரியத்தை அக்கணமே கவனிப்பான் வேண்டி ஹஜ்ரத் அபூபக்ர், உமர்ரலி முதலிய முக்கியஸ்தர்கள் அந்தக் காரியத்தில் ஈடுபட்டிருந்தக்கால், விடுதியில் நபிபெருமானது அபரகிரியைகளுக்குரிய விஷயாதிகளை யெல்லாம் அலீரலி அவர்களே கவனித்து வந்தார்கள் ;

நபிபிரான் நிர்யாணத்தின் பொழுது

அந்தப் பெருமை யனைத்தும் இந்தப் பெரியாரையே பெரிதும் சாரும்.

ஹஜ்ரத் அபூபக்ர்ரலி அவர்கள் கலீபாவாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஆறுமாத காலம்வரை அலீரலி அவர்கள் அந்த கலீபாவிடம் ராஜவிசுவாசப் பிரமாணம் பண்ணிக் கொடுக்கவில்லை யென்று சில சரித்திரங்களில் ஒரு விஷயம் காணப்படா நின்றது. அது மெய்யேயென்று கொள்ளப்படக் கூடு மாயின், அதற்குக் காரணம் அனேகமாய் இவ்வா றிருத்தல் வேண்டும்: நபிபெருமானது நிர்யாணத் தினுல் ஏற்பட்ட திடுக்கத்தாலும் துக்கத்தாலும் மனங் கலங்கிப்போய்விட்ட பீபீ பாத்திமத்துஜ்ஜொஹ்ராரலி அவர்கட்குத் தேறுதலும் சமாதானமும் சொல்லிச் சமனப் படுத்துதற்காக ஹஜ்ரத் அலீரலி அவர்கள் அத்தனை மாதங்கள்மட்டும் இல்லத்துள்ளே இருந் திருத்தல் வேண்டும். அதுவேயுமன்றி, வேருெரு காரணமும் இல்லாது போகவில்லை: நபிகள்திலகத் துக்குச் சொந்தமாயிருந்து, அன்னாரின் ஜீவனோபாயத் திற்கு உதவி புரிந்துவந்த ஒருசிறு தோட்டம் கைபரில் இருந்துவந்தது; அதில் தங்களுக் குரிய பாகத்தை ஹஜ்ரத் பாத்திமாரலி அவர்கள் முதல் கலீபாவிடம் கேட்டார்கள்; அதற்கு ஹஜ்ரத் அபூபக்ர்ரலி நபிமார் கள் வாரிஸ்களுக்கென்று எத்தகைய சொத்தையும் விட்டுச்செல்வது வழக்கமில்லை யெனக் கூறி, பீபீ பாத்திமாவின்ரலி தஃவாவைத் தள்ளிவிட்டார்கள். இதனுலும் அந்தப் பெருமாட்டிக்கு வருத்தம் ஏற்பட்டு விட்டது. அந்த வருத்தத்தைத் துடைத்து, மனச்

கலீபாவுக்கு ராஜவிசுவாசப் பிரமாணம்

சாந்தியை யுண்டுபண்ணும் பொருட்டும் ஹஜ்ரத் அலீரலி அவர்கள் வீட்டைவிட்டு வெளியில் வராமலே இருந்துவிட்டமையான், சில மாதகாலம்வரை இன்னூர் அபூபக்ர்ரலி அவர்கள்பால் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்து கொடுக்கத் தாமதம் ஏற்பட்டிருத்தல் கூடும். ஒருசமயம் ஹஜ்ரத் பாத்திமாரலி நோய்வாய்ப் பட்டக்கால், ஹஜ்ரத் அபூபக்ர்ரலி யோகக்ஷேமம் விசாரித்து வர அன்னவர்பால் சென்றிருந்தார்கள். இதனுல், பாத்திமாவின்ரலி மனத்தாங்கல் சிறிதுபொழுதே இருந்திருத்தல் கூடுமென்று நாம் தெரிந்துகொள்கிறோம். அல்லது மற்றொரு காரணமும் இருந்திருக்கலாம்: நபிகள்நாயகம்ஸல் தேகவியோகமாய பின்னர் ஹஜ்ரத் அலீரலி அவர்கள் குர்ஆன்ஷரீபின் அத்தியாயங்களைக் கால அடைவின் முறையைப் பின்பற்றி அடுக்கி வரிசைப்படுத்திவந்த காரியத்தில் சிலமாதங்களைச் செலவிட்டிருத்தல் கூடும். பாத்திமாரலி அவர்களுடனே கூடியிருந்து அன்னூரின் துக்கத்தைத் துடைத்து வந்ததனுலோ, அல்லது குர்ஆன்ஷரீபின் அத்தியாயங்களை வரிசைப்படுத்தி அடுக்கி வந்ததனுலோ, அலீரலி அவர்கள் சிலமாத காலம்வரை அபூபக்ர்ரலி அவர்கள் கரத்தில் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்துகொடுக்க முடியாது போயிருக்கலாம்; ஆனுல், அபூபக்ர்ரலி அவர்கள்மாட்டு ஹஜ்ரத் அலீரலி அவர்கட்கு உள்விரோதம் இருந்ததென்று சொல்வதற்கொன்றும் ஆதாரமில்லை. எதிரிகள்வந்து மதீனுவைத் தாக்கியபொழுது, அலீரலி அவர்கள் அத் தலைநகரைக் காப்பதில் முக்கியப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். பாத்திமாரலி காலமாயபின்பு, ஹஜ்ரத் அலீரலி

அவர்கள் அரசாங்கத்தின் எல்லாவிதக் காரியங்களிலும் பரியாலோசனைகளிலும் சர்வசாதாரணமாயே கலந்து கொண்டு வந்தார்கள்.

ஹஜ்ரத் அபூபக்ரவர்கள் இறந்துபோய் விட்ட பின்பு, உமர்ரலி அவர்கட்கு ராஜவிசுவாசப் பிரமாணம் செய்துகொடுத்து, அலீரலி அவர்கள் அந்த இரண்டாவது கலீபாவின் ஆட்சியின்போது அரசாங்க மந்திராலோசனைச் சபையிலும் அங்கம்வகித்து, ஆகவேண்டிய காரியங்களைக் கவனித்துவந்தார்கள். எனவே, எந்தவிதமான அரசாங்கக் காரியமும் இந்தப் பெரியாரின் ஆலோசனையில்லாது நடைபெறுவது வழக்கமில்லை. மேலும், ஹஜ்ரத் அலீரலி அவர்களுடைய குமாரியாம் உம்முகுல்தூம் பீபீயை ஹஜ்ரத் உமர்ரலி அவர்கள் மணமுடித்துக் கொண்டமையால், அவ்விருவருக் கிடையிலிருந்த நட்பு இன்னம் பன்மடங்கில் நன்கு முதிர்ந்துவிட்டது. ஆகவே, உமர்ரலி அவர்களது மரணத்துக்குப் பின்னே கலீபாவின் பட்டத்துக்கு வரவேண்டிய பெரியார்கள் அறுவருள் அலீரலி அவர்களும் ஒருவரா யிருந்தார்கள். ஆயின், அதுபொழுது பெரும்பான்மையான வாக்கு ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கட்குக் கிடைத்து விட்டமையால், ஹஜ்ரத் அலீரலி அவர்கள் ஒருசிறிதும் மனக்கசப்பில்லாது அக்கணமே தங்கள் கரத்தை நீட்டி, அந்தப் புதிய மூன்ருவது கலீபாவுக்கு ராஜவிசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்தார்கள். ஆனால், அந்த உதுமான்ரலி அவர்களது ஆட்சியின் இறுதியிலே, கிலாபத்விஷயத்தை ஒருசில விஷமிகள் சேர்ந்து பிரமாதமான காரியமாய்ப் பெருக்கி, அவ் விருவருக்கிடையே

அதையொரு பெரிய மனஸ்தாபத்துக் குரிய விஷய மாய்ப் பண்ணிவிட முயன்று பார்த்தனர். ஆயின், அலீரலி தங்களுக்குரிய கூரிய நுண்ணறிவாலும் பெருந் தன்மையாலும் அந்த விஷமிகளின் பொறியுள் வீழாது தப்பிக் கொண்டார்கள். அப்பால் கலகக்காரர் மதீனுவந்து கலீபாவின் இல்லத்தைச் சூழ்ந்து முற்றுகை யிட்டபொழுது, ஹஜ்ரத் அலீரலி அவர்கள் தங்கள் மூத்தகுமாரராய ஹஸன்ரலி அவர்களை அவ் வில்லத்தின் கடைத் தலையில் காவல்காத்தற் பொருட் டுக் கொண்டுபோய் நிறுத்தினுர்கள்.

அலீரலி கலீபாவாக நியமனம் பெறுதல்

உதுமான்ரலி அவர்களுடைய இறுதிநாட்களில், எதிரிகள்—அந்தக் கலகக்காரர்கள்—மதீனுவுள் வந்து நுழைந்ததினம் முதற்கொண்டே அத் தலைநகரைத் தங்கள் கைவயம் ஆக்கிக்கொண்டார் கள்; அப்பொழுது கலீபாவின் ஆட் சியே அந்நகரில் அஸ்தமித்துவிட்டதே போல் காணப்பட்டது. ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் கொல்லப் பட்டுப் போய்விட்டார்க ளென்னும் செய்தியைக் கேட்டு அவரவரும் வெளியிலே தலைகாட்டாது தத்தம் விடுதிக்குள்ளேயே தலை மறைவாய்ப் பதுங்கி இருந்து விட்டனர்; அதுபொழுது அம் மதீனுநகரில் அராஜகக் கொள்கையே எங்கும் தலைவிரித்துத் தாண்டவ மாடிற்று. அவ்வேளையில் அந்நகரில் வந்திருந்த மூன்று மாகாணக் கலகக்காரருள், இப்னு ஸபாவின் இரக சியச் சூழ்ச்சிக்கு மிகவும் இலக்காய்க்கிடந்த எகிப்து நாட்டிலிருந்து வந்திருந்த மக்களே மிகப் பெரிய செல்வாக்குள்ளவர்களா யிருந்துவந்தனர். அம் மனிதர்

களின் தலைவனாய் விளங்கியவனே மதீனாவின் மஸ்ஜிதில் "பேஷ் இமா"மாய் நின்று தினம் ஐங்காலத் தொழுகையை நடாத்திவந்தான். இத் தன்மைத்தாய அராஜகக் கிளர்ச்சி நிலைமை அம்மதீனாவில் ஐந்து தினங்கள்வரை நடைபெற்றுவந்தது. ஆனால், அந்த மூன்றுமாகாண மக்களும் தமக்குள்ளே, உதுமான்ரலி அவர்களுக்குப் பின்னால் யாரை கலீபாவாய் நியமிப்பதென்னும் விஷயத்தில் அபிப்பிராயபேத முள்ளவர்களா யிருந்துவந்தனர். எனினும், எகிப்தின் மக்களே ஏனை இரண்டு மாகாணவாசிகளைப் பார்க்கினும் செல்வாக்கு மிக்கிருந்தவர்களா யிருந்துவந்தமையால், —அன்னாரின் தலைவனாய் இன்னம் இப்னு ஸபாவே விளங்கிவந்தான்—அவர்கள் முன்வந்து அலீரலி அவர்களையே கலீபாவாக ஏற்படுத்திவிட்டார்கள். நபிகள் நாயகமும் தங்கள் மரணப்படுக்கையி லிருந்தபொழுது, ஹஜ்ரத் அலீயவர்களையே தங்களுக்குப் பின்னே கலீபாவாய் நியமிக்க வேண்டுமென்று தெரிவித்திருந்ததாய் ஒரு விஷயம் அதுபொழுது கூறப்பட்டது. ஆகவே, ஹி. 35-ஆம் ஆண்டு துல்ஹஜ் மாதம் 24-ஆந் தேதியன்று அந்தக் கலகக்காரர்கள் அலீரலி அவர்களையே கலீபாவாக நியமித்து வைத்துவிட்டார்கள். அக்கணமே அனைவரும் இப்பெரியார் கரத்தில் ராஜ விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்தார்கள்; அப்பால் மதீனாவாசிகளுள் அநேகர் எவ்வித ஆக்ஷேபமு மில்லாது அவ்வாறே ராஜவிசுவாசப் பிரமாணம் செய்துகொடுத்து விட்டார்கள். எனினும், அந்தத் தேர்தலை ஓர் எதேச்சாப்பிரியத் தேர்தலென்று கூறுவதற் கில்லை. எதேச்சாத் தேர்தலுக்கு விரும்பி

யிருப்பினும், அதுபொழுது அந்நகரில் அதற்குரிய வசதி யிருந்திருக்க முடியாது. என்னெனின், மதீனாநகர் முழுதுமே அதுசமயம் அவ் வெதிரிகள்வயம் சிக்குண்டு கிடந்தது. ஆனாலும், அப்பொழுது அந்நகரில் எதேச் சாத் தேர்தல் நடைபெற் றிருப்பினும், அப்பொழுதும் அலீரலி அவர்க்ளே கலீபாவாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பார்க ளென்பது ஒருதலை. முன்பு மூன்றாவது கலீபாவாய் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் தேர்ந் தெடுக்கப் பட்டபொழுதும், இறுதிப் போட்டி இவ் விருவருக் கிடையேதான் இருந்துவந்தது. அது பொழுது மூன்றாவது கலீபாவாய் நியமனம் பெறு தற்குத் தகுதிவாய்ந்தவர் அலீரலி அவர்களே யென்று ஹஜ்ரத் உதுமான்ரலி இப் பெரியாருக்குத் தங்கள் வாக்கைக் கொடுத்தார்கள்; அவ்வாறே ஹஜ்ரத் அலீரலி உதுமான்ரலி அவர்களுக்குத் தங்கள் வாக்கை யளித்தார்கள்.

அந்தத் தேர்தலின் காலத்தில் தல்ஹாரலி ஜுபைர்ரலி ஆகிய இருவரைப் பார்க்கினும் அலீரலி அவர்களே அதிகப்படியான வாக்கைப் பெற்றார்கள். தல்ஹாவும் ஜுபைரும் தீனுல் இஸ்லாத்திற்கு எண் ணற்கரிய உதவி புரிந்தவர்களே; ஆயினும், அலீரலி அவர்களே உதுமான்ரலி அவர்களுக்கு அடுத்தாற் போல் நின்றார்கள். ஹஜ்ரத் உமர்ரலி அவர்களுக்குப் பின்னால் கலீபாவாய் வருதற்குரிய அருகதை வாய்ந் தவர் அப்துர்ரஹ்மான் பின் அவ் பென்னும் மற்றொரு பெரியாராவர். உமர்ரலி அவர்களும், அன்னாரையே தங்களுக்குப்பின் கலீபாவாய் வரத்தக்க யோக்கியதை வாய்ந்தவ ரென்று மதித் திருந்தார்கள். ஆகவே,

அன்னூர் உயிருடன் இருந்திருப்பின், இப்பொழுது ஹஜ்ரத் அலீயுடன் அப்பெரியார் போட்டியாய்க் கருதப்பட் டிருக்கலாம்; ஆனல், இதற்கு முன்பே அன்னூர் காலமாய்ப் போய்விட்டார். பாரசீக தேசத்தை இஸ்லாத்தின் கொடியின் கீழ்க் கொண்டு வந்து சேர்த்த ஸஅ தென்பார் பொதுச் சேவையை விட்டு ஓய்வெடுத்துக் கொண்டு போய்விட்டார். எனவே, இப்பால் அலீரலி அவர்கள் மட்டுமே எஞ்சி யிருந்தார்கள். ஆதலால், மதீனு கலகக்காரரர் கைவசம் அகப்பட்டிருந்தும், அப்பொழுது எதாச்சாத்தேர்தல் நடைபெறுதற்கு இடமில்லா திருந்தும், ஒருவரும் அலீரலி அவர்களது நியமனத்தை ஆக்ஷேபிக்கவில்லை.— தல்ஹா, ஜுபைர், முஆவியா போன்றவர்களும் ஒன்றும் ஆக்ஷேபங் கிளப்பவில்லை. எனினும், பின்னுல் நிகழ்வுற்ற சம்பவங்களிலிருந்து, தல்ஹாவும் ஜுபை ரும், அலீரலி அவர்களது கரத்தில் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்துகொடுக்க இஷ்டப்படவில்லை யென்றும், அப்பால் அவர்கள் அவ்வாறு செய்து கொடுத்தது நிர்ப்பந்தத்தினுல்தா னென்றும் நாம் அறிந்து கொள்ளுகிறோம். அவ்விருவரும் முதலில் ஆக்ஷேபித்ததற்குக் காரணம், வேறு காரிய மெதுவும் கவனிக்கப்படு முன்னே ஹஜ்ரத் உதுமான்ரலி அவர் களைக் கொன்றெழித்த குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியதுதா னுகும். அவர்கட்கு அலீரலி அவர்கள்மீது சொந்தக் குரோதம் ஒன்றுமில்லை; இன்னூர்பால் அவர்கள் விசுவாசம் மிக்கவர்களாகவே யிருந்துவந்தார்கள்; இவர் கலீபாவாய் நியமனம் பெற்றதில் அவர்களுக்கு ஆக்ஷேபம் ஒன்றுமே யில்லை.

அலீரலி அவர்கள் கலீபாவாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டதன்பின்னர், இஸ்லாத்தின் சரிதையில் ஒருபுதிய அத்தியாயம் ஆரம்பமாகின்றது. இப் பெரியார் அரசு செலுத்திவந்த அந்த நாலரை வருடங் களும், இஸ்லாமிய இல்லத்தினுள்ளே உள்நாட்டுக் கலகங்கள் நிகழ்ந்துவந்த காலமாகவே காணப்படலாயின. அத் தகைய உள்நாட்டுக் கலகங்களில் பல பெரிய முக்கி யஸ்தர்களெல்லாம் பங்கெடுத்துக்கொள்ள வேண்டிய ஆவசியகம் ஏற்பட்டுவிட்ட தென்னலாம். இதைக் குறித்துத்தான் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் தங்களைக் கொல்ல முனைந்துவந்த அந்தக் கலககோஷ்டி யினருக்கு அதுசமயம் மீட்டும்மீட்டும் அறிவுறுத்தி னார்கள்: "நீங்கள் எனக்கு விரோதமாய் ஒருமுறை வாளை உருவிவிடுவீர்க ளாயின், அப்பால் முஸ்லிம் களுக்குள்ளே பிளவென்னும் ஓட்டையை உண்டு பண்ணியவ ராவீர்கள்; அப்பால் அவ்வோட்டை அடைபடாது." அம்மஹான் அவ்வாறு தீர்க்கதிருஷ்டி யுடன் கூறியது இப்பொழுது நிதர்சனமாய் வந்து விளையத் தொடங்கிவிட்டது. உதுமான்ரலி அவர்களது ஆட்சிவரை இஸ்லாத்துள் பிளவு ஏற்பட்டதில்லை. இப்னு ஸபா கிளப்பிய குழப்பங்க ளெல்லாம், இஸ்லாத்தின் செல்வாக்கைத் தகர்த்தெறியச் சதியா லோசனைக்காரர்கள் இஸ்லாமிய வேஷந் தாங்கிச் செய்யத் துணிந்த தீய காரியங்களே யாகும். அத் தகைய கொடிய எண்ண முடையவர்கள் வலையில் வேறுசில சுயநய எண்ண முடையவர்களும்—முஸ்லிம் கள்—வீழ்ந்துவிட்டார்கள்.

**கோட்டைக் குள்ளே கத்திவீச்சு**

ஆகவே, ஹஜ்ரத் அலீரலி அவர்கள் கலீபாவாய் உயர்ந்ததும் இஸ்லாத்தில் பிளவென்பது பிரத்தியக்ஷ உருக்கொண்டு கிளம்பிவிட்டது. ஆதலினுல், முதல் மூன்று கலீபாக்களின் காலத்தில் காணப்பட்ட சங்க டங்களைவிட எளிதாய்க் காணப்படவில்லை இந்த நான்காவது கலீபாவின் ஆட்சியின்போது தோன்றிய பிளவும். ஹஜ்ரத் அபூபக்ரின் காலத்தில் அரப்நாடு முழுதிலும் கலகம் கிளம்பிற்று; ஹஜ்ரத் உமரின் காலத்தில் பாரசீகநாடும் ரோமராஜ்யமும் பகைத்துக் கிளம்பின; ஹஜ்ரத் உதுமானவர்கள் நயவஞ்சகக் காரருடன் மல்லாட வேண்டியவ ராஞர்கள். அந்த மூன்று கலீபாக்களும், அவரவர் காலத்தில் ஏற்பட்ட சங்கடங்களை அவரவருக்குரிய மனவுறுதியுடனும் ராஜதந்திரத்துடனும் அழித்து ஒழித்துவிட்டார்கள். அவ்வாறே இந்த அலீரலி அவர்களும், தங்கள் காலத் தில் தோன்றிய சங்கடத்தை அதிக தைரியத்துடனும் தந்திரத்துடனும் சமாளித்துக் கொண்டார்கள்.

உதுமான்ரலி அவர்களைக் கொன்றவர்கள் மீது பழிவாங்க வேண்டுமென்ற கிளர்ச்சி

மதீனுவில் வந்துகூடிய கலக கோஷ்டியினர், தாங்கள் செய்ய நாடிய காரியத்தைச் செய்துமுடித்து, அலீரலி அவர்களையும் பட்டத்தில் ஏற்றி வைத்து விட்டு, அவரவரும் தத்தம் ஊருக்குத் திரும்பிப் போய்விட்டார்கள்; அங் கங்கே சென்று தாங்கள்செய்த பராக் கிரமத்தின் பிரக்கியாதியைத் தங்கள் தங்கள் மக்களிடம் சொல்லிச் சந்தோஷ மடையச் செய்வான் வேண்டித் துரித மாய்ப் புறப்பட்டுவிட்டனர். அதற் குள்ளே ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் கொல்லப்

பட்ட விஷயம் நாடெங்கும் துரிதமாய்ப் பரந்தோடத் தொடங்கிவிட்டது. அவர்களுடைய உதிரந் தோய்ந்து கிடந்த உடைகளும், அப்பெரியாரின் மனைவிக்குரிய நறுக்குண்ட விரல்களும் அப்படியே திமஷ்கில் இருந்து வந்த முஆவியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இஸ்லாமிய ராஜ்யத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும், கலீபாவைக் கொன்றவர்களைக் கண்டுபிடித்துப் பழி வாங்க வேண்டுமென்ற கூக்குரல் கிளம்பிற்று; மதீனாவிலும், அதனைச் சூழ்ந்துள்ள பகுதிகளிலும் அதே விதமான கிளர்ச்சியே காணப்பட்டது. ஆனால், அவ்வாறு செய்வது எளிய காரியமாய்ப் புலப்படவில்லை. என்னெனின், அந்த மூன்ருவது கலீபாவைக் கொன்றொழித்தவர் ஒருசில தனி மனிதர்களா யிருந்திருப்பின், அவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பது எளியகாரியமா யிருந்திருக்கும். ஆனால், அந்தக் கொலை செய்த ஆசாமிகளுக்குப் பின்னால் பெருந்திரளான மக்கள் பக்கபலமாய் நின்றுகொண் டிருந்தனர்; பஸரா, கூபா, புஸ்தாத் ஆகிய மூன்று முக்கிய ஸ்தலங்களிலும் வசித்துவந்த அநேகமனிதர் அந்தச் சதியாலோசனையில் கலந்தே காணப்பட்டனர். ஆகவே, அப் பெருந் தொகையான மக்களைத் திரட்டிக் கொண்டு வந்து தண்டிப்ப தென்பது ஒரு சாமான்னியமான காரிமா யில்லை.

ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களே அந்தக் குழாத்தினர்மீது தங்களது வாளையோச்சத் தயங்கினின்றார்கள். என்னெனின், அவ்வாறு செய்யத் துணிவது, தேசமெங்கணும் கலகத்தைத் தூண்டிவிடுவதாயே முடியும். அப் பெரியாரின் கொலைக்குப் பின்னே

கொந்தளிப்புச் சிறிது தணியலாயிற்று. குற்றவாளி களும் பொதுஜனப் பார்வையில் பெரிதும் லஜ்ஜையுற் றுக் காணப்பட்டனர்: எற்றுக்கெனின், அரசாங்க முறையில் சில சீர்திருத்தங்களைச் செய்துவைக்க வேண்டுமென்னும் வியாஜத்துடன் கிளம்பியதாய்த் தங்களைக் கூறிக்கொண்ட அம்மனிதர் இப்பால் தங்க ளுக்குரிய சொந்த சுபாவத்தில் சுயமே ஒளிர்ந்து நின்றனர். அவர்கள் தங்களுடைய கரங்களை இரத்தக் கறை யாக்கிக்கொண்டு விட்டார்கள்; எவருடைய இரத்தம்? ஒருவிதக் குற்றமுமற்ற ஓர் உத்தமரின் உதிரம்! ஒரு விலையேறப்பெற்ற மஹானது உதிரம்! ஆகவே, மதச்சட்டம், ஆசாரச்சட்டம் ஆகிய இரண்டன்வாயிலாய்ப் பார்க்குமிடத்தும், அக்கொலை பாதகர் தூக்குமேடைக்கு அனுப்பப்படற் குரியவர்க ளென்பது வெள்ளிடை விலங்கலாகும். ஆனால், அக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இழுத்துக்கொண்டு வந்து, நியாய விசாரணைக்கு உட்படுத்துவ தென்பது ஓர் அபாயகரமான செய்கையாகவே காணப்பட்டு வந்தது; என்னெனின், அவ்வாறு செய்வதாயிருந்தால், அக்கால இஸ்லாமிய ராஜ்யத்தின் நாலுதிக்குக்களிலும் ஏககாலத்தில் எல்லையற்ற தொல்லைகளை வலிய வருவித் துக் கொள்வதாகவே வந்து விளைந்திடுதல் கூடும். அதனால் ராஜ்யமுழுதும் பிளவுகளும் பெரும்பெருங் குழப்பங்களுமே மூண்டுகொண் டிருக்குமென்பது திண்ணம். எனவே தான் ஹஜ்ரத் அலீரலி அவர்கள் பெரிதும் நிதானித்துப் பார்த்துத் தயங்கிக்கொண் டிருந்தார்கள். இப்பெரியார் பட்டத்துக்கு வந்தபின்பு ஜுபைரும் தல்ஹாவும் முன்வந்து, உதுமான்ரலி அவர்

களைக் கொன்றவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுமென்று வற்புறுத்தியக்கால், ஹஜ்ரத் அலீரலி அவர்கள் கூறியவிடை இதுவாகும்: "அவ் விஷயத்தில் யான் ஏதோ கவலையில்லா திருப்பதாய் நீங்கள் கருதிவிட வேண்டாம்; ஆனால், அதனைச் செய்ய இயலாதவனாகவே யான் இதுசமயம் இருந்துவருகிறேன்; இஃதொரு சோதனைக்குரிய காலமா யிருந்துவருகிறது. எனவே, இப்பொழுது ஏதேனும் சிறிது சமாதானபங்கம் ஏற்படக்கூடுமாயின், பதவீகளும் அயல் நாட்டு மக்களும் கலகஞ்செய்து கிளம்பிவிடுவார்கள்; அப்பால் அரபுநாடு முழுமையுமே மீண்டும் அஞ்ஞான அந்தகாரத்துள் போய் ஆழ்ந்துவிடுதல் கூடும். அம் மக்களெல்லாம் இன்னம் நம் கையின்கீழ் வந்து நன்கமைய வில்லை. ஆதலால், இந்தச் சங்கடத்தினின்று மீட்சிபெற ஆண்டவன் எந்த விதமான வழியையும் காண்பிக்கும் வரையில் நீங்கள் பொறுத்திருங்கள்."

**புதிய கவர்னர்கள் நியமனம்**

ராஜீய விஷயங்களில் அடிக்கடி ஒரு விதமான சிக்கல்கள் தோன்றுவதுண்டு. சிற்சில பிரச்சினைகள் அரசாங்க விஷயத்தில் எழுந்துவிடுங்கால், அவ்வரசாங்கக் காரியத்தில் மிகவும் நல்லெண்ணங் குடிகொண்ட இரண்டு பெரியமனிதருக்கிடையே ஒரேவிதஅபிப்பிராயம் தோன்றுவதற்கு இடமில்லாது போய்விடும். அப்படிப்பட்ட சங்கடமான நிலைமையே ஹஜ்ரத் அலீரலி அவர்கள் முன்பும் முளைத்துவிட்டதென்னலாம். ஒருபக்கல் பெருந் தொகுதியான மக்கள், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களைக் கொன்ற பாதகர்

களைச் செவ்வனே சிக்ஷிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண் டிருந்தார்கள். ஆனால், மற்றொருபக்கல் ராஜீய விஷயம் அம்முஸ்லிம் குடியரசில் அதிகமான சிக்கல் களில் அகப்பட்டுச் சுழன்றுகொண் டிருந்தமையால், அத்தகைய கொலை பாதகர்மீது வாளையோச்சுவ தென்பது அக்கால முஸ்லிம் உலகின் சமாதான நிலையையே குலைத்துவிடும்போல் திண்ணிதாய்க் காணப்பட்டது. உதுமான்ரலி அவர்களைக் கொன்றவர்களைச் சட்ட நியதிப்படி செவ்விதாய்த் தண்டிக்க வேண்டுமென்று அலீரலி அவர்கள் அதிகம் கவலைகொண் டிருந்தார்க ளென்பதில் கிஞ்சித்தும் சந்தேகம் இருக்கத் தேவை யில்லை. ஆனால், அதனைச் செய்யத் துணியுமுன்னர் இஸ்லாமிய ராஜ்யத்தின் ஒற்றுமையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டுவது ஆவசியகமென்று இப்பெரியார் எண்ணி யிருந்தார்கள். இதற்காகச் செய்ய வேண்டிய முதற்காரியம், உதுமான்ரலி அவர்களால் நியமிக்கப் பெற்றிருந்த மாகாணாதிபதிகளுக்கு விரோதமாய்க் கிளப்பப்பட்டுக் கிடந்த ஆக்ஷேபங்களைச் சமாதானத் துடன் சமனப்படுத்தி வைக்க வேண்டியதாகவே காணப்பட்டுவந்தது. அதுவேயுமன்றி, முஆவியாரலி திமஷ்கிலிருந்து ஏதேனும் குதர்க்கம்செய்யக் கூடுமென் றும் ஹஜ்ரத் அலீரலி ஐயப்பாட்டினைக் கொண்டிருந் தார்கள். ஆதலினால், இப்பெரியார் எல்லா மாகாணாதி பதிகளையும் மாற்றிவிடுவதென்றே தீர்மானம் செய்து கொண்டு விட்டார். ஆனால், முகைராரலி கலீபாவை நோக்கி, அவ்வாறு செய்யவேண்டா மென்று ஆலோசனை கூறினார். முதன்முதலாய் எல்லா மக்களும் ஏகோபித்து நான்காவது கலீபாவாய் அலீரலியை

ஏற்றுக்கொள்ளும் வரை பொறுத்திருப்பது சாலச் சிறந்ததென்பதுதான் அன்னூர்கூறிய அறிவுறுத்தலாகும். ஒருவாறு குடிமக்களெல்லாம் இந்த கலீபாவை ஆமோதித்துக் கொண்டபின்னே அலீரலி அம் மாகாணுதிபதிகளைத் தமது விருப்பம்போல் நடாத்திக் கொள்ளலா மென்றும் அந்த முகைராரலி சுட்டிக் காட்டினூர். ஹஜ்ஜு செய்வான் வேண்டி மக்காவுக்குச் சென்றிருந்த இப்னு அப்பாஸ்ரலி அவர்களும், மதீனுவுக்குத் திரும்பிவந்தவுடன், முகைராரலி கூறியவாறே ஆலோசனை கூறினூர்கள். அன்றியும், முஆவியா சம்பந்தப்பட்டவரை அன்னுரை எவ்வாற்ருனும் சீண்டிவிட வேண்டாமென்றும் குறிப்பாய்ச் சுட்டிக்காட்டினூர்கள். என்னெனின், முஆவியாரலி ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களால் அவ் வுத்தியோகத்தில் அமர்த்தப் பெற்றவரில்லை; அன்னூர் ஹஜ்ரத் உமர்ரலி அவர்களது காலத்திருந்தே அந்தச் சிரியாநாட்டின் மாகாணுதிபதியாய் நியமிக்கப் பெற்றிருந்தார். ஆகவே, அன்னுரை வாளா விட்டுவிட வேண்டுமென்பது இப்னு அப்பாஸின்ரலி ஆழ்ந்த அபிப்பிராயமாகும்.

ஆனுல், ஹஜ்ரத் அலீரலி அவர்கள் மீக்கூறிய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள்; இதற்குக் காரணம் இப் பெரியாருக்குத்தாம் தெரிந்திருக்குமென்று யாம் எண்ணுகிருேம். ஒருகால் முஆவியாவினுல் ஏதேனும் அபாயம் விளையக்கூடுமென்று இப்பெரியார் ஐயங்கொண்டு, அத்தகைய ஆபத்தை முளையிலே கிள்ளியெறிய எண்ணி யிருக்கலாம்; அல்லது எல்லா மாகாணுதிபதிகளும் மாற்றப்பட வேண்டுவதுதான் சாலச்சிறந்ததென்று கொண்டு

விட்டபடியால், அவர்களுள் ஒருவரைமட்டும் நீக்கி விடுவ தென்பது அனுவசியமான குறைபாட்டிற்கு இடமுண்டாய் விடுமென்று அலீரலி அவர்கள் எண்ணி யிருக்கலாம். எனவே, இப்னு ஆமிர் என்பார் திருப்பி யழைக்கப்பட்டு, அவரது ஸ்தானத்தில் உதுமான் பின் ஹனீப் என்பார் கவர்னராய் நியமிக்கப்பெற்ருர். அவ் வாறே கைஸென்பார் எகிப்திற்கு மாகாணுதிபதியாய் அனுப்பப்பட்டு, அன்னுர் அங்குள்ள நிலைமையைச் சமனப்படுத்தி வைத்தார். எனினும், கூபாவிலும் திமஷ்கிலும் கவர்னரா யிருந்தவர்கள் கலீபாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்து விட்டார்கள். மீட்டும் அலீரலி அவ்விரு மாகாணுதிபதிகளுக்கும் தாக்கீ தனுப்பிக் கீழ்ப்படியுமாறு வேண்டிக்கொண் டார்கள். அப்பால் கூபாவின் கவர்னராயிருந்த அபூ மூஸாமட்டும் அதற்கிணங்கினுர்; ஆனல், சிறிதுகாலந் தாழ்த்தி முஆவியா வென்பார் மதீனுவிற்கு ஒரு தூதரை அனுப்பிவைத்தார்; அவர்வயம் ஒரு கடிதத் தைக் கொடுத்தனுப்பி யிருந்தார்; அஃது ஒன்றும் வரையப்படாமல் வெறுங் காகிதமாகவே காணப்பட் டது. கலீபா அவர்கள் அந்தத் தூதரை வினவியக் கால், அன்னுர் ஹஜ்ரத் அலீரலி அவர்களுக்குக் கொடுத்த விடையாவது: “ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களது உதிரந்தோய்ந்த அங்கியைக் கண்டு திமஷ்க் நகரில் 60,000 மக்கள் கண்ணீர் வடித்துக் குழுமிவிட்டனர்; அதற்குச் சரியான பழிக்குப்பழி வாங்கவேண்டு மென்றும் அன்னுர் ஆர்ப்பரித்து நிற்கின்றனர். அவர்க ளெல்லாரும், நீங்களே அக் கொடுங்கொலைக்குக் காரணமென்றும் குற்றம் சாட்டு

கின்றனர்.'' அதுகேட்டு, அலீரலி அவர்கள் ஆச்சரிய மடைந்தவர்களாய், "அன்னார் என்னையா அதற்குக் காரணஸ்தனென்று குற்றஞ் சாட்டுகின்றனர்? அந்தக் கொலைபாதகர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்குரிய சிக்ஷையை அளிப்பதற்குப் போதியபலம் இன்னம் என் கைக்குக் கிட்டவில்லை யென்பதை நீர் பார்க்கவில்லையா?'' என்று கூறினார்கள். அந்தத் தூதர், தாம் கொணர்ந்த செய்தியை அறிவித்துவிட்டு வெளியிற் சென்றபோது, அன்னாரைக் கொன்றுவிட வேண்டுமென்று சிலர் ஆரவாரம் செய்தார்கள். அப்பொழுது அத்தூதர், தம்மைத் தற்காக்க வந்திருக்கும் சைன்யம் சமீபத்திலேயே வந்து பாசறை இறங்கி யிருப்பதாய்ப் பயமுறுத்தாட்டினார்.

உதுமான்ரலி அவர்களைப் போலவே, அலீரலி அவர்களும் தங்கள் உறவின் முறையாளர்களுக்கே மாகாணாதிபதி உத்தியோகம் அளித்துவந்தார்களென்ற ஒரு குற்றச்சாட்டுக் கிளம்பிற்று. இதற்குக் காரணம், இந்தப் பெரியார் தங்களுக்குப் பிடித்தமில்லாத உத்தியோகஸ்தர்களை வைத்துக் கொண்டு நல்ல நம்பிக்கையுடனே திறமையான நிர்வாகம் நடத்த முடியாதென்று ஒருகால் ஆசங்கை கொண்டுவிட்டதாகவே இருக்கலாம். இப் பெரியாரின் கலீபாநியமன விஷயமே ஒருவாறு ஊசலாடிக்கொண் டிருந்தமையால், இவ்வாறு இன்னார் ஐயுற்றதில் அதிசயம் ஒன்றுமில்லை; அல்லது அதற்குக் காரணம் இவ்வாறாகவும் இருக்கலாம்: இப்னு ஸபாவால் தூண்டிவிடப்பட்ட கலககோஷ்டியார் ஹஜ்ரத் அலீரலி அவர்கள் மீதே அபிமானம் பாராட்டி வந்தமையால், அத்தகைய கலகக்கூட்டத்

427—10

தாரின் ஆத்திரத்தை அடக்கிவைப்பான் வேண்டி அவ்வாறு அலீரலி தங்கள் பந்துமித்திரர்களையே கவர்னராய் நியமித்திருத்தல் கூடும்.

முஆவியாவுக்கு ஷாம்தேசத்தில் மிக்கசெல்வாக்கு இருந்துவந்தமையால், அன்னார் தமது உத்தியோகத்தை விடமுடியா தென்று மறுத்து விட்ட பாவனையிலே ஒழுகிக் கொண்டார். இத்தகைய மனப்பான்மையை ஹஜ்ரத் அலீரலி வாளா விட்டுக் கொண்டு சும்மா இருத்தல் சாலா தன்றே? தரைப்படை, கடற்படை ஆகிய வெல்லாம் தமது கைவயம் இருந்து வந்ததே அன்னாருக்குப் பெரியதொரு தைரியத்தை ஊட்டிக்கொண் டிருந்தது. உதுமான்ரலி அவர்களது கொலைக்குப் பழிவாங்க 60,000 மனிதர்கள் ஆர்ப்பரித்து நிற்பதாய் முன்னமே செய்தி யனுப்பி விட்டார். கலீபாவை அணுத் துணையும் மதியாது, முஆவியா ஒரு வெறுங் காகிதத்தையே இந்த இஸ்லாத்தின் தலைவரது சன்னிதானத்திற்கு அனுப்பி, அவமானமும் செய்து விட்டார். ஆகவே, அத்தகைய அறைகூவலையும் அகம் பாவத்தையும் கண்டு, அலீரலி அவர்கள் வாளா இருப்பது முடியாது. சிரியாநா டென்னப்படும் சீரிய ஷாம்தேசம் அவ்வாறு கலகஞ்செய்து கிளம்புவதை எந்த இஸ்லாத்தின் நண்பனும் அதுகாலை விரும்பியிருக்க மாட்டான். எனவே, அந்தக் கலகத்தை அடக்கியொடுக்க வேண்டுவது கலீபாவின் முதற்காரியமாய்க் காணப்பட்டு வந்தது. முஆவியா அவ்வாறு கலீபாவுக்கு விரோதமாய் முறைத்துநிற்பது இஸ்லாத்

முஆவியாவுக்கு விரோதமாய் யுத்தமுஸ்தீப்

தின் ஒற்றுமைக்கே உலைவைப்பதாய் முடியுமென்று கலீபா அவர்கள் ஓர் அரிய சொற்பொழிவு ஆற்றி வைத்தார்கள். கலகவித்து ஒருமுறை ஒரு மாகாணத்தில் முளைகண்டுவிடுமாயின், அது மற்ற மாகாணங்களுக்கும் வெகுசீக்கிரம் கொடிபடர்ந்து சென்றுவிடுமென்று இப்பெரியார் நன்கு தெரிந்துகொண்டார்கள்; அவ்வாறே ஒவ்வொரு மாகாணமும் கலகம் செய்து சுயேச்சையை அடைந்து விட்டால், அப்பால் இஸ்லாத்தின் ஏகஒற்றுமைக் குரிய வல்லமை அஸ்தமித்துப் போகு மென்பது கண்கூடாய்க் காணப்பட்டது. எனவே, ஷாம் தேசக் கலகம் உறையினின்று வாளையுருவாமல் ஒருவித நல்ல முடிபுக்கு வருமென்று எண்ணுதற்கு இடமில்லை. யுத்தசன்னைகத்துக் குரிய இறுதிமிரட்டலும் முஆவியாவி னிடத்திருந்து கலீபாவிடம் வந்து சேர்ந்துவிட்டது. ஆதலால், இனி அம் மாகாணுதிபதியுடன் யுத்தத்தைக் கிளப்ப வேண்டுவதல்லாமல் வேறுவழியொன்றும் மதீனுவில் அதுகாலைக் காணப்பட வில்லை. எனவேதான், யுத்தமுஸ்தீபுகள் அத்தலைநகரின்கண்ணே அதிவிமரிசையாய் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன.

ஹஜ்ரத் அலீரலி கவனிக்கவேண்டியிருந்த கஷ்டம் அஃதொன்றேதா னென்று எண்ணி விடாதீர்கள். இதற்குமுன்னே கூறியிருப்பதேபோல் தல்ஹாவும் ஜுபைருங்கூட, இந்தப் புதிய நான்காவது கலீபாவின் கவனத்தை முதன் முதலாக ஈர்க்கக்கூடியது, ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களைக் கொலை புரிந்தவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்கவேண்டியதுதா னென்று வற்புறுத்தத் தொடங்கினர்கள். ஆனல், அலீரலி

அவர்கள், அத்தகைய குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கு அதுவன்று தக்கசமய மென்று அவ் விருவர்பாலும் எத்துணையோ சமாதானம் எடுத்துக் கூறினார்கள். எனினும், அந்தச் சமாதான மெல்லாம் தல்ஹாவுக்கும் ஜுபைருக்கும் ஒரு சிறிதும் மனத்திருப்தியை அளித்திற்றில; ஆகவே, அவ்விருவரும் மக்காவை நோக்கிப் புறப்பட்டு விட்டார்கள்; இடைவழியில், மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜுசெய்து திரும்பிய ஹஜ்ரத் ஆயிஷாரலி அவர்களைச் சந்தித்து, மதீனாவில் நடைபெற்ற விருத்தாந்தத்தை யெல்லாம் விளக்கமாய் அறிவித்துவைத்தார்கள். மதீனாவில் நிலைமையொன்றும் திருப்திகரமாயில்லை யென்றும், குழப்பமே எங்கும் நிறைந்து தாண்டவமாடுகின்ற தென்றும் அவர்கள் அறிவித்து வைத்தார்கள். பொதுமக்களோ, சாதாரணமாய் நன்மையினின்று தீமையைப் பகுத்தறியக் கூடாதவராயிருந்தனர்; அன்றியும், அவர்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ளவும் போக்கற்றுக் கிடந்தார்கள். ஆதலினால், பீபீ ஆயிஷாரலி அவர்களும் அன்னாருடன் சேர்ந்துகொண்டு மக்கத்திற்கே திரும்பிச் சென்று விட்டார்கள்.

**உதுமான்ரலி கொலைக்குக் கொலை பழி வாங்க வேண்டுமென்று ஆயிஷாவும்ரலி தல்ஹாவும்ரலி ஜுபைரும்ரலி வற்புறுத்தல்**

ஆங்குச் சென்றவுடனே எல்லா ஜனங்களும் அவர்களைச் சூழ்ந்து நெருங்கிக் கொண்டார்கள். ஹஜ்ரத் ஆயிஷாரலி குர்ஆன் ஷரீபிலிருந்து கீழ்க்காணும் ஆயத்தை அம்மக்கள் முன்னே ஓதிக்காண்பித்தார்கள்:

"நன்னம்பிக்கை கொண்டவர்களுள் இரு கக்ஷியினர் சண்டைசெய்து கொள்வார்களாயின், அவர்களுக் கிடையில் நீங்கள் சமாதானத்தைச் செய்து வையுங்கள். ஆனால், அவர்களுள் ஒரு கக்ஷியார் மற்றொரு கக்ஷியாருக்கு விரோதமாய்த் தீங்கிழைப்பார்களாயின், அவ்வாறு தீங்கிழைப்பவர்களுடன், அன்னார் ஆண்டவனது கட்டளைக்குத் திரும்பும்வரை, சண்டை செய்யுங்கள்; அப்பால் அவர்கள் அவ்வாறு திரும்புவார்களாயின், அவர்களுக்கிடையே நியாயத்துடன் சமாதானத்தைச் செய்துவைத்து, நீங்கள் பக்ஷபாதமில்லாமல் ஒழுங்காய் நடந்துகொள்ளுங்கள்; என்னெனின், அவ்வாறு பக்ஷபாதமில்லாது ஒழுங்குடன் நடப்பவர்களை ஆண்டவன் நேசிக்கின்றான்"—(49 : 9).

அக்கால முஸ்லிம்கள், தங்கள் உயிர்களெல்லாம் ஆண்டவனுக்காகவே இருப்பனவென்று எண்ணினார்கள். ஆகவே, ஆண்டவனது ஆணையின்முன்னே அம் மக்கள் தங்கள் சுகபோகங்களனைத்தையும், ஏன், தங்கள் உயிர்களையுங்கூட ஒரு திரணமாகவே மதித்து வந்தார்கள். இஸ்லாத்தின் விரோதிகளுடன் சண்டை செய்ய வேண்டிய கடமையின்பக்கல் அன்னார் அழைக்கப்படுங்கால், அந்த ஆண்டவனது ஆணைக்கிணங்கித் தங்கள் உயிர்களை அத்தியந்த சந்தோஷத்துடனே அர்ப்பணம் செய்துவந்தார்கள். இப்பொழுதோ, இஸ்லாத்தின் எல்லைக்குள்ளே இருகக்ஷியார் தோன்றி, ஒருவரோடொருவர் பகைமை பூண்டு விட்டார்கள்; அதற்கென்று வாளாயுதத்தையும் உருவத் துணிந்து நின்றார்கள்; அப்பால் தங்கள் உயிர்களையும் அல்லாஹ்

வின் பாதையில் அர்ப்பணம் செய்யத் தீர்மானித்து விட்டார்கள். உதுமான்ரலி அவர்களது உதிரஞ் சிந்தியதற்குப் பழிக்குப்பழி வாங்கியே தீரவேண்டு மென்று அன்னவர்களால் தீர்மானம் செய்யப்பட்டது. அந்தக் கொலைபாதகர்களை வாளா விட்டுவிடுவதென் பது, அத்தகைய கொலைகாரரின் அயோக்கியத்தனத் திற்கு நன்மதிப்புக் கொடுத்ததாகவே கருதப்படும். அவர்கள் கலீபாவா (அரசாங்கத் தலைவரா)கிய ஹஜ்ரத் உதுமான் அவர்களையே அகாரணமாய்க் கொன்றுவிட் டார்கள்; அப்பால் அவர்கள் கண்வைத்த எந்தப் பெரிய சிறிய மனிதன்மீதும் தங்கள் வாளாயுதத்தை வீசத் துணியலாம். ஆதலின், அந்தக் கொலை பாதகர் களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுவது அத்தியாவசியமாய் விட்டது.

ஹஜ்ரத் அலீரலி அவர்கள் இவ் விஷயத்தில் ஏதே னும் முயற்சி யெடுத்துக்கொள்ளக் கூடுமென்று பீபீ ஆயிஷாரலி சிறிது காலம்வரை தாமதித்திருந்து பார்த் தார்கள். ஆனால்,அவ்வாறொன்றும் நடைபெறுதுபோய் விட்டதோடு நில்லாது, முஆவியாவுக்கு விரோதமாய் மதீனாவில் யுத்த சன்னாகம் செய்யப்பட்டு வருவதைக் கேள்வியுற்று ஹஜ்ரத்தே ஆயிஷாரலி ஏமாற்ற மடைந்துபோய் விட்டார்கள். அப்பால் மக்காவி லிருந்தவர்க ளெல்லாம் ஒன்றுகூடிப் பரியாலோசனை செய்து, பீபீஆயிஷாரலி தல்ஹாவுடனும் ஜுபைருட னும் முதன்முதலில் பஸராவைநோக்கிப் புறப்படுவ தென்று தீர்மானம் செய்யப்பட்டது. இதனால், பீபீ ஆயிஷாரலி அவர்களுக்கு ஹஜ்ரத் அலீரலிமீது பொரு மையேனும் பகைமையேனும் இல்லையென்றும், குற்

றஞ் செய்தவர்களைத் தண்டிப்பதே அன்னாரின் முக்கிய நோக்கமா யிருந்ததென்றும் நாம் நன்கு தெரிந்து கொள்கிறோம். கலீபாவின்மீது ஹஜ்ரத்தே ஆயிஷாரலி விரோதங் கொண்டிருந்தா ரேனும், தல்ஹாவேனும் ஜுபைரேனும் அலீரலி இடமிருந்து கலீபாபதவியைப் பிடுங்கிவிட வேண்டுமென்று தீயநோக்கம் கொண்டிருப்பாராயின், அவர்கட்கு அத்தகைய சூழ்ச்சியை நிறைவேற்றிக் கொள்ளுதற்கு எளியமார்க்கமொன்று இல்லாது போய்விடவில்லை. என்னெனின், அம்மூவரும் மக்காவைவிட்டு மதீனாவிற்கு நேரே செல்ல வேண்டிய யதுதான் பாக்கியாயிருந்தது. வடக்கில் முஆவியா 60,000 ஆட்படையை வைத்துக்கொண்டு தபித்து நிற்கிறார். அலீரலி அவர்களுக்கு விரோதமாய் மதீனாவிலும் ஒரு கிளர்ச்சி பொங்கிக்கொண் டிருந்தது. அலீரலி அவர்களின் அதிகாரம் எங்கும் அங்கீகரிக்கப் பட்டு அங்கங்கே இன்னம் அமைதி நிலவவில்லை. அவ்வாறிருந்தும், கலீபாவின் தலைமைஸ்தானமாகிய மதீனாவிலோ, நிரந்தர சேனை ஒன்றுமில்லை. ஆகவே, அம்மூவரும் கிலாபத்பதவியைப் பற்றிக்கொள்ள நாடியிருப்பார்களாயின், அன்னார் நேரே மதீனாவின்மீது சென்றிருக்க வேண்டியதுதான்! ஆனால், அவர்களது நோக்கம் அதுவா யிருந்ததில்லை. அவர்கள் அலீரலி அவர்களுக்கு விரோதமாய் எத்தகைய சூழ்ச்சியும் செய்ததில்லை ; ஆயின், உதுமான்ரலி அவர்களைக் கொன்றவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுவதே அன்னாரின் முக்கிய நோக்கமா யிருந்துவந்தது. எனவேதான், கைப்பற்றிக் கொள்ளுதற்கு எளிதாயிருந்த மதீனாவை நோக்கிச் செல்வதை விடுத்து, அம்மூவரும்

பஸராவை நோக்கியே புறப்பட்டார்கள்; அதுவும் அலீரலி அவர்கள் அதிகாரத்துக்கு வந்து சரியாய் நான்கு மாதகாலம் ஆய்விட்டபிறகே அவ்வாறு செல்ல லாயினுர்கள். அவர்களது நோக்கம், பஸராவிலுள்ள கொலைகாரர்களை முதன்முதலாய்த் தண்டித்துவிட்டு, அப்பால் கூபாவுக்கும் எகிப்துக்கும் சென்று, ஆங்கிருந்து வந்த கொலைகாரர்களையும் கண்டுபிடித்து நியாயம்செலுத்த வேண்டியதாகவே காணப்பட்டது.

ஆயிஷாரலி தல்ஹாரலி ஜுபைர்ரலி அலீரலி ஆகியவர்களெல்லாம் மனிதர்களே யாதலின், அன்னுர் குற்றமிழைக்கக் கூடாதவ ரென்று கூறப்படுவது கூடாது. ஆகவே, அவர்கள் பிழைகள் செய் திருக்கலாம்; ஆனுல், அவர்களுடைய நோக்கத்தில் பிழையொன்றும் காணப்படவில்லை யென்பது உறுதியே யாகும். முதல் மூவரும் இஸ்லாத்தில் முளைத்தெழுந்த விஷமத்தைத் தடிந்து சீர்திருத்தம் செய்துவைக்கவே கிளம்பினுர்களல்லது, ஒருவருக்கும் சொந்தச் சுயநயம் ஏதொன்றும் இருந்தது கிடையாது. உதுமான்ரலி அவர்கள் கலீபாவாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் தல்ஹாவும் ஜுபைரும் கலீபாவின் பதவிக்காகப் பொறுக்கி யெடுக்கப்பட்ட அறுவருள் இருவரா யிருந்தார்கள். ஆனுல், அவர்கள் உதுமான்ரலி அலீரலி அவர்களுக்காகத் தங்கள் உரிமைகளை அதுபொழுது விட்டுக் கொடுத்துவிட்டார்கள். இப்பால் உதுமான்ரலி கொல்லப்பட்ட பின்னர் அலீரலி அவர்களே தல்ஹாவுக்கேனும், ஜுபைருக்கேனும் விட்டுக் கொடுத்து, அன்னவருக்கே ராஜவிசுவாசப் பிரமாணமும் செய்து

அன்னுரது நோக்கப் பரிசுத்தம்

கொடுக்க விழைந்து நின்றார்கள்; ஆனாலும், அவ்விரு வரும் கலீபா பதவியின் பொறுப்பனைத்தையும் சுமந்து கொள்ள விழைந்தனரில்லை. அலீரலி அவர்கள் கலீபா ஸ்தானத்தை ஏற்றுக்கொண்ட அன்று முதற் கொண்டே தல்ஹாவும் ஜுபைரும் உதுமான்ரலி அவர் களைக் கொன்றவர்களைக் கண்டுபிடித்துச் சிக்ஷிக்க வேண்டுமென்றே பிடிவாதம் பிடித்து வந்தார்கள். இஃது அன்னாருக்குப் பின்னால் தோன்றிய குயுக்தி யென்று ஒருவரும் நினைத்துவிட வேண்டாம்.

பீபீ ஆயிஷாரலி கலீபா பட்டத்திற்கு ஆர்வங் கொண்டு அதனிமித்தம் சூழ்ச்சி செய்தனரென்று எவரும் கூறத்துணியார். முன்னொரு முறை நயவஞ்ச கர்கள் (முனபிக்கீன்கள்) ஆயிஷா பிராட்டியாரைக் குறித்து அவதூறு கிளப்பியகாலத்தில் அலீரலி முன் னின்று அப் பிராட்டியாரின் கண்ணியத்திற்காகப் பரிந்துபேச வில்லையென்னும் குறையை மனத்துள் வைத்துக்கொண்டு அந்தப் பிராட்டியார் இந்த நான் காவது கலீபாவின்மீது சொந்தக்குரோதம் கொண் டிருந்தார்களென்று சொல்லுகிறவர்களும் உண்டு. அதுபொழுது நபிகள்நாயகம்ஸல் அலீரலி அவர்களைக் கலந் தாலோசித்தபோது, இப்பெரியார் நபிகள் தில கத்தைப் பார்த்து, அந்தப் பிராட்டியாருடன் துணை யாய்வந்த பணிப்பெண்ணைக் கூப்பிட்டு விசாரிக்குமாறு கூறியதைத் தவிர்த்து வேறெவ்விதத்திலும் அலீரலி அந்த விசாரணையில் கலந்துகொண்டது கிடையாது. இதற்காக ஆயிஷா பிராட்டியார் அலீரலிமீது வைஷம் யம் கொண்டுவிட்டார்களென்று கூறக் கூடுமாயின், அந்த அவதூற்றில் முக்கியப் பங்கையெடுத்துக்கொண்

டிருந்த ஹஸ்ஸான், மிஸ்தாஹ் போன்ற தலைவர்களை ஆயிஷாரலி ஒருபோதும் மன்னித்திருப்பது முடியாது. அப் பிராட்டியாரின் கண்ணியத்தைப் புண்படுத்தும் காரியத்தில் முதன்மையான ஸ்தானத்தை வகித்திருந்த அத்தகைய விரோதிகளை யெல்லாம் பீபீ ஆயிஷாரலி பெருந்தன்மையுடனே மன்னித் திருக்குங்கால், மீக் கூறியவண்ணம் அலீரலி அவர்கள் ஒருசிறு ஆலோசனை கூறியதற்காக அந்தப் பிராட்டியார் அவ்வளவு கால மட்டும் இப்பெரியார்மீது குரோதங்கொண் டிருந்தார்க ளென்று கூறுவது கூடாத காரியமேயாகும். அது வேயுமன்றி, இப்பொழுது அன்னாரது நடக்கையைக் கவனிக்குமிடத்து, அப் பிராட்டியாருக்கு அலீரலிமீது க்ஷாத்திரம் சிறிதும் இருக்கக்கூடு மென்று அணுத் துணையும் ஐயுறுதற்கு இடமில்லையே இல்லை. என் னெனின், ஆயிஷாரலி பிராட்டி கேட்ட கேள்வியை மற்றும்பல பெரியார்களும்—ஆண்களும் பெண்களும் —கேட்டுக்கொண்டே யிருந்தார்கள். அவ்வாறு விடுக் கப்பட்ட வினவைப் பூர்த்திசெய்து வைக்கும் பொருட்டே, நான்குமாத காலம்வரை காத்திருந்து பார்த்து, அதுவரை இந்த நான்காவது கலீபா அந்தக் கொலைகாரர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்காம லிருந்ததுகண்டு, ஆயிஷாரலி தல்ஹாரலி ஜுபைர்ரலி பஸராவை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர் கள் அவ்வாறு சென்றதன் நோக்கம் உதுமான்ரலி அவர்களைக் கொன்றவர்களைக் கண்டுபிடித்துச் சிக்ஷிப்ப தாகவே இருந்ததல்லது, வேறு கலீபா பட்டத்தின்மீது ஆசைகொண் டிருந்ததாய்க் காணப்பட வில்லை. அந்த வயது முதிர்ந்திருந்த, எத்தகைய குற்றமும் இழைத்

திராத, நிரபராதியாயிருந்த மூன்ருவது கலீபாவை வேண்டுமென்றே சற்றும் இரக்கமில்லாது கொலை செய்துவிட்டுச் சென்ற குற்றவாளிகளைக் கண்டு பிடித்து மிக்க நல்ல முறையிலே தண்டிப்பதே முஸ்லிம் களின் முதற்கடமையென்று அம்மூவரும் மெய்யாகவே நம்பினுர்கள்.

நாம் முன்னம் கூறிய அந்தக் குர்ஆன் ஆயத்தும் (49:9) கலீபாவுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து கிளம்பி அன்னுரை அகாரணமாய்க் கொன்றெழித்த வர்களை யெதிர்த்துச் சண்டையிட வேண்டுமென்றே வலியுறுத்திக் கூறிக்கொண் டிருக்கிறது. இமாம் முஹம்மதவர்கள் எழுதியுள்ள "முவத்தா" என்னும் கிரந்தத்தில் ஒரு விஷயம் வரையப்பட்டுள்ளது; அதில், மேற்கூறிய ஆயத்தின் தாத்பரியத்தை உல்லங்கனம் செய்வது ஒருசிறிதும் கூடாதென்று ஆயிஷாரலி அவர் கள் கூறியதாய்க் கூறப்பட்டுள்ளது. ஆயிஷாரலி அவர் களுடைய சகோதரர் முஹம்மத் பின் அபூபக்ரும் உது மான்ரலி அவர்களுக்கு விரோதமாய்க் கிளர்ச்சிசெய்து கிளம்பிய முக்கியஸ்தருள் ஒருவரா யிருந்து வந்தார்; ஆனுலும், அதனைப் பொருட்படுத்தாமலே அந்தச் சகோதரியார் கொலைகாரரைத் தண்டிப்பான்வேண்டி, பஸரா நோக்கிச் சென்ருர். அந்தப் பிராட்டியாரது மனம் ஒரே விஷயத்திலேதான் ஈடுபட் டிருந்தது: அஃதாவது, அந்தக் குர்ஆன் ஆயத்தில் கூறப்பட்டுள்ள வண்ணம் அதிக்கிரமக்காரர்களை யெதிர்த்துப் போர் புரிந்து, இஸ்லாமிய ராஜ்யத்தில் முஸ்லிம்களுக்குள்ளே சமாதானத்தையும் சமரசத்தையும் நிலைநிறுத்துவ தாகும். அதுவேதான் தல்ஹா, ஜுபைர் அவர்களின்

முக்கிய நோக்கமாகவும் இருந்துவந்தது. ஆனால், அவ்வாறு அம்மூவரும் செய்யத்துணிவதாலே இஸ்லாத்துக்குள்ளிருக்கும் ஏகசகோதர ஒற்றுமையானது இல்லாமற் போய்விடுமென்று இந்த நான்காவதுகலீபா அவர்களே அதிகம் வேண்டிக்கொண்டார்கள். எனினும், இதற்கு அம்மூவரும் செவிதாழ்த்தவில்லை. அவர்கள் அவ்வாறு அதுசமயம் ஒரே மூர்த்தன்னியமாய் நின்றதில் அவர்களது தீர்மானம் தவறாயிருக்கலாம். ஆனால் அவர்களது உள்ளக்கிடக்கை மட்டும் மிகவும் பரிசுத்தமுள்ளதாகவே இருந்துவந்ததென்பதில் ஒருசிறிதும் ஐயங்கொள்ளுதற்கு இடமில்லை. அவர்களுடைய பிடிவாதத்தால் ஆயிரக்கணக்கான உயிர்கள்நஷ்டமடைந்தபோதினும், அவர்களது செய்கை, பொதுப்படையாய் நோக்குமிடத்து, அப்பொழு திருந்துவந்த ராஜீய நிலைமைக்கு ஒரு நன்மையான முடிபையே கொண்டுவந்து கொடுத்திருக்கிறது. எனினும், பிறகு பீபீ ஆயிஷாரலி அவர்களே அவ்வாறு தாங்கள் கிளம்பியது தவறென்று உணர்ந்து வருந்தியிருக்கிறார்கள்; இதனால் அவர்கள் செய்து கொண்ட தீர்மானம் தவறென்பது நன்கு புலனாக வில்லையா? எனவே, இச் சம்பவத்திலிருந்து ஆயிஷாரலி அவர்கள்மாட்டு நாம் வைத்துள்ள நன்மதிப்பு இன்னம் பன்மடங்கில் பெருக்கெடுத்தே வருகிறதென்று கூறலாம். அந்தப் பரிசுத்த ஆன்மாக்கள் மூன்றும் குர்ஆன் ஷரீபின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, தாங்கள் மெய்யென்று கருதியதைச் செய்தே முடிக்கத் துணிந்து முன்வந்தார்கள்; அதற்காகத் தங்களுக் கிடைத்த கஷ்ட நிஷ்டுரங்களை யெல்லாம் சகித்துக் கொண்டு, தங்கள் உயிர்களையும் திரணமாய்

மதித்துவிடத் துணிந்து நின்றார்கள். ஆனால், தங்கள் தீர்மானம் தவறான தென்று கண்டுகொண்ட வுடனே தங்கள் பிழையை உணர்ந்து வருந்துவா ராயினார்கள். அரசாங்க ஒழுங்கின்படி பார்க்கப் புகுமிடத்து, அலீரலி அவர்கள் வாளா இருந்தது பெருந்தவறே யாயினும், ஆயிஷாவும், தல்ஹாவும், ஜுபைரும் கலீபா அவர்களையே பின்பற்றி இருத்தல் வேண்டும்; கலகக்காரர்களையும் கொலைசெய்த வர்களையும் தண்டிக்கும் பொருட்டு இம்மூவரும் பிரத்தியேகமாய்க் கிளம்பியிருத்தல் கூடாதன்றோ? கலீபாவுக்குரிய அதிகாரத்தை இவர்கள் மேற்கொண்டிருத்தல் சிறிதும் தகாதே. ராஜ்ஜியத்தில் நியாயம் வழங்கிச் சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டுவது சட்டப்படி நியமனம்பெற்ற கலீபாவின் கடமையாயே யிருந்துவருகிறது. எனினும், ஆயிஷாரலி அவர்களும் மற்றிருவரும் செய்துகொண்ட தீர்மானம் ஒரு தவறான தீர்மானமே யாயினும், அன்னாரின் உள்ளம் மட்டும் நன்னோக்கங் குடிகொண்டதாகவே இருந்துவந் திருக்கிறது; ஆகவே, ஆண்டவனும் அவர்களது நோக்கத்தைக் கொண்டு, செய்கையைத் தவறானதென்று கொள்ளத்துணியான்.

ஹஜ்ரத் அலீரலி அவர்கள் கலீபாவாய் நியமனம் பெற்று நான்காவது மாதத்தில் ஆயிஷாரலி தல்ஹாரலி ஜுபைர்ரலி ஆகியோரின் தலைமையின்கீழ் ஒரு சேனா சமூகம் மக்காவைவிட்டு, பஸராவைநோக்கிப் புறப்பட்டது. அவ்வாறு அவர்கள் சென்ற மார்க்கத்தில் ஒருசிலர் ஒருசிறு குட்டத்தைக் கண்டார்கள்; அந்தக் குட்டம் 'ஹவ்வாப்' என்று அழைக்கப்பட்டது. அது பொழுது நாய்களின் குரைப்பு அங்கிருந்து

கேட்டது ; உடனே ஆயிஷாரலி அவர்களுக்கு நபிகள் நாயகம்ஸல் கூறியிருந்த ஒரு தீர்க்கதரிசனம் நினைவிற்கு ஓடிவந்தது : அஃதாவது, ஹவ்வாபி லுள்ள நாய்கள் அப்பெருமானாரின் மனைவியருள் ஒருவரைப் பார்த்து ஒரு காலத்தில் குரைக்கும் என்பதாயிருந் தது. அவ்வாறு ஞாபகம் வந்தவுடனே ஹஜ்ரத்தே ஆயிஷா அவர்கள் பின்னி டைந்து சென்றுவிட முற்பட்டார்கள். ஆனாலும், பல மனிதர்கள் முன் வந்து, ஹவ்வாபின் குட்டம் அஃதல்லவென்று சாக்ஷி யங்கூறத் துவக்கினார்கள்; ஆதலினால், அந்தப் பிராட்டி யார் அங்கிருந்து திரும்பிவிட வேண்டா மென்றும் கேட்டுக் கொண்டார்கள். அப் பெருமாட்டியார் ஒன் றுஞ்செய்ய இணங்காவிட்டாலும், அவர் பிரசன்னமா யிருப்பதே தங்களுக்கெல்லாம் தைரியத்தை ஊட்டு மென்று அவர்கள் குறையிரந்து கொண்டார்கள்.

ஆயிஷாரலி பஸராவைக் கைப்பற்றல்— ஹி. 36, ரபீஉல் ஆகிர் (கி. பி. 656, அக்டோபர் மாதம்)

அவ்வாறு ஒரு சைன்யம் பஸராவை நோக்கிப் புறப்பட்டுவிட்ட தென்னும் விஷயத்தை இந்நான்கா வது கலீபா அவர்கள் கேள்வியுற்றவுடனே, முன்னே செய்திருந்த ஏற்பாட்டின்படி தங்கள் சைன்யத்தை யழைத்துக்கொண்டு, ஷாம்தேசத்தை நோக்கிச் செல் லாது, பஸராவை நோக்கிப் புறப்பட் டார்கள். அதற்கு முன்பே ஆயிஷாரலி தாங்கள் கோரிய இடத்திற்குச் சென்று சேர்ந்து விட்டார்கள். பஸராவின் எல் லைப்புறத்தில் ஹஜ்ரத் ஆயிஷாரலி வந்து தங்கியபொழுது அந்நகரத்து அரசப் பிரதிநிதி இரண்டு

முஸ்லிம்களிடைச் சமாதானத்தை உண்டுபண்ணுவதே கடமை

தூதுவர்களை யனுப்பி, அந்தப் பெருமாட்டியார் அங்கு வந்து சேர்ந்த காரணம் யாதென விசாரித்துவரச் சொன்னார். அதற்கு விடையில் அப்பெருமாட்டியார், முஸ்லிம்களுக்கிடையில் சமாதானத்தையும் சச்சரவின் மையையும் நிலைபெறுத்தவே தாங்கள் அங்குஅவ்வாறு விஜயஞ்செய்ததாய்க் கூறினார்கள்; அப்படிச் செய்ய வேண்டுவது ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண்ணின் மீதும் அத்தியாவசியக் கடமையென்றும் தெரிவித்தார்கள். இன்னம், அந்தக் கலககோஷ்டியார் மதீனாவை எவ்வாறு தாக்கினார்களென்றும், அந்நகரில் எவ்வாறு கலகத்தை யுண்டுபண்ணினார்களென்றும், எவ்வண்ணம் யாதொரு குற்றமுமற்ற அந்த மூன்றாவது கலீபாவை அவர்கள் அகாரணமாய்க் கொன்றார்களென்றும், எவ்வண்ணம் ஏனைமக்களின் உடைமைகளைக் கொள்ளையிட்டு எல்லாரையும் துன்புறுத்தினார்களென்றும் விளக்கிக் காண்பித்தார்கள். ஆயினும், அந்நகரத்து அதிபதி பஸராவை அப்பெருமாட்டியாரிடம் ஒப்புக்கொடுக்க மறுத்து, தமக்குரிய சேனைகளுடனே ஆயிஷா<sub>ரலி</sub> பிராட்டி நகரத்துள் பிரவேசிக்காதவாறு தடுத்து வைப்பான்வேண்டி எதிர்கொண்டு சென்றார். இறுதியில் அவ்விரு திறத்தாரின் சைன்யங்களும் ஒன்றுடனொன்று தாக்கிக்கொள்ள எத்தனித்த பொழுது, ஆயிஷா<sub>ரலி</sub> அவர்கள் மீட்டுமொரு முறை தாங்கள் அங்கு விஜயஞ்செய்தது உதுமான்<sub>ரலி</sub> அவர்களை வதைபுரிந்தவர்களைப் பிடித்துக்கொண்டு போவதற்காகத்தான் என்று விளக்கிக் காண்பித்தார்கள். அப்பிராட்டியார் அதுபொழுது பேசிய பேச்சிலிருந்து கீழ்க்காணும் ஒருசில வாக்கியங்களை வாசித்துப் பார்ப்

பீர்களேல், நீங்கள் அதன் உண்மையை அறிந்துகொள் வீர்கள் :

" உதுமான்ரலி அவர்களைக் குறித்தும், அவர்களுடைய உத்தியோகஸ்தர்களைக் குறித்தும் ஜனங்கள் குற்றங்கூறி வந்தார்கள். அவர்கள் மதீனாவிற்கு வந்து எங்களுடனே கலந்து ஆலோசனைபுரிவார்கள். நாங்கள் எங்களுக்குத் தெரிந்த புத்திமதியைச் சொல்லி யனுப்புவோம்; அதன்மேல் சமாதானத்தையும் சட்டத்தையும் குலைக்கக் கூடாதென்னும் நல்லெண்ணத்துடன் அவர்கள் திரும்பிச் செல்வார்கள். உதுமான்ரலி அவர்களைக் குறித்து அன்னார் கூறிய குறைமுறைகளை யெல்லாம் நாங்கள் சீர்தூக்கிப் பார்த்த பொழுது, அந்த உதுமான்ரலி குற்றமற்றவ ராகவும், ஆண்டவனுக்கு அஞ்சி நடப்பவராகவும், சத்தியசந்த ராகவும் இருந்ததைக் கண்டோம் ; அன்றியும், இந்தக் கலகக்காரர்கள் பாபிகளாகவும், துரோகசிந்தனை குடிகொண்டவர்க ளாகவும், பொய்யர்களாகவுமே காணப் பட்டனர். அவர்களுடைய ஹிருதயங்களுக்குள்ளே வேறொன்றை மறைத்து வைத்துக்கொண்டு, தங்கள் உதடுகளால் பிறிதொன்றைச் சொன்னார்கள். அவர்களுக்குப் போதிய பலம் கிட்டியவுடனே குற்றமற்ற உதுமான்ரலி அவர்களது இல்லத்தினுள்ளே எத்தகைய தக்க காரணமு மில்லாது பலவந்தமாய் நுழைந்து, சட்டப்பிரகாரம் சிந்தக்கூடாத அந்தக் குற்றமற்ற இரத்தத்தைச் சிந்தினார்கள். அவர்கள் அபகரிக்கக் கூடாததைக் கொள்ளையிட்டு அபகரித்துக் கொண்டார் கள். அவர்கள் மரியாதையுடன் நடந்துகொண்டிருக்க

ஆயிஷாரலி பிராட்டியார் பிரசங்கம்

வேண்டிய புண்ணிய பூமியைப் பரிசுத்தக் குறைவுள்ள தாய்ச் செய்துவிட்டார்கள். இப்பொழுது கேளுங்கள்! இனி நாம் அலக்ஷியமாய் இருந்துவிட முடியாத காரியம் நம்முன்னே என்ன இருக்கிற தென்றால், உதுமான்ரலி அவர்களைக் கொன்றவர்களைக் கண்டுபிடித்து, ஆண்டவனது சட்டம் நிலைபெறுத்தப்படுவதே யாகும்.''

ஆகவே, அவ்வாறு ஆயிஷாரலி பஸராவை நோக்கிச்சென்றது சண்டைசெய்தற்கோ உதிரம் சிந்துதற்கோ அன்றென்பது செவ்விதாய் அறியக்கிடக்கின்றது. ஆனால், பரஸ்பரவிவாதத்தால் ஒருமுடிபை ஏற்படுத்துவதே அப்பிராட்டியின் நோக்கமாகும்.

**இராவேளையில் சைன்யத்தைத் தாக்குவதா**

ஆயிஷாரலி அவர்களது அந்தரங்க நோக்கத்தின் பரிசுத்தத்தைக் கண்டு பஸராவாசிகளுள் சிலரும் அந்தப் பெருமாட்டியின் கக்ஷியில் சேர்ந்துகொண்டார்கள். பிறகொரு நாளும் அந்தச் சைன்யங்கள் ஒன்றையொன்று எதிர்த்தபடியே பாடிவீடு செய்துகொண் டிருந்தன. ஆனால், ஆயிஷாபிராட்டியார் தமதுசைன்யம் வாளை உருவக்கூடாதென்று மிகக்கடுமையான கட்டளையிட்டு வைத்தார்கள். எனினும், பஸரா வாசிகளுள் ஒருசில விஷமக்காரர்கள் இல்லாது போய்விடவில்லை. அவர்கள் கலகத்தைக் கிளப்பிவிட ஏதேனும் இடுக்கு இருக்கிறதா வென்று துருவிக்கொண் டலைந்தார்கள். அவர்களுள் ஒருவன் முன்வந்து, மக்காவின் சைன்யத்தைத் தாக்கினான். உடனே ஆயிஷாரலி தமது சைன்யத்தைப் பின்னிடையச்செய்து, மறுநாளன்று வேறோரிடத்தில் பாசறையடித்துக் கொண்டார்கள். அப்பொழுதும் பஸராவின்

விஷமிகள் சும்மா இருந்துவிட வில்லை. அவர்களுள் ஒருவன் ஆயிஷா பிராட்டியார்மீது நீசத்தனமுள்ள அசப்பியங்களை யெல்லாம் தூற்றத் துணிந்து, அதற்கு முன்னே எரிந்துகொண்டிருந்த தீயில் எண்ணெயை வார்க்கத் துவக்கினுன். அப்பால் பஸரா வாசிகள் (சைன்யத்தார்) பொதுப்படை யாகவே ஆயிஷாரலி அவர்களது படையைத் தாக்கத் தொடங்கிவிட்டார் கள். அப்பொழுதும் ஆயிஷாரலி அவர்கள், தாங்கள் சண்டை செய்ய வரவில்லையென்று பிரகடனப் படுத்தி ஞர்கள். ஆனல், பஸராவின் சைன்யத்தில் விஷமிகள் பலர் கலந்திருந்தமையால், ஆயிஷாபிராட்டியின் சமா தான ஏற்பாடுகளை யெல்லாம் பயன்பெருதவாறே பழுதுபடுத்தி விட்டார்கள். ஆதலினுல், அந்த யுத்தம் நிகழவேண்டிய தாயிற்று; அஃதாவது, ஆயிஷாரலி அவர்களது சேனை தற்காப்பி னிமித்தமாயே நிர்ப்பந் தத்தின்கீழ் வாளாயுதத்தை உருவிற்று. அதுபொழுது நிகழ்ந்த யுத்தத்தில் பஸராவாசிகள் அதிகமான சங்க டத்தை அடைந்து விட்டமையால், சமாதானம் செய்து கொள்ள அப்பால் விரும்பினுர்கள். அந்தச் சமாதான உடன்படிக்கை, தல்ஹாவும் ஜுபைரும் கலீபாஅவர் களுக்கு நிர்ப்பந்தத்தின் கீழ்தானு ராஜவிசுவாசப் பிர மாணம் செய்து கொடுத்தார்களென்று கண்டறிவான் வேண்டித் தூதுவனெருவன் மதீனுவிற்கு அனுப்பப் பட வேண்டுமென்னும் நிபந்தனையின்மீதே ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு பலவந்தம் நிகழ்ந்திருந் தால், பஸராவை ஆயிஷா பிராட்டியாரிடம் அந்நகர வாசிகள் ஒப்புக்கொடுத்து விடல் வேண்டும்; அத் தகைய பலவந்தம் அவ்வா றில்லாவிடின், அம்மூவரும்

வலியவே பஸராவைவிட்டு வெளியேறிவிடல் வேண்டும். அதற்கிணங்கத் தூதுவனொருவன் மதீனாவிற்கு அனுப்பப்பட்டான்; அவ்விடத்தில் ஒரேவிதமான அபிப்பிராயம் காணப்படாமல், இருகக்ஷிகளுக்கும் சாதகமான சாக்ஷியம் கிடைத்தது. ஆனாலும், பெரும்பான்மையோரின் அபிப்பிராயப் பிரகாரம் நிர்ப்பந்தமே நிகழ்ந்திருந்ததாய்த் தெரியவந்தது. எனினும், அத்தூதுவன் பஸராவுக்குத் திரும்பிவந்த பின்னால் ஒருவிதமான முடிபும் ஏற்படாது போய்விடவே, அதுதான் தருணமென்று விஷமக்காரரர்கள் இராவேளையில் ஆயிஷாரலி அவர்களது சைன்யத்தைத் தாக்கினார்கள். எனினும், அவர்கள் தோற்கடிக்கப்பட்டு, கி.பி. 656-இல் அக்டோபர் மாதம், 17-ஆம் தேதியன்று ஆயிஷாரலி பெருமாட்டியின் சைன்யம் பஸராவைக் கைவசப்படுத்திக்கொண்டு விட்டது.

மீக்கூறிய விஷயங்களை யெல்லாம் ஊன்றிப் பார்க்குமிடத்து, முஸ்லிம்கள் தமக்குள்ளே ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்ளக்கூடா தென்றே ஹஜ்ரத் ஆயிஷாரலி அவர்கள் விரும்பியிருந்தார்களென்று நாம் நன்குதெரிந்து கொள்ளுகிறோம். ஆனால், எதிரிகள் குழாத்தில் ஒருசாரார் இருந்துகொண்டு ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களைக் கொலைசெய்து ஒழித்ததோடு திருப்தியடைந்து போகாது, மேன்மேலும் குட்டிக்கலகங்களைக் கிளப்பி, இஸ்லாமிய இராஜ்ஜியத்தின் செல்வாக்கையே சீரழித்துவிடப் பார்த்தனர். அதில் சிக்கிக்கொண்டிருந்த துரதிருஷ்டம் யாதெனின், அந்தக் கலக கோஷ்டியினர் தங்கள்

ஆயிஷாவுக்குரலி யுத்தம்நிகழ்த்த விருப்பமில்லை

அந்தரங்க எண்ணம் பூர்த்தியடைவான் வேண்டி ஹஜ்ரத் அலீரலியின் கக்ஷியை ஆதரித்து நிற்பதாய்ப் பாசாங்குசெய்து வந்தனர். பின்வரும் விஷயங்கள் நமக்கு அறிவுறுத்துவதைக் கொண்டு, அவர்களுக்கு உண்மையிலே அலீரலி அவர்கள்பால் மெய்யான அபி மானம் ஒருசிறிதும் இருந்ததில்லை யென்று நாம் செவ் விதாய்த் தெரிந்துகொள்ளுகிறோம். ஆயினும், அன்னோர் ஹஜ்ரத் அலீரலியின் சேனையுடனே கலந்துகொண்டு விட்டார்கள். ஆகவே, பஸராவில் நிகழ்ந்த அந்த யுத்தத்திற்கு அன்னோரது விஷமமே மூலகாரணமா யிருந்திருக்கிறது; முஸ்லிம்களின் உதிரம் அதிகம் சிந்தப்பட்ட "ஜங்கெ ஜமல்" என்னும் ஒட்டகச் சண் டைக்கும் அவர்களுடைய விஷமத்தனமே ஆதி காரணமா யிருந்துவந்தது. அன்னோருள் ஒருவனே பிறகொருசமயம், தொழுகையிலிருந்த ஜுபைர்ரலி அவர்களைக் கொன்றுதீர்த்தான். ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களது உதிரத்துக்குப் பரிகாரம் கேட்டுவந்த காரணத்தால் அந்த விஷமிகள் ஆயிஷாரலி அவர்களை யும், அவர்களுடைய தோழர்களையும் "காபிர்கள்" என்று பத்வாக் கொடுத்து விட்டார்கள். ஆயிஷா பிராட்டியார் பஸராவுக்குள் நுழைந்தபின்பு கூபாவாசி களுக்கு விடுத்துள்ள திருமுகத்தில் கீழ்க்காணும் விஷயம் மிகத்துலக்கமாய் விளக்கப்பட் டிருக்கிறது:

"பஸரா வந்து சேர்ந்தவுடனே நாம் அந்நகர வாசிகளை அல்லாஹ்வின் வேதத்திற்கு அடங்கி நடக்கு மாறு வேண்டிக் கொண்டோம். அந்நகர வாசிகளுள் மேன்மக்களா யுள்ளவர்கள் எமது அறிவுறுத்தலை நல்வர வேற்றுக்கொண்டார்கள்; ஆனால், தங்கள்பால்

சிறிதும் நற்குண மில்லாதவர்கள் எங்களுக்கு விரோதமாய் வாளை உருவினார்கள். உதுமான்ரலி அவர்களுக்கு அடுத்தபடியில் எங்களை எமலோகம் அனுப்புவதாய்ப் பயமுறுத்தாட்டினார்கள்; எங்களைக் குறித்துச் சொல்லத் தகாத வசைமொழிகளை யெல்லாம் சொல்லி, தங்களுக் கிருந்துவந்த விரோத மனப்பான்மையால் எங்களைக் 'காபிர்கள்' என்றுந் தீர்ப்புக்கூறி விட்டார்கள். நாங்கள், 'வேதத்தின் ஏகதேசத்தையே அருளப்பெற்ற மனிதர்களை நீவிர் பார்த்ததில்லையா ?...' என்னும் குர்ஆன் திருவாக்கியத்தை அவர்களுக்கு ஓதிக் காண்பித்தோம். இதனைச் செவிமடுத்து, அவர்களுள் சிலர் கீழ்ப்படிந்து இணங்கினார்கள்; ஏனையோர் மறுத்துக் கூறிவிட்டார்கள். அன்னாரை நாங்கள் வாளா விட்டுவிட்டோம்; ஆயினும், அவர்கள் எங்களுக்கு விரோதமாய் வாளை ஓச்சினார்கள்...அவர்களை— அஃதாவது, குற்றவாளிகளல்லாத ஏனையோரையெல்லாம்—காரணமில்லாது சிந்தப்படும் இரத்தத்தையெல்லாம் தவிர்க்கவேண்டு மென்று நாங்கள் அல்லாஹ்வின் வேதத்தின் பக்கல் இருபத்தாறு தினங்கள்வரை அழைத்துப் பார்த்தோம்; ஆனால், அவர்கள் எங்களை யெதிர்த்து வீண்வாதே புரிந்துவந்தார்கள்; அவ்வாறிருந்தும், அவர்களுடனே நாங்கள் ஓர் உடன்படிக்கையை முடித்துக்கொண்டோம். அப்பாலும் அவர்கள் துரோகசிந்தையுடன் கிளம்பி ஒரு சைன்யத்தையும் சித்தஞ்செய்து கொண்டார்கள். உதுமான்ரலி அவர்களது உதிரத்திற்குப் பழிவாங்கியே தீரவேண்டு மென்று ஆண்டவன் அவ்வாறு ஏற்பாடு செய்து வைத்

திருந்தான்போலும். என்னெனின், உதுமானுக்குரலீ விரோதமாய்க் கிளம்பிய கலககோஷ்டியினருள் ஒருவனைத்தவிர்த்து மற்றெல்லாரும் மடிந்தே போய்விட்டார்கள். எங்களுக்குச் சகாயமாய்க் கைஸ், ருபாப், அஜ்த் ஆகிய கூட்டத்தினரை ஆண்டவன் அனுப்பி வைத்தான். இப்பொழுது கேளுங்கள்! அல்லாஹ் தனக்குரிய தண்டனையை அன்னார்மீது இறக்கி வைக்கும்வரை உதுமான்ரலி அவர்களைக் கொன்றவர்களைத் தவிர்த்து மற்றெல்லா மக்களையும் நீங்கள் நல்லவிதமாய் நடத்திவாருங்கள். அந்தத் துரோகிகளைக் காப்பாற்ற முயற்சிசெய்யாதீர்கள்; அவர்களுக்கு ஆதரவும் காட்டாதீர்கள்."

ஆயிஷா பிராட்டியாரின் மற்றொரு திருமுகத்தில் இவ்வாறு காணப்படாநின்றது:

**ஆயிஷா ரலி பிராட்டியாரின் மற்றொரு திருமுகம்**

"அப்பாலும் அவர்கள் சத்தியத்தை ஓர்ந்துகொள்ளாது போய்விட்டதோடு அமையாது, ஒருமுறை நள்ளிரவில் என்னைக் கொன்றுவிடுவான் வேண்டி அவர்கள் எனது பாசறைக் குள்ளே நுழைந்து விட்டார்கள். முன்னாக ஒருவன் நடந்து வழிகாட்ட, அன்னார் எனது பாடிவீட்டின் வாயிலண்டை வந்துவிட்டார்கள்; அப்பொழுது அங்கே காவல் புரிந்துநின்ற கைஸ், ருபாப், அஜ்த் வர்க்கத்தினர் சிலர் அந்தக் கொலைகாரர்களைப் பார்த்தும் விட்டார்கள். உடனே விதியின்வேகம் திருப்பப்பட்டு, அந்தக்காவலாளிகள் அங்குவந்த கொலை பாதகர்களைக் கொன்று தீர்த்துவிட்டார்கள். பிறகு ஆண்டவன் பஸராவிலுள்ள மக்களனைவரையும் தல்ஹாவும்

ஜுபைரும் கொண்டிருந்த அபிப்பிராயத்தின் பக்கலே திருப்பிவிட்டான். பழிவாங்க வேண்டியவர்மீது அந்தப் பழி தீர்க்கப்பட்டதன் பின்பு நாங்கள் அவர்களுக்கு மன்னிப்பளிப்போம்.''

ஆயிஷாரலி தல்ஹாரலி ஜுபைர்ரலி ஆகியவர்களின் கீழ்ச்சென்ற மக்காவின் சைன்யம் பஸராவிலே அளவுகடந்து செல்வதாய்க் கேள்வியுற்று, அலீரலி அவர்கள் கூபாவை நோக்கிச் சென்றார்கள். ஆனால், கூபாவின் கவர்னராய் வேலைபார்த்துவந்த அபூமூஸா அஷ்அரீ கலீபாவுக்கு ராஜவிசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்திருந்தும், ஹஜ்ரத் அலீரலியின் கொள்கையைமட்டும் அன்னார் ஆதரிக்கச் சித்தமாயில்லை. என்னெனின், உதுமான்ரலி அவர்களைக் கலக கோஷ்டியார் கொன்றுவிட்டது கண்டு அபூமூஸா பெரிதும் வருந்தினார். அலீரலியின் தூதுவர் அபூமூஸாவிடஞ் சென்று, பஸராவைத் தாக்குவதில் கலீபாவின் சைன்யத்துடன் அன்னார் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். ஆனால், அவர் அதற்கிணங்க மறுத்து விட்டார்; அக்கணமே அபூமூஸா அவ்வுத்தியோகத்தி னின்று தள்ளப்பட்டார். அப்பால் கூபாவில் ஹஜ்ரத் அலீயவர்கள் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு இருபதினாயிரம் மனிதர்களுடனே சென்று பஸராவுக்கு வெளியில் பாசறையிறங்கினார்கள். அவ்வாறெல்லாம் செய்தபின்னரும் அலீரலி அவர்கள், ஆயிஷாரலி அவர்களைப் போலவே சண்டைசெய்ய விருப்பங் கொள்ளாமலே யிருந்து

அலீரலி பஸராவைத் தாக்குதலும், தல்ஹாவுடனும், ஜுபைருடனும் சமாதானப்பேச்சு நிகழ்த்தலும்

வந்தார்கள். ஆகவே, இப்பெரியார் பஸராவை நண்ணியவுடன் கஃகாஃ என்பாரைத் தல்ஹாவிடமும் ஜுபைரிடமும் தூதனுப்பினார்கள். அதற்கு முன்வரை உதுமான்ரலி அவர்களது இரத்தத்திற்காக அறுநூறு பஸராவாசிகள் பலியாக்கப்பட்டு விட்டார்களென்றும் மீட்டுமொருமுறை யுத்தம்நிகழ்ந்தால் ஆறுயிரமக்கள் உயிர்ச்சேத மடைவார்களென்றும் அந்தத் தூதுவர் அவ்விருவரிடமும் தெரிவித்துக் கொண்டார். ஆதலின், அத்தகைய கோட்டைக்குள்ளே படைவெட்டும் சகோதரச்சண்டை எவ்வாற்றானும் நிறுத்தப்பட்டே ஆகவேண்டுமென்றும் தெரிவித்துக்கொண்டார். இன்னம், உதுமான்ரலி அவர்களது உதிரத்திற்குப் பழி வாங்காது சும்மா இருந்துவிட அலீரலி அவர்களுக்கே விருப்பமில்லை யென்றும், ஆனால் வலியச் சென்று சண்டையைக் கிளப்ப அன்னார் இயலாதவராகவே அப்பொழுது இருந்துவந்தார்களென்றும் அந்தத் தூதுவர் அறிவித்து வைத்தார். மேலும், இடம் பொருள் ஏவலெல்லாம் சித்திக்கப் பெற்றவுடனே உதுமானைக்ரலி கொன்ற எல்லாக் கொலைபாதகர்களும் நியாயவிசாரணைக்குக் கொண்டுவரப்பட்டுத் தண்டிக்கப்படுவார்களென்றும் உறுதி கூறினார். தல்ஹாவும் ஜுபைரும் இந்த ஏற்பாட்டை ஒத்துக்கொண்டமையால், அனேக தினங்கள்வரை சமாதானப் பேச்சுக்கள் நிகழ்ந்துவரலாயின.

நாம் முன்னமே கூறியுள்ள வண்ணம், அலீரலியின் சேனையில் உதுமான்ரலி அவர்களுக்கு விரோதமாய்ச் சூழ்ச்சிசெய்து அவர்களைக் கொலையும் புரிந்துவிட்ட குற்றவாளிகள் பலர் கலந்திருந்தார்கள். அவர்கள்

அலீரலி ஆயிஷாரலி ஆகிய இருவருக்கிடையே சமாதானப் பேச்சுக்கள் நிகழ்வதைக்கண்டு திகில்கொண்டு விட்டார்கள்; இனித் தங்கள் கழுத்துக்குச் சுருக்கு வந்துவிடுவது சரதமெனக் கண்டுகொண்டார்கள். ஆகவே, அவர்கள் (அந்தக் கொலைபாதகர்கள்) தங்கள் தலைகளைத் தப்பவைத்துக் கொள்வான் வேண்டி, முஸ்லிம்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டு கிடப்பதையே சாலவும் விழைந்துநின்றார்கள். ஆதலினால், அத்தகைய சூழ்ச்சிக்காரர் ஒன்றுசேர்ந்து, தங்களுக்கு விளையப்போகும் சங்கடத்தைக் குறித்துச் சாங்கோபாங்கமாய்ச் சதியாலோசனை செய்துகொண் டிருந்தனர்; அப்பால் ஒருவித முடிபுக்குவந்து, இருதிறத்தாரின் சைன்யங்களும் நன்றாய் அயர்ந்துகிடந்த நள்ளிரவில் ஆயிஷாரலி அவர்களது சேனையின்மீது மெல்லத்தாவித் தாக்கத்துணிந்து விட்டார்கள். அதன்பயனாய், அந் நள்ளிரவில் இருதிறத்தாரின் சேனைகளும் அவர்களுள் இன்னார்தாம் அந்தச் சண்டையைக் கிளப்பிவிட்டார்க ளென்னும் உண்மையைத் தெரிந்துகொள்ள முடியாதவர்களாய்ப் போய், ஒரு சாரார் மற்றொரு சாராரையே குற்றவாளிகளெனத் தீர்மானம் செய்துகொண்டு விட்டார்கள். ஹஜ்ரத் அலீரலி அவர்கள் அந்த நடுநிசிச் சண்டையை ஒருவாறு நிறுத்திவைக்கப் பிரயத்தனப்பட்டார்கள். ஆனால், அந்தக் கைகலந்த சண்டை ஒருசிறிதும் நிற்காதுபோய், சகோதர முஸ்லிம்களே ஒருவரையொருவர் வெட்டி வீழ்த்திக்கொண்டு கிடந்தார்கள்.

ஜங்கெ ஜமல்—ஹி. 36, ஜமாதுல் ஆகிர்—(கி. பி. 656, டிஸம்பர்)

பொழுது புலர்ந்ததும் அனேக ஜனங்கள் ஆயிஷாரலி அவர்களை யண்மி, இருதிறத்துச் சேனைகளுக்கு முன்னே அந்தப் பிராட்டியார் வந்து தங்கள் தரிசனத்தைக் காண்பித்தால் எல்லாரும் அமைதியடைந்து விடுவார்க ளென்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஆகவே, ஆயிஷாரலி ஓர் ஒட்டகத்தின்மீது ஆரோகணித்தவர்களாய்,—இக் காரணத்தினாலேதான் அந்த யுத்தம் ஜங்கெ ஜமல் (ஒட்டக யுத்தம்) என்று வழங்கப் பட்டு வருகிறது—* யுத்த அரங்க முழுதும் உலவி வந்தார்கள். மற்றோ ரிடத்தில் அலீரலி அவர்கள், தல்ஹாரலி ஜுபைர்ரலி ஆகிய இருவரையும் சந்தித்துச் சமாதானத்திற் குரிய சம்பாஷணங்களை நிகழ்த்தி வந்தார்கள். இஃதென்ன ஆச்சரியம்! பாடிவீட்டில் சண்டை நடக்கிறது; இருகட்சித் தலைவர்களும் சமாதானம்செய்ய முயன்று வருகிறார்கள். இதற்குரிய அந்தரங்கக் காரணம் இன்னதென்பது நமக்கு விளங்காமற் போகவில்லை: பொதுமக்கள் கைகலந்து சண்டை செய்துகொண்ட போதினும், தலைவர்களின் ஹிருதயங்களுக்குள்ளே சொந்தக் குரோதம் ஒன்றும் இருந்ததில்லை. முஸ்லிம் இராஜ்ஜியத்தில் சமாதானமே நிலவியிருக்க வேண்டுமென்றும் எல்லா முஸ்லிம்களும் ஏகசகோதர கோஷ்டியைச் சார்ந்தவர்களா யிருக்க வேண்டு மென்றுமே அந் நால்வரும் ஏகோபித்து எண்ணினார்கள். எனவே, அவர்களெல்லாரும் இரத்தம் சிந்துவதை வெறுத்தார்கள். ஒருவருக்கொருவர் பரஸ்பரப் பகைமையையும் திரஸ்கரித் தொதுக்கி

* இந்த யுத்தம் நிகழ்ந்த இடத்தை ஸையித் அமீரலீ கர்பா என்று கூறுகின்றார்.

ஞர்கள். ஆதலினுல்தான், அந்தக் கைகலந்த யுத்தத்தின் மத்தியிலே ஆயிஷாரலி அவர்களைத் தவிர்த்து மற்ற மூன்று தலைவர்களும் கலந்து பேசிக்கொண்டிருந்தார்கள்; அப்பால் அலீரலியின் வேண்டுதல்மீது தல்ஹாவும் ஜுபைரும் அந்த யுத்தகளத்தை விட்டு விலகிச் சென்றுவிட்டார்கள். உடனே ஜுபைர்ரலி மதீனவை நோக்கிப் புறப்பட்டார்; அப்பொழுது இப்னு ஸபாவின் சிஷ்யனெருவன் அப் பெரியாரைப் பின்தொடர்ந்து சென்ருன். பாலைநிலத்தின் நடுவிலே செல்லும்போது ஜுபைர்ரலி ஓரிடத்தில் தொழுகைக்காகத் தங்கினுர்கள்; அதுதான் தருணமெனப் பின் தொடர்ந்து சென்ற அயோக்கியன் கண்டுகொண்டான். ஜுபைர்ரலி தமது தொழுகையின்பொழுது சிரத்தைத் தரையிற்கவிழ்க்கும் ஸுஜூதின் நிலையை யடைந்தக்கால், அந்தக் கொலைகாரன் தாவிப்பாய்ந்து அன்னுரின் தலையைத் துண்டித்து விட்டான்; அப்பால் அந்தச் சிரத்தை யெடுத்துக்கொண்டு அலீரலியிடஞ் சென்ருன். அதுபொழுது அந்தப் பாதகன் ஹஜ்ரத் அலீயிடமிருந்து என்ன சம்மானம் பெற்றுக்கொண்டானென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? “ஜுபைரைக் கொன்ற கொலைபாதகனுக்கு நரகமே கதியென்று சொல்லுங்கள்!” என்றுதான் இப்பெரியார் அவனைச் சபித்தார்கள்.

தல்ஹாரலி அவர்களும் அந்த யுத்தகளத்தைவிட்டு அப்புறம் சென்றதன் பின்பு, மற்ருேர் அயோக்கியன் அன்னுர் மீது தனது பாணத்தை யேவினுன்; அதற்கிரையாய் அப்பெரியார் மாண்டுபோய் வீழ்ந்தார். தலைவர்கள் எத்துணை மட்டும் இரைந்து கூவியும், சண்டை

மட்டும் ஓயவே யில்லை; பிணக்குவியலும் பெருகிக் கொண்டேவந்தது. அதுகண்டு ஆயிஷாரலி ஒரு குர்ஆன் பிரதியை உயரக் கிளப்பச் செய்து, அதன்பயனாய் அந்தயுத்தத்தை நிறுத்த முயன்றார்கள்; ஆனால், அவ்வாறு அவ்வேதத்தைத் தூக்கிப்பிடித்த மனிதனைச் சதியாலோசனைக் கலககோஷ்டியார் கொன்றுதீர்த்துவிட்டார்கள். இறுதியாய் அந்தச் சண்டையின் முக்கிய பாகம் ஆயிஷாரலி நின்றுகொண்டிருந்த இடத்தை நோக்கி வந்து சூழ்ந்துவிட்டது. அப்பொழுது அந்த அயோக்கியக் குழாத்தினர் நபிகணாதரின் பிராட்டி யென்று கூடப் பாராது, தங்கள் முரட்டுத்தனத்தைக் காண்பிக்கத் துணிந்தார்கள். அந்தப் பெண்கள் நாயகத்தை அவர்கள் பலவிதத்தாலும் தாக்கத் துவக்கி விட்டமையால், அவர்களுக்கும் அந்தப் பிராட்டியைக் காப்பாற்ற முனைந்து நின்றவர்களுக்கும் இடையில் கடுமையான போர் நிகழ்வதாயிற்று. நம் பெருமாட்டியைச் சுற்றி மனிதர்கள் பிணக்காடாய்க் குவிந்து கொண்டிருந்தார்கள்; ஆனாலும், அந்த ஒட்டகத்தைச் சூழ்ந்து தற்காத்துநின்ற குழுவினர் ஒருசிறிதும் இடுக்குக் கொடுக்காமலே ஆயிஷாநாயகத்தை அதிகம் காப்பாற்றினார்கள். அப்பால் கடைசியாய் இரத்த வோட்டம் எல்லைகடந்து போய்விட்ட பொழுது, எவனோ ஒருவன் நம் பெருமாட்டி ஆரோகணித்திருந்த ஒட்டகத்தின் பின்னங்கால் தசைகளை வெட்டி விட்டான்; அக்கணமே அந்தப்பிராணி சாய்ந்து கீழே தொப்பென்று வீழ்ந்துவிடவே, அந்தக் கடும்போரும் அக்கணமே நின்றுவிட்டது. அதுபொழுது ஆயிஷாரலி

தல்ஹாவும் கொல்லப்படுதல்

அவர்களுடைய சகோதரரான முஹம்மத் பின் அபூபக்ர் ஓடிச்சென்று நம் பெருமாட்டிக்கு ஏதும் தீங்கு நேரிட்டுவிட்டதோ வென்று க்ஷேமம் விசாரிப்பா ராயினர். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் அலீரலி அவர்களும் ஆங்குவந்து ஆயிஷாவின்ரலி க்ஷேமத்தை விசாரித்தார்கள். பிறகு அப்பெருமாட்டியாருக் குரிய எல்லாவித மேதைமரியாதைக ளுடனேயும் அலீரலி அவர்கள் பஸராவிலுள்ள அப்பிராட்டியின் கட்சியைச் சேர்ந்த ஒரு தலைவர் விடுதியிலே பத்திரமாய் அமர்த்தி வைத்து, பிறகு வேண்டிய பந்தோபஸ்துடனே மதீனு விற்கு அனுப்பிவைத்தார்கள்; அப்பொழுது நாற்பது பெண்மணிகளும், ஆயிஷாவின்ரலி சொந்தச் சகோதரர் முஹம்மத் பின் அபூபக்ரும் அப் பிராட்டியாருக்கு அங்கக்காவலராய்ப் புடைசூழ்ந்து சென்றூர்கள். அவர் கள் பஸராவை விட்டு நெடுந்தூரம் செல்லுமட்டும் கலீபா அவர்களே உடன்சென்று பத்திரமாய் வழி யனுப்பிவிட்டுத் திரும்பினர்கள். அப்பொழுதேனும், அதற்குப் பின்னரேனும் முன்னரேனும் ஹஜ்ரத் ஆயிஷாரலி அவர்கள் அலீரலியின்மீது தங்களுக்கு அசூயை இருந்ததாய் ஒருபொழுதும் ஒருசிறிதும் வெளியிட்டுச் சொன்னது கிடையாது.

மேற்கூறிய எல்லா விஷயங்களையும் துருவிப் பார்க்குமிடத்து, ஒரு விஷயம் மட்டும் பட்டப்பகல் போலே திட்டமாய்ப் புலப்படாது போகவில்லை: இரு கக்ஷி சேனைகளும் உருவிய வாளுடன் எதிரெதிராய் நின்றுகொண்டு யுத்தகளத்தில் பிணக்குவியலைக் குவடு படுமாறு செய்துகொண்டும், தல்ஹாவையும் ஜுபை ரையும் எதிரிகள் கொன்றுகொண்டும் இருந்தபொழு

துங்கூட, இருதிறத்துத் தலைவர்களும் பரஸ்பர விசுவாசத்துடனும் மரியாதையுடனுமே ஒழுகிவந் திருக்கிறார்கள். அந்த முக்கியஸ்தரின் ஹிருதயத்துள் ஆத்திரமேனும் அசூயை யேனும் சிறிதும் குடிகொண் டிருக்க வில்லை. ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் நன்மையையே உள்ளத்தின் கண் உருப் படுத்திக்கொண் டிருந்தனர். ஆகவே, கைகலந்த யுத்தம் நடந்துகொண் டிருக்கும்பொழுதே தல்ஹாவும் ஜுபைரும் அலீரலி அவர்களை ஆப்தநண்பராய்ச் சந்தித்து, அன்னாரின் ஆலோசனையையும் கேட்டு நடக்க முற்பட்டு விட்டார்கள். யுத்த முடிவிலே அலீரலி அவர்கள் எல்லாவித மேதை மரியாதைகளுட னும் ஆயிஷாரலி பிராட்டியாரைச் சந்தித்து, அன்ன வருக்குரிய ஒரு பக்திவிசுவாசமுள்ள குமாரரே போல் ஒழுகிக் கொள்ளுகின்றார்கள். பஸராவில் நிகழ்ந்த யுத்தத்தைப் போலவேதான் ஜமல் யுத்தமும், முஸ்லிம் களை ஒருவரோ டொருவர் பிணையல் செய்துவிட்டு, இஸ்லாத்தின் ஒற்றுமையைக் குலைக்க விரும்பிய சதியாலோசனைக் காரர்களின் விஷமத்தனத்தாலே நிகழ்ந்திருக்கிறது. அத்தகைய அயோக்கியர்களே அலீரலியின் சைன்யத்தில் சேர்ந்துகொண்டு விட்டார்க ளென்பதும் வெள்ளிடை விலங்கலாகும்; என்னெனின், ஹஜ்ரத் அலீரலி அவர்கள் அந்தக் கொலைபாதகர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க முடியாத சங்கடத்துள்ளே சிக்கியுழன்றார்க ளென்பதை அவர்கள் அறியாது போகவில்லை. எனவே, எல்லா விஷமங்களுக்கும் அந்தக் கொலைகாரச் சூழ்ச்சியாளரே காரணபூதராய்

யுத்த காலத்திலும் உள்ளன்புக்குக் குறைவில்லை

விளங்கி வந்தார்கள். அவர்கள் உதுமான்ரலி அவர்களைக் குரூரமாய்க் கொன்றுவிட்டார்கள்; ஆதலின், அன்னார் அப்பெரியாருக்கு மட்டுமே விரோதிகளாயில்லாது, சகல முஸ்லிம்களுக்குமே உரிய பொது விரோதிக ளாகவே போய் விட்டார்கள். இப்பால், முஸ்லிம்களை முஸ்லிம்களைக்கொண்டே கருவறுப்பதற்கெண்ணித் தாங்கள் ஒருகட்சியில் சேர்ந்துவிட்டார்கள். ஜமல்யுத்தம் முடிந்தவுடன், அலீரலி அவர்கள், தோற்றுப்போன சைன்யத்தின் எந்த மனிதனையும் எவரும் தொந்தரைக் குள்ளாக்கக் கூடாதென்றும், யுத்தகளத்திலிருந்து ஒருவரும் சூறைப்பொருளை வாரிக் கொண்டு போகக்கூடாதென்றும், ஒருவர் மற்றொருவர் விடுதிக்குள்ளே மாற்சரியத்துடன் நுழையக் கூடாதென்றும் கடுமையான கட்டளை யிட்டுவிட்டார்கள். அன்றியும், அந்த ஒட்டகச்சண்டையில் மரித்தவர்களைக் குறித்து, "எந்தக் கட்சியில் சேர்ந்தவரா யிருப்பினும் நல்லெண்ணத்துடனே சேர்ந்தவரெல்லாம் ஆண்டவனது பக்ஷத்துக்குப் பாத்திரமாவார்கள்," என்று கூறினார்கள். உதுமான்ரலி அவர்களது கொலையின் விளைவாய்க்கிளம்பிய அந்த அபிப்பிராய பேதமெல்லாம் மக்கா, பஸரா, கூபாவிலுள்ள முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டவரை இப்பொழுது சமரச மடைந்துவிட்டன என்னலாம். ஆனால், ஷாம்தேசம் மட்டும் இன்னம் கொந்தளித்துக் கொண்டே யிருந்தது; அங்கும் இஸ்லாத்தின் ஒற்றுமையை நிலைநாட்ட அலீரலி அவர்கள் இப்பா லந்தச் சிரியாமாகாணத்தை நோக்கித் தங்கள் கவனத்தைத் திருப்பலாயினார்கள்.

அப்துல்லா பின் அப்பாஸ் அவர்களைப் பஸராவின் கவர்னராய் நியமித்துவிட்டு, அலீரலி அவர்கள் கூபாவுக்குச் சென்றார்கள்; என்னெனின், ஹி. 36, ரஜப் மாதத்தில் மதீனாவை விட்டுக் கூபாவையே இந்த நான்காவது கலீபா தலைநகராக ஏற்படுத்திக் கொண்டார்கள். இதற்கு முன்னே கூறப்பட்டிருப்பதேபோல் பஸரா மாகாணம் உமர்ரலி அவர்களது காலத்திலே தோன்றிய ஒரு புதிய குடியேற்ற நாடாகும். மதீனாவைத் துறந்து கூபாவையே ராஜதானி நகராய் அமைத்துக்கொண்டதில் அலீரலி என்ன விசேஷத்தைக் கண்டார்களென்று சரித்திரக்காரர் காரண மொன்றையும் வரைந்து வைக்கவில்லை. இவ்விஷயத்தில் பலர் பல விதமான ஊகம் செய்கின்றனர். ஆனால், பெரும் பான்மையோர் கூறும்காரணம் பின்வருமாறாகும்: அதுபொழுது இருந்துவந்த விசாலமுள்ள கிலாபத் ராஜ்ஜியத்தின் கீழைநாட்டுப் பகுதிகளிலிருந்து மதீனா நகரம் மேற்கில் வெகுதூரம் ஒதுங்கிப் போயிருந்தது; ஆனால், கூபாநகர் அநேகமாய் மத்திபஸ்தானத்திலே இருந்துவந்தமையான், அந்த அகன்று கிடந்த முஸ்லிம் ராஜ்ஜியத்தின் கெடிஸ்தலமா யிருக்கக்கூடிய பெருமையைப் பெற்றுக்கொண் டிருந்தது. அதுவேயு மன்றி, அந்த மத்திபஸ்தலமானது பதவீகளென்னும் நாடோடி அரபிகளை நன்றாய் அடக்கிவைப்பதற்கும் உரிய தலைநகராய்க் காணப்பட்டது. அதுகாலை அஷ்தர் என்னும் நாமத்தை யுடைய ஒரு மனிதன் இருந்துவந்தான். அவன் ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களைக் கொன்றவர்

*கூபா தலைநகராதலும், முஆவியா கீழ்ப்படியக் கோரப்படுதலும்*

களுள்ளே ஒருவனு யில்லாதிருந்தும், அப்பெரியாருக்கு விரோதமாய்க் கிளம்பிய கிளர்ச்சிக்காரருள்ளே ஒருவனுகக் காணப்பட்டான். ஹஜ்ரத் அலீரலி அம்மனிதனைத் தங்களுடனே வைத்துக்கொண் டிருந்தார்கள். கலீபா அவர்கள் அப்துல்லா பின் அப்பாஸைப் பஸராவின் கவர்னராக நியமித்தபொழுது, அஷ்தர் மீட்டுமொருமுறை ஒரு பர்யாதைக் கொண்டுவந்தான்: "உதுமான், தல்ஹா, ஜுபைர் ஆகியவர்களைக் கொன்ருெழித்ததனுல் நமக்கென்ன பிரயோஜனம்? அலீரலி இப்பொழுது தமக்குரிய பந்துக்களையே கவர்னர்களாய் நியமித்து வருகின்ருர்," என்று அவன் குறைகூறலாயினுன். அப்பால், கூபாவுக்கு வந்து சேர்ந்தவுடன் ஹஜ்ரத் அலீரலி மற்றுமொருமுறை முஆவியாவுக்கு ஒரு நிருபம் எழுதினுர்கள்; அதில் பஸராவில் எல்லாக் காரியமும் ஒழுங்காய் விட்டனவென்றும், இஸ்லாமிய ராஜ்ஜியத்தின் ஒற்றுமையைக் கருதி முஆவியாவும் இந்த கலீபாவுக்கு அடங்கி நடப்பதே சர்வசிலாக்கியமாகுமென்றும் வரைந்திருந்தார்கள். இந்த நிருபத்துக்கும் முஆவியா ஒன்றும் விடையளிக்க வில்லை. ஆனுல், சிறிது காலங் கழிந்து, முஆவியா பதில் சமாசாரம் ஒன்று சொல்லியனுப்பினுர்: அஃதாவது, உதுமான்ரலி மரணத்துக்குத் தக்க பழிவாங்கப்பட்டாலொழியத் தம்மால் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்து கொடுக்க முடியாதென்று இறுதியாய் அறிவித்து விட்டதே யாகும். அப்பால் அந்த முஆவியாவுக்கு விரோதமாய் யுத்தத்தைக் கிளப்புவதைத் தவிர்த்து அலீரலி அவர்களுக்கு வேருெருவழியும் இல்லாமலே போய்விட்டது; ஆகவே, அந்த யுத்தத்திற்கு வேண்டிய

சன்னுகங்க ளெல்லாம் அதன்பின்பு துரிதமாகவே சித்தம் செய்யப்பட்டு வந்தன.

ஆதி முதற்கொண்டே அலீரலி அவர்களுக்கும் முஆவியாவுக்கும் சுமுகமான அபிப்பிராயம் இருந்து வந்ததில்லை. எனவேதான், அலீரலி கலீபாவாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டதை முஆவியா விரும்பாமலும், இப்பெரியாருக்கு ராஜ விசுவாசப் பிரமாணம் செய்துகொடுக்காமலும் இருந்துவந்திருக்கிறார். ஆயிஷாரலி தல்ஹாரலி ஜுபைர்ரலி ஆகியோர் அலீரலி அவர்களுக்கு விரோதமாய்க் கிளம்பியதற்கும், முஆவியா எதிர்த்து நின்றதற்கும் வித்தியாசம் அதிகமாயுண்டு: அம்மூவரும் இஸ்லாத்தின் நன்மைக்கென்றே உள்ளப் பரிசுத்தத்துடன் ஊக்கியெழுந்தார்கள்; ஆனல், முஆவியாவின் ஹிருதயம் கள்ளச்சித்தம் நிறைந்ததாகவே இருந்திருக்கிறது. ஹஜ்ரத் உதுமான்ரலி முஆவியாவின் நெருங்கிய பந்துவென்பது வாஸ்தவமே யாகும்; ஆதலின், இந்த முஆவியா உதுமான்ரலி அவர்களைக் கொலை செய்த குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுமென்று கேட்பதற்கு அதிக உரிமை பெற்றிருந்தார். ஆனல், அலீரலி முஆவியாவுக்கு விடுத்த இரண்டு திருமுகங்களுக்கும் அன்னர் பெற்றுக்கொண்டதாகக் கூடப் பதில் தெரிவிக்காமற் போய்விட்டதிலிருந்து, அலீரலி அவர்கள் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதில் சிறிது தாமதமாயிருந்தது. இந்த கலீபா அந்த உதுமான்ரலி அவர்களது கொலையை அங்கீகரித்த பாவனையிலே வாளா இருந்துவிட்டார்க

அலீக்கும்ரலி முஆவியாவுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தம்

ளென்று கருதியதாகவே நாம் கொள்ளக் கிடக்கின்றது. இதுதான் அந்த முஆவியா வாய்மொழியாய் அனுப்பிவைத்த பதிலின் தாத்பரியமாகும். இதுவரை அந்தக் கிளர்ச்சிக்காரக் கொலைபாதகர்களை அலீரலி கண்டுபிடித்துத் தண்டிக்க எத்தகைய ஏற்பாடும் எடுக்கவில்லை யென்பது மெய்யே யாகும்; அவ்வளவுடனே போகாது, அத்தகைய கலககோஷ்டியைச் சார்ந்த அநேகர் அலீரலியின் சைன்யத்துள்ளும் புகுந்து கொண்டு ஜங்கெ ஜமலுக்கும் (ஒட்டகச் சண்டைக்கும்) மூல காரணஸ்தர்களாய் விளங்கினுர்கள் என்பதும் கண்கூடு. எனவே, அலீரலி அவர்கள் அந்தக் கொலை பாதகர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்குத் தங்களுக்கு அதுபொழுது சக்தியில்லை யென்றே அடிக்கடி சொல்லிவந் திருக்கிறுர்கள். என்னெனின், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்களைக் கொலைசெய்துவிட்ட ஒரு சிலரைப் பிடித்துத் தூக்கிலேற்றி விடுவதாலேமட்டும் கோரிய காரியம் நிறைவேற மாட்டாது. அவ்விஷமத்தின் மூலகாரணமா யிருந்தவர்கள் எல்லாரும் அடியுடன் தகைக்கப்பட்டு, அவர்களுடைய தலைவர்களும் கொல்லப்பட்டு, அன்னவர்களால் ஏமாற்றப்பட்ட பொதுமக்களுக்கும் கண்விழிப்பு ஏற்பட்டாலல்லது, கோரிய காரியம் ஜயகரமாய் நிறைவேறுமென்று ஒருசிறிதும் எதிர்பார்ப்பது முடியாது. இத்துணைப்பெரிய காரியத்தைச் சாதிப்பதற்கு இன்னம் தங்கள்கை பலப்படவில்லை யென்றே அடிக்கடி அலீரலி அவர்கள் கூறிவந்திருக்கிறுர்கள். ஆயிஷாரலி தல்ஹாரலி ஜுபைர்ரலி ஆகிய மூவரும் இந்தச் சமாதானத்தின் உண்மையை உணர்ந்து, தங்களுக்குள்ள

குரோத மனப்பான்மையை விட்டொழித்தார்கள். அதற்கு மாருய், முஆவியா இந்தச் சமாதானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு நில்லாது, அலீரலி வேண்டுமென்றே அந்தக் கொலைபாதகர்களையெல்லாம் காத்து ரக்ஷிப்பதாகவும் தவருய்த் தீர்மானித்து விட்டார். மேலும், பெரும்பான்மையான சரித்திரா சிரியர்களும், உதுமான் ரலி அவர்களது உதிரத்திற்குப் பழிவாங்க வேண்டுமென்று முஆவியா வேண்டியதில் அவரது அந்தக்கரணம் அத்துணைப் பரிசுத்தமா யில்லை யென்றே வரைந்துவைத் திருக்கிருர்கள். கலீபாவின் பதவியை முஆவியாவின் ஹிருதயம் ஆசிக்கவில்லை யென்று ஒருவாறு கூறக்கூடுமாயினும், அன்னுர் அலீரலியின்மீது ஆதிமுதலே விரோத மனப்பான்மை யுடனே இருந்துவந்து, இறுதியாய், கலீபா அவர்க ளுக்கு விரோதமாகவே கிளம்பிவிட்டா ரென்பதை ஒருவரும் மறுத்துரைக்க முடியாது. எனவே, இருகக்ஷி யிலும் அவரவருக்குரிய காரணம் இருந்துவந்ததெனல் வேண்டும். அதனுல் அவ்விருவருக் கிடையே சமனமும் சமாதானமும் உண்டாவதற்கு இடமில்லாமற் போய் விட்டது; ஆதலினுல்தான், அவர்களுக் கிடையிலுள்ள மனஸ்தாபம் வாளாயுதத்தைக் கொண்டு தீர்மானம் செய்யப்பட வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது.

ஹஜ்ரத் அலீரலி அவர்கள் 50,000 படைக ளுடனே ஷாம்தேசத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். இதனைக் கேள்வியுற்ற முஆவியாவும் தமக்குரிய சேனைகளை யெல்லாம் ஒன்றுதிரட்டிக்கொண்டு விட் டார். அப்பால் அவ்விரு தலைவர்களின் சைன்யங்களும் ஸிப்பீன் என்னுமிடத்தில் சந்திக்கலாயின; அந்த இடம்

புராத்து நதிதீரத்தின்மீது, ஹல்பு (அலெப்போவு)க்குத் தென் கிழக்கிலும் ஹிம்மஸுக்கு வட மேற்கிலும் அமைந் திருக்கிறது. இப்படிப்பட்ட, முஸ்லிம்களுக் குள்ளே நிகழக்கூடிய சண்டை எப்படிப்பட்டதா யிருக்கு மென்பதை அலீரலி அவர்கள் முன் னமே நன்குணர்ந்து கொண்டிருந்தார் கள். ஆகவே, தங்களைச் சார்ந்த மனிதர் கள் ஒருகாலும் முதன்முதலாய் வாளையுருவக் கூடா தென்று மிகக் கடுமையான கட்டளையைப் பிறப்பித்து விட்டார்கள். அன்றியும், தூதுபேசுவதன்மூலம் தங்க ளுக்கும் முஆவியாவுக்கும் இடையிலே ஒருவிதச் சமாதானம் உண்டாய்விடக் கூடுமென்றும் எதிர்பார்த் திருந்தார்கள். இக் காரணத்தினுல், தொடக்கத்தில் சில தினங்கள்வரை ஒன்றும் கடுமையாய் நிகழ்ந்து விடவில்லை. ஹஜ்ரத் அலீரலி அவர்கள் முஆவியாவின் பால் மூன்றுமனிதர்களை அனுப்பி, இஸ்லாமிய ராஜ்ஜி யத்தின் நன்மையை யுன்னி, இந்த நான்காவது கலீபாவை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண் டார்கள். இதற்கு விடையில் முஆவியா, உதுமான்ரலி அவர்களைக் கொன்றவர்களை முதன்முதலாய்த் தாம் தண்டித்தாக வேண்டுமென்று மீட்டும் வற்புறுத்திக் கூறினுர். இந்த வியாஜத்தை அலீரலி ஒரு வீண் சாக் கென்றே ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள்; அப்பொழுது முஆவியா, "அஃதொரு பொய்யேயாகும். ஆதலின், இனி வாளாயுதந்தான் எங்களுக்கிடையில் தீர்ப்புக் கூறவேண்டும்," என்று வீண்வாது கூறினுர்.

ஸிப்பீன் (Siffin) யுத்தம்—ஹி.36, துல்கஃதா— (கி. பி. 657, ஏப்ரில்)

அப்பால் வேறுவழி யில்லாது போய், அலீரலி அவர்கள் தங்கள் படைகளை எட்டுப் பாகங்களாகப் பகுத்துவைத்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொருபாகமே எதிரிகளுடன் மல்லாட வேண்டுமென்று ஆணையிட்டு விட்டார்கள். இவ்வாறு இப்பெரியார் செய்ததன் நோக்கம், பொதுப்படையான சண்டையைக் கிளப்பி, அதனால் முஸ்லிம்க ளுதிரத்தை அனாவசியமாய்ப் போக்கக்கூடா தென்பதாகவே இருந்துவந்தது. அப்பொழுது புதுவருடம் பிறந்துவிட்டமையால், அந்தப் பரிசுத்த முஹர்ரம் மாதத்தில் போர்முறை நிறுத்தப் பட்டது. அப்பாலும் சமாதானத்துக்கு வேண்டிய தூதுப் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டே வந்தன; ஆனாலும், இருதிறத்தாரும் தத்தம் கக்ஷியையே விடாது வற்புறுத்தி வந்ததனால், அந்தத் தூதுப்பேச்சின் முடிபொன்றும் நல்லவிதமாய பயனைப் பெற்றுக்கொள்ளாது போய் விட்டது.

இறுதியாய் அந்த முஹர்ரமுல் ஹராம் முடிவடைந்தபின்பு மீட்டும் அந்தப் போர் தொடங்கப் பட்டது. அப்பொழுதும் அப்பாலொரு முறையாய் அலீரலி அவர்கள், கலீபாவின் அதிகாரத்திற்கு அந்த ஷாம் தேசவாசிகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய அத்தியாவசியத்தைக் குறித்து ஒரு பிரகடனம் வெளிப் படுத்தினார்கள்; இதனாலும் ஒருவித நற்பயனும் விளையவில்லை. அதற்குப் பிறகு சிற்சில சில்லறைச் சண்டைகள் நிகழ்ந்துவந்ததன் பின்னால், ஹி. 37, ஸபர்மீ, 11-ஆம் தேதியன்று (கி. பி. 657, ஜூலை, 29) ஒரு பொதுப்படையான மாபெருஞ்சண்டை நிகழத்

**பொய்யான வீண்பழி**

தொடங்கிற்று. அன்றுமுழுதும் அந்தப்போர் நிகழ்ந்து வந்தும், இரவைக்கு முன்னே ஒருவித முடிபும் ஏற்படக்காணேம். ஆகவே, மறுநாளும் அந்தயுத்தம் தொடர்ந்து நடைபெறலாயிற்று ; அன்றும் ஒருவித முடிபும் ஏற்படவில்லே. ஆதலின், இராப்பொழுதிலும் தொடர்ந்தே யுத்தம் நிகழ்ந்துவந்தது. மூன்ருவதுநாள் பொழுதுபுலர்ந்த பின்னரும் அவ்விருதிறத்துச் சேனே களுக்கிடையே கைகலந்த யுத்தம் நடந்துகொண்டே தான் இருந்ததெனல் வேண்டும். அப்பொழுது முஆவியாவின்சேனே தோல்வியுற்று விடும்போலிருந்த சமயத்திலே அம்ர் பின் ஆஸ் என்பார் முஆவியாவுக்கு ஒரு தந்திரத்தைச் சொல்லிக்கொடுத்து, படைகளின் ஈட்டிமுனேயிலே குர்ஆன் ஷரீபின் பிரதிகளேக் கட்டித் தூக்குவித்து, அல்லாஹ்வின்வேதம் இன்னம் இருந்து வருகிறதென்றும், அதனேயே சமாதான கர்த்தாவாக அனேவரும் அங்கீகரிக்க வேண்டுமென்றும் அந்தச் சேனு சமுத்திரத்திலிருந்து ஒருபெரும் கூச்சலேக் கிளப்பிவிடச் செய்தார். இவ்வாறு முஆவியாவின் சைன்யத்திலிருந்து ஒரு பெருங்கூச்சல் கிளம்பிய வுடனே அலீரவி அவர்களது சேனேயிலிருந்தும் அதே விதமான கூச்சலொன்று கிளப்பப்பட்டது. அக் கணமே குர்ஆன்ஷரீபின் இணேயற்ற அற்புதசக்தியால் அவ்விரு பெருஞ்சேனேகளும் தங்களுக் கிடையே நிகழ்ந்துவந்த யுத்தத்தை நிறுத்தி விட்டார்கள். குர்ஆன்ஷரீபின் கட்டளேக்குக் கீழ்ப்படிய வேண்டு மென்னும் கூப்பீடு கிளம்பியவுடனே இருபக்கத்துச் சேனேகளும் தத்தம் வாளாயுதங்களே அவ்வவற்றிற் குரிய உறையினுள்ளே சொருகிக் கொண்டார்கள்.

ஆனுல், ஹஜ்ரத் அலீரலி அவர்கள் அந்தச்சண்டையை நிறுத்துவதற்கு இஷ்டப்படவில்லை யென்றும், அது முஆவியாவினுல் சிருஷ்டிக்கப்பட்ட ஒருவிதச் சூழ்ச் சியே யாகுமென்று தங்கள் சேனைகளுக்கு அறிவித்து வைத்தார்க ளென்றும் ஓர் அடாத அபவாதம் இந்த கலீபாவின்மீது ஒருசிலரால் சுமத்தப்படுவ துண்டு. இவ்வாறு அலீரலி கூறியபொழுது இவர்களுடைய சைன்யம் அதற்குச் செவிசாய்க்க வில்லையென்றும் அவ்வெதிரிகள் குறைகூறுகின்றனர். இதற்கெல்லாம் ஒருசிறிதும் ஆதாரம் காணப்படவில்லை; எனவே, இஃதொரு பெரிய வீண்பழியே யாகும்.

**மத்தியஸ்த முயற்சி**

முன்நிகழ்ந்த யுத்தங்களில் அலீரலி காட்டிவந்த மனப்பான்மையும், அந்தப் போர்களுக்குப் பின்னுல் இப்பெரியார் தம்முடைய எதிரிகள்மாட்டுக் காட்டி வந்த உள்ளக் கிடக்கையும், அவ்வாறு பழிதூற்றச் சற்றும் இடந்தர வில்லை. முஸ்லிம்களுக் குள்ளே போர் நிகழ் வதை அலீரலி அவர்கள் ஆதிமுதலே ஆக்ஷேபித்து வந்திருக்கிருர்கள். எனவே, இத்தகைய மனப்பான்மை யுள்ள ஒரு பெரியார் சமாதான முயற்சியை எதிர்த்து நின்ருர்க ளென்பது ஒரு நம்பக்கூடாத விஷயமாகவே இருந்துவருகிறது. ஆனுல், உண்மை யாதெனின், மேற் கூறியவாறு சமாதானத்தை முன்னிட்டு இரு கக்ஷியா ரும் தங்கள் போரை நிறுத்திய பின்னரும் அஷ்தர் மட்டும் சண்டை போட்டுக் கொண்டே கிடந்தார். ஹஜ்ரத் அலீரலி அவரைக் கூப்பிட்டனுப்பி, அந்தச் சண்டையை நிறுத்தச் சொன்ஞர்கள். இதற்கந்த அஷ்தர், வெற்றியென்பது சமீபத்திலே நெருங்கி வந்து

விட்டதென்றும், ஆதலின் அந்நெருக்கடியான வேளை யிலே தம்மால் அந்தச் சண்டையை நிறுத்தமுடியா தென்றும் உறுத்திக் கூறினர். ஆனாலும், அவரின் கீழுள்ள வீரர்களெல்லாம் சண்டையை நிறுத்தி, மேற்கொண்டு செல்ல மறுத்துவிட்ட பின்பே அஷ்த ரும் ஓய்வெடுத்துக் கொண்டார். அப்பால் அலீரவி முஆவியாவை நோக்கி, அவர் விரும்புவ தென்ன வென்று வினவினர்கள். அதற்கு முஆவியா, அவ்விரு கக்ஷியிலிருந்தும் இரண்டு மத்தியஸ்தர்கள் நியமிக் கப்பட வேண்டு மென்றும், அவ்விருவரும் குர்ஆன் ஷரீபின் ஆதாரத்தைக் கொண்டு என்னவிதமான ஏகமனத்துக்குரிய அபிப்பிராயத்தை வெளியிட்டாலும் அதனை அவ்விருதிறத்தாரும் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்றும் கூறினர். அதற்கிணங்க அலீரவி அபூமூஸா அஷ்அரீயைத் தங்களுக்குரிய பிரதிநிதியாய்த் தேர்ந் தெடுத்தார்கள்; முஆவியாவோ, அம்ர் பின் ஆஸைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். அவ்விரு பெரியாரும், தத்தமக்குரிய நானூறு நானூறு தோழர்களை வரித் துக்கொண்டு ஒரு பொதுவான இடத்திற்கூடி, குர்ஆன் ஷரீபின் கட்டளைக்கிணங்க ஓர் ஏகமனத்துக்குரிய முடிபுக்கு வரவேண்டு மென்று தீர்மானம் செய்யப் பட்டது. அவ்விரு மத்தியஸ்தரும் ஒரேவிதமான அபிப் பிராயத்திற்கு வரமுடியாது போய்விடுவ ராயின், அப்பால் அந்த முடிபு அவர்களுக்குப் பின்னேயுள்ள எண்ணூறு பேர்களிடமும் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்; அவர்களுள் பெரும்பான்மையோர் தீர்மா னஞ்செய்து கூறும் முடிபினையே இருகக்ஷியாரும் ஏற்றுக்கொள்வதென்று முடிபுகட்டப்பட்டது. அவ்

வாறு ஒருவிதச் சமாதானம் அங்கு ஏற்பட்டுவிட்ட மையான், அலீரலி கூபாவை நோக்கியும், முஆவியா திமஷ்கை நோக்கியும் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால், அஷ்தரோ, இந்த ஏற்பாட்டைக் கண்டு அதிருப்தி யுற்றவராகவே யிருந்துவந்தார்.

அவ்வாறு சமாதான ஏற்பாடு செய்யப்பட்ட விஷயம் பழைய கலககோஷ்டியாருக் கெல்லாம் அதிருப்தியையே விளைத்துவிட்டது. எனவே, கூபாவுக்குச் செல்லும்வழியில் பன்னீராயிரம் மனிதர்கள் அலீரலி அவர்களை விட்டுப் பிரிந்து ஓடிவிட்டார்கள். கலீபா அவர்கள் கூபாவுக்கு வந்தபொழுது, அந்தப் பன்னீராயிரவரும் ஹரூரா * என்னுமிடத்திற்குச் சென்று பாடிவீ டமைத்துக்கொண்டனர். கூபாவிலிருந்ததமீம், பக்கர், ஹம்தான் ஆகிய வர்க்கத்தினரின் தலைவர்களே அந்தக் கலககோஷ்டியாருக்கும் தலைவர்களாய் விளங்கத் தொடங்கி விட்டார்கள். ஹஜ்ரத் அலீரலிக்கும் முஆவியாவுக்கும் இடையிலே அந்தச் சமாதானம் ஏற்படுவதை அவர்கள் அறவே விரும்பவில்லை. ஆனால், யுத்தத்தின் முடிவை ஆண்டவன் பொறுப்பிலே விட்டுவிட வேண்டுமென்று அன்னார் வாதித்துவந்தார்கள். அஃதாவது, மேற்கொண்டு அந்தச்சண்டை நிகழ்ந்துகொண்டே செல்லவேண்டு மென்றும், ஆண்டவன் எவர்பக்கல் வெற்றியளித்தாலும், அதனை அன்னவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சொன்னதே அன்னவர் கிளப்பிய வாதத்தின் சாரமாகும். முன்னம்

**அலீரலியின் சேனையுள் பிளவு**

* அவர்கள் **நஹ்ர்வான்** என்னுமிடத்துக்குச் சென்றுவிட்டதாய் ஸையித் அமீரலீ வரைகின்றார்.

கூறியிருப்பதே போல், இவர்களே ஆயிஷாவும்ரலி தல்ஹாவும்ரலி ஜுபைரும்ரலி பஸராவுக்கு விஜயஞ் செய்தபொழுது அம்மூன்று பக்தசிகாமணிகளையும் காபிர்களென்று தீர்ப்புக் கூறினர்கள். அவ்வாறே அவர்கள் முஆவியாவையும் அவரைச் சார்ந்து நின்றவர்களையும் காபிர்களென்றே தீர்மானம் செய்துவிட்டார்கள். ஆகவே, அப்படிப்பட்ட குப்பார்களுடனெல்லாம் சண்டைசெய்வது நியாயந்தா னென்று தீர்மானஞ் செய்துகொண்டார்கள். இவ்வாறு அன்னுர் கூறி, முஆவியாவுடன் சண்டைக்குச் செல்வதை அலீரலி அவர்கள் ஆமோதிக்க வில்லை; அந்தப் பகைவர்கள் கலீபாவுக்கு விரோதமாய்க் கலகம் செய்து கிளம்பியிருந்த போதினும், அவர்களும் சகோதரமுஸ்லிம்க ளாதலின், அன்னுரைக் காபிர்கள் என்றழைப்பது கூடாதென்று கூறினர்கள். ஹஜ்ரத் அலீரலி அவர்கள் அவர்களைச் சமரசப் படுத்துவான் வேண்டி எத்துணைமட்டும் பிரயத்தனப்பட்டுப் பார்த்தும், ஒன்றும் பயன்தராமலே போய்விட்டது. ஆதலின், இப்பெரியார், ஹரூராவில் கூடியிருந்த அம் மனிதர்களை யெல்லாம் கலைத்துத் துரத்திவிட்டார்கள். ஆயினும், அவர்கள் தங்களாலான விஷமத்தனத்தை யெல்லாம் விடாமலே செய்துகொண்டே வந்தார்கள்.

அபூ மூஸாவும், அம்ர் பின் ஆஸும் குறிப்பிட்ட காலத்தில், தத்தமக்குரிய நானூறு நானூறு தோழர்களுடனே தவ்மத்துல் ஜந்தல் என்னுமிடத்தில் ஒன்று கூடினர்கள். அவ்விரு தலைவர்களும் ஒரு கூடாரத்துள் குந்தி, விஷயத்தை நன்கு பன்னிப் பன்னிப் பேசினர்கள்; அப் பிரச்சினைக்குரிய எல்லா அம்சமும் சாங்கோ

பாங்கமாய் விவாதிக்கப்பட்டன. இறுதியாக அவ்விரு வரும் ஒருமிக்கத் தீர்மானித்து முடிவுகண்டது (சரித்திராசிரியர்கள் கூற்றுப்படி) அலீயும்ரலி முஆவியாவும் உத்தியோகத்தி னின்று நீக்கப்பட்டு, மூன்ருவதாக வேருெருவரே கலீபாவாய்த் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும் என்பதே யாகும்.

மத்தியஸ்தர் தீர்ப்பு—ஹி.37, ஷஃபான் மீ (658, பிப்ரவரி)

ஆனல், அவ்விரு தலைவர்கள் மட்டுமே ஒன்று கூடிப் புதியதொரு கலீபாவை நியமிப்பதற்கு அதிகாரம் பெற்றிருக்கவில்லை; முஸ்லிம்களின் பொது மக்கட்கூட்டம் கூடியே அப்படிப்பட்ட தேர்தலைச் செய்யவேண்டும். அவ்வாறே செய்து முடிப்பதென்று அபூமூஸாவும் அம்ர் பின் ஆஸூம் ஏகமனத்துடன் தீர்மானம் செய்துகொண்டார்கள். அப்பால் அவ்விரு வரும் அந்தக் கூடாரத்தை விட்டு வெளிவந்தவுடன் அம்ர், அபூமூஸாவை நோக்கி, அவரது தீர்மானத்தை முதலில் வெளியிட வேண்டினர். அதற் கிணங்கி அபூமூஸா ஒரு மேடைமீ தேறிநின்று, "நான் கிலாபத் பதவியினின்று அலீரலியை நீக்கிவிட்டேன்," என்று உரக்கக் கூவினர். அப்பால் அம்ர் பின் ஆஸ் தமது தீர்ப்பைச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அப்பொழுது அவர் நயவஞ்சகத் தனத்துடனே மேடைமீ தேறிநின்று, "கிலாபத் பதவியினின்று அலீரலியை அபூமூஸா நீக்கியதை யான் ஏற்றுக் கொண்டேன்; ஆனல், முஆவியாவை அவ்வுத்தியோகத்தி னின்று நீக்க யான் இணங்கமாட்டேன்," என்று கூறிவிட்டதாக அன்னர்மீது ஒரு பழி சுமத்தப்பட்டு வருகிறது. உண்மை யாதெனின்,

அபூ மூஸாவும் அம்ர் பின் ஆஸும் கூடிப் பேசிய தெல்லாம் கிலாபத் பதவியைக் குறித்த பிரச்சினையே யாகும்; அவ்விஷயத்தில் அவ்விருவரும் ஒன்றித்தே போய் விட்டார்கள்; அஃதாவது, அலீ ரலியேனும் முஆவியாவேனும் கலீபாவாய் நியமிக்கப்படக் கூடா தென்பதுதான் அவர்களது ஏகோபித்த தீர்மானமாய் விளங்கிவந்தது. ஆனால், முஆவியா ஷாம்தேசத்தின் கவர்னராக இருப்பதா? இல்லையா? என்பது குறித்து ஒன்றும் விவாதிக்கப்படவே யில்லை. ஆனால், ஷாம் பகுதியில் முஆவியாவே கவர்னரா யிருந்துவருவதில் அம்ர் பின் ஆஸ் பிரியங்கொண் டிருந்தவராகவே காணப்படாநின்றார். இந்த அம்ரென்பார் ஒரு கண்ணியமான முஸ்லிமாகவே இருந்து வந்தமையான், அன்னார் துரோகசிந்தையுடனே இக் காரியத்தில் நடந்துகொண் டிருப்பாரென்று கூறத்துணிவது ஓர் அபத்தமே யாகும்.

என்றாலும், அவ்விரு மத்தியஸ்தரும் கூறியமுடிபினால் நிலைமை ஒன்றும் சுமுகமாய்விட வில்லையென்பது மெய்யே யாகும்; எனவே, அவ்விரு திறத்தாருக்கிடையே இருந்துவந்த பிளவொன்றும் சமரசமாவதற்குச் சிறிதும் இடமில்லாது போய்விட்டது. ஸிப்பீன் யுத்தத்துக்கு முன்பிருந்த நிலைமைக்குத்தான் எல்லாக் காரியமும் மீட்டும்வந்து சேர்ந்துவிட்டன. முஆவியாவானவர் கலீபா அவர்களுக்கு அடங்கிநடக்காதவரை இஸ்லாத்தின் ஒற்றுமை எங்ஙனம் நிலைபெறுத்தப்படுதல் கூடும்? அப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே இந்த அலீ ரலி அவர்களை நீக்கிவிட்டு, வேறொரு புதியகலீபாவை நியமிப்பதனாலும் நிலைமை

சீர்பட்டுவிடுமென்று கூறுவதற்கில்லை. ஆனாலும், ஹி. 40-இல் அலீரலி அவர்கள் கொலைபுரியப்பட்ட வரையில் முஆவியாவானவர் **அமீருல் மூமினீன்** என்னும் பட்டத்தை வகித்து, கலீபாவாகத் தம்மைப் பிரகடனப் படுத்திக் கொள்ளவில்லை. இதனால் விளக்கமாவது யாதெனின், இந்த நான்காவது கலீபா உயிருடனே இருந்தவரை அந்த மாகாணாதிபதி அந்த உயர்பதவிக்கு ஆசைப்பட வில்லை யென்பது தெள்ளிதிற் புலனாகின்றது. எனவே, அலீரலி முஆவியாவையும், அம்ர் பின் ஆஸையும், அவர்களைச் சார்ந்தவர்களையும் தூஷித்துத்திட்டினார்களென்றும், முஆவியா அலீயையும்ரலி ஹஸனையும்ரலி ஹுஸைனையும்ரலி இன்னம் அன்னவர்களைச் சார்ந்தவர்களையும், தூஷித்துத்திட்டினார்களென்றும் கூறப்பட்டுவரும் கதைகளெல்லாம் பிற்காலத்தில் சிருஷ்டிக்கப்பட்ட வீண் கட்டுக்கதைகளென்றே குப்பைக் கூடையுள்ளே ஒதுக்கித்தள்ளப் படுதல் வேண்டும்.

**காரிஜீகளுடன் நிகழ்ந்தபோர்— ஹி. 37, ஷவ்வால் மீ (658, மார்ச்)**

மேற்கூறிய மத்தியஸ்தத்தின் முடிபு தெரிந்தவுடனே **காரிஜீகள்** * பகிரங்கமாய்க் கலகஞ்செய்யக் கிளம்பி விட்டார்கள். இத்தகைய காரிஜீகளுள் முதல் வகுப்பார், முன்னம் அலீரலி அவர்களை விட்டு ஹரூராவுக்குச் சென்றுவிட்ட 12,000 மனிதர்களாவர்; அக் காரணத்தால் அவர்கள் **அல் ஹரூரிய்யா** என்றும் அழைக்கப் படு

* **காரிஜ்** என்னும் சொல்லின் பொருள் "அப்புறப் பட்டவர்கள்" என்பதாகும். என்னெனின், இதன் தாது **கரஜ** (அவன் வெளிப் புறப்பட்டான்) என்பதா யிருக்கிறது.

கிருர்கள். ஆனல், **காரிஜீ** என்னும் நாமம், அன்னர் கூபாவிலிருந்து ஹரூராவுக்குப் புறப்பட்டுப் போய் விட்டதனுல் கொடுக்கப்பட்ட பெயரன்று; ஆயின், அலீரலியை எதிர்த்தவர்க ளெல்லாம் **காபிர்கள்** என்று தீர்ப்புக்கூறி, இஸ்லாத்தின் ஏகசகோதர கோஷ்டியைவிட்டு அப்புறப்பட்டுச் சென்றுவிட்டமை யால், இப்பெயர் அவர்களுக் கெல்லாம் பொதுவாக வழங்கப்படுவ தாயிற்று. உண்மையை யுரைக்கு மிடத்து, இந்த ஆதிகால காரிஜீகளே முஸ்லிம்சகோ தரர்களைக் **காபிர்கள்** எனத் தூஷித்து, இஸ்லாத்தின் ஒற்றுமையைக் குலைத்தவர்களாவர்; அதற் கப்பாலே தான் இன்றளவும் அத் தொத்துவியாதி—அஃதாவது, முஸ்லிம் சகோதரர்கள் ஒருவரை யொருவர் காபி ரென்று சபித்துக்கொள்ளும் கொடிய வழக்கம்—நஞ் சமூகத்தை விட்டு அப்புறப்படாது, அனைவரையும் அடைய வளைந்துகொண்டு கிடக்கின்றது.

அத்தகைய காரிஜீகள் தங்களுக்குரிய யதாஸ் தானமாகிய பஸராவையும் கூபாவையும் விட்டுப் புறப் பட்டு, மதாயினை நோக்கிச் சென்ருர்கள்; அந்நகரைக் கைவசப்படுத்திக் கொண்டு, ஆங்குத்தங்கள் ஆட்சியை நிலைநிறுத்தலா மென்று நாடிச் சென்ருர்கள். ஆனல், அவ்விடத்தி லிருந்த மாகாணுதிபதி முற்கூட்டியே விஷயத்தை யுணர்ந்து, அவர்களைத் தடுக்கப் பிரயத் தனப்பட்டார்; ஆனல், அம் முயற்சியில் அன்னர் தோல்வியுற்றுப் போயினர். அங்கிருந்து அவர்கள் மேல்நோக்கிச் சென்று, திஜ்லா நதியைக் கடந்து, மேற்குக் கரைக்குப் போனர்கள்; அப்பால் அவர்க ளுள்ளிருந்து நாலாயிரம்பேர் நஹ்ர்வானில் குழுமிவிட்

டார்கள். ஆனால், அலீரவி அவர்கள், மத்தியஸ்தரின் தீர்ப்புப் பலப்பிராப்தியை அடைந்து கொள்ளாது போய் விட்டமையான், ஷாம் தேசத்தின்மீது மீட்டு மொருமுறை படையெடுக்கத் துணிந்து நின்றார்கள். அதே சமயத்தில் இப்பெரியார் காரிஜீகளைத் தமக்கு அடங்கி நடக்குமாறு ஆணையிட் டனுப்பினார்கள்; இதற்கந்தக் கலககோஷ்டியார் ஒரு முரட்டுத்தனமான பதிலையனுப்பி, முதன்முதலில் கலீபா இஸ்லாத்தை விட்டு அப்புறப்பட்டுக் காபிராய்ப் போய்விட்டா ரென்னும் விஷயத்தை ஒத்துக்கொள்ள வேண்டு மென்று வற்புறுத்த லாயினார்கள். அவ்வளவுடன் நில்லாது, அவர்கள் கொலைத்தொழிலில் இழிந்தும் கொள்ளைத் தொழிலில் புகுந்தும் நாட்டின் அமைதி யைக் குலைத்துக்கொண் டிருந்தார்கள். அவர்களுடைய இக்கொடுஞ் செயலைக் கேள்வியுற்று, அலீரவி ஷாம் தேசத்தை நோக்கிச் செல்லாது, நஹ்ர்வான்மீது படையெடுத்துச் சென்றார்கள். ஆங்குச் சென்றவுடன், கொள்ளைத் தொழிலும் கொலைத் தொழிலும் புரிந்தவர்களை யெல்லாம் தங்கள்பால் கொண்டுவந்து விட்டுவிட்டால் மற்றெல்லாருக்கும் மன்னிப் பளிப்ப தாய்க் கூறினார்கள். இதுகேட்டு, ஒருசில காரிஜீகள் பகைமையைவிட்டு விலகிப்போய் விட்டார்கள்; வேறு சிலர் அலீரவியின் சைன்யத்துடன் சேர்ந்துகொண் டார்கள். ஆனாலும், ஆயிரத்தெண்ணூறு மக்கள் பின்னிடையாமலும் முன்வரத் துணியாமலும் கலீபா வுடனே சண்டைசெய்யத் துணிந்து நின்றார்கள்; அம்முயற்சியில் அவர்கள் முறியடிக்கப்பட்டு ஓட்ட மும் பிடித்தார்கள்.

அவ்வாறு அவர்கள் தோல்வியுற்றுப் போயும், தங்கள் கலகத்தைமட்டும் அவ்வளவுடனே நிறுத்திக் கொண்டார்களில்லை. நஹ்றர்வான் போர்க் களத்தை விட்டுப் பின்னிடைந்து போனவர்கள் தங்களுக்குள்ள குரோத மனப்பான்மையை விட்டொழித்து விட்டதாய்க் கூறிக்கொண்டே வேற்றிடங்களுக்குச்* சென்று கலீபாவுக்கு விரோதமாகவே கிளர்ச்சி செய்துகொண்டு கிடந்தார்கள்; அலீரலி அவர்களுக்கு விரோதமாய் அங்கங்கே யுள்ள மக்களையெல்லாம் அந்தரங்கத்தில் தூண்டிவிட்டுக் கொண்டு மிருந்தார்கள். இத்தகைய காரிஜீகள், ஹஜ்ரத் உதுமான்ரலி அவர்கள் ஆட்சியின் போது கலகஞ்செய்து கிளம்பியவர்கள் மட்டுந்தாமென்று எண்ணிவிடாதீர்கள். அவர்கள் தங்களுக்கென்று பிரத்தியேகமான மதக் கொள்கைகளையும் சிருஷ்டி செய்துகொண்டு, தங்களது இயக்கத்திற்கு மதத்தின் சார்பாயுள்ள நிறத்தையும் ஏற்றிக்கொண்டு விட்டார்கள். ஆயினும், உண்மையிலே இந்தக் கலவரமானது, உதுமான்ரலி அவர்கள் காலத்தில் கிளம்பிய கலகத்தின் தொடர்ச்சியாகவே இருந்துவந்தது. இம்மக்கள் இஸ்லாமிய ராஜ்ஜியத்தின் பகிரங்க எதிரிகளாகவே இருந்து வந்தார்கள்; மேற்போக்காய் நோக்குமிடத்து, இன்னாரது விஷமத்தனம் அடங்கி விட்டதேபோல் காணப்படினும், அந்த முஸ்லிம் குடியாட்சியின் அஸ்திபாரத்தைக் கல்லியெறிய

**காரிஜீகள் மேற்கொண்டும் தொந்தரை செய்கின்றனர்**

* அவ்விடங்கள் அஹ்ஸா வென்றும், பஹ்ரைன் என்றும் அமீரலீ அறைகின்றார்.

இவர்கள் எல்லாவிதமான இரகசியச் சூழ்ச்சிகளையும் கைக்கொண்டே நடந்துவந்தார்கள்.

இத்தகைய காரிஜீகளை நஹ்ர்வானில் தோற்கடித்த பின்பு அலீரலி அவர்கள் ஷாம்தேசத்தை நோக்கிப் புறப்பட நாடினார்கள். ஆனால், அவர்களுடைய சைன் யம் கூபாவுக்குச் சென்று புதிய படையெடுப்புக்கு வேண்டிய சவதரிப்புக்களையெல்லாம் செய்துகொண்டு வந்தால்தான் அம்மாகணத்தை நோக்கிச் செல்லுதற்கு வேண்டிய சக்தியும் சாமர்த்தியமும் தங்களுக்குண்டாகு மென்று மறுத்துக் கூறினார்கள். ஆகவே, அலீரலியும் அவர்களுடனே கூடிக் கூபாவுக்குத் திரும்பிவந்து விட் டார்கள். ஆனால், தங்கள் சொந்த இல்லத்திற்குத் திரும்பியபின்னர் அந்தச் சைன்யமக்கள் தங்களுக்குரிய உற்சாகத்தை யெல்லாம் அடியுடனே இழந்து, ஷாம் தேசத்தை நோக்கிப் புறப்படத் தயங்கினார்கள். ஒரு கால் விஷமக்கார காரிஜீகள் துஷ்பிரசாரம் வேண்டிய மட்டுஞ் செய்து அலீரலியின் சைன்யத்தில் அதிருப்தி யையும் அடங்காப் பிடாரித்தனத்தையும் உண்டு பண்ணி விட்டிருக்கலா மென்று ஊகிக்கப்படுகிறது. அதுவேயுமன்றி, எகிப்துநாட்டில் புதிய சங்கடங்கள் பல முளைத்துவிட்டமையால், அலீரலி அவர்கள் ஷாம் தேசத்துக்குச் செல்வதை அடியோடு கைவிட்டு விட்டார்கள்.

அலீரலி அவர்கள் கைஸென்பாரை எகிப்தின் மாகாணாதிபதியாய் நியமித்திருந்தார்கள். இந்தக் கைஸ் மகா நிதானபுத்தியும் கூரிய ராஜதந்திர நிபுணத் துவமும் வாய்க்கப் பெற்றவர். இவர், எகிப்தில் உதுமான்ரலி அவர்களது உதிரத்திற்கு உற்றபழி

வாங்கவேண்டுமென்று கிளம்பிய கூட்டத்துடன் ஒரு சிறிதும் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. ஆனாலும், அந்தக் கலககோஷ்டியார் அந்நாட்டில் அதிகமான பலத்தைப் பெற்றுக் கொண்டு வந்தார்கள்; இதற்குக் காரணம் கைஸின் கோழைத்தனந்தானென்று எதிர்க் கக்ஷிக்காரர் கூறுவாராயினர். ஆகவே, இறுதியில் அலீரலி அன்னாரைத் திரும்ப அழைத்துக்கொண்டு, அவரது ஸ்தானத்தில் முஹம்மத் பின் அபூபக்ரை நியமித் தனுப்பினார்கள். இந்தப் புதியகவர்னர் ஓர் இறுமாப்புக் கொண்ட துணிச்சற்கார ரானமையின், எகிப்துக்குச் சென்றவுடனே கலகக்காரர்களை யெல்லாம் மிகக் கடுமையாய்த் தகைந்தொடுக்கத் துணிந்துவிட்டார். அதன்பயனாய் ஹி. 37-இல் அந்த எகிப்துநாட்டில் ஒரு பெரிய கலகம் மூண்டு கொண்டது. அந்தச் சந்தர்ப்பம் பார்த்து முஆவியா எகிப்தின்மீது அம்ர் பின் ஆஸைப் படையெடுத்துச் செல்லுமாறு கட்டளையிட் டனுப்பினார். அதுபொழுது அலீரலி அந்நாட்டைவிட்டு நெடுந் தூரத்தில் இருந்துவந்தமையால், எகிப்தின் கவர்னருக்கு உதவியளிப்பான் வேண்டி அஷ்தரை ஆங்கனுப்பி வைத்தார். ஆனால், இவர் எகிப்தை அடையுமுன்னே எல்லைப்புறத் தலைவனொருவனால் விஷமிட்டுக் கொல்லப்பட்டார். ஆதலால், அம்ர் பின் ஆஸ் எளிதில் முஹம்மத் பின் அபூபக்ரை வென்றுவிட்டார். இதன்பயனாய் எகிப்துநாடு முழுவதும் முஆவியாவின் ஆட்சியின்கீழே வந்தொடுங்கி விட்டது; எனவே, ஷாம்தேசத்துடன் எகிப்துநாடும் சேர்ந்து, இப்பால்

முஆவியா எகிப்தைக் கைப்பற்றிக் கொள்கிறார்— ஹி. 38, ஸபர் மீ (658, ஜூலை)

அலீரலியின் ஆட்சியை விட்டுப் பிரிந்துபோய் விட்டன வென்று நாம் நன்கு தெரிந்து கொள்ளுகிறோம்.

அவ்வாறு எகிப்துதேசம் பிடுங்கப்பட்டுப் போய் விட்டது, அலீரலியின் கிலாபத்திற்கு மற்றொரு பேரிடி யாகும். அதற்குள்ளே, அங்கங்கே வேரூன்றி வந்த காரிஜீகளின் தொந்தரையும் ஒருசமயம் ஒருபக்கத்திலும், மறுசமயம் வேறொரு பக்கத்திலும் புடைத்துக் கிளம்பிய வண்ணமே இருந்துவந்ததனால், அக்கால முஸ்லிம் ராஜ்ஜியம் நாளுக்குநாள் பலஹீனமுற்று வந்தது. ஹி. 38-இல் பஸராவில் மீட்டுமொரு முறை குழப்பம் ஏற்பட்டது. அப்பொழுது அம்மாகாண கவர்னராயிருந்த இப்னு அப்பாஸ்ரலி கூபாவுக்குச் சென்றிருந்தார்; ஆதலின், அவருடைய உதவி உத்தி யோகஸ்தராய் இருந்துவந்த ஜியாதென்பார் அக் குழப்பத்தைக் கண்டு வேறெங்கோ ஓடி ஒளிந்து கொண்டார். இறுதியாய் ஹஜ்ரத் அலீரலி சில முக்கியஸ்தர்களுக்கு நிருபங்கள் விடுத்து ஜியாதுக்குத் துணைபுரியக் கோரினார்கள்; அப்பால் அந்தக் கலகக் காரர் தோற்கடிக்கப்பட்டனர். ஆனால், அந்தக் கலகம் ஓரிடத்தில் அமுங்கி, மற்றோரிடத்தில் புடைத்தெழுந் தது. அப்பால் கிர்ரீத்தென்னும் ஒரு செல்வாக்குள்ள தலைவர்—அதுவரை அலீரலியின்பால் விசுவாசத்துடன் இருந்துகொண்டு, ஜமல், ஸிப்பீன் போர்களிலெல்லாம் இப்பெரியாருக்கு நண்பரா யிருந்தவர்—கலகஞ்செய்யக் கிளம்பிவிட்டார். ஹஜ்ரத் அலீரலி அவர்கள் அன்னா ரைச் சமரசப்படுத்த எத்துணையோ முயன்றுபார்த் தார்கள்; ஆனால், கிர்ரீத்தென்பார் தம்முடைய தோழர்

அலீரலியின் இறுதிக்கால ஆட்சி

களுடனே தப்பிக்கொண்டு அஹ்வாஜுக்குச் சென்று, அங்குள்ள மக்களை இந்த கலீபாவுக்கு விரோதமாய்க் கிளப்பி விட்டார். ஆனால், பஸராவின் சைன்யம் அவரை யெதிர்த்துச் சென்று அஹ்வாஜை விட்டு ஓட்டம்பிடிக்கச் செய்தது; ஆயின், அப்பாலும் அவர் திரும்பிவந்து, போர்முனையிலே மடிந்துபோயினர்.

இவ்வாருய் அந்தக் கலகம் ஒடுக்கப்பட்டவுடனே, மற்ருெரு கலகம் கிர்மானில் கிளம்பிற்று. அதனைத் தகைந்தொடுக்க அலீரலி ஜியாதை அனுப்பிவைத்தார்கள்; அவ்வண்ணமே அவர் சென்று, அதனை அடக்கியொடுக்கினர். அவரது ஆட்சிமுறை நிரம்ப நீதமுள்ளதாகவும் புத்திசாலித்தனம் நிறைந்ததாகவும் இருந்து வந்ததைக் கண்டு, அந்தக் குடிமக்களெல்லாம் நவ்ஷேர்வான் மன்னரது ஆட்சியின் பெருமையையே நினைக்கலாயினர்கள். ஆனாலும், ஷாம்தேசத்துத் தொல்லை மட்டும் அவ்விடத்தில் இருந்துகொண்டே யிருந்தது. முஆவியாவுக்கும் அலீரலிக்கும் இடையில் நிகழ்ந்து வந்த வாக்குவாதம் நெடுகவே வளர்ந்து வந்தமையால், முஆவியாவின் ஆட்கள் தைரியம் மிக்கவர்களாய் மதீனா, மக்கா, எமன் எல்லை வரையிலுங்கூட எட்டி விட்டார்கள். அதுகண்டு ஹஜ்ரத் அலீரலி அவ்விடங்களுக் கெல்லாம் படைகளை யனுப்பித் தங்கள் ஆட்சியை நிலைபெறச் செய்துகொண்டார்கள். இதற்குள்ளே அப்துல்லா பின் அப்பாஸ் அலீரலியுடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு மக்காவிற்குத் திரும்பிப் போய்விட்டார். இவ்வாருக வெல்லாம் எங்கும் இடையூறுகளே முளைத்து வந்தமையால், அலீரலி முஆவியாவுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ளத் துணிந்து

விட்டார்கள்: அதில் வரையப்பட்ட நிபந்தனையின்படி ஷாம்தேசமும் எகிப்துநாடும் முஆவியாவின் ஆட்சிக்குள்ளே விடப்பட்டன. அவற்றை யன்றி, ஏனைப் பகுதிகளெல்லாம் அலீரலியின் ஆட்சியின்கீழே இருந்து வரலாயின.

அலீரலியும் முஆவியாவும் சமாதானமாய்விட்டது, காரிஜீகள் உள்ளிட்ட அந்தக் கலககோஷ்டியாரின் சதியாலோசனை நிரம்பிய தீயஎண்ணங்க ளனைத்தையும் தகர்த்தெறிந்து விட்டது; என்னெனின், அவர்களுடைய வெற்றியின் அந்தரங்கமெல்லாம், முஸ்லிம்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டு கிடப்பதையே சார்ந்து நின்றது. அவர்கள் வெளிப்படையாய் எத்தகைய காரியத்தையும் செய்யக்கூடாதவராய் இருந்துவந்தார்கள்; ஆனாலும், அவர்களுடைய இரகசியச் சூழ்ச்சிகளனைத்தும் முன்போலவே தொடர்ந்து நடைபெற்று வந்தன. அதன் முடிபாய் இறுதியிலே அம்மக்களுள் மூவர் தமக்குள்ளே பரியாலோசனை செய்து, அலீரலி முஆவியா அம்ர் பின் ஆஸ் ஆகிய மூவரையும் ஒரேநாளில் ஒரே நேரத்தில் கொன்றுவிடுவ தெனச் சதியாலோசனை செய்து கொண்டார்கள். அவர்களுள் ஒருவன் கூபாவுக்கும், மற்றொருவன் திமஷ்குக்கும், இன்னொருவன் புஸ்தாத்துக்கும் சென்று, ரமலான் மாதத்தின் ஒரு குறிப்பிட்ட வெள்ளிக்கிழமையன்று 'பஜ்ர்' என்னும் வைகறைத் தொழுகையின்போது அவனவனும் தன் தனக்குரிய ஆசாமியை வேலை தீர்த்து விடுவதென்று அவர்களுக்குள்ளே முடிவு செய்துகொள்ளப்பட்டது.

**அலீரலி கொல்லப்படுதல் —ஹி. 40, ரமலான் 17-(661, ஜனவரி 25)**

அந்தக் குறிப்பிட்ட வெள்ளியன்று அம்ர் பின் ஆஸ் சரீரசௌக்யம் குன்றியிருந்தமையால், அன்று அதி காலைத் தொழுகைக்காக மஸ்ஜிதுக்கு வரவில்லை; ஆகவே அவரது ஸ்தானத்தில் வேறொருவர் கொல்லப் பட்டுப் போயினர். திமஷ்க் நகரிலோ, முஆவியா படுகாயமுண்டு இறுதியில் உயிர்தப்பிப் பிழைத்தார். ஆனால், அலீரலியின் உயிரைப்போக்கும் வேலை அப்துர் ரஹ்மான் பின் முல்ஜிம் என்பவன் வயம் ஒப்படைக்கப் பட் டிருந்தது. இந்தப் பாதகன் கூபாவில் இரண்டு தோழர்களைத் தன்வயம் சேர்த்துக்கொண்டான். அப் பால் அலீரலி அவர்கள் அந்த வெள்ளிக்கிழமை அதி காலையில் அருணோதயத்தின் போது வீட்டைவிட்டு வெளியில் வரத்தான் தாமதம்; அக்கணமே அம் மூவரும் இப்பெரியார்மீது தாவி வீழ்ந்தார்கள். இப்னு முல்ஜிம் அவ்விடத்திலே கைது செய்யப்பட்டான்; இரண்டாமவன் அக்கணமே கொல்லப்பட்டான்; மூன்றாவது மனிதன் தப்பியோடி விட்டான். ஆனால், ஹஜ்ரத் அலீரலி அவர்கள் படுகாயமுண்டு வீட்டுக்குத் தூக்கிச் செல்லப்பட்டார்கள். "நான் இறந்துபோய் விட்டால், இப்னு முல்ஜிமைத் தூக்கிலிடுங்கள். ஆனால், அதுவரை அம் மனிதனுக்கு ஒருவரும் ஒன்றும் தொந்தரை கொடுக்கவேண்டாம்; சாவும் பரியந்தம் அவனுக்கு நல்ல ஆகாராதிகளைக் கொடுத்துச் சுகமாக வைத்திருங்கள்," என்று கூறிவிட்டுத் தாங்கள் பெற்றுக் கொண்டிருந்த படுகாயத்தின் பயனாய் ரமலான்மாதம் 17-ஆம் தேதியன்று ஷஹீதாய்ப் போய் விட்டார்கள்—"இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்—(குர்ஆன்)."

ஹஜ்ரத் ஆலீரலி அவர்கள் மரணமடைந்த பொழுது அன்னுருக்குப் பிராயம் 62 தான். அவர்கள் கலீபாவாய் ஆட்சி புரிந்த காலம் 4 வருடமும், 9 மாத முமாகும். இந்தக் குறுகிய காலத்தில் இஸ்லாமிய ராஜ்ஜியம் ஒருசிறிதும் விஸ்தீரண மடையவில்லை. அலீரலி அவர்கள் எப்பொழுதுமே இஸ்லாத்தின் அபி விருத்தியில் அதிகமான ஊக்கங் காட்டிவந்தும், ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் உள்நாட்டுச் சண்டை களால் உயிர்துறந்து போயினுர்கள். இவர்களது கிலாபத் ஆட்சிக் காலம் இவர்களுக்கேயும் மனச்சாந்தியை ஒரு பொழுதும் அளித்ததில்லை யென்னலாம்.

**அலீ(ரலி)யின் ஆட்சி**

இதற்கெல்லாம் காரணம், இவர்கள் இழைத்துவிட்ட எத்தகைய குற்றமுமாகாது என்னும் உண்மையை நீங்கள் முன்னமே அறிந்து கொண்டிருக் கின்றீர்கள். தவறிழைப்ப தென்பதும், சிற்சில வேளை களில் பலஹீனத்தை வெளிக்காட்டுவ தென்பதும், மனிதசுபாவத்திற்கு ஒத்தனவாகவே இருந்துவருகின் றன. உதுமான்ரலி அவர்களேனும், அலீரலி அவர்க ளேனும் எப்படிப்பட்ட பிழையும் இழைத்துவிட்ட தாய் வைத்துக்கொண்ட போதினும், அதனுல் அவ் விருவரையும் நபிகள்நாயகத்தின் நெருங்கிய தோழர்க ளென்னும் அந்தஸ்திலிருந்து தள்ளிவிடுவது தகாது. நபிகள் நாயகத்துக்குப் பின்வந்த முதல்நான்கு கலீ பாக்களின் ஆட்சிக்குரிய காலமுழுவதும் கிலாபத்தே ராஷிதா—(நேரான மார்க்கத்திலே சீராக நடந்துசென்ற கிலாபத்) என்று அழைக்கப்பட்டு வருகிறது ; அந்தக் காலம் நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்

டிருக்கின்றது ; அந்நான்கும் இஸ்லாமிய உலகிற்கு நான்கு பெரிய படிப்பினைகளைக் கற்றுக்கொடுக்கக் கூடியனவாய் அமைந்து கிடக்கின்றன. அந்தப் பாகுபாட்டின்படி அலீரலி அவர்கள் செய்துமுடிக்க வேண்டியிருந்த காரியம், இஸ்லாத்தின் கலத்தை உள்நாட்டுக் கலகங்களென்னும் மகா அபாயகரமுள்ள சமுத்திரத்தில் கவிழ்ந்து போகாமல் சர்வ ஜாக்கிரதையுடனே உய்த்துச்செல்ல வேண்டியதா யிருந்தது. அப்படிப்பட்ட அபாயகரமான நிலைமைகளில் இஸ்லாமிய ராஜ்ஜியத்தின் நிலைமையைச் செம்மையாய் நிலைபெறுத்துவ தென்பது, கடும்புயலால் கொந்தளிப்புக் கொண்டிருந்த அலைகடல்மீது ஒரு படவை உய்த்துச் செல்லுதற்கு ஒப்பென்றே உதாரணம் காட்டவேண்டிய திருக்கின்றது. அலீரலியின் ஆட்சியின் காலமெல்லாம் பெரும் பெரும் புரட்சிகளே எப்பொழுதும் நிகழ்ந்துவந்தும், இப்பெரியார் அந்த மஹாநபியின் ஒரு தகுதி வாய்ந்த சிஷ்யரென்பதை உதஹரித்துக் காட்டியதில் ஒருசிறிதும் பின்வாங்கி விடவில்லையென்பது பிரத்தியக்ஷ பிராமணமாயுள்ள ஒரு நிதரிசன விஷயமே யாகும். உள்நாட்டுச் சண்டைகள் எங்குப் பார்த்தாலும் இடை விடாது நடைபெற்று வந்த காலத்தும் இம்மகான் ஒப்புவமையற்ற முறையிலே எல்லா முஸ்லிம்கள் மாட்டும் பக்ஷம் பாராட்டியே வந்திருக்கிறார்கள்.

ஹஜ்ரத் அலீரலியின்மீது சுமத்தப்படும் பெரியதொரு குற்றச்சாட்டு யாதெனின், உதுமான்ரலி அவர்களைக் கொன்ற பாதகர்களைக் கண்டு பிடித்துத் தண்டிக்கவில்லை யென்பதும், அந்தக் கலககோஷ்டி

யாரின் விஷமத்தனத்தை வன்மையுடன் அடக்கி யொடுக்க வில்லையென்பதுமே யாகும். "இரண்டாவது கலீபாவைப் போல இவரும் மனஉறுதி வாய்ந்தவ ராய் இருந்திருக்கும் பக்ஷத்தில், அந்த அடங்காப் பிடாரிகளான அரபிகள்மீது அதிக காலம்வரை ஆட்சி புரிந்து வந்திருக்கலாம். ஆனால், இவருடைய தயாள குணமும் பெருந்தன்மையும், அக்காலத்தில் அந்த அரபிகளிடத்தில் அதிகமான செல்வாக்கைப் பெற்றுக் கொள்ள வில்லை. அன்னியர்மீது இவர் வைத்திருந்த நம்பிக்கையை இவருடைய எதிரிகள் இவருக்கே தீங்கிழைக்கக் கூடிய வழியிலே உபயோகித்துக் கொண் டார்கள்," என்று சையித் அமீரலீ வரைகின்றார். ஆனால், இதற்கு முன்னே யாம் எழுதியிருப்பதே போல், இப்பெரியார் வேறுவழி யில்லாது பல்வகை நிர்ப்பந்தத்திற் குள்ளே சிக்கிக்கொண்டு கிடந்தார். இவருக்கே விரோதமாய்க் கிளம்பிய மனிதர்கள்மாட்டு இன்னார் வேறுவிதமாய் நடந்துகொண்டிருப்பின், அப் பால் இவர் உதுமான்ரலி அவர்களைக் கொன்றவர்கள் மீது சரியான 'நடவடிக்கை' எடுத்துக்கொள்ள வில்லையென்று குற்றங் கூறலாம். காரிஜீகள் இந்த கலீபாவுக்கு விரோதமாய்க் கிளம்பினார்கள்; அவர்கள் கையாலே இம்மகான் கொலையுண்டும் போயினார்கள். எனினும், அத்தகைய முரட்டாட்டக் காரர்பாலும் இவர்கள் அதிக சாந்தத்துடனேதான் நடந்துகொண் டிருக்கிறார்கள். வெளிப்படையான கலகங்களை அடக்க அலீரலி அவர்கள் அன்னாருக்கு விரோதமாய்ப் போர் புரியக் கிளம்பினார்களே யன்றி, ஒருபொழுதும் அக் கலகங்களுக்கு ஆஸ்பதமாயிருந்த முக்கியஸ்தர்களைப்

பொறுக்கி யெடுத்து அவர்களை ராஜதுரோகக் குற்றத் துக்காகத் தண்டித்துக் கொலைக்களத்திற்கு அனுப்பத் துணியவில்லை. என்னெனின், இவர்களது இயற்கைக் குணமே ஓர் இரக்க சுபாவமா யிருந்து வந்திருக்கிறது.

முன்னம் மூன்ருவது கலீபா உதுமான்ரலி இருந்து வந்ததே போலத்தான் ஹஜ்ரத் அலீரலி அவர்களும் ஏழைகள்மாட் டிரக்கமும், பொதுவான பூததயையும் இயற்கையிலே குடிகொண்டவர்களாய் இருந்துவந் தார்கள். எவர்மாட்டும் இம்மஹான் கடினமாய் நடந்துகொண்டது கிடையாது. நண்பனுயினும் பகை வனுயினும், அனைவரும் ஒரேவிதமாகத்தான் பக்ஷத் துடனே பாதுகாக்கப்பட்டு வந்தனர். ஆதலினுல்தான் இவர்களுடைய சைன்யத்தில் கலககோஷ்டியார்பலரும் சேர்ந்துகொள்ள இடங்கிடைத்த தென்னலாம். உது மான்ரலி அவர்களைக் கொலைசெய்தவர்களுள் ஒருவராய் விளங்கிய முஹம்மத் பின் அபூபக்ரை இப்பெரியார் எகிப்தின் கவர்னரராய் நியமித் தனுப்பினுர். அந்த மூன்ருவது கலீபாவின் காலத்தில் கலகஞ்செய்து கிளப்பியவருள் ஒருவராயிருந்த அஷ்தர் இந்த நான்கா வது கலீபாவின் நம்பிக்கையுள்ள நண்பர்களுள் ஒருவரா யிருந்தார். ஆனுல், இவற்றினை யெல்லாம் இப் பெரியாருக்குரிய பலஹீன மென்றே ஒருசிலர் கூறக் கூடுமாயினும், இம்மஹான் இஸ்லாத்தின் பொறுக்கியெடுக்கப்பட்ட முக்கியஸ்தருள் ஒருவரென் பதுமட்டும் ஒருகாலும் இழுக்கடைய மாட்டாது; எப்படிப் பார்த்தாலும், இப்பெரியார் மானிடவர்க் கத்தைச் சார்ந்த ஒருவராகவே இருந்துவந் திருக்கிருரென்பது ஒருகாலும் மறக்கற்பால தன்று; மனித

ளுய்ப்பிறந்த எவனும் குற்றங்குறை யில்லாது இத்தர ணியில் இருப்பது வழக்கமில்லை. அன்றியும், கலகக் காரர் விஷயத்தில் இந்த கலீபா வேறொன்றும் செய்ய முடியாத நிர்ப்பந்தத்திற்குள்ளே சிக்கிச்சுழன்றுகொண் டிருந்தா ரென்பது உங்களுக்குத் தெரியாத விஷய மன்று. இவர்களுக் கிருந்துவந்த சிரமத்தை முஆவியா வின் எதிர்ப்பு மேன்மேலும் சிக்கலடையச் செய்து விட்டது. எனவே, இவர்கள் உதுமான்ரலி அவர்களைக் கொன்றொழித்தவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க மனமில்லாமலே வாளா இருந்துவிட்டார்க ளென்னும் வதந்தி எங்கும்பரவத் தலைப்பட்டுவிட்டது. “தைரிய மும் தாட்சிண்யமும் இவர்களிடத்தில் மிகுந்திருந்தும், ராஜ்ஜியபாரத்தை வகித்தற்குரிய ராஜ்ஜியதந்திர நிபுணத்துவம் அதிகமா யில்லையென்றே கூறிவிடலாம். ஆனால், அமாத்தியர் ஸ்தானத்திலிருந்து மற்றொரு கலீ பாவுக்கு மந்திராலோசனை சொல்லிக் கொடுப்பதில் அதிகமான நிபுணத்துவம் வாய்க்கப் பெற்றவ ரென் பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை,” என்று வேறுசிலர் கூறிவருகின்றனர்.

முதல் மூன்று கலீபாவுக்கு இருந்து வந்ததே போலத்தான் இந்த நான்காவது கலீபாவுக்கும் அதிகார மோகமும் ஐசுவரியமோகமும் எட்டுணையும் இருந்த தில்லை. நபிகணாயகர்ஸல் காலத்தில் வாழ்ந்துவந்தது போலவே பிற்பாடும் இப்பெரியார் எளிய வாழ்க்கை நடாத்துவதிலேயே பெருமைகொண் டிருந்தார்கள். உள்ளப்பரிசுத்தமும், ஒருசிறிதும் சுயநயமற்ற தன்மை யுமே இவர்களது கடைப்பிடியாய் இருந்திருக்கின்றன. கலீபாவாக உயர்ந்துவிட வேண்டுமென்னும் வேட்கை

யொன்றும் இன்னுருக்கு இல்லாமலிருந்தும், அந்த உயர்பதவிக்குரிய பொறுப்பனைத்தும் இவருடைய தோள்கள்மீது சுமத்தப்பட்ட பின்னர், நபிகள் நாயகத்தின் அடிச்சுவட்டையே பின்பற்றி, தம்பால் ஒப்படைகப்பட்ட ஜவாப்தாரித் தனத்தை மிகவும் செம்மையாய் முடித்தே தீர்த்தார்கள். அக்காலத்தில் சிதறிக்கிடந்த இஸ்லாமிய ராஜ்யத்தின் எல்லாப்பகுதிகளையும் ஒன்றுசேர்த்துப் பிணைப்பது முடியாதென்று கண்டுகொண்டதன் பின்னுல் எஞ்சியிருந்த மாகாணங்களையேனும் ஒருமிக்கத் திரட்டிவைப்பான் வேண்டியே இம்மஹான் முஆவியாவுடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டு, அன்னவர்பாலே ஷாம்தேசத்தையும் எகிப்துமாகாணத்தையும் விட்டுவிட்டார்கள். இவர்களது உள்ளத்தின்கண் அரசபதவியை எவ்வாற்ருனும் இடையூறின்றி வகித்தே தீரவேண்டுமென்னும் ஆவல் மட்டும் இருந்திருக்குமாயின், இப்பெரியார் எக்காரணத்தை முன்னிட்டும் முஆவியாவுடன் அந்த உடன்படிக்கையைச் செய்துகொண்டு, எஞ்சியிருந்த மாகாணங்களில் மட்டுமே கிலாபத் ஆட்சிமுறையை ஏற்படுத்தியிருக்க இணங்கியிரார்கள். அவ்வாறு அந்த முஆவியாவுடன் இந்த நான்காவது கலீபா செய்துகொண்ட சமாதானமே, பின்னுல் இவர்களுடைய மூத்த குமாரர் இமாம் ஹஸன்ரலி அவர்களையும் முஸ்லிம் உலகத்தின் சமரசத்தை நாடித் தந்தையாரின் கலீபாபதவியை வேண்டாமென்று வெறுக்கவும், அதனுல் எல்லாமுஸ்லிம்களையும் ஒரேமத்திய ஆட்சியின் பக்கல் கொண்டுவந்து சேர்க்கத் துணை புரியவும் பெரிதும் தூண்டிற்றெனல் வேண்டும். எனவே,

ஹஜ்ரத் அலீரலி அவர்களது உள்ளத்தினூடே ஊன்றிக்கிடந்த இஸ்லாமிய ராஜ்ஜியத்தின் ஏகபோக ஒற்றுமையானது அவ்வாறு நிறைவேறி முடிந்திருக்கின்றது.

ஹஜ்ரத் அலீரலி அவர்கள் எத்தன்மைத்தாய மஹானென்பதை உள்ளவாறு உணர்ந்துகொள்ளுதற்கு ஒரு முக்கியமான விஷயத்தை ஒருவரும் மறந்துவிடுவது கூடாது: அஃதாவது, இப்பெரியார் ராஜ்ஜிய பாரத்தின் சுக்கானைக் கையிற்பிடித்தபோது, அக்கால முஸ்லிம்களின்நிலை மிகவும் கொந்தளிப்பான கதியிலே இருந்துவந்தது; அத்தகைய அதிருப்திகரமான நிலைமைக்கு அலீரலி அணுத்துணையும் ஜவாப்தாரியல்ல வென்பது அனைவரும் அறிந்த விஷயமே யாகும். அப்பொழுதிருந்த சிக்கலான நிலையில் இப்பெரியாரால் ஒன்றும் செய்யமுடியாமற் போய்விட்டதென்றால், வேறெவர் கலீபாவாய் வந்திருப்பினும், அவர்கதியும் அப்படித்தான் ஆகியிருக்குமென்பது திண்ணமேயாம். அதுகாலைக் கொந்தளிப்புக் கொண்டிருந்த கடும்புய லலையில் அந்த இஸ்லாத்தின் புணையைக்கொண்டு உய்த்து நடத்துதற்கு அறிவிலும் தைரியத்திலும் இவரைப்பார்க்கினும் வேறொருவர் சிறந்தவராய் இருந்திருக்க மாட்டார். பொதுமக்கள் மீது அரசுசெலுத்தும் ஆண்மைபெற்ற ஒருவர்பால் இருக்கவேண்டுவது அத்தியாவசியமெனக் கருதப்படும் அவ்விரு குணங்களும் அதுகாலை இந்த அலீரலியின்மாட்டு அளவிறந்தே காணப்பட்டனவென்னலாம்.

இவர்களையல்லது வேறொரு பெரியார் 4-ஆவது கலீபாவாய் இருந்திருப்பது முடியாது

புத்திசாலித் தனமான । தீர்மானத்தையும் துளங்காத மனோதிடத்தையும் அளவுக் கருவியாய் வைத்துக் கொண்டு ஆராய்ந்து பார்க்குமளவில், அப்பொழுது இவர்களைப் பார்க்கினும் நபிகணயகத்தின் தோழர் களுள் வேறெவரும் சிறந்தவராய்க் காணப்படவில்லை.

ஹஜ்ரத் உமர்ரலி அவர்களது காலத்தில்—இஸ் லாத்தின் சரிதையில் அஃதோர் இணையற்ற பெருமை வாய்ந்ததாகவே இருந்துவருகிறது—அனேக பிரதே சங்கள் கிலாபத் ராஜ்ஜியத்தின்கீழ் வந்துசேர்ந்தன. அப்பொழுதெல்லாம் ஹஜ்ரத் அலீரலி அந்த இரண் டாவது கலீபாவுக்கு வலக்கை அமைச்சராகவே இருந்து வந்தார்கள். அக்காலத்தில் நிகழ்வுற்ற பற்பல சீர்திருத்தங்களிலும் இப்பெரியார் மிகவாய்க் கலந்து கொண் டிருந்தார்கள். அந்த இரண்டாவது கலீபா இரண்டுமுறை ஷாம்தேசத்திற்குச் சென்றபோதும், இவர்களையே தங்கள் ஸ்தானத்தில் பிரதிநிதியாக மதீ னவில் நியமித்துவிட்டுச் சென்றூர்கள். சுருக்கிச் சொல்லுமிடத்து, ராஜ்ஜியபரிபாலன விஷயத்தில் எந்த ஒரு முக்கிய காரியமும் இப் பெரியாரைவிட்டு அந்த இரண்டாவது கலீபாவினால் நிறைவேற்றப்பட்ட தேயில்லை.

ஹஜ்ரத் அலீரலி அவர்கள் மிக்க உயரமாயில்லா மல், மிகவுஞ் சிவந்த நிறத்தை யுடையவர்களா யிருந் தார்கள்; ஆனால், சிறிதே பருத்த தேகமும், அள விறந்த சரீரபலமும் வாய்க்கப்பெற் றிருந்தார்கள். இவர்களது வட்டவடிவுள்ள தாடி, அதன்கீழே அகன்று படர்ந்திருந்த விரிந்த மார்பின்மீது ஆடி யசைந்து ஊசலாடிக்கொண் டிருக்கும். இவர்களுடைய

நேத்திரங்களிரண்டும் மிருதுவாகவும் வெண்மையாக வும் காணப்படும்; இன்னாரது பார்வையில் தயையும் தாட்சிண்யமும் மிகவாய்த் ததும்பிக்கொண் டிருக்கும். எனவேதான், ஏழைகளுக் கிரங்குவதும், அனாதை களுக்கு ஆதரவளிப்பதும் இப்பெரியாருக்குரிய பிறவிக் குணங்களா யிருந்தன. எனினும், இவர்கள்பால் காணப்பட்ட மனோதிடத்தை உறையிட் டுரைப்பது ஒருசிறிதும் சாலாது. எனவேதான், இப்பெரியாருக்கு அக்காலத்து மக்கள் அஸதுல்லா (ஆண்டவனது வேங்கை) என்று கௌரவப்பட்டம் சூட்டிவிட்டார் கள். கைபரில் இருந்துவந்த, எதிரிகளால் தகர்க்க முடியாத கோட்டையைக் கைப்பற்றியவர் இப்பெரி யாரே என்பதை நீங்கள் மறந்துவிட வேண்டாம். நபிகள் திலகத்தின் காலத்தில் நிகழ்ந்த மதச் சண்டை களில் இம்மஹான் தொந்தப் போரில் இறங்கி, அது காலை அரபுநாட்டில் தலைசிறந்து விளங்கிய யுத்த வீரர் களை யெல்லாம் தோற்கடித்திருக்கின்றார்கள். எனவே, தீர்க்காலோசனை செய்து முடிபுகட்டல், துளங்காத மனோதிடம் ஆகியவிரண்டிலும் அலீரலி தலைசிறந்து விளங்கினமையால், இன்னார் அந்தச் சந்தர்ப்பத்திலே கலீபாவாய்த் தேர்ந்தெடுக்கப் பட்டது சாலவும் பொருத்தமுடையதே யாகும். எத்துணைக்கெத்துணை மனோதிடமும் கூரிய நுண்ணறிவும் வாய்க்கப்பெற் றிருந்தார்களோ, அத்துணைக்கத்துணை பூததயையும் மதபக்தியும் நிரம்பப் பெற்றவர்களா யிருந்தார்கள். எனவேதான், இம்மஹான் மரணத்தறுவாயி லிருந்த பொழுதும் தம்முடைய குமாரர்களை நோக்கி, தான தர்மத்தையும், தயை தாட்சிண்யத்தையும், தன்னல

மறுப்பையும் மிகவாய் மேற்கொள்ள வேண்டுமென்று உபதேசித் தருளினார்கள். தங்களைக் குத்திய இப்னு முல்ஜிமைச் சித்திரவதை செய்யாமல் ஓரேவழியாய்த் தூக்கிலிடும்படி கட்டளை பிறப்பித்தார்கள். இந்த நான்காவது கலீபாவின் பட்டம் அலீரலி அவர்களுக்கு அருளப்படாமல், வேறெவர் கைவயமேனும் கொடுக்கப்பட்டிருந்தால், அதுபொழுது இஸ்லாமிய ராஜ்ஜியம் இருந்துவந்த மிகக் கொந்தளிப்பான நிலையில் பிறகு எப்பொழுதுமே செப்பஞ்செய்யப்பட முடியாத கஷ்ட நஷ்டங்களெல்லாம் அந்த கிலாபத் ராஜ்ஜியத்திற்கு ஏற்பட்டிருக்குமென்பது திண்ணம். ஹஜ்ரத் அலீரலியின் ஆட்சியின்போதும் முஸ்லிம்களுக்குள்ளே இரத்த வோட்டம் நிகழ்வுறாது போகவில்லை. ஆனாலும், அத்தகைய உதிரப்போக்கை நிறுத்துதற்குரிய சந்தர்ப்பம் வாய்த்தபொழு தெல்லாம் இப்பெரியார் அதனைத் தடுத்துவையாமல் வாளா இருந்துவிடவில்லை யென்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. சகோதர முஸ்லிம்களுக்குள்ளே பிளவேனும் மனக்கசப்பேனும் உண்டாகக்கூடாதென்று இப்பெரியார் எத்துணையோ பாடுபட்டு வந்தார்கள்; முஆவியாவின்பாலும் அன்னாருடைய தோழர்கள் பாலும் இம்மஹான் நடந்துகொண்ட மாதிரியே அதற்குப் போதிய சான்றாகும். அவர்கள் கலீபாவின் ஆணைக்குக் கட்டுப்பட மறுத்துவிட்டமையால், அன்னாரையெல்லாம் காபிர்களென்று தீர்ப்புச் செய்துவிடுமாறு காரிஜீகள் இப்பெரியாரை வற்புறுத்தியக்கால், இன்னார் அவ்வாறொன்றும் செய்ய முடியாதென்று பட்டவர்த்தனமாய் மறுத்துக் கூறிவிட்டார்கள். "எவ்வாறிருப்பினும், எவ்வளவுதான்

அவர்கள் எனது ஆட்சிக்கு விரோதமாய்க் கலகம் செய்திருப்பினும், அவர்களெல்லாரும் நம்முடைய சகோதரர்களே யாவார்கள்,'' என்று அறிவுறுத்தி வைத்தார்கள். இவர்களது ஆட்சியின் காலமுழுவதும் உள்நாட்டுக் கலகங்களை அடக்கி யொடுக்குவதிலே செலவழிக்கப் பட்டிருந்தாலும், கிழக்குமேற்கிலும் தெற்குவடக்கிலும் நெடுநெடுந் தூரம்வரை விரிந்து கிடந்த அந்த இஸ்லாமிய ராஜ்ஜியத்துள் அரசாங்கப் பலஹீனம் தோன்றிவிடாதவாறு ஹஜ்ரத் அலிரலி பாதுகாத்து வந்திருக்கிறார்கள். ஹஜ்ரத் உமர்ரலி அவர்கள் காலத்தில் இருந்து வந்ததே போலத்தான் இப்பொழுதும் சட்டமுறைமையும் நீதிபரிபாலனமும் மிக்க நேர்மையான முறையிலே நிறைதவறாது நடாத்தப்பட்டு வந்திருக்கின்றன.

அலீரலியின் கல்விப் பெருக்கம்

சிறுபிராய முதற்கொண்டே ஹஜ்ரத் அலீரலியின் கலாபிவிருத்தியும், ஏனைப் பழக்கவழக்கங்களும் நபிகள் நாதராலே கவனிக்கப்பட்டு வந்தன; அந்த நபிபெருமானாரையல் மற்றெல்லாரைப் பார்க்கினும் ஒழுக்கத்தில் உயர்ந்து நின்றதோடு போகாது, அந்த அரப் நாட்டுக்கும் அதற்கப்பாலுள்ள ஏனை நாடுகளுக்கும் எட்டக்கூடிய கல்விக்கடலாகவும் விளங்கி வந்தார்கள். நபிகள்திலகத்திற்குஅல் அந்த நபிப்பட்டம் வழங்கப்பட்டபொழுது அலீரலி பத்து வயதையே அடைந்திருந்த ஒரு பாலகராய் இருந்து வந்தார்; அப்பால் ஆரம்பத்திலே தீனுல் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட முக்கியஸ்தருள் இந்தச் சிறுப்பெரியாரும் ஒருவராய்க் காணப்பட்டார். சுருக்கிச்

சொல்லுமிடத்து, இவரது ஞானவிளக்கமே இஸ்லாத்தின் வளர்ச்சியுடன் ஒன்றித்து வந்திருக்கிற தென்னலாம். இப்பெரியார் நபிகள் திலகத்துடனே ஒன்றித்து வளர்ந்து வந்தமையால், நபிகள் நாதருக்கு வெளியாக்கப்பட்ட குர்ஆன் திருவாக்கியங்களை எழுதிவைக்கும் இலேககராகவும் இருந்திருக்கிறார். இதனால், குர்ஆன் ஷரீபின் வெவ்வேறு திருவாக்கியங்களும், வெவ்வேறு அத்தியாயங்களும் எவ்வெப்பொழுது நபிபெருமானாருக்கு அருளப்பட்டு வந்தனவென்னும் விஷயத்தில் இன்னவருக்கு நல்லபரிச்சயம் இருந்துவந்தது. ஆகலான், இவர் குர்ஆன்ஷரீபின் அத்தியாயங்களை யெல்லாம் அவையவை வெளியாக்கப்பட்ட காலஅடைவின் கிரமப்படி அடுக்கிவைக்கப் பிரயத்தனப் பட்டார். ஹஜ்ரத் அபூபக்ர்ரலி அவர்களது ஆட்சியின் தொடக்கத்திலே இம்மஹான் ஆறுமாதகால பரியந்தம் அந்த வேலையில்—குர்ஆன்ஷரீபின் அத்தியாயங்களைக் கிரமப்படி அடுக்கும்வேலையிலே—ஈடுபட்டிருந்தார்களென்று சரித்திரத்தில் ஒருவிஷயம் வரையப்பட் டிருக்கின்றது. இந்த நான்காவது கலீபா குர்ஆன்ஷரீபு முழுதையும் மனப்பாடம் பண்ணியிருந்த ஒரு ஹாபிலா யிருந்ததோடு, அவ்வேதத்திற்கு உயரிய வியாக்கியானம் செய்யக்கூடிய சிறந்த பாஷ்யகாரராகவும் விளங்கிவந்தார். இப்னு அப்பாஸ்ரலி அவர்களைப்போல் இவர்களும் குர்ஆன்ஷரீபில் ஆழிய ஞானமுள்ளவராய் நன்கு மதிக்கப்பட்டு வந்தார்கள்.

எனவேதான், இதுபொழுதுள்ள குர்ஆன்ஷரீபின் வியாக்கியானங்களில் ஹஜ்ரத் அலீரலியின் பாஷ்யங்களும் நிரம்பக் காணப்படுகின்றன. நபிகள் நாயகத்

தின் திருவசனங்களென்னப்படும் "ஹதீது"களை மனப் பாடம் பண்ணியதிலும் இப்பெரியார் ஒருசிறந்த மஹா னுகவே காணப்பட்டார்கள்; ஆனல், குர்ஆன்ஷரீபின் ஆயாத்துகளுடன் கலந்து குழம்பிப்போகா திருக்கும் பொருட்டு இப்பெரியார் ஹதீதுகளிலிருந்து அடிக்கடி மேற்கோள் காட்டுவது வழக்கமில்லை. "முஜ்தஹித்"* என்னும் அந்தஸ்திலும் இப்பெரியார் ஒருயரிய ஸ்தா னத்தையே வகித்திருந்தனர்; இக் காரணத்தினுலே இன்னுர் அக்காலத்திருந்த எல்லா ஸஹாபாக்களுள்ளும் தலைசிறந்த சட்ட நிபுணரென்று கருதப்பட்டு வந்தார் கள். இவர்கள்பால் மிகக்கடினமுள்ள, மகாசிக்கலான விஷயங்களெல்லாம் பரிசீலனைக்காகக் கொண்டு செல் லப்படும்; அதுபொழுது இவர்கள் கூறும்தீர்ப்பே முடி வானதாகவும் நேர்த்தியானதாகவும் காணப்படும். இம் மஹானுக்குக் குர்ஆன்ஷரீபிலும் ஹதீதுஷரீபிலும் இருந்துவந்த ஆழமான ஞானமே அத்துணைப் பெரிய கௌரவத்தை அளித்துக்கொண் டிருந்தது. இவர்கள் கலீபாவாய் நியமிக்கப்பட்ட பின்னரும் அரசாங்க வேலையொழிந்த வேளைகளில் மிகவாய்ப் படித்துக் கொண்டே யிருப்பார்கள். எனவேதான், இவர்களது கல்வியின் ஆழத்தைக் கண்டு, "ஞானத்தின் வாயில்" என்றொரு சிறப்புப்பெயரும் வழங்கப்பட்டது.

---

* சந்தேகமும் சங்கடமும் நிரம்பியுள்ள ஒரு சட்டவிஷயத்தில் சரியான முடிபைக் கண்டுபிடிப்பான் வேண்டித் தம்முடைய மனோ சக்திகளை யெல்லாம் அதிகம் செலவு செய்பவரே முஜ்தஹித் என்னப்படுவார். இஸ்லாத்தின் பெரும்பெரும் சட்டநிபுணர்க ளெல்லாம் முஜ்தஹித்களே யாவார்கள்.

அவற்றினை யன்றி, நபிகள்நாயகம்ஸல் ஏனைத் தோழர்களுக் கெல்லாம் தெரிவிக்கா்த ஆத்மஞானக் கருவூல மொன்றையும் இப்பெரியாருக்கு இரகசியத்திலே தனித்து அளித்துச்செல்ல வில்லை. நபிபெருமானது லௌகிக வைதிக மார்க்கப்பிரசார மெல்லாம் எல்லார்முன்னும் பகிரங்கமாகவே பிரகடனப்படுத்தப்பட்டு வந்தனவன்றி, அம்மஹானுபாவரால் எந்தவிதமான இரகசியமுறையும் எவருக்குமட்டும் தனிமையிலே சொல்லிக் கொடுக்கப்பட்டது கிடையாது. எனவே, எவரெவ ரெல்லாம் அம் மஹானுபாவரின் அருகினிலே அடிக்கடி இருந்து, அதிகமான விஷயத்தைக் கிராஹியம் செய்து கொண்டார்களோ, அவர்களெல்லாம் அந்த நபிபெருமான் மாட்டிருந்து அதிகமான பிரயோஜனத்தையே அடைந்துகொண்டார்கள்.

**அலீரலியின் பக்திவிசுவாசம்**

அலீரலி அவர்களது வாழ்க்கையே போலத்தான் அவர்களது பக்தி விசுவாசமும் இருந்துவந்திருக்கிறது. சிறுபிராய முதற்கொண்டே இப்பெரியார் நபிகள் நாயகத்துடனே யிருந்து பழகிவந் திருக்கிறார்கள். ஆகவே, அப் பெருமானுருக்குரிய ஸௌலப்பிய வாழ்க்கையும் சுயநலத்தியாகமும் இவர்கள்பாலும் நன்கு படிந்துவிட்டன. இப்பெரியார் நபிகணுதரின் மருகராய் அமைந்ததொன்றே, இன்னுருக்குச் சுகபோக வாழ்க்கையென்பதை அடியுடன் இல்லா தொழித்துவிட்டதற்குப் போதிய சான்ருகும். அந்த மாதுலரைப் போலவே இந்த மருகரும் இவ்வுலக வாழ்க்கையில் தாமரையிலை நீரேபோல் தனியே இருந்திருக்கின்ருர். ஆனுலும், அம் மஹானுபாவரைப்போலவே இந்தச் சிறுப் பெரியாரும்

எத்தகைய ஊழியத்தையும் இழுக்கென்று கருதுவது வழக்க மில்லை. தங்களுடைய நிரியாண பரியந்தம் நபிகள்திலகம்ஸல் ஒருவெறும் 'பகீராகவே' வாழ்ந்து வந் திருக்கிறார்கள். எனவே, இந்தப் பெரியாரும் அப்படியேதான் வாழ்ந்து வந்தார்கள். அலீரலியின் விடுதியில் எப்பொழுதுமே ஒரு வேலைக்காரிகூட இருந்த தில்லை; ஆகவே, பாத்திமாரலி அவர்களே கல்லியந்திரத்தில் மாவரைக்கும் காரியத்தையும், தோல் துருத்தியில் தண்ணீர் மெத்திக்கொண்டுவரும் கைங் கரியத்தையும் செய்துகொண் டிருந்தார்கள்.

ஒருமுறை அலீரலி அவர்கள் மஸ்ஜிதின் மண்தரை யில் படுத்திருந்ததைக் கண்டு நபிகள்திலகம்ஸல் இன் னுரை அபூ துராப் (புழுதியின் தந்தை) என்று விளித் தார்கள்; அன்றுமுதல் இந்தப் புனைபெயரைக் கொண்டே இப் பெரியார் அடிக்கடி அழைக்கப்பட்டு வந்தார்கள்; அலீரலியும் அபூ துராப் என்னும் புதுப் பெயரைப் புனைந்து கொள்வதில் சதா பெருமை யடைந்துகொண்டே யிருந்தார்கள். நபிகள் நாயகத் தின் நிர்யாணத்திற்குப் பின்னரும் இம்மஹான் ஹஜ்ரத் அபூபக்ர், உமர், உதுமான் ஆகியவர்களைப் போலவே எளிய வாழ்க்கையை மேற்கொண் டொழுகினார்கள். இவர்கள் கலீபாவாய் உயர்ந்தபின்னரும், இப் பெரியார் சர்வசாதாரணமான வாழ்க்கையையே நடாத்திவந்தார் கள். அதற்கு முன்னிருந்த ஸௌலப்பிய வாழ்க்கைக் கும், கலீபாவாய் உயர்ந்தபின் நடத்தப்பட்ட எளிய வாழ்க்கைக்கும் வேறுபாடு சிறிதும் காணப்பட்ட தில்லை. நபிகள்நாயகமும், அவர்களுக்குப் பின்வந்த நான்கு கலீபாக்களும் நடாத்திவந்த எளியவாழ்க்கை,

இவ்வுலகிலுள்ள அரசர்களின் சரித்திரங்களை யெல்லாங்காட்டிலும் சாலச் சிறந்ததாகவே இருந்துவந்திருக்கிறது; அரசர்களுக்கெல்லாம் அரசர்களா யிருந்தும், சாமான்ய மக்களையெல்லாம்விடச் சாதாரண வாழ்க்கையுள்ளவர்களாகவே அந்த ஐவரும் நடந்துவந்திருக்கிறார்கள். ஒரு பெரிய மஹாராஜ்ஜியத்தின் ஏகசக்ராதிபதியாய் விளங்கிவந்தபொழுதும் துறவியே போலத்தான் இவ்வுலகில் அன்னாரைவரும் இருந்திருக்கிறார்கள்; அவர்களுடைய பாதத்தடியிலே வந்துகுவிந்த பெருங்கருவூலங்களுக் கிடையே தாமரையிலை மீதுள்ள நீரேபோலத்தான் இருந்திருக்கிறார்கள். அரசர்களுக்குரிய அரண்மனைகளும், அவர்களுக்குரிய உயர்தர ஆடையாபரணங்களும் வலியவந்தும், இந்த நான்கு கலீபாக்களும் — முஸ்லிம்களின் லௌகிக வைதிக காரியங்களுக் கெல்லாம் தலைவர்களா யிருந்தும் — தாங்கள் வசித்துவந்த குடில்களையே அரசமாளிகையாய்க் கருதிப் பெருமைகொண் டிருந்தார்கள். கலீபாக்களா யிருந்தபொழுதும் இவர்களெல்லாம் தாங்கள் அணிந்திருந்த கரடுமுரடான கதராடைகளை உடுத்திய வண்ணம் தங்கள் தினசரி வாழ்க்கைக்காகச் சந்தோஷத்துடன் சர்வதாராளமாய் ஊழியம் புரிந்துவந்தார்கள் என்று கூறலாம்.

இவர்களுடைய தலைவாசலில் வாயில்காப்போர் நிறுத்தி வைக்கப்பட்ட தில்லை. ஹஜ்ரத் உமர்ரலி உதுமான்ரலி அலீரலி ஆகியமூவரும் ஒருவர்பின்னொருவராய்க் கொலைகாரரின் கட்டாரிக்கே இரையாய்ப் போயினார்கள்; ஆயினும், அவர்களுள் ஒருவரேனும் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு அங்கக்

காவலரை அமைத்துக்கொள்ள வில்லை. அவர்களுடைய தினசரி வாழ்க்கை சாமான்ய மக்களது வாழ்க்கையைப் பார்க்கினும் சர்வசாதாரண முள்ளதாகவே இருந்திருக் கிறது; அவர்கள் தினசரி ஐந்துவேளைத் தொழுகைக் கும் மெய்காப்பாளர் இல்லாமலே மஸ்ஜிதுக்கு நடந்து செல்வார்கள். தங்களையும் தங்கள் குடும்பத்தினரை யும் பாதுகாத்துக்கொள்ளப் பொலீஸ் படையேனும் ராணுவப் பாதுகாப்பேனும் வைத்துக்கொண்டது கிடையாது. ஆனால், முஸ்லிம் ராஜ்ஜியத்தின் நன்மை யில் அவர்கள் எத்துணை ஜாக்கிரதையுடன் இருந்து வந்தார்களென்றால், நெடுந்தூர எல்லைப்பிரதேசத்தி லுள்ள ஒருசிறு அற்பக் காரியமும் அவர்களது கவனத்தை ஈர்த்துக்கொண் டிருந்தது. கிலாபத் ராஜ்ஜியத்திலுள்ள குடிமக்கள் முஸ்லிம்களேயாயினும் அல்லாதாரேயாயினும், இந்த நான்கு கலீபாக்களும் அன்னாரின் நன்மைக்காக அல்லும்பகலாய் உழைத்து வந்தார்கள்; ஆயின், தங்கள் சொந்த விஷயத்தைக் குறித்து ஒருசிறிதும் கவலைகொண்டன ரில்லை. அவர் களுடைய இயற்கையிலே பிறருக்காக உயிர்வாழ்வ தென்பதே ஒருயரிய லட்சியமாய்க் காணப்பட்டு வந்தது. "தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளர்" என்னும் அடைமொழி இந்த நான்கு இஸ்லாமிய கலீபாக்களுக்கே சாலவும் பொருத்தமுடையதாய்க் காணப்படாநின்றது. இவர்களுடைய உள்ளமெல்லாம் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டும், உடல மெல்லாம் அடியவர்களின் சேவைக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுமே கிடந்தன வென்னல் வேண்டும்.

"நபிகள் நாயகத்தின் வலக்கரத் துணைவராகவும், முஸ்லிம்களுக்குள் முதன்மைபெற்ற பெரியவராகவும், அந்த நபிகள் நாயகத்தின் கஷ்டநிஷ்டூரங்களி லெல்லாம் கலந்துகொண்டவராகவும், இஸ்லாத்தின் முன்னேற்றத்தில் இணையில்லா ஆர்வங்கொண்டவராகவும், அந்த நபிபெருமானின் ஆருயிர்த் தோழராகவும், அருமைமிக்க மருகராகவும், அவர்களுடைய மார்க்கத்தின் அந்தரங்க பஹிரங்கத் தாத்பரியங்களை யெல்லாம் ஆழ்ந்து நோட்டமிட்டவராகவும், தந்நல மறுப்புடனும் பிறநலப் பிரியத்துடனும் உயிர்வாழக் கூடியவராகவும், கண்ணியமும் கௌரவமும் உண்மையும் மேன்மையும் சத்தியமும் சீலமும் ஒருருவாய் அமையப் பெற்றவராகவும் சாஸ்திர ஞானமும் சட்ட நிபுணத்துவமும் சர்வசாதாரணமாய் நிறைந்திருக்கப் பெற்றவராகவும் இருக்கக்கூடிய ஒருவரை இவ்வுலகில் காண வேண்டுமாயின், அப்படிப்பட்ட பெரியார் நம்முடைய அலீ இப்னு அபீத்தாலிப் அவர்க ளிடத்திலேதான் கண்டுகொள்ள முடியும்," என்று மஸ்ஊதி வருணித்திருக்கின்றார்.

நபிகள் நாயகத்தின் அருமைக் குமாரியும், அலீரலியின் பாரியாளுமாயிருந்த பாத்திமத்துஜ் ஜொஹ்ராரலி அவர்களுடைய திருவயிறுவாய்த்த மக்கள் மூன்று ஆண்களும் நான்குபெண்களு மாவார்கள். இந்த மாதுசிரோமணியார் தங்களுடைய பிதாவாகிய நபிபெருமான்ஸல் அவர்களுக்குப் பின்பு சிலமாதங்களே இத் தரணியின்கண் தாமதித்து ஜீவித்திருந்தார்கள். அவர்களது ஜீவதசையின்போது அலீரலி அவர்கள்

**நாயகத்தின் புத்திரி பாத்திமாரலி**

வேறெந்த மாதையும் மணந்துகொள்ள வில்லை. அந் நங்கையர்க்கரசி தங்கள் காலத்தில் குடும்பச்செட்டு நிறைந்த அதிசாமர்த்திய சாலியாகவும், மெத்த புத்தி சாலியாகவும், எல்லாம்தெரிந்த இனியமங்கையாகவும், கூரிய நுண்ணறிவு வாய்ந்த ஒரு ஞானசிகாமணியாக வும் இருந்துவந்தார்கள். அவர்களது கல்வியறிவின் மேன்மையால் "நமது ஞானஒளி மாது" என்னும் சிறப்புப்பட்டத்தையும் பெற்றிருந்தார்கள். அவர் களது தோற்றம் உயர்ந்து மெலிந்திருக்கும்; அன்னாரின் எழிலைக்குறித்துப் புகழாதார் எவருமிலர்; இப்படிப் பட்ட அளவற்ற அழகின் காரணமாகவே அம் மங்கையர்க் கரசிக்கு அஜ் ஜொஹ்ரா (அழகிய மாது) என்னும் சிறப்புப்பெயரும் இன்றளவும் வழங்கப்பட்டு வருகிறது.

ஹஜ்ரத் அலீரலி அவர்களுடனே இஸ்லாத்தின் இனிய குடியாட்சிமுறை முடிவடைந்து விட்டது. இஸ்லா மார்க்கத்தின் நோக்கப்பிரகாரம் எப்பொழுதுமே

**குடியாட்சி முறையின் முடிவு**

நடந்துவர வேண்டியிருந்த அந்தக் குடி யாட்சிமுறை நபிகளுைதருக்குப் பின்னால் 30 ஆண்டுகள் வரையிலேமட்டும் நடை பெற்றுவந்து, ஹி. 40-ஆம் ஆண்டுடனே அஸ்தமித்துப் போய்விட்டது. அப்படிப்பட்ட ஜனநாயகமுறை இவ் வகிலத்தின்கண் இனியொருமுறை தலையெடுக்கப் போவதில்லை யென்பது கண்டு பெரிதும் வருந்தா திருக்க முடியவில்லை. ஆனால், அதன் பிறகு குர்ஆன் ஷரீபிலுள்ள இஸ்லாமிய ஞானபோதம் மட்டுமே இத் தரணியில் எங்கும் நிலைபெற்றுநின்றது. ஆயின்,குர்ஆன் ஷரீபைக்கொண்டு நபிகளுயகரால்ஸல் நிலைநிறுத்தப்

Q7:332
N46



பட்ட குடியாட்சி முறையை, குலபாயெ ராஷிதீன்க ளாய அந்த முதல்நான்கு கலீபாக்களும் அறிந்திருந் ததே போல, அவர்களுக்குப் பின்வந்தவர்களும் அறிந் திருப்பார்க ளாயின், அப்பால் ஒரு நூற்ருண்டு வரை முஸ்லிம்களுக் குள்ளே நடைபெற்றுவந்த அந்த அக்கிரமமான உள்நாட்டு யுத்தங்களெல்லாம் நடை பெற் றிருக்கவே மாட்டா வென்பது ஒருதலை. குடி யாட்சிமுறையின் பெருமையை உணர்ந்துகொள்ள முடியாத அக்காலமாக்கள் பற்பலவிதமான ஆக்ஷேபங் களையும், குதர்க்கங்களையும், சண்டை சச்சரவுகளையும் உண்டுபண்ணி, இறுதியிலே பரம்பரைப் பாத்தியதைக் குரித்தாய முடியாட்சி முறைக்குரிய கிலாபத்தையே இஸ்லாத்திற் குரியதென் று நிலைநிற்கச் செய்துவிட்டார் கள். எத்தகைய குடியாட்சிமுறையை நிலைபெறுத்தும் பொருட்டு நபிகள்நாயகமும், அவர்களுக்குப் பின்வந்த முதல்நான்கு சீரிய நேரிய கலீபாக்களும் பெரும் பிரயாசை எடுத்துக் கொண்டார்களோ, அத்தகைய குடியாட்சி (ஜனநாயக) முறைக்கு நேர்முரணுன முடியாட்சி முறையையே பின்னுல் வந்தவர்கள் நிலை நிறுத்திவிட்டார்கள். அந்தோ, பரிதாபம்! பரிதாபம்!!

அலீரலி சரிதை முற்றுப் பெற்றது.

குலபாயெ ராஷிதீன்கள் குடியாட்சி முறை முடிந்தது

முற்றும்.

TAMIL NADU ARCHIVES CHENNAI
No. 111468

# ஷாஜஹான் புக் டெப்போ

## பிரசுரங்கள் :

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | “ஜவாஹிருல் ‘புர் :கான்’’ குர்ஆன் ஷரீபின் தமிழ் மொழிபெயர்ப்பு விரிவான வியாக்யானத்துடன், முதலிரண்டு பாகங்கள், காலிகோ பைண்டு ... | 6 | 0 |
| 2. | ஷை முப்பதாம் பாகம் (அ’ம்மயத்) வியாக்யானத்துடன் ... | 2 | 8 |
| 3. | ஷை தமிழ் மொழிபெயர்ப்பு மட்டும் ... | 1 | 4 |
| 4. | குர்ஆன் மொழிபெயர்ப்பு ($3\frac{3}{4}$ ஜுஜு) ... | 2 | 0 |
| 5. | இஸ்லாம் (சித்திரப்படத்துடன் 7-ஆம் பதிப்பு) ... | 2 | 0 |
| 6. | ஈமான் (3-ஆம் பதிப்பு) ... | 0 | 8 |
| 7. | இஸ்லாமிய ஞானபோதம் ... | 4 | 0 |
| 8. | தக்தீரும் தலைவிதியும் ... | 0 | 12 |
| 9. | மஹான் முஹம்மது நபி (ஸல்) ... | 0 | 12 |
| 10. | அபூபக்ர் ஸித்தீக் (ரலி) (2ம் பதிப்பு அச்சில்) | 2 | 0 |
| 11. | உமரெபாரூக் (ரலி) (2-ம் பதிப்பு அச்சில்) | 2 | 0 |
| 12. | உதுமான் (ரலி) அலீ (ரலி) சரிதை ... | 2 | 0 |
| 13. | நாயகத்தின் நற்குணங்கள் ... | 1 | 4 |
| 14. | இஸ்லாம் எப்படிச் சிறந்தது (அச்சில்) ... | 1 | 8 |
| 15. | நாயக வாக்கியம் 451 (ஹதீதுஷரீபு) ... | 1 | 8 |
| 16. | லோகாதிசய விளக்கம் (படங்களுடன்) ... | 1 | 12 |
| 17. | ஜீவவசிய பரம ரஹஸ்யம் ... | 4 | 0 |
| 18. | இயேசுவின் இரகசியம் (அச்சில்) ... | | |
| 19. | சுவாசமே உயிர் ... | 2 | 0 |

**30, சாந்தோம் ஹைரோட், மயிலை, சென்னை.**

73
5-56

# குல்பாயே ராஷிதீன் வரிசை

1. மஹான் முஹம்மத் நபி (ஸல்)
நபிகள் நாயகத்தின் விளக்கமான
சரித்திரச் சுருக்கம் .... 0 12 0

2. அபூபக்ர் சித்தீக் (ரலி)
முதல் கலீபரவின் உண்மைச்
சரித்திரம் .... 2 0 0

3. உமரெபாரூக் (ரலி)
இரண்டாவது கலீபாவின் நேரிய
சரித்திரம் .... 2 0 0

4. உதுமரன்-ரலி, அலீ-ரலி
மூன்ருவது நான்காவது கலீபாக்
களின் அழகிய சரித்திரம் .... 2 0 0

**ஷாஜஹான் புக் டெப்போ**
30, சாங்தோம் ஹைரோட்,
மயிலாப்பூர் :: சென்னை.